இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர
ஸ்ய ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய
ஸ்வ்யக்ருதிஷு.
* ஸாராஸாரம் *
ஸம்பூர்ண:.
ஶ்ரீமதே வேதாந்தகுரவே நம: ॥

ந்திகள்) யார் ஸத்ருஶர், நாயனார்திகள் திருவடியை நினைந்து
ப்பெற்ற நாம் ஸர்வ-ரக்ஷாஸம்பூர்ணமேயென்று இம்மூன்றுக்கும்
மேல நாயனாரிகளை வரவேண்டுமென்னில்காட்டில் சுயிகுப
வை வரவேண்டாதே என்று அநுஸந்திக்கிறபடி. இங்கு "சிந்
திப்பாரினி த்தினிலே" என்று ஶ்ரீமந்நாராயணன்னுமும்
"படிப்பார்பினிபல்வழக்கே" என்று ஶ்ரீவாக்பலத்திமும்
"செலுத்தும் போம்." என்று ஶ்ரீகாயவ்ருத்திமும் அ
டைவே சொல்லிற்றாயிற்று. இவை போன்றிவன்றிருக்கின்
யாராய்க சொல்லிருக்கிலும் மூன்றிடத்தினும் மூன்
று ஶ்ரீவிஷ்ணுவின்றைக்கு ஆநுகூல்யமாம். * *
இதி ஶ்ரீரங்கநாதயதிராஜ சரணாரவிந்த ஶக
ரத்ர ஶயாலோகஸ்ய ஶ்ரீமத்வேதாந்தாசார்ய
ராமாநுஜதாஸஸ்ய க்ருதிஷு.
வ்யாக்யாஸஹிதஸாராஸாரம்
ஸம்பூர்ணம் ॥

॥ ஸ்ரீ: ॥

அதிகார ஸங்கிரஹம்.

|| ஸ்ரீ: ||

ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

அதிகார ஸங்கிரஹப் பாட்டுக்களின் உரை.

ஆசாரியர்களால்
வி. கே. ராமாநுஜனைக் கொண்டு
எழுதப்பட்டது.

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்ஸில்
அச்சிடப்பட்டது.

ஸ்ரீமுக-ஸு
விலை] 1934 [அணா 8

முகவுரை.

ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீரஹஸ்யத்திரயஸாரத்தில் இருக்கும் அதிகாரஸங்கிரஹப் பாட்டுக்களுக்கு எளிதான தமிழ்நடையில் அர்த்தம் இதில் எழுதப்பட்டிருக்கிறது. பாட்டுக்களுக்கு வியாக்கியானம் எழுதியிருக்கிற ஸாராஸ்வாதினி முதலானவைகளில் வடமொழிச்சொற்கள் அதிகங்களாயிருப்பதால், அந்த பாஷை தெரியாதவர்களுக்கு அவைகள் உபயோகப்படுகின்றனவில்லை. இதில் கூடியவரையில் வடமொழிச் சொற்கள் கலப்பில்லாமல் தமிழில் பதவுரையும் கருத்தும் விசேஷார்த்தங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

2. பாட்டுக்களின் அர்த்தங்களை நன்றாக அறிவதற்கு அதிகாரங்களில் சொல்லப்பட்ட விஷயங்களையும், கீழ் அதிகாரத்திற்கும் மேல் அதிகாரத்திற்கும் இருக்கும் ஸங்கதியையும் மிகவும் சுருக்கமாய் எழுதியிருக்கிறது.

3. ஸ்ரீ தேசிகன் கிரந்தத்தை ஒருவன் ஆசாரியனிடம் ஸேவித்துப்பிறகு அதைச் சிந்தனை பண்ணும் காலத்தில் இது அவனுக்கு உபயோகப்பட வேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ-உ-ப-ஸ்ரீ-வே சின்னமு ஸ்ரீநிவாஸபாட்டராசாரியாருடையவும், ஸ்ரீ-உ-ப-ஸ்ரீ-வே ஸாரநாதாசார் B. A., B. L. அவருடையவும் உதவியால் இது எழுதப்பட்டது. அவர்களுக்கு இதன்மூலம் நன்றியை அறிவிக்கிறேன்.

திருக்குடந்தை
ஸ்ரீமுக-ஸ்ரு
பங்குனி உத்திரம்

வி. கே. ராமானுஜாசாரி.

விஷயஸூசிகை.

	பக்கம்
குருபரம்பராஸாரம்	1
பொய்கைமுனி	1
இன்பத்தில்	4
என்னுயிர் தந்து	6
ஆரண நூல்	8
நீளவந்தின்று	9
காளம் வலம்புரி	11
உபோத்காதாதிகாரம்	13
ஆளுமடைக்கலம்	13
திருவுடன் வந்த	15
ஸாரநிஷ்கர்ஷாதிகாரம்	16
அமையாவினை	17
பிரதாநபிரதிதந்திராதிகாரம்	18
நிலை தந்த	19
அர்த்தபஞ்சகாதிகாரம்	20
பொருளொன்றென	22
தத்துவத்ரயசிந்தநாதிகாரம்	23
தேறவியம்பினர்	25
புருடன் மணிவரமாக	101
பரதேவதா பாரமார்த்தியாதிகாரம்	26
வாதியர்மன்னும்	27
முமுக்ஷுத்வாதிகாரம்	28
நின்ற புராணன்	29
அதிகாரிவிபாகாதிகாரம்	30
வேண்டும்பெரும்பயன்	31
உபாயவிபாகாதிகாரம்	32
நின்ற நிலைக்கு	35

	பக்கம்
பிரபத்தியோக்யாதிகாரம்	36
அந்தணரந்தியர்	37
பரிகரவிபாகாதிகாரம்	39
அறிவித்தனரன்பர்	41
ஸாங்கப்பிரபதநாதிகாரம்	42
அறவே பரமென்று	43
கிருதகிருத்தியாதிகாரம்	45
மன்னவர் விண்ணவர்	46
ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்	47
முக்கிய மந்திரம்	49
உத்தரகிருத்தியாதிகாரம்	49
விண்ணர் வேண்டி	51
புருஷார்த்தகாஷ்டாதிகாரம்	52
வேதமறிந்த பகவர்	53
சாஸ்திரீயநியமநாதிகாரம்	54
நின்றனமன்புடை	55
அபராதபரிஹாராதிகாரம்	57
உளதான வல்வினைக்கு	58
ஸ்தாநவிசேஷாதிகாரம்	59
ஆராதவருள்	102
கண்ணனடியிணை	103
உத்தம வமர்த்தலம்	104
தேனார் கமலத் திருமகள்	60
நிர்யாணாதிகாரம்	61
நன்னிலமாமது	62
கதிவிசேஷாதிகாரம்	63
நடைபெறவங்கி	63
பரிபூர்ண பிரும்மாநுபவாதிகாரம்	64
எறியெழிற்பதம்	65
ஸித்தோபாயசோதநாதிகாரம்	67
மன்னுமனைத்துறவாய்	67

	பக்கம்
ஸாத்தியோபாயசோதநாதிகாரம்	69
வரிக்கின்றனன்	71
பிரபாவவியவஸ்தாதிகாரம்	72
தகவாற்றரிக்கின்ற	72
பிரபாவரக்ஷாதிகாரம்	74
உண்மையுரைக்கும்	75
மூலமந்திராதிகாரம்	77
எட்டுமொமூர்த்தி	105
உயர்ந்தநங் காவலன்	82
த்வயாதிகாரம்	84
ஓதுமிரண்டை	89
சரமச்லோகாதிகாரம்	91
ஒண்டொடியாள்	108
மூண்டாலுமரியதனில்	110
சாதனமுநற்பயனும்	112
தன்னினைவில் விலக்கின்றி	113
குறிப்புடன் மேவும்	94
ஆசாரியகிருத்யாதிகாரம்	96
பாட்டுக்குரிய பழையவர்	115
மருளற்ற தேசிகர்	96
சிஷியகிருத்யாதிகாரம்	97
ஏற்றிமனத்தெழில்	97
நிகமநாதிகாரம்	98
உறுசகடமுடைய	116
முன்பெற்ற ஞானமும்	98
செப்பச் செவிக்கு	100
மறையுரைக்கும்	118
இதுவழியின்னமுது	119
எட்டுமிரண்டும்	120
வானுளமர்ந்தவர்க்கும்	121
வெள்ளைப்பரிமுகர்	122

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
34	21	அடக்கி.	அடக்கி,
,,	24	இருக்கும்,	இருக்கும்.
47	28	உதாஸீநனுயிருருப்பன்	உதாஸீநனுயிருப்பன்
50	18	செய்யவேண்யடிதென்று	செய்யவேண்டியதென்று
67 124	24 20	மன்னுமனைத்துறைவாய்	மன்னுமனைத்துறவாய்
80	10	எப்பெருமானுக்கு	எம்பெருமானுக்கு
,,	11	எம்பெருமான்	எம்பெருமான்
,,	18	படுகிறது	படுகின்றன
87	14	பக்த	பத்த
,,	25	பற்றுகிறன்	பற்றுகிறேன்
105	14	வேறும்	வெறும்
108	7	வயிரெல்லா	வுயிரெல்லா
124	15	வல்விளை	வல்வினை
,,	25	காணம் வலம்புரி	காளம் வலம்புரி
,,	27	நற்யனும்	நற்பயனும்

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம: ।
ஸ்ரீமதே கோபாலார்யமஹாதேசிகாய நம: ।
ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம: ।
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ।

அதிகார ஸங்கிரஹம்.

குருபரம்பராஸாரம்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தை ஒருவன் ஆசார்யனிடம் படிப்பதற்கு முன்னாலே குருபரம்பராஸாரம் என்கிற புஸ்தகத்தைப் படித்து, அதில் சொல்லிய ஸங்கதிகளைத் தெரிந்து கொண்டு, தன்னுடைய ஆசார்யன் முதலான ஆசார்யவரிசையை எம்பெருமான் வரையில் வணங்கி, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தைப் படிக்கவேண்டுமென்று எண்ணி, ஸ்ரீ தேசிகன் இந்த புஸ்தகத்தை எழுதியிருக்கிறார். (4)

இதில் ஸ்ரீ தேசிகன், மங்களமாக வடமொழியில் ஒரு ச்லோகம் அருளிச்செய்து, அதிக மங்களத்திற்காக இரண்டு பாட்டுக்களை அருளிச் செய்கிறார்.

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
பொருநல்வருங் குருகேசன் விட்டு சித்தன் *
துய்யகுல சேகரனம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி *
வையமெலா மறைவிளங்க வாள்வே லேந்து
மங்கையர்கோ னென்றிவர்கண் மகிழ்ந்து பாடும் *
செய்யதமிழ் மாலைகளுந் தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்க டெளிகின் றோமே. (1)

(பதவுரை.) பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார், தண்-குருகையான, பொருநல் - தாம்ரபர்ணி யென்னும் நதியின் கரையில், வரும் - அவதாரஞ்செய்த, குருகேசன் - குருகையென்னும் நகரத்திற்குத் தலைவரான நம்மாழ்வார், விட்டுசித்தன் -

(4) See discussion by Chatham Swami whether it

பெரியாழ்வார், துய்ய - பரிசுத்தமான மனதையுடைய, குலசேகரன், நம் பாணநாதன் - திருப்பாணாழ்வாராகிற நம்முடைய ஸ்வாமி, தொண்டர் அடிப்பொடி, மழிசை - திருமழிசையில், வந்த- அவதாரஞ் செய்த, சோதி - ஜ்யோதிஸ்ஸான திருமழிசைப்பிரான், வையம் எல்லாம் - உலகத்தில் எங்கும், மறை - வேதங்களின் பொருள், விளங்க - நன்றாய்த் தெரியும்படி, வாள் - கத்தியையும், வேல் - வேல் என்கிறஆயுதத்தையும்; ஏந்தும் - ஏந்திக் கொண்டிருந்த, மங்கையர் மங்கையென்னும் நகரத்திலிருந்தவர்களுக்கு, கோன் - ஸ்வாமியான திருமங்கையாழ்வார்,— என்று இவர்கள், மகிழ்ந்து - எம்பெருமானை அநுபவித்து ஸந்தோஷப்பட்டு, பாடும் - அது உள்ளடங்காமல் பாடின, செய்ய - நல்ல, தமிழ்மாலைகள் - தமிழ்ப் பாட்டுக்களை, நாம், தெளிய - அதுவோ இதுவோ என்ற ஸந்தேஹமும், ஒன்றை வேறொன்றாக எண்ணுகிற மயக்கமுமில்லாமல், ஓதி - ஆசார்யர்களிடத்தில் படித்து, மறை - வேதத்தில், தெளியாத - அர்த்தம் இன்னதென்று தெரியாத, நிலங்கள்- இடங்களை, தெளிகின்றோம்.

(கருத்து.) பொய்கை முனி முதலான பத்து ஆழ்வார்களும் எம்பெருமானை அநுபவித்து, அதினாலுண்டான ஆநந்தமானது உள்ளடங்காமல் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடினார்கள். அவைகள் படிக்கும்போதே வருத்தமில்லாமல் பொருளைத் தெரிவிக்கிறவைகளாகவும், பூமாலைகள் போல் எம்பெருமானுக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பவைகளாகவும் இருக்கின்றன. அவைகளையும், அவைகளின் பொருள்களையும் நாம் ஒரு குருவினிடத்தில் நன்றாகப்படித்து, தெளிவாகப் பொருள் தெரியாத வேதத்திலுள்ள இடங்களைத் தெளிவாக அறிகின்றோம்.

குறிப்பு:— (1) தண் பொருநல் - குளுமையான தாம்ரபர்ணியைச் சொன்னதனாலே ஆழ்வாருடைய மனது மிகவும் ஈரமுள்ளது (இரக்கமுள்ளது) என்று காட்டப்படுகிறது. மேலும் கலியுகத்திலும் எம்பெருமானை உயர்ந்த புருஷார்த்தமாக எண்ணுகிறவர்கள் பிறக்கப் போகிறார்கள் என்றும், தமிழ்தேசத்தில் அப்படி அனேகம் பேர்கள் அவதரிப்பார்களென்றும் சொல்லி, அப்படி அவதாரம் பண்ணுகிற இடங்களை ஸ்ரீ பாகவதத்தில் சொல்லியிருக்கிறது. அந்த ஸங்கதியை நம்முடைய நினைவிற்குக் கொண்டுவருவதற்காக தாம்ரபர்ணியைச் சொன்னது.

(2) பெரிய ஆழ்வாரைச் சொன்னதினாலே இவர் திருமகளான ஸ்ரீ ஆண்டாளையும் சொன்னபடி.

(3) மந்திரிகள் சில ஸ்ரீ வைஷ்ணவர்களின்பேரில் குற்றம் சாட்டினபோது, அவர்கள் குற்றம்செய்திருக்க மாட்டார்கள் என்றும், பாம்பின் குடத்தில் நான் கையிடுவேன் என்றும் குலசேகர ஆழ்வார் சொன்னதைக் கொண்டு, அவரை "துய்ய" என்று விசேஷித்தது.

(4) திருப்பாணாழ்வாரைத் தோளில் ஏற்றிக்கொண்டு வரும்படி ஒரு பிராம்மணனுக்கு ஸ்ரீ ரங்கநாதன் கட்டளையிட, அப்படியே அவர் அவரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு கோவிலுக்குள் வந்தார். ஆகையாலே ஆழ்வாருக்கு "முனிவாஹநன்" என்று பெயர் வந்தது. ஸ்ரீ தேசிகனுக்கும் ஸ்ரீரங்கநாதன் "வேதாந்தாசாரியர்" என்று திருநாமம் சாற்றினார். இந்த ஸம்பந்தத்தைக் கொண்டு இந்த ஆழ்வாரை நம்முடைய நாதன் என்று சொன்னது.

(5) பெரும்புலியூரில் ஒருயாகம்நடக்குங்காலத்தில், தன்னைப் பரம் ஜ்யோதிஸ்ஸான எம்பெருமானைக் காட்டினதைக் கொண்டு திருமழிசையாழ்வாரை "சோதி" என்று சொன்னது.

(6) திருமங்கையாழ்வார், வாளையும் வில்லையும் கையில் வைத்துக்கொண்டு வழிப்பறி செய்து கிடைத்த பொருளைக் கொண்டு பிராமணபோஜநம் செய்துவந்தார். அப்போது ஸ்ரீ ரங்கநாதன் திருவாலியில் கல்யாணம் செய்து கொண்டு பிராட்டியுடன் திருநகரிக்கு எழுந்தருளும்போது அவருடைய எல்லா திருவாபரணங்களையும் பறித்துக் கொண்டார். எம்பெருமான் ஒரு வியாஜத்தைக் கொண்டு அவருக்குத் திருமந்திரத்தை உபதேசிக்க, அவருக்கு ஞானம் பிறந்து வேதத்தின் அர்த்தங்களை எல்லாம் பெரிய திருமொழி முதலான பிரபந்தங்களில் வெளியிட்டார். அவர் வாளையும் வேலையும் ஏந்தினது உலகத்தில் வேதத்தின் பொருள் நன்றாய் விளங்கும்படி ஆயிற்றென்று அவரைக் கொண்டாடின படி. சிஷ்யர்கள் குருவினிடம்ஸமித்து முதலான உபஹாரங்களைக் கொண்டு போவார்கள்; இவர் வாளையும் வேலையும் கொண்டுபோனார். அவர்கள் தன் சக்திக்குத் தகுந்தபடி பொருளைக் குருதக்ஷிணையாகக் கொடுப்பார்கள்; இவர்

குருவினிடமிருந்து எல்லா ஸொத்தையும் பிடுங்கிக் கொண்டார். அவர்கள் குருவை வணங்கி உபதேசம் பெறுவார்கள்; இவர் எம்பெருமானை நிர்ப்பந்தம் செய்து உபதேசம் பெற்றார். அவர்கள் பெற்ற உபதேசம் அவர்களுக்கே உதவும்; இவர் பெற்ற உபதேசமானது உலகத்திற்கே உதவும் படியாயிற்று. இந்த ஆச்சர்யத்தை ஸ்ரீதேசிகன் இங்கே வெளியிடுகிறார்.

(7) பராசரர் முதலான ரிஷிகள் செய்த புராணங்களைக் காட்டிலும் ஆழ்வார்களுடைய பிரபந்தங்களுக்கு ஒரு ஏற்றம் உண்டு. இவைகள் வேதத்தில் சொன்ன ரஹஸ்யமான பொருள்களை மிகவும் தெளிவாய்க் காட்டுகின்றன. இவைகளைப் படிப்பதினால் எம்பெருமானிடத்தில் உடனே ப்ரீதி உண்டாகும். இந்த உபகாரத்தினால் ஸ்ரீ தேசிகன் ஆழ்வார்களை வணங்கினது.

இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும் பேற்றி
லிகழாத பல்லுறவி லிராக மாற்றில்*
தன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக் கத்திற்
றத்துவத்தை யுணர்த்துதலிற் றன்மை யாக்கில் *
அன்பர்க்கே யவதரிக்கு மாய னிற்க
வருமறைக டமிழ்செய்தான் றாளே கொண்டு *
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தோல்வழியே நல்வழிக டுணிவார் கட்கே. (2)

(ப-ரை.) துன்பு - குற்றம், அற்ற - இல்லாதவரான, மதுரகவி, இன்பத்தில் - இனிமையாயிருப்பதில், இறைஞ்சுதலில்- ரக்ஷிக்கிறவனாக அடைவதில், இசையும் பேற்றில் - ஒப்புக்கொள்ளப்பட்ட லாபத்தில், (புருஷார்த்தத்தில்) இகழாத - விட்டுநீங்காத, பல் உறவில் - பலவிதமான - தாயாகவும், தகப்பனாகவும், குருவாகவும் இருக்கிற உறவுகளில், இராகம் மாற்றில்- கண்முதலிய இந்திரியங்களால் அநுபவிக்கக் கூடிய விஷயங்களிலுள்ள ஆசையை மாற்றுவதில், தன் பற்றில் - தன்னிடத்தில் பிடிப்பையுண்டாக்குவதில், வினைவிலக்கில் - முன் செய்த கர்மங்களைப் போக்குவதில், தகவு ஒக்கத்தில்- கருணையினுடைய உயர்த்தியில், தத்துவத்தை உணர்த்துதலில் - தத்துவத்தை (உண்மையான பொருள்களை) அறியும்படி செய்கையில், தன்மையாக்கில் - தன் ஸ்வபாவத்தை யுண்டாக்குகையில்— ஆகிய இந்தப்பத்து விஷயங்

களில், அன்பர்க்கே - பக்தர்களுக்காகவே, அவதரிக்கும் - அவதாரஞ்செய்த, ஆயன் - கோபால உருவத்தைக் கொண்ட கிருஷ்ணன், நிற்க - இருக்கும் போது அவரை விட்டு விட்டு, அரு-அர்த்தம் அறியமுடியாத, மறைகள்- வேதத்தின் பொருள்களை, தமிழ் செய்தான் - தம்முடைய தமிழ்ப் பாட்டுக்களால் வெளியிட்டநம்மாழ்வாருடைய, தாளே - திருவடிகளையே, கொண்டு-அடைந்து, தோன்ற - உலகத்தாருக்குத் தோன்றும்படி, காட்டும் - காட்டின, தொல்வழியே-பழைய வழியே, துணிவார்கட்கு-தைரியமுடையவர்களுக்கு, நல்வழிகள்- நல்லவழிகள்.

(கருத்து.) மதுரகவியாழ்வார், அவதாரஞ் செய்து அக்காலத்திலிருந்த எம்பெருமானை விட்டு, பாட்டில் சொன்ன பத்துவிஷயங்களில் ஆழ்வாரையே யடைந்தார். இப்படி அவர் காட்டின வழியே முன்னோர்கள் நடந்தவழி. அதுவே விஷயங்களை ஜயித்து மோக்ஷம் பெறவேண்டுமென்று ஆசைப் படுகிறவர்கள் போக வேண்டிய வழி.

குறிப்பு.— (1) துன்பு- துன்பம், இந்த சொல்லானது, இங்கு துன்பத்துக்குக் காரணங்களான குற்றங்களைச் சொல்லுகிறது. அவைகளாவன:— ஒன்றை வேறொன்றாக நினைப்பது, மோசம் பண்ணுவது, தன்னைப் படித்தவனென்று எல்லாரும் கொண்டாட வேண்டுமென்றும், தனக்கு ஒரு லாபம் வேண்டுமென்றும், தன்னை யெல்லாரும் பூஜிக்க வேண்டும் என்றும் ஆசைப்படுவது. இவைகள் இவருக்கில்லாமையால் அவருடைய அநுஷ்டானத்தை நாம் நம்பலாம் என்று கருத்து.

(2) இகழாத- இளப்பமென்று தள்ளாத என்று பொருள், அதின் காரியமான விட்டுவடுவது இங்கே சொல்லப்படுகிறது.

(3) பழமையான வழி:— முன்னாலே இருந்த மைத்ரேயர் முதலான ருஷிகள் நடந்த வழி.

(4) இந்த ஆழ்வார் கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் பிரபந்தத்தில் ஒவ்வொரு பாட்டாலும் ஆழ்வார் தமக்குச் செய்த உபகாரத்தைச் சொல்லுகிறார். ஆழ்வாரே இவருக்கு இன்பமாய் இருந்தார். அந்த ஆநந்தாநுபவத்தை அடைவதற்கு அவரே உபாயம். அவரே இவர் ஒப்புக்கொண்ட புருஷார்த்தம். அவரே இவருக்கு எல்லாவிதமான உறவினர், அவரே இவருக்

குள்ள விஷயங்களின் ஆசையைப் போக்கினர். அவரே இவரைத் தன்னிடம் வந்து சேரும்படி செய்தார். அவரே இவருடைய புண்ணியம்பாபமென்கிறஇரண்டுவிதங்களான கர்மங்களைப் போக்கினர். அவருடைய கருணைக்கு அளவில்லை. அவரே இவருக்குத் தன்னுடைய பிரபந்தங்களாலே அறியவேண்டிய விஷயங்களை அறிவித்தார். அவரே ஜீவனுக்கு அடையவேண்டிய தன்மையை அடையும்படி செய்தார்.

(5) கர்மபந்தம் போகவேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள் ஆசார்யனையே அடையவேண்டியது. அப்படிச் செய்யாமல் எம்பெருமானையே அடைவதாலும், புஸ்தகங்களைப் பார்ப்பதாலும் ஒருவித பிரயோஜனமுமுண்டாகாது என்று இந்த ஆழ்வாருடைய அனுஷ்டானம் காட்டுகிறது.

இந்த பிரபந்தத்தில் சொல்லிய ஸங்கதிகள்:— (1.) ஒருவன் மோக்ஷம் வேண்டுமென்று ஆசைப்பட்டால், ஒரு ஆசார்யனை அடையவேண்டியது. (2.) ஆசார்யனையும் அவனுடைய ஆசாரியர்களையும் எம்பெருமான் வரையில் (உள்பட) ஒவ்வொருவர் பெயரைச் சொல்லி வணங்க வேண்டியது. (3.) எம்பெருமானே ஆசார்யஉருவம் கொண்டு அவதாரம் செய்திருக்கிறன் என்று தெரிந்து கொண்டு, அவரிடத்தில் எம்பெருமானிடத்தில் போல மிகுந்த பக்தியைச் செய்ய வேண்டியது. (4.) ஆசாரியனை எப்போதும் கொண்டாடி, எல்லாரும் அவனை அறியும்படி அவருடைய குணங்களைப் புலம்பும்படியான பக்தியைச் சிஷ்யன் செய்ய வேண்டியது.

ஒருவன் ஆசார்யனை வணங்குகிற வழியைக் காட்டுவதற்காக ஒரு பாட்டை அருளிச் செய்கிறார்.

என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம் புக்கி
யானடைவே யவர்குருக்க ணிரைவ ணங்கிப்*
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்கால் நம்பி*
நன்னெறியை யவர்க்குரைத்த வுய்யக் கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்*
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்
டெம்பெருமான் றிருவடிக ளடைகின்றேனே (3)

(ப-ரை.) என் உயிர் - என் ஆத்மாவை, தந்து - கொடுத்து, அளித்தவரை - ரக்ஷித்த என்னுடைய ஆசார்யனை, சரணம்புக்கு, வணங்கி, யான் - நான், அவர் குருக்கள் நிறை - அவரது ஆசார்யர்களின் வரிசையை, வணங்கி, பின் - பின்பு, பெரும்பூதூர் ஸ்ரீ பெரும்பூதூரில், வந்த - அவதாரஞ்செய்த, வள்ளல் - உதார குணமுடைய ஸ்ரீபாஷியகாரர், பெரியநம்பி, ஆளவந்தார், மணக்கால்நம்பி, நல் நெறியை - நல்ல வழியை, அதாவதுபிரபத்தியை, அவர்க்கு - மணக்கால் நம்பிக்கு, உரைத்த - உபதேசம் செய்த, உய்யக்கொண்டார், நாதமுனி, சடகோபன், சேனைநாதன் - விஷ்வக்ஸேநர், இன் அமுதம்- இனிமையான அமுதம் போல் போக்யையான, திருமகள் - பெரியபிராட்டி, என்று இவர்களை, முன்னிட்டு - முன்னாலே வணங்கி, எம்பெருமான், திருவடிகள் - திருவடிகளை, அடைகின்றேன்.

(கருத்து.) இந்தப் பாட்டில் சொன்னபடி ஒருவன் தினந்தோறும் ஆசார்யர்களின் வரிசையை அனுஸந்தானம் பண்ணவேண்டியது. நான் எம்பெருமானுக்காகவே இருக்கிறவன் என்ற இந்த அர்த்தத்தை எனக்குத் தெரிவித்து என்னை ஒரு பொருளாகச் செய்து என்னை ரக்ஷித்த என்னுடைய அடுத்த ஆசாரியனையும், அவருடைய ஆசாரியர்கள் வரிசையும், ஒருவர் பின்னால் ஒருவரை பிரீதியுடன் வணங்குகிறேன். இதன் பின்பு பெரும்பூதூரில் கிருபையினாலே வந்து அவதரித்த மஹோபகாரகனான ஸ்ரீபாஷியகாரர், பெரியநம்பி, ஆளவந்தார், மணக்கால் நம்பி, உய்யக்கொண்டார், நாதமுனி, நம்மாழ்வார், சேனைமுதலியார், பிராட்டி இவர்களை வணங்கி, எம்பெருமானை வணங்குகிறேன்.

குறிப்பு:— (1) நான் ஆசார்யனிடம் போவதற்கு முன்பு, எம்பெருமான் ஒருவன் இருக்கிறான் என்றும், நான் அவனுக்காகவே இருக்கிறேன் என்றும், ஆகையால் அவனுக்கு இஷ்டமான வேலைகளைச் செய்து அவனை ஸந்தோஷப் படுத்தவேண்டியது என்றும் அறியவில்லை. ஆகையினாலே அந்த காலத்தில் நான் இருந்தும் இல்லாதவனாகவே இருந்தேன். ஆசார்யனை அடைந்த பிறகு இந்த விஷயங்களை அவருடைய உபதேசத்தால் தெரிந்துகொண்டு ஒரு வஸ்துவாக ஆனேன். இதைப் பாட்டில் "என் உயிர் தந்தளித்தவரை" என்று சொல்லியிருக்கிறது.

(2) ஸ்ரீபாஷியகாரர் அவதாரம் செய்ததற்கு முன்னாலே, எம்பெருமான் ஒருவன் இல்லை என்றும், வேறு தேவதைகளைப் பரதேவதை என்றும் வாதிகள் சொல்ல, நாம் அதை நம்பி இந்தப் பெரிய தனத்தை இழந்திருந்தோம். அவர் அவர்களுடைய குயுக்திகளைக் கண்டித்து, பிராட்டியும் எம்பெருமானுமாகிய மகாதனம் இருப்பதை நமக்குக் காட்டிக் கொடுத்தபடியால் இந்த உபகாரத்தை நினைத்து அவரை 'வள்ளல்' என்று சொன்னது.

(3) நன்னெறி— பக்தியைக் காட்டிலும் பிரபத்தியானது அகிஞ்சநனான நமக்குத் தகுந்த மோக்ஷமார்க்கமென்று உய்யக்கொண்டார், மணக்கால் நம்பிக்கு உபதேசித்தார்.

(4) பிராட்டி இனிமையான அமிருதம் போல் எம்பெருமானுக்கும் போக்யையாய் இருக்கிறதைக் கொண்டு "இன்னமுதத் திருமகள்" என்று சொல்லிற்று.

நம்முடைய ஆசாரியர்களில் எம்பெருமானாரும், ஆளவந்தாரும், நாதமுனிகளும் மிகுந்த உபகாரம் செய்திருப்பதால், அவர்களைத் தனியே அநுஸந்தானம் செய்வதற்காக மூன்று பாட்டுக்களை அருளிச் செய்கிறார்.

ஆரண நூல்வழிச் செவ்வை யழித்திடு மைதுகர்க் கோர்*
வாரண மாயவர் வாதக் கதலிகண் மாய்த்தபிரான்*
ஏரணி கீர்த்தி யிராமா னுசமுனி யின்னுரைசேர்*
சீரணி சிந்தையி னோஞ்சிந்தி யோமினித் தீவினையே. (4)

(ப-ரை.) ஆரணம் நூல் - வேதமாகிய சாஸ்திரத்தினுடைய, (அதாவது - பிரும்ம ஸூத்திரங்களுடைய) வழி செவ்வை - வழியின் செம்மையை, அழித்திடும் - கெடுத்தவர்களான, ஐதுகர்க்கு - ஹைதுகர்களுக்கு, அதாவது— பிரமாணமாக ஒன்றையுங்கொள்ளாமல் வெறும் யுக்திகளைக் கொண்டு ஸாதிக்கிறவர்களுக்கு, ஓர்வாரணமாய் - ஒருயானையாக, அவர் வாதம் கதலிகள் - அவர்களுடைய வாதங்களாகிய வாழைகளை, மாய்த்த - நாசஞ் செய்த, பிரான் - உபகாரகனும்,ஏர் அணி - உலகத்துக்குத்தகுந்த அலங்காரமான, கீர்த்தி - கீர்த்தியை யுடையவருமான, இராமானுசமுனியின், இன் உரை - இனிமையான ஸூக்திகளை, சேர் -

சேரும், சீர் அணி - சமம் தமம் முதலான குணங்களை அலங்காரமாகவுடைய, சிந்தையினோம் - மனதையுடைய நாம், இனி - இனிமேல், தீவினை- கெட்ட கர்மங்களை, சிந்தியோம்- நினைக்க மாட்டோம்.

(கருத்து.) எம்பெருமானார் காலத்திற்கு முன்பு, வேதாந்த சாஸ்திரமான பிரம்மஸூத்திரங்கள் நியாயங்களை ருஜுவாகக் காட்டுவதைத் தள்ளிவிட்டு, ஐதுகர்கள் தங்களுக்குத் தோன்றின மதத்திற்கு ஒத்து அந்த ஸூத்திரங்களுக்கு உரை எழுதி அதை நாசஞ்செய்தார்கள். ஒரு யானையானது ஒரு வாழைத் தோட்டத்தின் உள்புகுந்து வாழைகளை நாசம்செய்வதுபோல், எம்பெருமானர் அவர்களுடைய வாதங்களை நாசஞ்செய்து, ஸூத்திரங்களுக்கு அவைகளின் அக்ஷரங்களைஒத்து உரைஎழுதி, இப்படிப் பெரிய உபகாரம் செய்தார். அலங்காரமான கீர்த்தியை உடைய ராமாநுஜமுனியினுடைய இனிமையான பிரபந்தங்களை நாம் அநுஸந்தானம் செய்கிறோம். இனி சமம் தமம் முதலான நல்ல குணங்களை அலங்காரமாகவுடைய நம்முடைய மனதானது எம்பெருமானுக்கு இஷ்டமில்லாத கர்மங்களை நினைக்காது.

குறிப்பு:— (1.) எம்பெருமானரை யானையாகச் சொன்னதினுல், இவர் ஆரம்பித்ததை முடிக்க வல்லவரென்றும், இவரை ஒருவரும் கலக்கமுடியாதென்றும் ஏற்படுகிறது. ஐதுகரின் வாதங்களை வாழையாகச் சொன்னதினுல், அவைகளில் ஸாரமில்லையென்றும், அவைகளை வருத்தமில்லாமல் நாசஞ்செய்யக் கூடும் என்றும் காட்டப்படுகிறது.

(2.) அவருடைய பிரபந்தங்களைப் படிப்பதினுல் நம்முடைய மனதிற்கு அலங்காரமான சமம், தமம் முதலான குணங்களுண்டாகி, நாம் எம்பெருமானுக்கு வேலைக்காரன் என்று அறிந்து, அவனுக்கு இஷ்டமான வேலைகளையே நினைப்போம். வேறொன்றையும் நினைக்க மாட்டோம் என்று கருத்து.

நீளவந் தின்று விதிவகை யானினை வொன்றிய நாம்
மீளவந் தின்றும் வினையுடம் பொன்றி விழுந்துழலா
தாளவந் தாரென வென்ற ருடந்து விளங்கியசீர்
ஆளவந் தாரடி யோம்படி யோமினி யல்வழக்கே. (5)

(ப-ரை.) நீள வந்து - ஸம்ஸாரத்தில் அநாதிகாலமாக ஓடித் திரிந்து, இன்று - இந்தப் பிறப்பில், விதிவகையால் - ஒரு பாக்கியத்தால், நினைவு ஒன்றிய - நல்ல நினைவை அடைந்திருக்கிற, நாம், மீள - மறுபடியும், வந்து - ஸம்ஸாரத்தில் வந்து, இன்னும் - மேலுள்ள காலத்திலும், வினையுடம்பு - கர்மத்தினுலுண்டான உடம்பில், ஒன்றி - சேர்ந்து, விழுந்து - அது காரணமாகக் கீழ்ப் பிறப்புகளை யடைந்து, உழலாது - துன்பப் படாமலிருப்பதற்காக, ஆளவந்தார் என - ரக்ஷிக்கவந்தார் என்று சொல்லும்படி, வென்று - வாதிகளை ஜயித்து, அருள் தந்து - கிருபை செய்து, விளங்கிய, சீர் - குணங்களை யுடையவரான, ஆளவந்தார் - ஆளவந்தாருக்கு, அடியோம் - தாஸர்களான நாம், இனி - இனிமேல், அல்வழக்கு - அஸத்தான சாஸ்திரங்களை, படியோம் - படிக்கமாட்டோம்.

(கருத்து.) அநாதிகாலமாக (வெகுநாளாய்) ஸம்ஸாரத்தில் ஓடித்திரிந்த நாம் இந்தப் பிறப்பில் உடம்பைக் காட்டிலும் ஆத்மா வேறு என்று தெரிந்து பரலோகத்திற்கு வேண்டிய சிந்தையை (விசாரங்களை) அடைந்திருக்கிறோம். இது ஒரு பாக்கிய விசேஷத்தாலே உண்டாயிருக்கிறது. மறுபடியும் நம்மை ஒருவனுக்கும் உட்படாதவனென்று நினைத்து, வேறு தேவதைகளை அடைந்து, எம்பெருமானுக்கும் அவரிடத்தில் பக்தியுள்ளவர்களுக்கும் செய்யவேண்டிய கைங்கரியங்களில் ஆசையில்லாமல் கர்மங்களைச் செய்து, உடம்புகளை அடைந்து ஸம்ஸாரத்தில் மீண்டும் உழலாதபடி, ஆளவந்தார் வாதிகளை ஜயித்து, பிரபந்தங்களாலே நமக்கு உபகாரம் செய்திருக்கிறார். இதனுல் விளங்கிய கல்யாணகுணங்களையுடைய அவருடைய திருவடிகளை அடைந்திருக்கிறோம். இனி நாம் ஒருவனுக்கும் சேஷன் அன்று என்றும், எம்பெருமானைத் தவிர வேறு இன்னொருவனுக்கு சேஷன் என்றும் எண்ணும்படி செய்யும் அஸத்தான சாஸ்திரங்களைப் படிக்கமாட்டோம்.

குறிப்பு:— (1) இப்படி வாதிகளை ஜயித்து உண்மையான நம்முடைய ஸ்வரூபத்தைத் தெரிவித்து நம்மை ரக்ஷித்தபடியால், அவருக்கு ஆள் - ரக்ஷிக்க, வந்தார் - அவதரித்தவர் என்று திருநாமம் ஏற்பட்டது.

(2) வினையுடம்பு என்றது முன் வினையினால் உண்டான உடம்பு என்றும், பின் வினைக்குக் காரணமான உடம்பு என்றும் பொருள் கொடுக்கிறது.

காளம் வலம்புரி யன்னநற் காத லடியவர்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை யின்னிசை தந்தவள்ளல்
மூளுந் தவநெறி மூட்டிய நாத முனிகழலே
நாளுந் தொழுதெழு வோம்நமக் கார்நிகர் நானிலத்தே. (6)

(ப-ரை.) காளம் வலம்புரி அன்ன - காளத்தையும் சங்கையும் போலிருந்த, நல் காதல் - நல்ல பக்தியையுடைய, அடியவர்க்கு - சிஷ்யர்களுக்கு, தாளம் வழங்கி, தாளவித்யையைச் சொல்லிக்கொடுத்து, தமிழ் மறை - தமிழ் வேதமான திருவாய்மொழியினுடைய, இன் இசை - இனிமையான கானத்தை, தந்த - உபதேசித்த, வள்ளல் - உதாரகுணமுடையவரும், மூளும் - செய்யத்தகுந்த, தவம் நெறி - தபோமார்க்கங்களை, மூட்டிய - உலகத்தில் பரவும்படி செய்தவருமான, நாதமுனி - நாதமுனியினுடைய, கழல் - திருவடிகளை, நாளும் - ஒவ்வொரு நாளும், தொழுது - ஸேவித்து, எழுவோம் - உஜ்ஜீவிப்போம், நால் நிலத்து - நான்கு வகையான நிலத்தில் நமக்கு, ஆர் - எவர், நிகர் - ஸமானமானவர்.

(கருத்து.) நாதமுனிகளுக்கு அவரிடத்தில் மிகுந்த பக்தியுள்ள இரண்டு சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்கள் வாதிகளோடு வாதம் செய்யும்போது அவர்களுடைய குரலானது காளம், வலம்புரி என்னும் வாத்தியங்கள்போல் கம்பீரமான சப்தமுள்ளதாயும், வாதிகளுக்கு பயத்தை உண்டாக்கினதாயும் இருந்ததாலே, அவர்கள் அந்த வாத்தியங்களைப் போல் இருந்தார்கள். நாதமுனிகள் அவர்களுக்குத் தாளம் போடுகிற வித்யையையும், தமிழ்வேதத்தினுடைய இனிமையான கானத்தையும் சொல்லிக்கொடுத்து இவ்விதமாய் உபகாரம் செய்தார். மேலும் மோக்ஷத்தை வேண்டுகிறவர்கள் பிரீதியுடனே செய்யவேண்டிய தபோமார்க்கமாகிய பக்தி பிரபத்தி என்கிற இவைகளை உலகத்தில் பரவும்படி செய்தார். அந்த நாதமுனிகளின் திருவடிகளை ஒவ்வொரு நாளும் ஸேவித்து நாம் உஜ்ஜீவிக்கிறோம். இந்த நான்கு வகையான பூமியில் நமக்கு ஸமானமானவர் எவர் இருக்கிறார்.

குறிப்பு:— (1.) எம்பெருமானிடத்தில்போல் ஆசாரியனிடத்தில் இருக்கவேண்டிய மிகுந்த பக்தியை இங்கே 'நற்காதல்' என்று சொல்லியிருக்கிறது.

(2.) நான்கு வகையான பூமியாவது:— மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை.

(3.) இந்த மூன்று பாட்டுக்களில் முதல் பாட்டில் மனதின் வேலையையும், இரண்டாவதில் வாக்கின் வேலையையும், மூன்றுவதில் உடம்பின் வேலையையும் சொல்லியிருக்கிறது. ஆனபோதிலும் மூன்று ஆசாரியர்களிடத்திலும் மூன்று வேலைகளையும் செய்ய வேண்டியது.

ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம்.

1. உபோத்காதாதிகாரம்.

இந்த முதல் அதிகாரத்தில் இந்தப் பிரபந்தத்தின் விஷயத்தையும், அதின் பிரயோஜநத்தையும் காட்டுவதற்கு முதலில் ஒரு பாட்டை அருளிச்செய்கிறார்.

ஆளுமடைக்கல மேன்றெம்மை யம்புயத் தாள்கணவன்
தாளிணை சேர்ந்தெமக் கும்மவை தந்த தகவுடையார்
மூளுமிருட்கள்விள்ள முயன் றோதிய மூன்றினுள்ளம்
நாளுமுகக்கவிங் கேநமக் கோர்விதி வாய்க்கின்றதே. (7)

(ப-ரை.) அம்புயத்தாள் - தாமரைப்பூவிலிருக்கிற பிராட்டியினுடைய, கணவன், எம்மை, அடைக்கலம் - ரக்ஷிக்கவேண்டிய வஸ்துவாக ஒப்புக்கொண்டு, ஆளும் என்று - ரக்ஷிக்குமென்று, தாள் இணை - (அவனுடைய) ஒன்றுக்கொன்று ஒப்பாயிருக்கிற திருவடிகளை, சேர்ந்து - உபாயமாக அடைந்து, எமக்கும் - நமக்கும், அவை - அந்த திருவடிகளை, தந்த - உபாயமாகக் காட்டிக் கொடுத்த, தகவு உடையார் - கிருபையையுடைய ஆசாரியர்கள், மூளும் - மேல் மேல் விருத்தியை யடையும், இருட்கள் - அஜ்ஞாநங்கள், விள்ள - விண்டுபோக, நாசமாக, முயன்று - முயற்சி செய்து, அதாவது ஆசைப்பட்டு, ஓதிய - சொல்லிக் கொடுத்த, மூன்றின் - மூன்று ரஹஸ்யங்களுடைய, உள்ளம் - உட்கருத்தை, நாளும் - ஒவ்வொரு நாளும், உகக்க - நினைத்து ஸந்தோஷப்பட, இங்கு - இந்த உலகத்தில், நமக்கு, ஓர் - ஒப்பில்லாத, விதி - பாக்கியம், வாய்க்கின்றதே - நாம் ஒரு பிரயத்நம் பண்ணாதிருக்கக் கிடைத்திருக்கின்றதே.

(கருத்து.) எம்பெருமான் அகிஞ்சநரான நம்மை ரக்ஷிக்கவேண்டிய வஸ்துவாக ஏற்றுக்கொண்டு, கைங்கரியரூபமான ரக்ஷணையைச்செய்வன் என்று நிச்சயமாய் எண்ணி, அவனுடைய இரண்டு திருவடிகளை ஆசாரியர்கள் அடைந்து, அவர்கள் சிஷ்யரான நமக்கும் அவைகளைக் கொடுத்தார்கள். இதை அவர்கள் தங்களுடைய கருணையினாலே செய்தது. வளர்ந்து வரும்படியான

அஜ்ஞானமாகிற இருளானது போரும்படி, அவர்கள் ஆசைப் பட்டு நமக்கு மூன்று ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்தார்கள். எம்பெருமானுடைய ஸ்வரூபம் முதலானவைகளைத் தெரியாத படி செய்கிற பிரகிருதிமண்டலத்தில் இருக்கும்போதே இந்த மூன்று ரஹஸ்யங்களுடைய ஸாரமான அர்த்தத்தை நாம் தினந்தோறும் நினைத்து ஸந்தோஷப்படும்படி ஒரு பாக்கியம் கிடைத்திருக்கிறது. இதற்குத் தகுந்த காரணம் நான் என்ன செய்தேன் என்று தெரியவில்லை. பலனே கிடைத்திருக்கிறது.

குறிப்பு:— (1.) தாளிணை சேர்ந்து- இதினாலே பிரபத்தி செய்வது இந்தப் பிரபந்தத்திற்கு ஒரு பிரயோஜநம் என்று காட்டப்படுகிறது.

(2.) மூன்றினுள்ளம் - இதினாலே இந்தப் பிரபந்தத்திற்கு ரஹஸ்யத்ரயார்த்தம் விஷயமென்றும், அதை அறிவது இதற்கு ஒரு பிரயோஜநமென்றும் காட்டப்படுகிறது.

(3.) ஆளும் - நாம் பிரபத்தி பண்ணினால், நம்முடைய பாரத்தைத் தானே சுமக்க வேண்டியதென்று ஏற்றுக்கொண்டு, நம்மைத் தனக்கு இஷ்டமான வேலைகளைச் செய்யும்படி எம்பெருமான் செய்வன் என்று கருத்து. இதினாலே இந்தப் பிரபந்தத்திற்கு இதுவே பிரதானமான பிரயோஜநம் என்று காட்டப்படுகிறது. முன் சொன்ன இரண்டும் இதற்கு உட்பட்டவைகள்.

இந்த அதிகாரத்தில் சொல்லும் விஷயங்களாவன:— (1) நாம் எம்பெருமானுடைய ப்ரீதிக்கு விஷயமானவர்கள். அவன் ஸ்ரீவைகுந்தத்தில் ஆதிசேஷன் மேல் பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கிறான். அதை நாம் கண்டு ஆனந்தப்பட வேண்டுமென்று அவனுக்கு ஆசை இருக்கிறது. இதற்கு நித்யஸூரிகளைப் போல் நமக்கும் பாத்தியமுண்டு. (2) இதை யடையாமல் நாம் ஸம்ஸாரத்தில் விழுந்து கஷ்டப்படுகிறோம். இதற்குக் காரணம்- நம்மை உள்ளபடி அறியாமல் நம்மை உடம்பாகவே எண்ணிக் கொண்டு அதற்கு வேண்டிய கர்மங்களைச் செய்வது. (3) எம்பெருமான் ஏதோ ஒரு ஸுக்ருதத்தை வியாஜமாகக் கொண்டு நாம்பிறக்கும் போது நம்மைக் கடாக்ஷித்தால் நமக்கு ஆசாரிய ஸம்பந்தம் உண்டாகும். அவர் நம்முடைய ஸ்வரூபத்தைத் தெரியப் படுத்தி

எம்பெருமானிடம் நாம் போகும்படியான உபாயத்தைச் செய்வர். (4) அவர் உபதேசிக்கும் விஷயங்களெல்லாம் சுருக்கமாக மூன்று ரஹஸ்யங்களில் அடங்கியிருக்கின்றன. ஆகையால் அவைகள் இந்தப் பிரபந்தத்திற்கு விஷயம்.

திருவுடன் வந்த செழுமணி போற்றிரு மாலிதயம்
மருவிட மென்ன மலரடி சூடும் வகைபெறுநாம்
கருவுடன் வந்த கடுவினை யாற்றில் விழுந்தொழுகா
தருவுட னைந்தறி வாரருள் செய்ய வமைந்தனரே. (8)

(ப-ரை.) திருவுடன் வந்த - திருப்பாற்கடலைக் கடையும் பொழுது, பிராட்டியுடன் வெளியில் வந்த, செழுமணி போல் - சிலாக்கியமான கௌஸ்துபம் என்கிற மணிபோலே, திருமால் - லக்ஷ்மீபதியான எம்பெருமானுடைய, இருதயம் - ஹ்ருதயம், திருமார்பானது, மருவு இடம் - சேர்ந்து இருக்குமிடம், என்ன - என்று சொல்லலாம்படி ப்ரீதிக்கு விஷயராய், அடி - தாமரை போன்ற திருவடிகளை, சூடும் வகை - தலையில் வைத்துக் கொள்ளும் பிரகாரத்தை, பெறு நாம் - பெறும்படியான பாக்கியத்தை யுடைய நாம், கருவுடன் வந்த - கர்ப்பத்துடன் அதாவது— அநாதியாக வந்த, கடு - கொடுமையான, வினை யாற்றில் - கர்மங்களாகிற ஆற்றில், விழுந்து, ஒழுகாது - ஆற்றுடன் போகாதபடி, அருவுடன் - ஸூக்ஷ்மமான அர்த்தத்தோடு, ஐந்து - ஐந்து விஷயங்களை, அறிவார் - அறிந்த நம்முடைய ஆசாரியர்கள், அருள் செய்ய - கிருபை செய்ய, அமைந்தனர் - ஏற்பட்டார்கள்.

(கருத்து.) கௌஸ்துபமென்னும் ரத்தினம்போலே, லக்ஷ்மீபதியான எம்பெருமானுடைய திருமார்பு நமக்கும் இருப்பிடம் என்னும்படி எம்பெருமானுடைய பிரீதிக்கு விஷயமானவர்கள் நாம். ஆகையால் அவனுடைய திருவடிகளை நகையைப்போல் நாம் தலையில் வைத்துக் கொள்ளத் தகுந்தவர்கள். அதாவது மிகவும் போக்கியமாக அவனுடைய கைங்கரியத்தைச் செய்யத் தகுந்தவர்கள். அநாதியாக வந்த கடுமையான கர்மமாகிய ஆற்றில் விழுந்து ஆற்றுடன் போகாதபடி, நம்முடைய ஆசாரியர்கள் நமக்குக் கருணை செய்ய ஏற்பட்டார்கள். அவர்கள் எம்பெருமானுக்கு உலகம் உடம்பு என்றும், அவன் அதற்கு

ஆத்மாவென்றும், அவனுக்கும் உலகத்திற்கும் உண்டாகி யிருக்கும் இந்த உறவையும், ஒருவன் அறியவேண்டிய ஐந்து அர்த்தங்களையும் அறிந்தவர்கள்.

குறிப்பு:— (1) திருவுடன் வந்த - என்பதினாலே லக்ஷ்மீயிடத்தில்போலே எம்பெருமானுக்குக் கௌஸ்துபமணியும் பிரீதிக்கு விஷயமென்று காட்டப் படுகிறது.

(2.) கௌஸ்துப மணியானது ஜீவாபிமானி தேவதை. அதைச் சொன்னதினாலே அதை எப்படி எம்பெருமான் பிரீதியுடன் மார்பில் பூட்டிக் கொண்டிருக்கிறானோ, அப்படியே. ஜீவனும் அவன் பிரீதிக்கு விஷயமென்று காட்டப்படுகிறது. இதனால் அதிகாரத்தில் சொல்லப்பட்ட முதல் விஷயம் சொல்லப் பட்டது.

(3.) "கருவுடன்" என்கிற பாட்டின்மூன்றாவது அடியாலே அதிகாரத்தின் இரண்டாவது விஷயமும் சொல்லப்படுகிறது.

(4.) "அருள் செய்ய வமைந்தனரே" என்பதினாலே அதிகாரத்தின் மூன்றாவது விஷயம் சொல்லப்பட்டது.

(5.) பாட்டின் நான்காவது அடியில் சொன்ன அரு என்பதும், ஐந்து என்பதும் மூன்றாவது நான்காவது அதிகாரங்களில் விரிவாய் சொல்லப் படுகின்றன. அவைகளெல்லாம் திருமந்திரமாகிய முதல் ரஹஸ்யத்தில் சுருக்கமாகக் காட்டப் படுன்றன. இதனால் அதிகாரத்தின் நான்காவது விஷயம் சொல்லப்பட்டது.

2. ஸார நிஷ்கர்ஷாதிகாரம்.

ஒருவன் படிக்கவேண்டிய புஸ்தகங்கள் கணக்கில்லாமலிருக்க, இந்த மூன்று ரஹஸ்யங்களையே இந்தப் புஸ்தகத்திற்கு விஷயமாகச் சொல்லக் கூடுமோ என்று ஸந்தேஹம் உண்டாக, இவை தான் மிகுந்த ஸாரமுள்ளவைகள்; மற்றவைகளில் அவ்விதமான ஸாரம் கிடையாதென்று இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

இதில் சொல்லிய விஷயங்கள்:— வேதத்தில் சொல்லிய விஷயங்களுக்கு விரோதமான கல்விகளில் ஸாரமில்லை. அவைகள் விஷம்போல் கெடுதலையும் செய்யும்; வேதத்தில் முன் பாகத்தில்

இந்த உலகத்தில் அநுபவிக்கக் கூடிய போகத்திற்கு ஸாதனங்களைச் சொல்லும் இடத்தில் ஸாரம் கொஞ்சம். ஸ்வர்க்கம் முதலான இடங்களில் அநுபவிக்கக் கூடிய போகத்திற்கு ஸாதனத்தைச் சொல்லும் இடம் சிலருக்கு ஸாரமென்று தோன்றலாம். உடம்பைவிட்டு நீங்கின ஆத்மஸ்வரூபத்தின் போகத்திற்கு ஸாதனத்தைச் சொல்லுமிடம் அதைக் காட்டிலும் அதிக ஸாரமென்று சிலர் எண்ணலாம். மோக்ஷத்தை ஆசைப்படுகிறவன் இவைகளைத் தள்ளிவிட்டு, வேதத்தின் பின்பாகத்தில் மிகவும் ஸாரங்களான இடங்களை எடுத்துக்கொள்ளவேண்டியது. பாற்கடலைக்கடையும்போது உண்டானவைகளை எல்லாம் தள்ளிவிட்டு தேவர்கள்அமிருதத்தையே எடுத்துக்கொண்டார்கள். அதுபோல.

இதைப் பாட்டால் அருளிச் செய்கிறார்:—

அமையா விவையென்னு மாசையி னலறு மூன்றுலகில்
சுமையான கல்விகள் சூழவந் தாலுந் தொகையிவையென்
றிமையா விமையவ ரேத்திய வெட்டிரண் டெண்ணியநம்
சமயா சிரியர் சதிர்க்கும் தனிநிலை தந்தனரே. (9)

(ப-ரை.) இவை - நாம் படித்த கல்விகள், அமையா - போதாது, என்னும் ஆசையினல், உலகில், சுமையான - பிரயோஜநமில்லாமல் சுமையாக மாத்திரமிருக்கிற, அறு மூன்று கல்விகள் - பதினெட்டு வித்யைகள், சூழ வந்தாலும் - முழுவதும் அடையப்பட்டாலும், இவை - இந்த வித்யைகள், தொகை என்று - இத்தனை வித்யைகள் படித்தான் என்று சொல்வதையே பிரயோஜநமாகவுடையவைகள் என்று நிச்சயித்து, இமையா - கண் கொட்டுதல் இல்லாதவர்களான, அதாவது - கொஞ்சகாலங்கூட ஜ்ஞாநக்குறைவில்லாதவர்களான, இமையவர் - நித்யஸூரிகள், ஏத்திய - கொண்டாடிய, எட்டு - மூலமந்திரத்தையும், இரண்டு - த்வயம், சரமச்லோகம் என்கிற மற்ற இரண்டையும், எண்ணிய - எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பவர்களான, நம் சமயாசிரியர் - நம்முடைய ஸித்தாந்தத்தை எங்கும் பரவும்படி செய்கிற ஆசாரியர்கள், சதிர்க்கும் - சதுரனாக, கெட்டிக்காரனாக இருக்கும், தனி நிலை - ஒப்பற்ற இருப்பை, தந்தனர் - கொடுத்தார்.

(கருத்து) சிலர் நாம் படித்த கல்விகள் போதாதென்று எண்ணி, கல்விகளை மேல்மேலும் கற்கிறார்கள். இப்படி ஆசைப்

பட்டுப் பதினெட்டு கல்விகளையும் ஒருவன் கற்றாலும், அவைகள் சுமையே யல்லாமல் அவைகளால் ஒரு பிரயோஜநமிமுல்லை. இவைகள் இத்தனைகல்விகள் படித்தானென்று சொல்லுவதற்காக மாத்திரம்பிரயோஜநப்படும். இப்படி நம்முடையஆசாரியர்கள் எண்ணி, திருமந்திரத்தையும் மற்ற இரண்டு ரஹஸ்யங்களையுமே அநுஸந்தித்தார்கள். நித்தியஸூரிகளும் இவைகளைக் கொண்டாடுகிறார்கள் என்றால், இவைகளின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? கொஞ்சமான பிரயாஸத்தாலே மிகவும் உயர்ந்த பலனைக் கொடுக்கக்கூடிய தனி நிலையை- அதாவது ஸாரமில்லாதவைகளைத் தள்ளி மிகவும் ஸாரமானவைகளை எடுத்துக் கொள்ளும்படியான இருப்பை— ஆசாரியர்கள் நமக்குக் கொடுத்தார்கள்.

---

3. பிரதாந பிரதிதந்திராதிகாரம்.

இப்படி இரண்டு அதிகாரங்களாலே மூன்று ரஹஸ்யங்களையே இந்தப் புஸ்தகத்திற்கு விஷயமாகச் சொல்லி, அவைகள் தெரிவிக்கிற அர்த்தங்களைச் சொல்ல ஆரம்பித்து, மூன்றாவதான இந்த அதிகாரத்தில் எம்பெருமானுக்கும் உலகத்திற்கும் இருக்கும் உறவை விரிவாய் அருளிச்செய்கிறார். இந்த உறவுதான் நம்முடைய மதத்திற்கு முக்கியமான விஷயம். அது வேறு ஒரு மதத்திலும் சொல்லப்படவில்லை.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்—— எம்பெருமான் உலகத்திலுள்ள வஸ்துக்களை வஸ்துக்களாகப் பண்ணி, அவைகள் வஸ்துக்களாக இருக்கும்படி தாங்கிக் கொண்டிருக்கிறான். அவன் தாங்குகிறவன், உலகம் தாங்கப்படுகிறது. அவன் ஈசுவரனாயிருந்து அதை வேலை செய்யும்படி செய்கிறான். அவன் ஏவுகிறவன், அது ஏவப்படுகிறது. உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் அவனுடைய ஸொத்து. அப்படி யில்லாதது அவைகளில் ஒன்றுமில்லை. இப்படி எம்பெருமானுக்கும் உலகத்திற்கும் மூன்றுவிதமான உறவு உண்டு. அறிவுள்ளவனாலே தாங்கப்பட்டு, ஏவப்பட்டு அவனுடைய ஸொத்தாய் அவனுக்காகவே இருப்பதை உடம்பு என்றும், அப்படித் தாங்கி, ஏவி, அதைச் சொத்தாக உடையவனை ஆத்மாவென்றும் இரண்டு

சொற்களுக்கும் பொருள். ஆகையால் உலகம் எம்பெருமானுக்கு உடம்பு; அவன் அதற்கு ஆத்மா. இப்படி எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாய் இருக்கையாலே அவனுக்கு ஸமமானவன் ஒருவனுமில்லை. இந்த மூன்று விதமான உறவானது கூலியைக் கொடுக்கும் யஜமானனுக்கும் அதை வாங்கிக்கொண்டு வேலை செய்யும் வேலைக்காரனுக்கும் உண்டான உறவுபோலன்று. அது எப்போதுமுள்ளது.

இதைப் பாட்டால் அருளிச்செய்கிறார்.

நிலைதந்த தாரக னாய்நிய மிக்கு மிறைவனுமாய் [மாய்த்
இலதோன் றெனவகை யெல்லாந் தனதெனு மெந்தையு
துலையோன் றிலையென நின்ற துழாய்முடி யானுடம்பாய்
விலையின்றி நாமடி யோமென்று வேதியர் மெய்ப்பொருளே.

(ப-ரை.) நிலை - இருப்பை, தந்த - கொடுத்த, தாரகனாய் - தாங்குகிறவனாய், நியமிக்கும் - ஏவுகிற, இறைவனுமாய் - ஈசுவரனுமாய், இலது - அவனுடைய ஸொத்தாக இல்லாதது, ஒன்று எனவகை - ஒன்றுமில்லையென்று சொல்லும்படி, தனது எனும் - தன்னுடையதென்று சொல்லும்படியான, எந்தையுமாய் - ஸ்வாமியுமாய், துலை ஒன்று - அவனுக்கு ஸமமானவன் ஒன்று, இலையென - இல்லை யென்று சொல்லும்படி, நின்ற - இருக்கிற, துழாய் முடியான் - திருத்துழாய் மாலையைத் தலையில் சூட்டிக்கொண்டிருக்கிற எம்பெருமானுடைய, உடம்பாய், விலையின்றி - நாம் அவனுக்குச் செய்யும் வேலைக்குக் கூலியில்லாமல், நாம் அடியோம் - நாம் அவனுக்கு வேலைக்காரர்கள், என்று, வேதியர் - வேதமறிந்தவர்களுடைய, மெய் பொருள் - உண்மையான பொருள்.

(கருத்து.) துளஸிமாலையைத் திருமுடியில் சூட்டிக்கொண்டிருக்கிற எம்பெருமான் இந்த உலகத்திற்கு இருப்பைக்கொடுத்து, அந்த இருப்பை நிலைநிற்கும்படி அதைத் தாங்கிக் கொண்டிருக்கிறான். அவன் ஈசுவரனாக இருந்து அதை ஏவுகிறான். உலகத்திலுள்ள எல்லாம் அவனுடைய ஸொத்து; அவன் அவைகளுக்கு ஸ்வாமி; அவைகளில் அவனுடைய ஸொத்தாக இல்லாதது ஒன்றுமில்லை. ஆகையினால் அவனுக்கு ஸமமானவர் ஒருவனுமில்லை. இப்படியிருக்கிற அவனுக்கு நாம் உடம்பாய் இருக்கிறோம்.

இதற்கு நாம் அவனிடம் ஒரு விலையையும் பெறவில்லை. அவனுக்கும் நமக்குமுள்ள இந்த உறவு நம்முடைய ஸ்வரூபத்தைப் பொறுத்திருக்கிறது. இது வேதத்தை அறிந்த பெரியோர்கள் நிச்சயமாக எண்ணிய உண்மையான பொருள். இப்படி வேதத்தின் பொருளை அறியாதவர்கள் வேதத்தின் உட்கருத்தை அறிந்தவர்கள் அன்று.

குறிப்பு:— (1) குடம் முதலானவைகளைத் தரை தூக்குவதுபோல், எம்பெருமான் உலகத்தைத் தூக்கவில்லை. தூக்குவது ஸ்வரூபத்தாலும், ஸங்கல்பத்தாலும்.

(2) எம்பெருமான் உலகத்தை ஏவுகிறது ஒரு யஜமானன் கூலி கொடுத்து வேலைக்காரனை ஏவுகிறதுபோல் அன்று. இந்த ஏவுதலுக்குக் கூலிகொடுப்பது முதலான உபாதிகள் ஒன்றுமில்லை.

(3) எல்லாம் எம்பெருமானுடைய ஸொத்து என்பதினால் அவைகளை அவன் தன் இஷ்டப்படி விநியோகம் செய்யலாம் என்று கருத்து.

(4) உடம்பு என்கிற சொல்லுக்குப் பொருள் கீழே எழுதப்பட்டிருக்கிறது.

4. அர்த்த பஞ்சகாதிகாரம்.

இப்படி எம்பெருமானுக்கும் உலகத்திற்குமுள்ள உறவைச்சொல்லி, இத்துடன் நாம் அறியவேண்டிய ஐந்து பொருள்களையும், அவைகளைப் பற்றி நாம் அறியவேண்டிய விஷயங்களையும் இந்த அதிகாரத்தில் அருளிச் செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— (1) பிராட்டியோடு கூடிய எம்பெருமானே மிகவும் உயர்ந்த புருஷார்த்தம். (அறிவுள்ளவனாலே அடையவேண்டிய வஸ்து). (2) அவன் திருவடிகளை உபாயமாகப் பற்றி அவனுக்குக் கைங்கரியம் செய்யவேண்டியவன் ஜீவன். (3) அவன் செய்யும் உபாயம். (4) அந்த உபாயத்தினால் அவனுக்குக் கிடைக்கும் பலன். (5) இதுவரையில் அவன் அதை அடையாதிருப்பதற்குக் காரணம்— ஆகிய இந்த ஐந்தையும் நாம் அறியவேண்டியது.

எம்பெருமானை ஐந்து குணங்களைக்கொண்டு அறியவேண்டியது. அவையாவன:— ஸ்வரூபத்திலும் ஸ்வபாவத்திலும் வேறுபாடில்லாமை, தானாகவே பிரகாசிக்கும்தன்மை, ஒருவிதமான அளவில்லாமை, ஒருவிதமான தோஷமில்லாமை, ஆனந்தமாயிருப்பது. இப்படி அறியப்பட்ட எம்பெருமானுக்கு எல்லாவிதங்களான நல்ல குணங்கள் உண்டென்றும், அந்த குணங்களைக் கணக்கிடமுடியாதென்றும், ஒவ்வொரு குணத்தினுடைய அளவை மனதாலும் சொல்லாலும் எட்டமுடியாதென்றும், அவனுக்குத்திவ்வியமங்களமான திருமேனியிருக்கிறதென்றும்,பிராட்டியோடு கூடவே எப்போதும் எழுந்தருளியிருக்கிறான் என்றும், அவனுக்கு உடம்பான இரண்டு விபூதிகள் இருக்கின்றனவென்றும், அவைகளில் ஸத்துவம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிறமூன்று குணங்களையுடைய பிரகிருதியும், அத்துடன் சேர்ந்திருக்கிற ஜீவன்களும் அவனுக்கு லீலை என்கிற ரஸத்தைக் கொடுக்கிறவைகள் என்றும், ஆகையாலே அவைகளுக்கு லீலாவிபூதி என்று பெயர் வந்ததென்றும், மற்றொரு விபூதியில் ஸத்துவம் என்கிற ஒரே குணமிருக்கிறதென்றும், அது அவனுக்கு போகமாகிய ரஸத்தைக் கொடுக்கிறதென்றும், அதில் காலத்தினால் உண்டாகும் வேறுபாடுகள் இல்லையென்றும், ஆகையால் அதற்கு நித்தியவிபூதி என்று பெயர் வந்ததென்றும், அவன் உலகத்தை உண்டுபண்ணி, ரக்ஷித்து, கடைசியில் அழித்து விளையாடுகிறான் என்றும் நாம் அறியவேண்டியது.

அவனையடையும் ஜீவனுடைய ஸ்வரூபம் அணுவென்றும், அவன் தானேதோன்றுகிறவனென்றும், தனக்கு ஆனந்தமாயிருக்கிறவனென்றும், ஸ்வபாவத்தில் ஒருவித தோஷமுமில்லாதவனென்றும் அவனை அறியவேண்டியது. அவன் செய்யும் உபாயம் எழாவது முதல் ஆறு அதிகாரங்களிலும், அவன் அடையும் பலன் இருபதாவது முதல் மூன்று அதிகாரங்களிலும் சொல்லப்படுகின்றன. அவன் இதுவரையில் எம்பெருமானை அடையாததற்குக் காரணம் கீழே முதல் அதிகாரத்தில் சொல்லப்பட்டது. அதாவது:— அவன் தன்னையுடம்பு என்றும், தான் ஒருவனுக்கும் உட்படாதவன் என்றும், தான் ஒருவனுக்குச் சேஷன் அல்லன் என்றும், எம்பெருமானைத்தவிர மற்றொருவனுக்குச் சேஷன் என்றும் எண்ணுகை. இதை அவித்யா என்றுசொல்லுகிறது. இதி

ஞலே அவன் உடம்பிற்கு வேண்டிய கர்மங்களைச் செய்கிறன். அவைகளாலே வாஸனை யுண்டாகிறது. அதிஞலே கண் காது மூக்கு முதலானவைகளாலே அனுபவிக்கக்கூடிய வஸ்துக்களில் ருசியுண்டாகிறது. ருசியாலே மறுபடியும் கர்மங்களைச் செய்கிறன். அவைகளாலே அடிக்கடி உடம்போடு ஸம்பந்தம் ஏற்படுகிறது. இந்த அவித்யை, வாஸனை, ருசி, கர்மம், உடம்போடு ஸம்பந்தம்- இவைகள் சக்கிரம்போல்சுற்றிக் கொண்டுவருகின்றன. இவன் எம்பெருமானுடைய உத்திரவுகளை மீறிநடக்கிறன். அதிஞலே அவனுடைய நிக்கிரஹம் வருகிறது. அதிஞல் உண்டாகும் தடைகள் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

ஒருவன் அறியவேண்டிய ஐந்து அர்த்தங்களையும் பாட்டாலே அருளிச்செய்கிறர்:—

பொருளொன் றெனநின்ற பூமக ணாத னவனடிசேர்ந்
தருளொன் றுமன்பன வன்கோ ளுபாய மமைந்தபயன்
மருளொன் றியவினை வல்விலங் கென்றிவை யைந்தறிவார்
இருளொன் றிலாவகை யென்மனந் தேற வியம்பினரே. (11)

(ப-ரை.) பொருள் ஒன்று என நின்ற - அவன் ஒருவனே நாம் அடையவேண்டிய வஸ்து என்று சொல்லும்படி யிருக்கிற, பூமகள் நாதன் - தாமரைப் பூவிலிருக்கிற பிராட்டியினுடைய நாதன், அவன் அடி சேர்ந்து - அவருடைய திருவடிகளை யடைந்து, அருள் ஒன்றும் - அவனுடைய கருணையோடு ஒன்ருயிருக்கிற, அன்பன் - அவனை யனுபவிக்கிறவஞன ஜீவன், அவன் கொள் உபாயம் - அவன் பண்ண வேண்டிய உபாயம், அமைந்த பயன் - அந்த ஜீவனுடைய ஸ்வரூபத்துக்குத் தகுதியான பிரயோஜநம், மருள் ஒன்றிய - அவித்யையோடு கூடிய, வினை வல் - கர்மங்களாகிற பலமான, விலங்கு,— என்று இவை ஐந்து அறிவார் - என்கிற இந்த ஐந்து விஷயங்களையும் அறிந்த ஆசாரியர்கள், இருள் ஒன்று இலாவகை - அஜ்ஞானம் கொஞ்சமுமில்லாதபடி, என் மனம் தேற - என்னுடைய மனது ஸந்தேஹமில்லாமல் அறியும்படி, இயம்பினர் - சொன்ஞர்கள்.

(கருத்து.) இவன் ஒருவனே மிகவும் உயர்ந்த புருஷார்த்தமென்றும், எப்போதுமிருக்கிறவன் என்றும் சாஸ்திரங்களாலே சொல்லப்பட்ட எம்பெருமான் ஒன்று; அவன் திருவடிகளை உபா

பமாகப் பற்றி எப்போதும் அவனுடைய கருணைக்கு விஷயமாய்க் கொண்டு, அவனையே மிகுந்த பிரீதியுடன் அனுபவிக்கும் தன்மையுள்ள ஜீவன் இரண்டு; அவன் எம்பெருமானிடம் போவதற்காகச் செய்ய வேண்டிய உபாயம் மூன்று; அந்த உபாயத்தாலே அவனுக்குக்கிடைக்கும் பலன் நாலு; இந்தபலனை அடைவதற்குத் தடையாயிருப்பது அவித்யை, இதினாலே கர்மங்கள் செய்யப்பட்டு அவைகளாலே உறுதியாக அவன் கட்டுப்பட்டு இருப்பது ஐந்து; இந்த ஐந்தையும் அறிந்த என்னுடைய ஆசாரியர்கள் எனக்கு அஜ்ஞானமில்லாதபடி என் மனதானது ஸந்தேகமில்லாமல் அறியும்படி உபதேசம் செய்திருக்கிறார்கள்.

5. தத்துவத்ரய சிந்தநாதிகாரம்.

இப்படி எம்பெருமானுக்கும் உலகத்திற்கும் இருக்கும் உறவையும், அத்துடன் ஒருவன் அறியவேண்டிய ஐந்து விஷயங்களையும் இரண்டு அதிகாரங்களாலே சொல்லி, நமக்குள்ள உடம்பே ஆத்மா என்கிற தப்பு எண்ணமும், நாம் ஒருவனுக்கு உட்படவில்லை என்கிற தப்பு எண்ணமும் போவதற்காக, கீழ் அதிகாரத்தில் சொன்ன ஐந்து விஷயங்களில் அசேதனங்கள், சேதனர்கள், ஈசுவரன் என்கிற மூன்று தத்துவங்களுக்கு லக்ஷணங்களைச் சொல்லி, அவைகள் வெவ்வேறு என்று இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— சித்து, அசித்து, ஈசுவரன் என்று மூன்று தத்வங்கள் இருக்கின்றனவென்றும், அவைகளில் சித்து போகத்தைப் பெறுகிறவனென்றும், அசித்து அவனுக்கே போகத்தைக் கொடுக்கிறதென்றும், ஈசுவரன் இரண்டையும் நியமிக்கிறவனென்றும், சாஸ்திரம் சொல்லுகிறது. சித்து என்கிற ஜீவன் ஞானம் என்கிற குணமுள்ளவன். அந்த குணம் அசித்துக்குக் கிடையாது. ஆகையால் ஜீவனைச் சேதனன் என்றும், அசித்தை அசேதனம் என்றும் சொல்லுகிறது. ஜீவன் தானேபிரகாசிக்கிறவன். அவனுடைய குணமாகிய ஜ்ஞானம் மற்றவைகளைப் பிரகாசிக்கும்படி செய்கிறது. இந்த சக்தி அசித்துக்குக் கிடையாது. ஆகையால் ஜீவ

னையும், அவன் குணத்தையும் ஜ்ஞாநமென்றும், ஸ்வயம்பிரகாச மென்றும், அசித்தை ஜடமென்றும் சொல்லுகிறது. ஜீவன் தனக்கே பிரகாசிக்கிறவன். இந்த ஸ்வபாவம் அவன்குணத்திற் கும் அசித்துக்கும் இல்லை. அவைகள் வேறு ஒருவனுக்குப் பிர காசிக்கின்றவைகள். ஆகையாலே ஜீவனைப் பிரத்தியக் என்றும், மற்ற இரண்டையும் பராக் என்றும் சொல்லுகிறது. இப்படி இவைகளைத் தெறிந்துகொண்டால், ஜீவன் ஸூக்ஷ்மமான பிரகி ருதியைக் காட்டிலும், அதிலிருந்து உண்டாகும் உடம்பு, இந் திரியங்கள், பிராணன்— இவைகளைக் காட்டிலும் வேறு என்றும் ஏற்படும். எம்பெருமான் ஜீவனைப் போல சேதநனும், ஞாந மாயும், பிரத்தியக்காயும் இருக்கிறான். ஆனால் ஜீவனுடைய ஸ்வ ரூபம் அணு. எம்பெருமானுடைய ஸ்வரூபம் விபு. அதாவது அவன் எங்குமிருப்பவன். ஜீவனுக்கு கர்மஸம்பந்தத்தை உடை யவனுயிருக்கும் தன்மை உண்டு. எம்பெருமானுக்கு அது கிடை யாது. ஏனென்றால்? ஜீவன் எம்பெருமானுக்கு உட்பட்டவன். எம்பெருமான் ஒருவனுக்கும் உட்படாதவன். இந்த கர்மஸம் பந்தத்திற்கு யோக்கியதை ஜீவன் முக்தனான பிறகும் தொடர்ந்து வரும். அவனை ஸம்ஸாரியாகப் பண்ணுவதற்கு ஸஹகாரியான கர்மமம் அப்போது இல்லை. சொன்ன இரண்டு காரணங்களாலே ஜீவனைக்காட்டிலும் எம்பெருமான் வேறு. ஜீவனும், அசித்தும் சேர்ந்த உலகத்தைக் காட்டிலும் எம்பெருமான் வேறு என்பது அவனுக்கும் உலகத்திற்கும் உண்டான உறவாலாயே ஏற்படும். மூன்று குணமுள்ள பிரகிருதியைக் காட்டிலும் வேறு இரண்டு அசேதனங்கள் உண்டு. அவைகளில் ஸத்துவமென்கிற ஒரேகுண முள்ளதாய் சுத்தஸத்துவமென்று பேர் பெற்றது ஒன்று. அது ஸ்வயம்பிரகாசம். மூன்று குணமுள்ள பிரகிருதியைப் போல் ஜடமன்று. அது ஆனந்தத்தைக் கொடுப்பது. முக்குணமுள்ள பிரகிருதி கர்மத்தினால் கட்டுப்பட்டவர்களுக்கு ஸுகத்தையும், துக்கத்தையும் கொடுக்கும். கர்மம் போனால் அதுவே ஸுகமாக இருக்கும். மற்றொரு அசேதனம் காலம்; இதற்கு ஆதியும் முடி வுமில்லை. அது எல்லாவற்றிற்கும் பிரகாரமாகவே இருக்கும். இந்த விஷயங்களைச் சொல்லி ஜீவன்கள் மூன்று வகையென்றும், அவர்களுக்கும் மூன்றுவிதமான அசேதனங்களுக்கும் ஸ்வரூ பத்தையும், இருப்பையும், அவைகள் செய்யும் வேலையையும்,

அவைகளுக்கு ஒன்றுக்கொன்று இருக்கும் வேறுபாடுகளையும், எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும், இருப்பையும், வேலைக ளையும் விரிவாக நிரூபணம் செய்து, மூன்று தத்துவங்களை அறி வதின் பிரயோஜநத்தைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

தேற வியம்பினர் சித்து மசித்து மிறையுமென
வேறு படும்வியன் றத்துவ மூன்றும் வினையுடம்பில்
கூறு படுங்கொடு மோகமுந் தானிறை யாங்குறிப்பும்
மாற நினைந்தரு ளால்மறை நூல்தந்த வாதியரே. (12)

(ப-ரை.) மறை நூல் தந்த ஆதியர் - வேதமாகிய சாஸ்தி ரத்தை உபதேசம் செய்த முன்னிருந்த ஆசாரியர்கள், சித்தும் - சேதநனும், அசித்தும் - அசேதநமும், இறையும் - ஈசுவரனும், என - என்று சொல்லப்பட்ட, வேறுபடும் - ஒன்றுக்கொன்று வேறான, வியன் - ஆச்சரியங்களான, தத்துவம் - தத்துவங்கள், மூன்றும் - மூன்றையும், தேற - நாம் ஸந்தேஹமில்லாமல் அறியும் படி, அருளால்- கருணையினால், இயம்பினர்- சொன்னார்கள். எதற் காக என்றால்? வினை உடம்பில் - கர்மங்களால் வந்த உடம்பில், கூறுபடும் - தான் சேர்ந்து இரண்டையும் ஒன்றாக எண்ணும், கொடுமோஹமும் - கொடுமையான மயக்கமும், தான் இறையாம் குறிப்பும் - தானே ஈசுவரன் என்று யுக்தியால் செய்யும் தீர்மான மும், மாற - போகவேண்டுமென்று, நினைந்து, சொன்னார்கள்.

(கருத்து.) வேதமாகிய சாஸ்திரத்தின் அர்த்தத்தை உப தேசம் பண்ணின முன்னாலே இருந்த ஆசாரியர்கள் சித்து, அசித்து, ஈசுவரன் என்று ஒன்றுக்கொன்று வேறான ஆச்சரியங் களான மூன்று தத்துவங்களை வேதவாக்கியங்களில் சிலவற்றால் உண்டாகும் ஸந்தேஹம் தீரும்படி நமக்கு உபதேசித்தார்கள். இதின்பிரயோஜநம்- கர்மத்தினாலே உண்டான உடம்போடு நம்மை ஒன்றாக எண்ணி, நாளுக்கு நாள் திருடமாகவாகும் கொடுமை யான மயக்கமும், ஈசுவரனென்று ஒருவன் இல்லை; நாமே ஈசுவ ரன் என்கிற எண்ணமும் மாறுவது. இந்த பிரயோஜநம் நமக்குக்

ஒரு ரோஜாப்பூ சிவப்பாய்க் காணப்படுகிறது. அந்த சிவப்பு என்கிற குணம் அதினுடைய பிரகாரம். ஒரு மாடானது ஒரு ரூபமுள்ளதாகவே தோன்றுகிறது. அந்த ரூபம், அதினுடைய பிரகாரம். ஜீவன் உடம்போடு கூடவே கண்ணுக்குப் படுகிறான். அது அவனுக்குப் பிரகாரம்.

கிடைக்க வேண்டுமென்று நம்மாசாரியர்கள் கருணையுடன் உபதே சித்தார்கள். அவர்கள் தங்களுக்குப் நல்லபெயராவது, லாபமாவது பூஜையாவது உண்டாகவேண்டுமென்று இப்படி உபதேசம் பண் ணவில்லை. அது கருணையினாலே செய்யப்பட்டது.

குறிப்பு:— கொடுமோஹம்- கொடுமையாவது ஜீவனை நரகத் தில் விழும்படி பண்ணி அவனைப் புருஷார்த்தங்களை இழக்கும்படி செய்வது.

---

6. பரதேவதா பாரமார்த்யாதிகாரம்:

இப்படி எம்பெருமானுக்கும் உலகத்திற்கும் உள்ள உறவை யும், அத்துடன் அறியவேண்டிய ஐந்துபொருள்களையும் சொல்லி, அவைகளில் மூன்று தத்துவங்களுக்கு லக்ஷணங்களைச் சொல்லி, அவைகள் ஒன்றுக்கொன்று வேறு என்று காட்டி, அவைகளில் ஈசுவரன் என்கிற தத்துவம் இன்னது என்று நாமறியவேண் டியதால் ஸ்ரீமானான நாராயணனே அந்த ஈசுவரதத்துவமென் றும், அவனே மோக்ஷத்தைக் கொடுத்து முக்தர்களாலே அனுப விக்கப் படுகிறவன் என்றும், ஆகையாலே அவனே பர (எல்லா ருக்கும் மேல்பட்ட) தேவதை என்றும் இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்;— (1) சிலர் எல்லா ஆத்மாக்களும் ஒன்று என்றும், அவர்களில் தேவதைகள் எல்லாம்ஒன்று என்றும் சொல்லுகிறார்கள். இதுகூடாது. ஏனென் றால் ஒரு ஆத்மாவினுடைய ஸுகாநுபவமும் துக்காநுபவமும் மற்றவர்களின் அநுபவத்தைக் காட்டிலும் வேறாக இருக்கின்றன. (2) பிரதானரான பிரும்மா, விஷ்ணு, ருத்திரன் என்கிற மூன்று பேர் விஷயத்தில், அவர்கள் ஒரே தேவதை; மூன்று ரூபமாகத் தோன்றுகிறார்கள் என்றும், மூன்று பேரும் ஸமர் என்றும், அவர்களில் பிரும்மா பரதேவதை என்றும், ருத்திரன் பரதேவ தை என்றும், அவர்களுக்கு மேற்பட்ட பரமசிவம் என்று ஒன்று இருக்கிறதென்றும் சொல்லுகிற பக்ஷங்களும் கூடா. பிரும்மாவும் ருத்திரனும் எம்பெருமானாலே உண்டுபண்ணப் பட்டவர்கள்.

அவர்கள் கர்மத்தினுலே கட்டுப்பட்டவர்கள்' எம்பெருமானுடைய மாயைக்கு உட்பட்டவர்கள். எம்பெருமானை ஆராதநம்செய்து தங்களுடைய பதவியைப் பெற்றவர்கள். அவர்கள் தங்களை ஆராதநம் பண்ணுகிறவர்களுக்குப் பலனைக் கொடுப்பது எம்பெருமானுக்கு அதீனம்; அவர்கள் கொடுக்கும் பலனும் அல்பம்; அவர்களை எம்பெருமானுடைய சரீரமென்று அறிந்து ஆராதநம் செய்தால், பலன் அதிகம். எம்பெருமானையே நேராக ஆராதநம் செய்தால் கிடைக்கும் பலன் இன்னும் அதிகமாக இருக்கும்' அவர்களுக்கு மோக்ஷம் கொடுக்க அதிகாரமில்லை. அவர்கள் தியானத்திற்கு விஷயமாயிருக்கத் தகுந்தவர்கள் அன்று; ஏனென்றால் சுபாச்ரயத்வம் என்பது அவர்களுக்கு இல்லை. அவர்களில் பிருமா ஒருவனைப் பிறக்கும்போது கடாக்ஷித்தால் அவனுக்கு ரஜோகுணம் மேலிடும். ருத்திரன் அப்போது கடாக்ஷித்தால் தமஸ்ஸு என்கிற குணம் மேலிடும். எம்பெருமான் கடாக்ஷித்தாலோ ஸத்துவ குணம் மேலிட்டு மோக்ஷத்திற்கு வேண்டிய வேலையை அவன் செய்வன். எம்பெருமானுடைய திருமேனியே தியானத்திற்கு விஷயம். அவனே மோக்ஷத்தைக் கொடுக்கிறவன். இந்த காரணங்களாலும் வேறு காரணங்களாலும் எம்பெருமானே பரதேவதை என்று தீர்மானம் செய்யப்படுகிறது. எம்பெருமானும் பிராட்டியும் சேர்ந்தே பரதேவதை.

இதைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

வாதியர் மன்னுந் தருக்கச் செருக்கின் மறைகுலையச்
சாது சனங்க ளடங்க நடுங்கத் தனித்தனியே
ஆதி யெனுவகை யாரண தேசிகர் சாற்றினர்நம்
போதம ருந்திரு மாதுட னின்ற புராணனையே. (13)

(ப-ரை.) வாதியர் - யுக்திகளைக் கொண்டே வாதம் செய்கிறவர்கள், மன்னும் - தங்களிடத்தில் ஸ்திரமாயிருக்கும், தருக்கம் செருக்கின் - தர்க்கத்தினுடைய கர்வத்தினாலே, மறை குலைய - வேதங்கள் நடுங்கும் படியும், சாதுசனங்கள், அடங்க - எல்லாரும், நடுங்க - நடுங்கும்படியாகவும், தனித்தனியே, ஆதியெனுவகை - ஜகத்காரணனாகிய பரதேவதையென்று சொல்லாதபடி, ஆரண தேசிகர் - வேதத்தை உபதேசித்த நம் ஆசாரியர்கள், நம் - நம்முடைய, போது அமரும் திருமாதுடன் - தாமரைப் பூவிலிருக்

கும் பிராட்டியுடன், நின்ற - உலகத்தாருக்கு அடையவேண்டிய வஸ்துவாகவும் அடைவதற்கு உபாயமாகவுமிருக்கிற, புராணனை- எப்போதுமிருக்கிற எம்பெருமானை, சாற்றினர் - பரதேவதை யாகச் சொல்லிக் கொடுத்தார்கள்.

(கருத்து.) துர்வாதிகள் தங்களுக்கு யுக்திகளைச் சொல்ல ஸாமர்த்தியம் இருக்கிறதென்ற கர்வத்தினாலே, ஒவ்வொன்றைத் தனித்தனியாக பரதேவதை என்று சொல்லுகிறார்கள். இதினாலே வேதம் நடுங்குகிறது. தர்க்கத்தில் பழக்கமில்லாத ஆஸ்திகர்க ளெல்லாரும் நடுங்குகிறார்கள். இந்த நடுக்கம் போவதற்காகவும், வாதிகளுடைய துர்வாதங்கள் நிலை நிற்காதென்பதைக் காட்டுவ தற்காகவும் வேதத்தை உபதேசித்த நம்முடைய ஆசாரியர்கள் எம்பெருமானையே பரதேவதை என்றும், உலகத்திற்குக் காரணம் என்றும் சொல்லிக் கொடுத்தார்கள்.

குறிப்பு:— (1) 'மன்னும்' என்கிற சொல்லிற்கு ஸ்திரமான என்று பொருள். அதாவது— அதைக் கண்டிப்பது கஷ்டம்.

(2) புராணன்— பிரும்மாவையும் ருத்ரனையும் போல உண் டாகாமல் எப்போதும் இருக்கிற புருஷன் என்று பொருள்.

---

7. முமுக்ஷுத்வாதிகாரம்.

இப்படி இந்தப் புஸ்தகத்திற்கு விஷயமான மூன்று ரஹஸ் யங்கள் சொல்லுகிற தத்துவத்தை நாலு அதிகாரங்களாலே விரி வாய்ச் சொல்லி, மேலே ஜீவன்கள் எம்பெருமானை அடைவதற்கு உபாயங்களை ஆறு அதிகாரங்களாலே சொல்ல ஆரம்பித்து, உபா யம் செய்வதற்கு முன்னால் கர்மத்தினாலே உண்டான கட்டுப் போகவேண்டும் என்று ஒருவன் ஆசைப்பட வேண்டுமென்றும், அப்படி ஆசைப்படுகிற ஜீவனிடத்தில் என்ன அடையாளங்கள் இருக்க வேண்டும் என்றும் இந்த அதிகாரத்தில் அருளிச் செய்கிறார்.

இதில் சொல்லிய விஷயங்கள்:— முமுக்ஷு என்கிறவன் கர் மத்தினால் உண்டான கட்டிலிருந்து விடுபட ஆசைப்படுகிறவன். ஒருவனை முமுக்ஷு என்று அறிவதற்கு அடையாளங்கள்:—

(1)செய்யக்கூடாதென்று வேதம்சொல்லுகிற கர்மங்களைச் செய்யாதிருக்கை. (2) எம்பெருமானைத் தவிர வேறு பலன்களுக்கு ஸாதனமாக வேதம் சொல்லுகிற கர்மங்களில் வெறுப்பு. அவைகளால் உண்டாகும் பலன்கள் அல்பம். கொஞ்சகாலமே யிருக்கும்; கஷ்டப்பட்டுத் தேட வேண்டியவைகள்; அவைகளின் அநுபவம் துக்கத்துடன் கலந்திருக்கும்; பிற்பாடும் துக்கம் உண்டாகும்; உயர்ந்த பலனை யடைவதற்குத் தடையாயிருக்கும்; கெடுதலான அபிமானத்தை உண்டாக்கும்; இவைகளை அடிக்கடி நினைத்தால் வெறுப்பு உண்டாகும். (3) ஜீவனுடைய ஸ்வரூபத்தை உள்ளபடி அறிவது. அதாவது— அவன் உடம்பு, இந்திரியங்கள், பிராணன் இவைகளைக் காட்டிலும் வேறுஎன்றும், எம்பெருமானுக்கே உட்பட்டவனென்றும், அவனுக்காகவே இருக்கிறவனென்றும் அறிகை. இதை மூலத்தில் ஐந்துவிதமான அஹங்காரங்களையும், ஐந்து விதமான மமகாரங்களையும் விடவேண்டியது என்று சொல்லியிருக்கிறது. அஹங்காரம் என்பது ஒன்றை நான் என்று எண்ணுவது, மமகாரம் என்பது ஒன்றை எனதென்று எண்ணுவது. (4) விஷயபோகங்களுக்கு எதிர்த்தட்டான எம்பெருமானுடைய அநுபவத்தில் ருசியுண்டாவது. இந்த அடையாளங்களை உடைய முமுக்ஷுவானவன் ஸம்ஸாரத்திலடிச் சூட்டாலே எம்பெருமானிடம் போவதற்குத் துடிப்பன். இந்த அர்த்தத்தை ஆசாரியனுடைய கருணையினாலே அறியவேண்டியதென்று பாட்டாலே அருளிச்செய்கிறார்.

நின்ற புராண னடியிணை யேந்து நெடும்பயனும்
பொன்றுத லேநிலை யென்றிடப் போங்கும் பவக்கடலும்
நன்றிது தீய திதென்று நவின்றவர் நல்லருளால்
வென்று புலன்களை வீடினை வேண்டும் பெரும்பயனே. (14)

(ப-ரை.) நின்ற புராணன் - பிராட்டியுடன் கூட இருக்கும் புராணபுருஷனாகிய எம்பெருமானுடைய, அடி இணை - இரண்டு திருவடிகளையும், ஏந்தும் - தலையில் சூட்டிக்கொள்வதாகிய, அதாவது— கைங்கரியம் செய்வதாகிய, நெடும் - நீண்ட, அதாவது— முடிவில்லாத, பயனும் - பிரயோஜநத்தையும், பொன்றுதலே - நாசமடைவதே, நிலை என்றிட - ஸ்வபாவமென்னும்படி, பொங்கும் - வரவர அதிகமாகும், பவம் கடலும் - ஸம்ஸாரமாகிற ஸமுத்

திரத்தையும், இவைகளில், இது நன்று - முன்னால் சொல்லப்பட்டது நல்லது, இது தீயது - பின்னால் சொல்லியது கெட்டது, என்று, நவின்றவர் - உபதேசித்த ஆசாரியர்களுடைய, நல் அருளால் - நல்ல கருணையால், புலன்களை - இந்திரியங்களை, வென்று - ஜயித்து, பெரும் பயன் - பெரிய புருஷார்த்தமான, வீடினை - மோக்ஷத்தை, வேண்டும் - அறிவுள்ளவன் ஆசைப்படுவன்.

(கருத்து.) எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் கைங்கரியம் செய்வதாகிற நீடித்திருக்கிற பலனையும், அழிவதே ஸ்வபாவமாய் வரவர அதிகமாகும் ஸம்ஸாரமாகிய ஸமுத்ரத்தையும் காட்டி, அவைகளில் முன் சொன்னது நல்லதென்றும், பின் சொன்னது கெடுதலென்றும் நமக்குக் கருணையாலே ஆசாரியர்கள் உபதேசித்தார்கள். இந்த உபதேசத்தைப் பெற்ற நாம் விஷயங்களில் போகாதபடி இந்திரியங்களை ஜயித்து மோக்ஷமாகிற பெரிய பலனை ஆசைப்படுவோம்.

குறிப்பு:— (1) 'நின்ற' என்பதற்கு முன் பாட்டில் திருமாதுடன் நின்ற என்பதைப் பார்த்து உரை எழுதியிருக்கிறது.

(2) நெடும் பயன்- முடிவில்லாமல் எப்போதும் தொடர்ந்து வரும் பலன் என்றபடி.

(3) பொன்றுதலே- ஸம்ஸாரத்தில் பிறப்பும் இறப்பதுமே ஸ்வபாவமாயிருப்பது.

(4) நல்லருளால்- அருளுக்கு நன்மையாவது ஒருவன் க்ஷேமத்தை அடையவேண்டுமென்கிற எண்ணத்தாலேயே வருவது.

---

8. அதிகாரி விபாகாதிகாரம்.

இப்படித் தத்துவங்களை அறிந்து, முமுக்ஷுக்களாய் மோக்ஷம் அடைவதற்கு உபாயங்களைச் செய்கிறவர்கள் இருவர். இதை இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— (1) அதிகாரம் என்கிறது ஒரு பலத்தில் ஆசையும், அதற்கு ஸாதனமான கர்மத்தைச் செய்ய மூன்றுவிதமான ஸாமர்த்தியமும். அதாவது கர்மத்தசை செய்யும் விதத்தை அறிகை; அதைச் செய்யும்

திறமை; அதைச் செய்ய சாஸ்திரம் இடம் கொடுப்பது. முமுக்ஷு வான அதிகாரி இருவர். ஒருவன் பிரபத்தியைச் செய்து அதி னுலுண்டாகும் பக்தியாலே மோக்ஷத்தை அடைகிறவன். மற்ரெருவன் பிரபத்தியாலேயே அதாவது- பக்தியில்லாமலே மோக்ஷத்தை அடைகிறவன். இருவருக்கும் பிரபத்தி வேண்டியது. இருவர்களுக்கும் பக்தியுண்டு. அவர்களில் ஒருவனுக்கு பக்தியே பலன். மற்ரெருவனுக்கு அது பலனுக்கு உபாயம்.

(2) பிரபன்னர்கள் மூன்றுவகைப்பட்டவர்கள். ஒருவன் முமுக்ஷுவாய் ஆசாரியனிடத்தில் பிரபத்தி செய்யும் விதத்தை அறிந்து, பிறகு அதைச் செய்கிறவன்; இவனை ஸ்வநிஷ்டன் என்று சொல்லுகிறது. இன்னெருவனுக்கு பிரபத்தி மந்திரத்தின் பொருள் நன்ருய்த் தெரியாது. ஆனுல் அதைச் சொன்னுல் எம்பெருமான் தன்னை ரக்ஷிப்பன் என்று ஆசாரியர்களின் உபதேசத்தால் அறிந்து அந்த மந்திரத்தைச் சொல்லிப் பிரபத்தி பண்ணுகிருன். இவனை உக்திநிஷ்டன் என்று சொல்லுகிறது. மற்ரெருவன் இதற்கும் தகாதவன். அவன் எம்பெருமானுக்கு வேண்டியவரான ஆசாரியனிடம்போய் தனக்காகப் பிரபத்திசெய்யும்படி வேண்டுகிறவன். அவனை ஆசாரிய நிஷ்டன் என்று சொல்லுகிறது. இந்த மூன்றுபேர்களும் பலனை அடைவதில் வேறுபாடில்லை.

(3) பக்தியும் பிரபத்தியுமே மோக்ஷத்திற்கு உபாயங்கள். எம்பெருமானுடைய கோயில் இருக்கும் இடத்தில் வஸிப்பதும், ஒரு பாகவதனுடைய அபிமாநத்திற்கு விஷயமாயிருப்பதும் மோக்ஷத்திற்கு நேரே காரணமன்று.

(4) பக்தியைப்போல எல்லாப் பலன்களுக்கும் பிரபத்தி ஸாதனம். இரண்டுக்கும் உள்ள வேறுபாடு— சக்தியுள்ளவனுக்கு பக்தி; அது இல்லாதவனுக்குப் பிரபத்தி. இந்த விஷயங்களைப் பாட்டாலே அருளிச்செய்கிருர்.

வேண்டும் பெரும்பயன் வீடென் றறிந்து விதிவகையால்
ரீண்டுங் குறுகியும் நிற்கும் நிலைகளுக் கேற்குமன்பர்
மூண்டொன்றின் மூல வினைமாற் றுதலின் முகுந்தனடி
பூண்டன்றி மற்ரேர் புகலொன் றிலையென நின்றனரே.(15)

(ப-ரை.) வேண்டும் பெரும் பயன் - ஒருவனுக்குக் கிடைக்க வேண்டிய பெரிய பிரயோஜநம், வீடு என்று - மோக்ஷமென்று, அறிந்து, நீண்டும் - வெகு காலத்தில் முடிக்கக் கூடியதாயும், குறுகியும் - கொஞ்ச காலத்தில் செய்யக்கூடியதாயும், நிற்கும், நிலைகளுக்கு - உபாயங்களுக்கு, விதிவகையால் - முன் செய்த புண்ணியவிசேஷத்தால், ஏற்கும் - தகுந்தவரான, அன்பர் - எம்பெருமானுடைய அநுபவத்தில் ஆசையுள்ளவர்கள், அவைகளில் ஒன்றில், மூண்டு - முயற்சி செய்து, மூலவினை - ஸம்ஸாரத்திற்குக் காரணங்களான கர்மங்களை, மாற்றுதலின், முகுந்தன் அடி பூண்டு அன்றி - எம்பெருமானுடைய திருவடிகளைப் பிரீதியுடன் பற்றி அன்றி, அதாவது-- பிரபத்தியைப் பண்ணுமல், மற்று ஓர் புகல் - வேறு ஓர் உபாயம், இலையென - இல்லையென்று சொல்லும்படி, நின்றனர் - நின்றார்கள்.

(கருத்து.) ஒருவன் வேண்டும் பெரிய பயன் மோக்ஷமென்று தெரிந்து, பக்தியையோ, பிரபத்தியையோ செய்கிறான். அவைகளில் ஒன்று நெடுநாள் செய்து முடிக்கவேண்டியது. மற்றொன்று ஸ்வல்பகாலத்தில் செய்யக்கூடியது. அவனுடைய முன் செய்த புண்ணியத்திற்குத் தகுந்தபடி ஒன்றைச் செய்யத் தகுதியும், அதற்குத் தகாமல் மற்றொன்றைச் செய்யத் தகுதியும் ஏற்படுகிறது. இப்படி இரண்டில் ஒன்றில் பிரயத்நம் செய்து ஸம்ஸாரத்திற்குக்காரணங்களான வினைகளைப் போக்கவேண்டியது. அப்படிச் செய்வதற்குப் பிரபத்தி செய்வதைக் காட்டிலும் வேறு உபாயம் இல்லை.

குறிப்பு:— பக்தி பண்ணுகிறவன் பக்திக்கு விரோதிகளான வினைகளைப் பிரபத்தியாலே விலக்குகிறான். எம்பெருமானை அடைவதற்கு விரோதிகளான வினைகளைப் பக்தியாலே போக்குகிறான். பிரபத்தி செய்கிறவன் எம்பெருமானை அடைவதற்கு விரோதிகளான எல்லா வினைகளையும் ஒரேகாலத்தில் பிரபத்தியாலே போக்குகிறான்.

---

௯. உபாய விபாகாதிகாரம்.

இப்படித் தத்துவங்களை அறிந்து முமுக்ஷுக்களான அதிகாரிகளுக்கு வேண்டிய மோக்ஷத்திற்கு உபாயங்களை இந்த அதிகாரத்தில் பிரித்துக்காட்டுகிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— (1) உபாயம் இருவகைப்படும். முமுக்ஷுவானவன் செய்கிற பக்தியும் பிரபத்தியும் ஒரு ஜ்ஞாநவிசேஷம். இது இவனாலே செய்யப்படுவதினால் அதற்கு ஸாத்தியமான உபாயம் என்று பெயர். இவனுடைய உபாயமான ஜ்ஞாநத்திற்கு விஷயமாயும், பிறகு பலனைக் கொடுக்கிறவனாயுமிருப்பதால் எம்பெருமானும் உபாயம். அவன் இவன் செய்யும் வியாபாரத்திற்கு முன்னேயே இருப்பதால் அவன் ஸித்தமான உபாயம்.

(2) பக்தியோகமாவது எம்பெருமானுடைய ஸ்வரூபம், குணங்கள், ரூபம் முதலானவைகளைத் தியானம் செய்வது. எண்ணெய்யை ஒரு கிண்ணத்திலிருந்து கீழே கொட்டும்போது அது ஒரே தாரையாய் விழுகிறது. அதுபோல இந்த தியானத்தில் வேறு நினைவு கலப்பில்லாமல் இருக்கவேண்டியது. கண்ணாலே பார்த்தால் எப்படித் தெளிவாக இருக்குமோ, அப்படியே இந்த தியானமும் தெளிவாய் இருக்கவேண்டியது. அதுவும் மிகுந்த பிரிதிரூபமாய் இருக்கவேண்டியது. இவ்விதமான தியானத்திற்கு பரபக்தி என்று பெயர்.

3. இந்த பக்தியோகம் உண்டாவதற்கு உபாயங்கள் கர்மயோகமும், ஜ்ஞாநயோகமும். கர்மயோகமென்பது ஒருவன் தன்னையும் எம்பெருமானையும் உள்ளபடி அறிந்து, பலன்களில் ஆசையில்லாமல் எம்பெருமானுடைய ஆராதநமாகச் செய்யும் கர்மம் (வேலை). இதைச் செய்யும்போது "நான் இதைச் செய்கிறேன்" என்கிற எண்ணத்தையும், 'இது என்னுடைய கர்மம்' என்கிற எண்ணத்தையும் விட்டு, அதை எப்போதும் செய்துகொண்டு வரவேண்டியது. இத்துடன்கூட நித்தியங்களான கர்மங்களையும் நைமித்திகங்களான கர்மங்களையும், காமியகர்மங்களையும் சேர்த்து முன்சொன்னபடி பலன்களில் ஆசையில்லாமல் செய்யவேண்டியது. நித்தியகர்மமென்பது எம்பெருமான் செய் என்று கட்டளையிட்டது. அதைச் செய்யாவிட்டால் எம்பெருமானுக்குக் கோபம் உண்டாகும். நைமித்திகமாவது கிரஹணம் முதலான நிமித்தம் (காரணம்) உண்டானால் செய்யவேண்டிய கர்மம். காமியமென்றால் ஒரு பலனுக்குக் காரணமாகச் சொல்லப்பட்ட

கர்மம். அதைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தமில்லை. முமுக்ஷு வானவன் அதைச் செய்தால் அந்தப்பலனில் ஆசையை விட்டு அதை எம்பெருமானுடைய கைங்கரியமாகச் செய்யவேண்டியது.

(4) ஜ்ஞாநயோகமாவது— ஒருவன் தன்னுடைய ஸ்வரூபத்தை இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருப்பது. தன் ஸ்வரூபமாவது— உடம்பு, கண் முதலான இந்திரியங்கள், பிராணன்— இவைகளைக் காட்டிலும் தான் வேறு; தான் எம்பெருமானாலே தாங்கப்படுகிறவன், வண்டியில் பூட்டின மாடு வண்டிக்காரனுக்கு உட்பட்டிருப்பதுபோல் தான் எம்பெருமானுக்கு உட்பட்டிருப்பது; தான் எம்பெருமானுக்காகவே இருப்பது; இந்த மூன்று விஷயங்களைக்கொண்டு தான் எம்பெருமானுக்கு உடம்பு; எம்பெருமான் தனக்கு ஆத்மா, இவ்விதமான தன் ஸ்வரூபத்தை இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருப்பது. எவன் இந்திரியங்களை ஜயித்திருக்கிறானோ அவன்தான் இந்த ஜ்ஞாநயோகத்தைச் செய்யத் தகுந்தவன்.

(5) சிலர் ஜ்ஞாநயோகமில்லாமலே கர்மயோகத்தினாலேயே தம்முடைய ஸ்வரூபத்தைப் பார்க்கிறார்கள். ஜ்ஞாநயோகத்தினாலும் அதைப் பார்க்கலாம். இப்படி ஸ்வரூபத்தைப் பார்ப்பது யோகம் செய்யும்போது நேரிடும். யோகமென்பது அசங்காமல் உட்கார்ந்துகொண்டு, இந்திரியங்கள் தங்களுடைய வேலையைச் செய்யாதபடி அவைகளை அடக்கி. மனதைத் தியானம் செய்யவேண்டிய விஷயத்தில் நிறுத்தி, அதையே இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருப்பது. இப்படி யோகம் செய்யும்போது தன் ஸ்வரூபத்தை ஒருவன் உள்ளபடி பார்க்கிறான். அது மிகவும் இன்பமாக இருக்கும், அதில் அகப்படாமல் பக்தியோகம் செய்ய ஆரம்பிக்கவேண்டியது. இதைச் செய்யும்போது தன்னுடைய ஸ்வரூபத்தைப் பார்ப்பது வேண்டியிருப்பதினாலே அது பக்தியோகத்திற்கு உதவி செய்கிறது. உதவி செய்கிறதற்கு அங்கமென்றும் உதவியைப் பெற்றுக்கொள்ளுமதற்கு அங்கி என்றும் பெயர்.

(6) இந்த பக்தியோகத்தை வைகுந்தத்திற்குப் போகும் வரையில் ஒவ்வொரு நாளும் செய்யவேண்டியது. இத்துடன் தன்னுடைய வர்ணத்திற்கும் (ஜாதிக்கும்) ஆச்ரமத்திற்கும் ஏற்

பட்டிருக்கிற கர்மங்களைச் செய்துகொண்டு வரவேண்டியது. அவைகளைச் செய்வதால் எம்பெருமானுக்குப் பிரீதி உண்டாகி பக்தியோகம் செய்கிறவனுக்கு ரஜஸ், தமஸ் என்கிற குணங்கள் அடங்கி ஸத்துவகுணம் மேலிடும். அதினாலே பக்தியோகம் வளர்ந்துவரும். இந்த உதவியினாலே அந்தக் கர்மங்கள் அங்கம், பக்தியோகம் அங்கி.

(7) பக்தியோகம் வளர்ந்துவரும்போது, எம்பெருமானைப் பார்க்கவேண்டுமென்று ஆசை உண்டாய் ஒருவனை அழும்படி செய்யும். அப்போது எம்பெருமான் தன்னை உள்ளபடி ஒரு க்ஷணம் காட்டுவன். இப்படி அவனைப் பார்ப்பதற்கு பரஜ்ஞானம் என்றுபெயர். இது உண்டானபோது எம்பெருமானை விட்டு ஒரு க்ஷணமும் பிரிந்திருக்கமுடியாதபடியான ஆவல் உண்டாகும். அதற்குப் பரமபக்தி என்று பெயர்.

இந்த விஷயங்களைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

நின்ற நிலைக்குற நிற்குங் கருமமு நேர்மதியால்
நன்றெனெ நாடிய ஞானமு நல்குமுட் கண்ணுடையார்
ஒன்றிய பத்தியு மொன்றுமி லாவிரை வார்க்கருளால்
அன்று பயன்தரு மாறு மறிந்தவ ரந்தணரே. (16)

(ப-ரை) நின்ற நிலைக்கு - இந்திரியங்களையடக்கமுடியாமல் ஒருவனிருக்குமிருப்புக்கு, உற நிற்கும் - தகுதியாக இருக்கிற, கருமமும் - கர்மயோகத்தையும், நேர்மதியால் - கூர்மையான புத்தியாலே செய்யக்கூடியதும், நன்று என நாடிய - ஆத்மாவைப் பார்ப்பதற்கு அடுத்த உபாயமாக இருப்பதால் நல்லதென்று தேடப்பட்டதாயுமிருக்கிற, ஞானமும் - ஞானயோகத்தையும், நல்கும் - பிரீதியுடன் கூடிய, உள்கண் உடையார் - உள்ளேயிருக்கும் ஆத்மாவைப் பார்ப்பவர்கள், ஒன்றிய பத்தியும் - தன்னையே மறந்து தியானம்பண்ணப்பட்ட விஷயத்தோடு சேர்ந்திருக்கும்படியான பக்தியோகத்தையும், ஒன்றும் இலா - இவைகளில் ஒன்றுஞ் செய்யமுடியாதவர்களுக்கும், விரைவார்க்கு - பக்தியோகத்திலுள்ள தாமதத்தைப் பொறுக்கமுடியாதவர்களுக்கும், அருளால் - கருணையால், அன்று - அவர்கள் கேட்டபொழுதே, பயன் தருமாறும் - பிரயோஜனத்தைக் கொடுக்கும் உபாயத்தையும் அதாவது பிரபத்தியையும் ஆகிய இவைகளை, அறிந்தவர், அந்தணர் - வேதமறிந்தவர்கள்.

(கருத்து) கர்மயோகம் முதலானவைகளை இந்த அதிகாரத்தில் சொன்னபடி எவர்கள் அறிந்தவர்களோ, அவர்களே வேதத்தை நன்றாய் அறிந்தவர்கள். அதிகாரத்தில் சொல்லியவைகளாவன:— (1) கர்மயோகம் இதை மூன்று வர்ணத்திலுள்ள எவனும் செய்யலாம். (2) இந்திரியங்களை ஜயித்து மனதை ஒன்றில் நிலை நிறுத்தி கூர்மையான புத்தியோடு செய்வது ஜ்ஞாநயோகம். இது ஒருவன் தன் ஸ்வரூபத்தைப் பார்ப்பதற்கு அடுத்த உபாயமாகையால், பாட்டில் 'நன்று என' நல்லது என்று சொல்லப்பட்டது. (3) ஒருவன் தன் மனதை தன் ஸ்வரூபத்தில் நிறுத்தி யோகம் செய்வது. இதைச் செய்பவனை "உட்கண்ணுடையார்" உள்ளே கண்ணுடையார் என்று பாட்டு சொல்லுகிறது. இது மிகுந்த பிரீதியைக் கொடுக்குமானதாலே அதுவே பிரியமாக இருக்கும். அதை 'நல்கும்' என்று பாட்டு சொல்லுகிறது. (4) பக்தியோகம். இதைச் செய்கிறவன் அத்துடன் ஒன்றி—சேர்ந்து இருக்கிறான். அவன் வேறொன்றையும் நினைக்காமல் இதையே பிரீதியுடன் செய்கிறான். (5) மேலே சொன்னவைகளில் ஒன்றும் இல்லாமல் உடனேயோ, அல்லது இந்த தேஹம் போனபின்போ மோக்ஷம் வேண்டுமென்று அவஸரப்படுகிறவர்களுக்கு அவர்கள் கேட்டபோதே கிருபையினாலேயே மோக்ஷமாகிய பலனைக் கொடுக்கும் உபாயம் பிரபத்தி. இவைகளை அறிந்தவர்களே வேதமறிந்தவர்கள்.

---

10. பிரபத்தியோக்கியாதிகாரம்.

இப்படித் தத்துவங்களை அறிந்து, முமுக்ஷுக்களான அதிகாரிகள் செய்யும் உபாயங்களில் லகுவான பிரபத்திக்கு எவன் தகுந்தவன் என்று இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:– (1) அதிகாரமென்பது ஒரு பலனில் ஆசையும், அதற்கு உபாயத்தைச் செய்ய ஸாமர்த்தியமும். ஸாமர்த்தியமென்பது உபாயத்தைச் செய்யும் வழியை அறிவதும், அதைச் செய்யும் சக்தியும், அதைச்

செய்யத்தகுந்த ஜாதியில் பிறந்திருப்பதும், (2)மோக்ஷம் கிடைக்க வேண்டுமென்றும் ஆசையானது பக்தி செய்பவனுக்கும் பிரபத்தி செய்கிறவனுக்கும் உண்டு. ஆனால் பக்தியோகம் செய்யும் வழியை அறியாதவன், அறிந்தாலும் அதைச் செய்யச் சக்தியில்லாதவன், அறிவும் சக்தியுமிருந்தாலும் பக்தியோகத்தைச் செய்ய சாஸ்திரத்தினால் அநுமதி கொடுக்கப்படாதவன், இவைகளெல்லாம் இருந்தாலும் பக்தி யோகத்திலுள்ள தாமதத்தைப் பொறுத்துக் கொள்ளாமல் உடனே பலன் கிடைக்கவேண்டும் என்கிற ஆசை உடையவன், ஆகிய நால்வரும் பிரபத்திக்கு அதிகாரிகள். இப்படி பக்தியோகம் பண்ணத்தகாதவனாக இருப்பதை ஆகிஞ்சந்யம் என்று சொல்லுகிறது. இவன் மோக்ஷத்தில் ஆசை உடையவனாய் அதற்கு ஏற்பட்ட உபாயமான பக்தியோகம் செய்யமுடியாதவனாய் இருப்பதினாலே மிகவும் வருத்தப்பட்டு அழுவன். இப்படி அழுகையே இதற்கு அதிகாரம். (3) இத்துடன் கூட பிரபத்தி செய்கிறவன் மோக்ஷம் தவிர வேறு பிரயோஜநத்தையும் தேடான். அதற்காக வேறு தேவதையினிடம் போகவும் மாட்டான். இப்படிப்பட்டவனுக்கு அநந்யகதிகத்வம் உண்டென்று சொல்லப்படுகிறது. (4) மோக்ஷத்தை ஆசைப்படுவதுடன்கூட கொஞ்சகாலம் இங்கே இருக்கவேண்டுமென்றாவது அதுபோல் வேறொன்றையாவது ஆசைப்பட்டால் மோக்ஷம் தாமதித்து வரும்.

இந்த விஷயங்களைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

அந்தண ரந்திய ரெல்லையி னின்ற வனைத்துலகும்
நொந்தவ ரேமுத லாகநு டங்கி யனன்னியராய்
வந்தடை யும்வகை வண்டக வேந்தி வருந்தியநம்
அந்தமி லாதியை யன்ப ரறிந்தறி வித்தனரே. (17)

(ப-ரை) அந்தணர்- பிராமணர், அந்தியர் - கடைசி ஜாதியி[ல் பிறப்பவர்], எல்லையில்- இந்த இரண்டு எல்லைகளுக்குள்ளே நின்ற - அவர்களுள் பட இருக்கும், அனைத்து உலகும் - உலகத்திலுள்ள எல்லாரும், நொந்தவரே - வருத்தப்பட்டவர்களே, முதலாக, நுடங்கி - இளைத்துப் போய், அனன்னியராய் - வேறு பலனையும், வேறு தேவதையையும் தேடாதவராய், வந்து, வண் தகவு ஏந்திய - மிகுந்த கருணையுள்ளவனைப், வருந்திய - நம்மை இர

க்ஷிப்பதற்காகப் பிரயாஸப்படுகிற,நம்அந்தம் இல் ஆதியை - முடி வில்லாமல் ஜகத்துக்குக்காரணனனநம்முடைய ஸ்வாமியை, அடையும் வகை - அடையும் வழியை, அன்பர் - குருவினிடத்திலும் எம்பெருமானிடத்திலும் மிகுந்த பக்தியுள்ள ஆசாரியர்கள், அறிந்து-தாங்கள் தெரிந்துகொண்டு, அறிவித்தனர் - நமக்குச் சொல்லிக் கொடுத்தார்கள்.

(கருத்து.) உயர்ந்த ஜாதியில் பிறந்தவன்தான் பிரபத்தியைச் செய்யலாம், தாழ்ந்த ஜாதியில் பிறந்தவன் பிரபத்தியைச் செய்யலாகாதென்று நியமமில்லை. இந்த இருவர்களும் இவர்களுக்கு நடுவில் உள்ள எல்லா ஜனங்களும் பிரபத்தி செய்யத்தகுந்தவர்கள். அவர்களில் எவன் ஸம்ஸாரத்தினுல் வருந்தி எப்போது மோக்ஷம் கிடைக்குமென்று பிரபத்தி பண்ணுகிருனே, அவன் முக்கியமான அதிகாரி. அவர்களிலும் உடனே மோக்ஷம் வேண்டுமென்கிறவர்கள் ஆர்த்தர்கள். அவர்கள் இன்னும் முக்கியமான அதிகாரிகள். இந்த உடம்பு போனபிற்பாடு மோக்ஷம் வேண்டுமென்கிறவர் திருப்தர். அவர்கள் அவ்வளவு முக்கியமாகிய அதிகாரி அன்று. பிரபத்தி பண்ணுகிற எல்லாருக்கும் வேண்டிய அதிகாரம் - பக்தியோகம் பண்ணமுடியாமையால் வருத்தப்பட்டு உடம்பு இளைத்துப்போயிருப்பதும், வேறு பிரயோஜநத்தைத்தேடாமையும், வேறுதேவதையிடம் போகாமையும். இப்படி பிரபத்தி செய்வதற்குத்தகுதியாக எம்பெருமான் இருப்பதை நம்முடைய ஆசாரியர்கள் தாங்களறிந்துகொண்டு நமக்கும் அதைச் சொல்லிக்கொடுத்திருக்கிருர்கள். எம்பெருமான் இருப்பதாவது:— மேன்மையான கிருபை உள்ளவனுயிருப்பது. மேன்மையாவது, நாம் என்ன குற்றம் செய்தாலும் அதினுல் கலங்காமை; அவன் நம்மை ரக்ஷிப்பதற்கு எங்கே இடம் அகப்படப்போகிறதென்று யாதிருச்சிகமான ஸுகிருதம் முதலியவைகளைத் தேடிக்கொண்டிருப்பது. அந்தமில்—முடிவில்லாமை— அதனுலே அவனிடம் போனவன் திரும்பிவருவனேவென்று ஸந்தேஹப்படவேண்டியதில்லை. அவன் ஆதி—உலகத்தை உண்டுபண்ணினவன், உண்டுபண்ணினவனே காப்பாற்றத் தகுந்தவன்: அவன் வருந்துகிருன், அவன் நம்மை ரக்ஷிப்பதற்காக மிகுந்த பிரயாஸை எடுத்துக்கொள்கிருன்.

---

11. பரிகரவிபாகாதிகாரம்.

இப்படி தத்துவங்களை அறிந்து முமுக்ஷுக்களான அதிகாரிகளில் லகுவான பிரபத்தியைச் செய்யத் தகுந்தவன், அந்த பிரபத்தியைச் செய்யும்போது அதற்கு வேண்டிய அங்கங்களை அறியவேண்டியது. அவைகளை இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— (1) பிரபத்திக்கு ஐந்து அங்கங்கள் உண்டு. அவையாவன:— (1) அநுகூலமாய் இருப்பதாய் எண்ணுவது; (2) பிரதிகூலமாய் இருப்பதை விடுவது; (3) தன்னுடைய இஷ்டத்திற்கு ஸாதநமான உபாயமில்லாமல் வருத்தப்படுவதைக்காண்பிக்கை. இதற்குக் கார்ப்பண்யம் என்று பெயர்; (4) கேட்டுக்கொண்டால் ஸமர்த்தனான ஒருவன் தன்னை ரக்ஷிப்பன் என்னும் நம்பிக்கை. இது ஒருவழியாலும் கலங்காதிருக்கவேண்டியது. அப்படியிருப்பதற்கு மஹாவிச்வாஸம் என்று பெயர்; (5) ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்திப்பது.

2. இந்த ஐந்து அங்கங்களில்லாமல் பிரபத்தி கிடையாது. இதைச் சக்ரவர்த்தி திருமகனிடத்தில் விபீஷணன் செய்த பிரபத்தியிலும், பிராட்டியிடம் திரிஜடை செய்த பிரபத்தியிலும், உலகத்தில் ஒருவன் ரக்ஷிக்கவேண்டிய வஸ்துவை அடைக்கலம் வைக்கிற இடத்திலும் பார்க்கலாம்.

3. இந்த அங்கங்கள் பிரபத்திக்குச் செய்யும் உதவியாவது— முதல் இரண்டு அங்கங்களாலே எம்பெருமானுடையகட்டளையை மீறுமல் இருப்பது உண்டாகும். கார்பண்ணியமானது ரக்ஷிப்பவனுடைய கருணையை விருத்தி செய்யும். பிரபத்திக்குப் பின்பும் வேறொரு உபாயத்தைத் தேடாமையை உண்டுபண்ணும். மஹாவிச்வாஸத்தாலே ஸந்தேஹப்படாமல் ரக்ஷகனிடம்போய் பிரபத்தி பண்ணும்படி செய்யும். பின்பு ரக்ஷண விஷயத்தில் தனக்குப் பொறுப்பு இல்லாமலிருக்கும்படி செய்யும் கடைசி அங்கமும் வேண்டியது. ஒருவன் ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளாவிட்டால் ரக்ஷிக்கிறவனுக்கு ரக்ஷிக்கவேண்டுமென்கிற இச்சை உண்டாகாது.

4. மஹாவிச்வாஸம் என்கிற அங்கம் கிடைப்பது மிகவும் கஷ்டம் ஏனென்றால் இந்த விஷயத்தில் ஐந்து ஸந்தேஹங்கள் உண்டாகும். அவைகளும் அவைகளைத் தீர்க்கும் வழியும்:— (1) அளவில்லாத அபராதங்களைச் செய்த நாம் எப்படி எம்பெருமான்முன்னாலே போகக்கூடும் என்று ஒரு ஸந்தேஹம். பதில்:- பிராட்டி எப்போதும் எம்பெருமானிடம் கூட இருந்து நம்மைப் பற்றிச் சிபார்சு செய்கிறாள். ஆகையால் நாம் கூசாமல் போகலாம். அவளுடைய சிபார்சை எம்பெருமானும் தள்ளமுடியாது. (2) அபராதம் செய்த நமக்குத்தண்டனையை விதிக்காமல் மிகவும் உயர்ந்த பலனை எம்பெருமான் கொடுப்பனோ என்பது இரண்டாவது ஸந்தேஹம். பதில்:- எம்பெருமானுக்கும் நமக்கும் இருக்கும் உறவினாலே நாம் செய்கிற பிரபத்தியைவியாஜமாகக்கொண்டு தண்டிக்கவேண்டுமென்கிற எண்ணத்தை விட்டு, மிகவும் உயர்ந்த பலனையும் கொடுப்பன். மிகுந்த குற்றம் செய்த பிள்ளை தகப்பன் காலில் வந்து விழுந்தால், அவன் குற்றத்தை மன்னித்து தன்னுடைய ஸொத்தை எல்லாம் அவனுக்குக் கொடுக்கிறான். அதுபோல் எம்பெருமானுக்கும் நமக்கும் இருக்கிற உறவு ஒரு நாளும் விடமுடியாது. (3) நாம் செய்கிற பிரபத்தியாகிற வியாபாரம் மிகவும் சொல்பமாயிருக்க, அதைப் பரிபூர்ணரான எம்பெருமான் கவனிப்பனோ என்பது மூன்றாவது ஸந்தேஹம். பதில்:- எம்பெருமானுடைய கருணைக்கு எல்லையில்லை யாகையால், அவன் இந்த வியாபாரத்தைப் பெரிய உபகாரமாக எண்ணி பிரபத்திக்குப் பலனைக் கொடுப்பன். (4) நாம் கேட்ட பலனைத் தாமதமில்லாமல் எம்பெருமான் கொடுப்பனோ என்று நாலாவது ஸந்தேஹம். பதில்:— வேறு பலனைக் கேட்டால் எம்பெருமான் உடனே கொடுக்கமாட்டான், மோக்ஷத்தைக் கேட்டாலோ உடனே கொடுத்து விடுவன், இந்த விஷயத்தில் அவனுக்கு ஸஹகாரி (கூட இருந்து ஒத்தாசை செய்பவர்கள்) வேண்டியதில்லை. [illegible]னுடைய ஸங்கல்பமே போதும். (5) மிகவும் தாழ்ந்த நமக்கு உயர்ந்த மோக்ஷத்தைக் கொடுப்பனோ என்பது கடைசி ஸந்தேஹம். பதில்:— அதைக் கொடுப்பது தன்னுடைய லாபமாக எண்ணும்படியான உதாரகுணமுள்ளவனாகையாலே இதுவும் கூடும்.

5. மோக்ஷத்திற்காகப் பிரபத்தி செய்யும்போது ஸாத்துவிகத் தியாகம் என்கிற அதிகமான ஒரு அங்கம் உண்டு. அதாவது செய்கிற பிரபத்தியை நான் செய்யவில்லை; அதை எம்பெருமானே செய்கிறான். அந்த வியாபாரமும் அவனுடைய வியாபாரம்; என்னுடையது அன்று. இதினுடைய பலனும் அவனுடையது. என்னுடையது அன்று— என்று எண்ணுவது. இத்துடன் இப்பிரபத்தியும் உபாயமன்று, எம்பெருமானே உபாயமென்றும் எண்ணவேண்டியது.

மஹாவிச்வாஸவிஷயத்தில் உண்டாகும் ஸந்தேஹங்களையும், அதைத் தீர்க்கும் வழிகளையும் காட்டின ஆசாரியர்களிடத்தில் நன்றியறிவுள்ளவனாயிருக்கவேண்டுமென்று பாட்டால் அருளிச்செய்கிறார்.

அறிவித் தனரன்ப ரையம் பறையு முபாயமில்லாத்
துறவித் துணியிற் றுணையாம் பரனை வரிக்கும்வகை
உறவித் தனையின்றி யொத்தா ரெனநின்ற வும்பரைநாம்
பிறவித் துயர்செகு வீரென் றிரக்கும் பிழையறவே (18)

(ப-ரை.)ஐயம் - ஸந்தேஹத்தை, பறையும் - சொல்லும்படியான, உபாயம் இல்லா துறவி- உபாயமில்லாமையாகிற ஏழ்மைத்தனத்தினால், துணியில் - உண்டாகும் துக்கத்தில், துணையாம் - அதைப்போக்கி நமக்கு வேண்டியதைக் கொடுத்து உதவிசெய்கிற, பரனை - மிகவும் உயர்ந்த எம்பெருமானை, வரிக்கும் வகை - பிரார்த்திக்கும் படியான வழியை, அன்பர் - நம்மிடத்தில் ஆசையுள்ள ஆசாரியர்கள், அறிவித்தனர். எதற்காக என்றால்— உறவு இத்தனை இன்றி - கொஞ்சங்கூட ஸம்பந்தமில்லாமல், ஒத்தார் என - கர்மவச்யராயிருப்பதால் நம்மைப் போலிருப்பவர்கள் என்று சொல்லும்படி, நின்ற - இருக்கிற, உம்பரை - வேறு தேவதைகளை, பிறவி துயர் - ஸம்ஸாரத்திலுள்ள துக்கத்தை, செகுவீர் என்று - போக்குவீர் என்று, இரக்கும் - யாசிக்கும், பிழை அறவே - குற்றம் நீங்குவதற்காக.

(கருத்து) கர்மயோகம் முதலாய் பக்தியோகத்தோடு முடியும் உபாயங்களை நம்மாலே செய்ய முடியுமோ என்கிற ஸந்தேஹம் உண்டாகும். இந்த ஸந்தேஹத்தை உண்டுபண்ணுகிற அந்த உபாயங்களைச் செய்ய முடியாமல் நாம் துக்கப்படும்போது, நமக்

குத்துணையாக மிகவும் உயர்ந்த எம்பெருமான் வருவன். அவனை நாம் பிரார்த்திக்கும்படியான வழியை நம் ஆசாரியர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இது எதற்காகவென்றால்- ஸம்ஸாரத்தின் துக்கங்களை நீங்கள் போக்க வேண்டுமென்று நாம் பிரம்மா முதலான தேவர்களிடம் போய் யாசிக்கும் படியான குற்றம் நீங்குவதற்காக. தேவர்களுக்கும் நமக்கும் கொஞ்சங்கூட உறவில்லை. நம்மைப்போல் அவர்களும் கர்மத்திற்கு உட்பட்டவர்கள். ஆகையால் அவர்களிடம் போய்க் கேட்பது நமக்குத் தகாத வேலை.

குறிப்பு:— 'பரனை' என்ற சொல்லுக்கு எல்லாருக்கும் மேற்பட்டவன் என்று பொருள். எம்பெருமான் அப்படி யிருப்பதினாலே அவனிடம் குற்றவாளிகளாகிய நாம் போகக்கூடுமோ என்கிற ஸந்தேஹம் காட்டப்படுகிறது. 'துணையாம்' என்பதினாலே இந்தஸந்தேஹம் போகும்படியான எம்பெருமானுடைய குணமும் அவனுக்கும் நமக்குமிருக்கும் உறவும் காட்டப்படுகின்றன.

---

12 ஸாங்கப் பிரபதநாதிகாரம்.

இப்படி தத்துவங்களை அறிந்து முமுக்ஷுக்களான அதிகாரிகளில், லகுவான பிரபத்தியைச் செய்யத் தகுந்தவன், அதற்கு வேண்டிய அங்கங்களை அறிந்து அவைகளுடன் பிரபத்தியைச் செய்யும் விதத்தை இந்த அதிகாரத்தில் அருளிச் செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள். (1) கீழே சொன்ன அங்கங்களோடு பிரபத்தியைப் பண்ணும்போது, ஒருவன் தன்னுடைய ஸ்வரூபத்தையும், தன்னை ரக்ஷிக்கும் சுமையையும், தன்னை ரக்ஷிப்பதினால் உண்டாகும் பலனையும் எம்பெருமானிடம் ஸமர்ப்பிக்கவேண்டும். அதாவது—(1) என்னுடையஸ்வரூபம் என்னுடைய ஸொத்து அன்று. அது தேவரீருடையது. (2) இதை ரக்ஷிக்கும் சுமையை என்னாலே தாங்கமுடியாது; பக்தி யோகத்தினுடைய ஸ்தானத்தில் தேவரீரே நின்று இந்தச் சுமையை ஏற்றுக்கொண்டு அது எதைச் செய்யுமோ அதை எல்லாம் தேவரீரே செய்யவேண்டியது. இந்த விஷயத்தில் எனக்கு இனி

மேல் ஒரு பாரமும் இல்லை. (3) இந்த ரக்ஷணத்தினுடைய பலனும் என்னுடையதன்று. அது தேவரீருடையது. இந்த மூன்று விஷயங்களிலும் எனக்கு ஸம்பந்தமில்லை. தேவரீருக்கே ஸம்பந்தமுண்டு என்று உறுதியாய் எண்ணுவது பிரபத்தி.

(2) மோக்ஷம் தவிர வேறு பலன்களை ஆசைப்பட்டு அதை அடைவதற்காக பிரபத்தி பண்ணும்போது, அதைக்கொடுக்கவேண்டிய சுமை மாத்திரம் கொடுக்கப்படுகிறது. ஸ்வரூபத்தினுடையவும், பலனுடையவும்ஸமர்ப்பணம் இல்லை. மோக்ஷத்திற்காகப் பக்தியோகம் செய்யும் போது ஸ்வரூபத்தினுடையவும், பலனுடையவும் ஸமர்ப்பணம்உண்டு. ரக்ஷணத்தினுடைய சுமையைப் பக்தி செய்கிறவன்தானே சுமக்கிறான். அதை எம்பெருமானிடம் கொடுக்கிறதில்லை. மோக்ஷத்திற்காகப் பிரபத்தி பண்ணும்போது மூன்றும் ஸமர்ப்பிக்கப்படுகின்றன.

(3) மோக்ஷத்தை ஆசைப்பட்டுப் பிரபத்திபண்ணுகிறவன் ரக்ஷணத்தின் பலனை எப்படி எம்பெருமானிடம் கொடுப்பதென்றால்- எம்பெருமானுடைய ஸந்தோஷமாகிய பலனே முக்கியமானது. பிரபத்திபண்ணுகிறவன் பலனை அடைந்து ஸந்தோஷப்படுவது எம்பெருமானுடைய ஸந்தோஷத்திற்காக. ஒரு கிளிக்குப் பால் கொடுத்து அதை இஷ்டப்படி பறக்கவிடுவதின் பலன் கிளியின் யஜமானனுக்கே. கிளிக்கு ஸந்தோஷமுண்டானாலும் அது அதின் யஜமானனின் ஸந்தோஷத்திற்காகவே ஏற்படுகிறது. அதுபோல.

இதின் மேலே, பிரபத்தி பண்ணுவது கூடாதென்று ஆளவந்தார் ஸ்தோத்ரத்தைக்கொண்டு பண்ணுகிற ஒரு அதிவாதத்திற்குப் பதில் சொல்லி, அதிகாரத்தின் அர்த்தத்தைப் பாட்டாலே அருளிச் செய்கிறார்.

அறவே பரமென் றடைக்கலம் வைத்தன ரன்றுநம்மைப்
பெறவே கருதிப் பெருந்தக வுற்ற பிரானடிக்கீழ்
உறவே யிவனுயிர் காக்கின்ற வோருயி ருண்மையைநீ
மறவே லெனநம் மறைமுடி சூடிய மன்னவரே· (19)

(ப-ரை) நம் மறைமுடி சூடியமன்னவர் - வேதத்தின் அர்த்தம் இன்னதென்று நிர்மாணம் செய்வதற்குப் பட்டாபிஷேகஞ் செய்துகொண்ட ராஜாக்களைப் போலிருக்கும் நம்முடைய பூர்வா

சாரியர்கள், உறவே- தன்னிடமிருக்கும் உறவாலே, இவன் உயிர்- இவனுடைய ஸ்வரூபத்தை, காக்கின்ற - ரக்ஷிக்கிற, ஓர் உயிர் - ஒப்பில்லாத பரமாத்மாவினுடைய, உண்மையை, நீ மறவேல் என - நீ மறவாதே யென்று சொல்லிக் கொடுத்து, அன்று - அநாதிகாலம் முதலாக, நம்மை, பெறவே கருதி - தன்னிடம் கொண்டுபோக விரும்பி, பெரும் தகவு உற்ற - மிகவும் கருணை யுடைய, பிரான் அடிக்கீழ் - உபகாரகனுன எம்பெருமானுடைய திருவடிகளின் கீழே, பரம் அற என்று -நம்மை ரக்ஷிக்கும் சுமை நம்மை விட்டு நீங்கும்படி, அடைக்கலம் - ரக்ஷிக்க வேண்டிய வஸ்துவாக, வைத்தனர்.

(கருத்து) தேசத்தை ரக்ஷிக்கும்பொருட்டு பட்டாபிஷேகம் செய்துகொண்ட ராஜாபோல் நம்முடைய முன்னோர்களான ஆசாரியர்கள் வேதத்தின் அர்த்தம் இன்னதென்று நிர்மானம் செய்வதற்காக வெகு பிரயாஸை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய ரக்ஷணமாகிய சுமை நம்மை விட்டுப் போவ தற்காக நம்மை எம்பெருமான் திருவடிகளின் கீழே ரக்ஷிக்க வேண்டிய வஸ்துவாக வைத்தார்கள். அந்த எம்பெருமான் நம் முடைய ரக்ஷணத்தை தன்னுடைய லாபமாக எண்ணி மிகுந்த கருணையாலே யாதிருச்சிகமான ஸுக்ருதம் முதலான வியாஜங் களைத் தேடிக்கொண்டு நம்மைப் பிரபத்திவரையில் கொண்டுவந்து விட்டிருக்கிறான். அப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருவடி களின்கீழ் அடைக்கலம் வைத்தார்கள். அவன், தனக்கும் நமக்கு முள்ள உறவைக்கொண்டு எல்லாரையும் ரக்ஷிக்கிறான். அவன் எல்லாருக்கும் உள்ளே ஆத்மாவாக இருந்து அவர்களை நியமனம் பண்ணுகிறான். அவனே எல்லாருக்கும் ஒரே உயிர். இந்த உண்மையை நீ பிரபத்திபண்ணும்போது மறக்கக்கூடாதென்று நமக்கு உபதேசம் செய்து இந்த வியாபாரத்தைச் செய்திருக் கிறார்கள்.

குறிப்பு:— (1) நம்மை ரக்ஷிப்பதற்கு முக்கியமான காரணம் நமக்கும் எம்பெருமானுக்கும் உள்ள உறவு. இது "உறவே இவன் உயிர் காக்கின்ற" என்று சொல்லப்பட்டது.

(2) 'இவன் உயிர்' என்று சொல்லி, உன்னுடைய உயிர் என்றாவது நம்முடையஉயிர் என்றாவது சொல்லாததின் பொருள் இந்த ரக்ஷணமானது எல்லாருக்கும் செய்யப்படுகிறது என்று.

(3) 'நீ மறவேல்' என்று சொன்னதின் கருத்து— இந்தப் பொருள் மிகவும் ரஹஸ்யமானதென்று மூன்றும் பேருக்குத் தெரியாமல் உபதேசம் செய்யப்பட்டது என்று.

(4) எம்பெருமானுக்கும் நமக்கும் உறவு இருந்தபோதி லும், அவன் கருணையினாலே நம்மை ரக்ஷிக்க அவஸரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோதிலும், நாம் ஒரு வியாஜத்தைச் செய்யாவிட்டால், அவன் நம்மை ரக்ஷிக்கிறதில்லை என்றும், அவன் ஒரு வியாஜத்தைத் தேடுகிறான் என்றும் காட்டுவதற்காக 'அடைக்கலம் வைத்தனர்' என்று பாட்டில் சொல்லியிருக்கிறது.

(5) 'அடைக்கலம் வைத்தனர்' என்று ஆசாரியநிஷ்ட பிரபத்தியைச் சொன்ன போதிலும், தானாகத் தனக்கு பிரபத்தி பண்ணும்போதும் ஆசாரியனுடைய உபதேசத்தால்அது செய் யப்படுவதினால் ஒருவன் தன்னை ஆசாரியர்களே அடைக்கலம் வைத்தார்களென்று எண்ண வேண்டியது.

13. கிருதகிருத்தியாதிகாரம்.

இப்படி ஆறு அதிகாரங்களாலே உபாயத்தைச் சொல்லி, மேல் பத்து அதிகாரங்களாலே அதினுடைய பலனைச் சொல்ல ஆரம்பித்து, ஒருவன் தன்னுடைய சரீரம் போனபிறகு மோக்ஷம் பெறவேண்டுமென்று பிரபத்தி பண்ணினால், அவன் எப்படி இருக்கவேண்டியது, என்ன செய்யவேண்டியது, எங்கே இருக்க வேண்டியது என்பவைகளை ஏழு அதிகாரங்களாலே சொல்லுகிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— (1) பிரபந்நன் தன்னுடைய ரக்ஷணத்தின் சுமையை எம்பெருமானிடம் கொடுத்துவிட்டபடியாலே அவனுக்கு இனிமேல் அந்த விஷயத்தில் ஒரு சுமையுமில்லை. அவன் செய்யவேண்டிய வேலை செய்தாய் விட்டது. அதனால் அவன் கிருதகிருத்தியனென்று சொல்லப் படுகிறான். எம்பெருமான் நான் உன்னை எல்லாப் பாபங்களிலி ருந்தும் விடுவிப்பேன் என்று கீதையின் கடைசி சுலோகத்தில் சொல்லியிருப்பதாலே, மோக்ஷம் கிடைக்குமோ கிடைக்கமாட் டாதோ என்று ஸந்தேஹப் படவேண்டியதில்லை. தேஹம் போன வுடனே மோக்ஷம் கிடைக்குமென்று தேறி,பயமுமில்லாமலிருப்

பன். ஆசாரியனுடைய கருணையால் நித்தியஸூரிகளுடன் கூட இருந்து எம்பெருமானை அனுபவிப்பேன் என்கிற எண்ணத்தாலே ஸந்தோஷமாகவும் இருப்பன்.

(2) இதுவரையில் பிரபந்நன், தேவர்கள் பிதிருக்கள் முதலானவர்களுக்குக் கடன்பட்டு அவர்களுக்கு வேலைக்காரனாக இருந்தான். இனிமேல் கடனும் தீர்ந்து விட்டது; வேலைக்காரனாக இருப்பதும் போய்விட்டது. ஆனால் முன்போலவே நித்தியங்களும், நைமித்திகங்களுமான கர்மங்களை எம்பெருமானுடைய ஆராதநங்களாகச் செய்து கொண்டே வரவேண்டியது.

(3) இப்படி அவைகளைச் செய்யும்போது, இந்திரன், அக்னி முதலான தேவதைகளின் பெயருள்ள மந்திரங்களைச் சொன்ன போதிலும், இவன் பரமைகாந்தியாயிருப்பதற்கு விரோதமில்லை. ஏகாந்தி என்றால் எம்பெருமான் கையையே பார்த்திருக்கிறவன். அவனிடத்தில் ஒன்றையும் கேட்காதவன் பரம - ஏகாந்தி. இந்திரன் முதலான சொற்கள் எம்பெருமானையே சொல்லுகின்றன. அவன் எல்லாருக்குள்ளும் ஆத்மாவாக இருப்பதினாலே இந்திரன் என்ற சொல்லுக்கு இந்திரனுடைய ஆத்மா என்று பொருள். இப்படியே மற்ற சொற்களுக்கும். இந்திரன் என்ற சொல்லுக்கு மிகவும் உயர்ந்த ஐச்வர்யம் உள்ளவனென்றும் பொருளானபடியால் அது எம்பெருமானையே சொல்லுகிறது.

இதன் மேலே கத்யத்தில் சொல்லியிருக்கிற "ஸுகமாக இரு" என்கிற எம்பெருமானுடைய சொல்லுக்குப் பொருள் எழுதி, பிரபத்தி பண்ணினவனைப் பாட்டாலே ஸ்தோத்திரம் செய்கிறார்.

மன்னவர் விண்ணவர் வானோ ரிறையோன்றும் வான்கருத்
அன்னவர் வேள்வி யனைத்து முடித்தன ரன்புடையார்க் [தோர்
கென்ன வரந்தர வேன்று நம்மத்தி கிரித்திருமால்
முன்னம் வருந்தி யடைக்கலங் கோண்டநம் முக்கியரே.

(ப-ரை) அன்பு உடையார்க்கு - தன்னிடத்தில் பக்தியுடையவர்களுக்கு, என்ன வரம், தர என்று - தருகிறது என்று, நம் அத்திகிரி திருமால் - ஹஸ்திகிரியில் இருக்கும் நம்முடைய லக்ஷ்மீபதியான எம்பெருமான், முன்னம் - முன்பு, வருந்தி - பிரயாஸப்பட்டு, அடைக்கலம் கொண்ட, நம் முக்கியர் - நம்முடைய பிர

பந்நர்கள்—, மன்னவர் - தேசத்தை ஆளும் ராஜாக்கள் போல் நம்முடைய ஸ்வாமிகள், விண்ணவர் - தேவதைகளைப் போலே நாம் ஆராதிக்கத் தகுந்தவர்கள், வானோர் இறை - நித்திய ஸூரிகளுக்கு யஜமாநன், ஒன்றும் - வஸிக்கும், வான் - வானத்தில் அதாவது - பரமபதத்தில், கருத்தோர் - ஆசையையுடையவர்கள், அன்னவர் - ஹம்ஸர்கள், அதாவது— இது நல்லது, இது கெட்டது என்று பிரித்து அறியுமவர்கள், வேள்வி அனைத்தும் முடித்தனர் - செய்யவேண்டிய யாகமெல்லாம் செய்து முடித்தவர்கள்.

குறிப்பு:— முக்கியர் என்று பிரபத்தியினுடைய மேன்மையைக் காட்டச் சொன்னபடி.

14. ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்.

இப்படிக்கீழ் அதிகாரத்தில் பிரபந்நன் ஸந்தேஹமும், பயமுமில்லாமல் ஸந்தோஷமாய் இருப்பதைச் சொல்லி, அவன் தன்னுடைய ஸ்வரூபத்தையும், செய்த உபாயத்தையும், அடையப் போகிற பலனையும் எப்போதும் நினைத்துக்கொண்டு இருக்க வேண்டியது என்பதையும், அப்படி நினைத்துக்கொண்டு இருப்பதற்கு அடையாளங்களையும் இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— ஒருவன் தன்னுடைய ஸ்வரூபத்தையும், தான்செய்த உபாயத்தையும், அதனால் கிடைக்கப் போகிற பலனையும் உள்ளபடி அறிந்து, அதை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கவேண்டியது. இப்படியிருப்பதற்கு ஸ்வநிஷ்டை என்று பெயர். அது மூன்று வகைப்படும்:— ஸ்வரூபநிஷ்டை, உபாய நிஷ்டை, புருஷார்த்தநிஷ்டை என்று. இந்த மூன்றும் இருப்பதற்கு அடையாளங்கள்:—

(1) ஒருவன் தன்னை வைதால் மனது கலங்காது. அது தன்னுடைய உடம்பைப் பற்றினதாக இருந்தால், தான் உடம்பைக் காட்டிலும் வேறானவனாகையாலே உதாஸீநனாயிருருப்பன். அது தன்னைப் பற்றியே யிருந்தால், ஐயோ! இவன் நம்மை வைகிறானே, இவனுக்கு என்ன வருமோ என்று அவனைப் பற்றி இரக்கப்படுவன். அவன் சொல்லும் குற்றம் தன்னிடம் இருந்தால்,

அந்தக் குற்றத்தை நினைப்பூட்டினனே என்றும், குற்றம் இல்லா விட்டால், குற்றம் ஒருவேளை நேரிடும், ஜாக்கிரதையாய் இரு என்று எச்சரிக்கை பண்ணினன் என்றும் அவனிடத்தில் நன்றி பாராட்டுவன். அவனும் தன்னைப்போல எம்பெருமானுக்கு உட்பட்டவன். ஆகையினால், எம்பெருமான் அவனைக் கொண்டு முன் செய்த தன் கர்மத்திற்குப் பலனைக்கொடுக்கிறான் என்று நினைத்து அவனிடத்தில் கோபம் கொள்ளமாட்டான். தனக்கு எப்போதும் நல்லதைச் செய்யும் எம்பெருமான் இப்படி ஒரு கர்மத்தைப் போக்கினனென்று ஸந்தோஷப்படுவன். இவைகள் ஸ்வருபநிஷ்டையின் அடையாளங்கள்.

(2) எம்பெருமான் பிரபத்திக்கு வசப்பட்டுத் தன்னை ரக்ஷிக்க ஸித்தமாயிருப்பதாலே, இதற்காக வேறு ஒரு தேவதையையும் கண்ணாலே பார்க்கமாட்டான். அவன் ரக்ஷகனாயிருப்பதால் அவனுடைய பலத்தைக் கொண்டு ஒன்றுக்கும் பயப்படமாட்டான். தனக்கு இஷ்டத்தைக் கொடுப்பதற்கும் இஷ்டமில்லாததை விலக்குவதற்கும் அவன் கையையே பார்த்திருப்பன். தன் ரக்ஷணவிஷயத்தில் தான் ஒன்றும் செய்யமாட்டான். தனக்கு ஜ்வரம் முதலான வியாதிகள் வந்து மரணம் உண்டாகுமென்று தோன்றினாலும் துக்கப்படமாட்டான். எம்பெருமானிடம் சீக்கிரம் போகலாமென்று ஸந்தோஷப்படுவன். இவைகள் உபாய நிஷ்டையின் அடையாளங்கள்.

(3) தன்னுடைய உடம்பின் ரக்ஷணமானது முன் செய்த கர்மத்திற்குத் தகுந்தபடி நடக்குமென்று அதைப்பற்றி விசாரப்படமாட்டான். தன் பிரயத்நமில்லாமல் தர்மத்திற்கு விருத்தமல்லாத விஷயங்கள் கிடைத்தால், அதை அநுபவிப்பன். இதினாலே முன் செய்த புண்ணியம் கழிந்தது என்று எண்ணுவன். ஒன்று கிடைத்தாலும் ஸந்தோஷப்படான். கிடைக்காவிட்டாலும் துக்கப்படான். தான் அடையப் போகிற மோக்ஷஸுகத்தை ஆவலுடன் நினைத்துக் கொண்டிருப்பன். அது எப்போது வரப்போகிறதென்று நாளை எண்ணிக் கொண்டிருப்பன். இவைகள் புருஷார்த்த நிஷ்டையின் அடையாளங்கள்.

இந்த விஷயங்களைச் சுருக்கமாகப் பாட்டால் அருளிச் செய்கிறார்.

முக்கிய மந்திரங் காட்டிய மூன்றி னிலேயுடையார்
தக்கவை யன்றித் தகாதவை யொன்றுந் தமக்கிசையார்
இக்க ருமங்க ளேமக்குள வென்று மிலக்க ணத்தால்
மிகக வுணர்த்தியர் மேதினி மேவிய விண்ணவரே. (21)

(ப-ரை.) முக்கிய மந்திரம் - மூலமந்திரம், காட்டிய - தெரிவிக்கிற, மூன்றில் நிலே உடையார் - ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் என்கிற மூன்றில் நிலே யுடையவர்கள், அவைகளே எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பவர்கள், தக்கவை அன்றி - தமக்குத் தகுந்தவைகளையல்லாமல், தகாதவை ஒன்றும் - தகாதவைகளே யொன்றையும், தமக்கு, இசையார் - ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இ கருமங்கள் - கீழே சொன்ன கோபமில்லாமை முதலான விஷயங்கள், எமக்கு உள என்றும் - நமக்கு உண்டு என்றும், இலக்கணத்தால் - அடையாளங்களால், மிக்க உணர்த்தியர் - உயர்ந்த ஜ்ஞாநத்தை யுடையவர்கள், மேதினி மேவிய - பூமியில் எம்பெருமான் வஸிக்குமிடங்களில் ஆசையுடனிருக்கிற, விண்ணவர் - நித்தியஸூரிகள்.

(கருத்து.) கீழே சொன்னவைகள் தங்களுக்கு இருப்பதை அவைகளின் அடையாளங்களாலே அறிந்து தங்களுக்கு ஸ்வநிஷ்டை யிருக்கிறதென்று அறிந்தவர்கள் முக்தரைப்போல் ஆனந்த முடையவர்கள். அவர்களுக்கு ஒருவிதக்கெடுதியும் வராது. அவர்களே இந்தப் பூமியில் ஆசைப்பட்டு வாஸம் செய்கிற நித்தியஸூரிகள் என்று சொல்லலாம்.

15. உத்தர கிருத்தியாதிகாரம்.

இப்படி தத்துவங்களே அறிந்து பிரபத்தியைச் செய்தவன் பூமியில் இருக்கும்போது, எப்படியிருப்பன் என்று கீழ் இரண்டு அதிகாரங்களால் சொல்லி, அவன் எவைகளேச் செய்துகொண்டு இருக்கவேண்டியது என்பதை இந்த அதிகாரத்தில் அருளிச் செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— பிரபத்தி செய்தவனுக்கு அது முடிந்தவுடனே அதின் பலனாக எம்பெருமானுடைய கைங்கரியம் ஆரம்பிக்கிறது. அவன் இங்கே இருக்

கும் நாளில் செய்யவேண்டிய வேலைகளாவன:— எம்பெருமானு டைய கைங்கரியம் ஆஜ்ஞாகைங்கரியமென்றும், அநுஜ்ஞா கைங் கரியமென்றும் இருவகைப்படும். அவைகளில் இதைச் செய் என்று சொல்லப்பட்டவைகள் ஆஜ்ஞாகைங்கரியம். அவைகளைக் கட்டாயம் செய்யவேண்டியது. செய்யாவிட்டால் பிரத்தியவாயம் (குற்றம்) உண்டு. இவைகளைச் செய்யலாமென்று சொல்லப்பட்ட வைகள் அநுஜ்ஞாகைங்கரியம். எவைகளைச் செய்யாவிட்டால் பிரத்தியவாயம் இல்லையோ, செய்தால் எம்பெருமானுக்கு ஸங் தோஷமுண்டாகுமோ, அவைகள் அநுஜ்ஞா கைங்கரியங்கள். அநுஜ்ஞாகைங்கரியங்களில் எவைகள் தன்னால் செய்யமுடியுமோ, எவைகளை நினைத்தபோது விடமுடியுமோ, அவைகளையே செய்ய வேண்டியது. ஆறு தாண்டுவதற்கு ஓடத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறவன் சொக்கட்டான் ஆடினால் பந்தயம் வைத்து ஆடமாட்டான். பந்தயத்திற்கு ஆடினால் அதை நினைத்த போது விடமுடியாது. அதை முடித்துத்தான் போகவேண்டும். விளையாட்டாக ஆடினால் அதை நினைத்தபோது விட்டுப் போக லாம். அதுபோல. அந்த கர்மங்களைச் செய்யும்போது எப்படிச் செய்யவேண்யடிதென்று சாஸ்திரம் சொல்லுகிறதோ, அப்படியே செய்யவேண்டும்.

(2) எம்பெருமானுடைய கைங்கரியங்களைச் செய்யும்போது பிரீதியுடன் செய்யவேண்டியது. தாயார் குழந்தையின் வேலை யையும், நல்ல ஸ்திரீ தன் புருஷன் வேலையையும், நல்ல சிஷியன் குருவின் வேலையையும் பிரீதியுடன் செய்வதுபோல். பயத்துட னும் அவைகளைச் செய்யவேண்டியது. வேலைக்காரன் ராஜாவின் வேலையைச்செய்வது போலவும், யானைப்பாகன் யானையை ரக்ஷிப் பது போலவும்.

(3) ஜ்ஞாநமும் பக்தியும் வேண்டியதாகையால், நல்ல ஜ்ஞாந முடைய ஒரு பெரியவரிடம் கூட இருந்து ஜ்ஞாநத்தை யடைய வேண்டியது. நல்ல அநுஷ்டாநமுள்ள பெரியவரிடமிருந்து அவ ருடைய அநுஷ்டாநங்களில் தன்னுடைய ஆச்ரமத்திற்குத் தகுந்தவைகளை எடுத்துக் கொள்ளவேண்டியது.

(4) இப்படி ஜ்ஞாநமும், அநுஷ்டாநமும் இருக்கிறதென்று கர்வப்படக் கூடாது. தனக்கு ஏதாவது ஆழ்வார்களுக்குப் போல எம்பெருமான் விசேஷ அநுக்ரஹத்தைச்செய்தால், அப்போதும்

கர்வம் கூடாது. தான் அகிஞ்சநனாயிருக்கும் இருப்பை மறந்து போகக்கூடாது. அதற்காகத் தாம் முன்னிருந்த இருப்பை அடிக்கடி நினைக்கவேணும். அதினால் மனம் தளர்ச்சி அடையக் கூடாது. இப்போது ஆசாரியன் அநுக்ரஹத்தினாலே வந்திருக்கும் நிலைமையை நினைத்துத் தேறி இருக்கவேண்டும்.

(5) தான் இருக்குமிடத்தில் தேவாலயமிருந்தால், ஒவ்வொரு நாளும்போய் எம்பெருமானுடைய அர்ச்சையை ஸேவிக்க வேண்டியது.

(6) எம்பெருமானுக்குத் தான் சேஷனாயிருப்பதை ஒரு போதும் மறக்கக் கூடாது. பதிவிரதையான ஒருஸ்திரீ தன் திரு மங்கலியத்தை ரக்ஷிப்பதுபோல் அதை நினைத்துக்கொண்டிருக்க வேண்டியது. பரதாழ்வான் சக்கரவர்த்தி திருமகனுடைய பாதுகைகளுக்கு எதையும் விஜ்ஞாபநம் செய்து ராஜ்யத்தைப் பரிபாலநம் செய்ததுபோல், தான் செய்யும் எதையும் எம்பெருமானிடம் விஜ்ஞாபநம் செய்யவேண்டியது.

(7) ஆசாரியர்களும் எம்பெருமானும் தனக்குச் செய்த உபகாரங்களை எப்போதும் நினைத்துக் கொண்டிருந்து அவர்களிடம் நன்றி பாராட்டவேண்டியது.

விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவு மடிமையெல்லாம்
மண்ணுல கத்தின் மகிழ்ந்தடை கின்றனர் வண்டுவரைக்
கண்ண னடைக்கலங் கொள்ளக் கடன்கள் கழற்றியநம்
பண்ணம ருந்தமிழ் வேத மறிந்த பகவர்களே. (22)

(ப-ரை) வண் துவரை - அழகிய துவாரகா நகரத்திலிருக்கும், கண்ணன், அடைக்கலம் கொள்ள, கடன்கள் கழற்றிய - தேவர்கள் முதலானவர்களுக்குப் பட்டிருந்த கடன்கள் தீர்ந்தவர்களும், பண் அமரும் தமிழ் வேதம் - கானத்தோடு கூடிய திருவாய்மொழியை, அறிந்தவருமான, நம் பகவர்கள் - நம்முடைய ப்ரபந்ந ச்ரேஷ்டர்கள், விண்ணவர் - நித்திய ஸூரிகள், வேண்டி - ஆசைப்பட்டு, விலக்கு இன்றி - ஒருவிதத் தடையுமில்லாமல், மேவும் - செய்யும், அடிமை எல்லாம் - எல்லாக் கைங்கரியங்களையும், மண் உலகத்தில் - இந்த பூமியில், மகிழ்ந்து - ஸந்தோஷப்பட்டு, அடைகின்றனர் - அடைகிறார்கள்.

(கருத்து.) பிரபந்நர்கள் மற்றவர்களைப் போல கைங்கரியங்களைச் செய்யாவிட்டால் குற்றம் வருமோ என்று பயந்து செய்கிறார்களில்லை. பிரீதியினாலேயே அதுவே ஸ்வயம் பிரயோஜநமென்று எண்ணிச் செய்கிறார்கள்.

குறிப்பு:— 'அடைகின்றனர்' என்று நிகழ் காலச் சொல்லினாலே இதை இப்போதும் பார்க்கலாமென்றபடி.

16. புருஷார்த்த காஷ்டாதிகாரம்.

முன் அதிகாரத்தில் பிரபந்நன் இங்கிருந்த காலத்தில் எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. இத்துடன் அவன் நிற்கக்கூடாது, எம்பெருமானிடத்தில் பக்தியுள்ளவர்களுக்கும் கைங்கரியம் செய்யவேண்டுமென்று இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிறது. பிரபந்நன் ஆசைப்படவேண்டியபிரயோஜநம் புருஷார்த்தம். அது பாகவதர்கள்வரையில் போகவேண்டியிருப்பதால், அதைப் புருஷார்த்த காஷ்டை என்று சொல்லியிருக்கிறது.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:—

(1) ஒருவனைப் பாகவதன் என்று எட்டு அடையாளங்களால் அறியலாம். அவைகளாவன:— (1) பாகவதனிடத்தில் இருக்கும் குற்றங்களைப் பார்க்காமல் அவனிடம் பிரீதி பண்ணுகை. (2) அவன் எம்பெருமானுக்குப் பூஜை செய்வதைக்கண்டு ஸந்தோஷப்படுவது. (3) எம்பெருமானுடைய கதையைக் கேட்பதில் சிரத்தை. (4) அதைக் கேட்கும்போது தொண்டை தழதழப்பதும், கண்ணில் ஜலம் வருவதும், உடம்பில் மயிர்க்கூச்சலுண்டாவதும். (5) தானும் எம்பெருமானுக்கு ஆராதநம் செய்வதற்குப் பிரயத்தினம் செய்கை. (6) எம்பெருமானுடைய வேலையைச் செய்கையில் டம்பமில்லாமை, அதாவது.— தன்னை ஒருவன் கொண்டாடவேண்டுமென்று அதைச் செய்யாமை. (7) எம்பெருமானை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கை. (8) எம்பெருமானிடத்தில் ஒன்றையும் கேட்காதிருப்பது.

(2) பிரபந்நன் எம்பெருமானுக்குச் சேஷன்; அதாவது.— அவனுக்காகவே இருக்கிறவன்; அவனை எம்பெருமான் தன் இஷ்

டப்படி விநியோகம் செய்யலாம். எம்பெருமானுக்குப் பாகவதர்களிடத்தில் மிகுந்த பிரீதி இருக்கிறது. அவர்களைத் தனக்கு ஆத்மாவென்று ஸ்ரீகீதையில் அவனே சொல்லியிருக்கிறுன். அவன் பிரபந்நனை அவர்களுக்குச் சேஷமாகப் பண்ணுகிறுன். ஆகையால் அவன் பாகவதர்களுக்குக் கைங்கரியம் செய்து அவர்களை ஸந்தோஷப்படுத்த வேண்டியது.

(3) பாகவதர்களின் குணங்களைப் பார்த்து அவைகளில் ஈடுபட்டு ஒருவன் அவர்களுக்குக் கைங்கரியம் பண்ண ஆசைப்படுவன். இந்த விதமாயும் அவர்களின் கைங்கரியம் அவனுக்குக் கிடைக்கிறது.

(4) இந்த விஷயத்தில் சில ஸந்தேஹங்கள் உண்டாகின்றன. (1) எம்பெருமானுக்கே சேஷனுன பிரபந்நன் பாகவதர்களுக்குச் சேஷனுய் இருக்கலாமோ? (2) பிரபந்நன் பாகவதர்களுக்குச் செய்யும் கைங்கரியமானது அவனுடைய ஸ்வரூபத்தினுல் உண்டாகிறதா? அல்லது ஒரு காரணத்தினுல் உண்டாகிறதா? (3) இரண்டு பாகவதர்கள் ஒருவருக்கொருவர் கைங்கரியம் செய்தால், ஒருவனுக்கே சேஷத்வமும், சேஷித்வமும் வருமே, இது கூடுமா? இவைகளுக்குப்பதில்களையும், பாகவதர்களுடைய பிரஸாதத்தையே ஒருவன் ஆசைப்பட வேண்டுமென்றும் சொல்லி, அதிகாரத்தின் முக்கியமான அர்த்தத்தைப் பாட்டால் அருளிச் செய்கிறுர்.

வேதமறிந்த பகவர் வியக்க விளங்கியசீர்
நாதன் வகுத்த வகைபெறு நாமவ னல்லடியார்க்
காதர மிக்க வடிமை யிசைந்த ழியாமறைநூல்
நீதி நிறுத்த நிலைகுலை யாவகை நின்றனமே. (23)

(ப-ரை) வேதம் அறிந்த - வேதத்தின் அர்த்தம் தெரிந்த, பகவர் - பாகவதர்கள், வியக்க - ஆச்சரியப்படும் படியாக, விளங்கிய சீர் - நல்ல குணங்களையுடைய, நாதன் - யஜமானனை எம்பெருமான், வகுத்த - தன் இஷ்டப்படி நம்மை உபயோகப்படுத்துகிற, வகை - விதத்தை, பெறும் நாம் - பெறவேண்டிய அதாவது ஒப்புக்கொள்ளவேண்டிய நாம், அவன் - அந்த எம்பெருமானுடைய, நல் அடியார்க்கு - நல்ல பக்தியையுடைய வேலைக்காரர்களுக்கு, ஆதரம் மிக்க - பிரீதி மிகுந்த, அடிமை இசைந்து -

கைங்கரியத்தை ஒப்புக்கொண்டு, அழியா - எப்போதுமிருக்கிற, மறை நூல் - வேதமாகிய சாஸ்திரத்தினாலே, நீதி - நீதியுடன், நிறுத்த - ஏற்படுத்தப்பட்டிருக்கிற, நிலை - இருப்பு, குலையாவகை - கெட்டுப் போகாதபடி, நின்றனம் - இருக்கிறோம்.

(கருத்து.) எம்பெருமான், வேதத்தின் அர்த்தத்தை அறிந்து, அறிந்தபடி நடக்கிற பாகவதர்கள் ஆச்சரியப்படும் படியாக விளங்குகிற நல்ல குணங்களை உடையவன். அவன் எல்லாருக்கும் யஜமாநன். அவனுக்குச் சேஷனான நம்மை அவன் எப்படி உபயோகப் படுத்துகிறானோ, அதை ஒப்புக்கொண்டு அவனுடைய திருவுள்ளத்தின்படி நாம் நடக்கவேண்டியவர்கள். அவன் நம்மைத் தன்னுடைய நல்ல தாஸர்களுக்கு அடிமைவேலை செய்யும்படி செய்திருக்கிறான். அதை நாம் மிகுந்த பிரீதியுடன் செய்யவேண்டியது. இப்படிச் செய்யும்போது எப்போதும் அழியாமல் இருக்கிற வேதமாகிய சாஸ்திரமானது நியாயத்துடன் எந்த நிலையைச் சொல்லுகிறதோ, அந்த நிலை கெடாமல் நாம் இருக்கிறோம்.

குறிப்பு:— (1) நல்லடியார் - நன்மையாவது- அபராதத்தில் ருசி முதலான தோஷமில்லாமை.

(2) வேதமானது ஒரு பாகவதனுக்குக் கைங்கரியம் செய்யும்போது, வர்ணம், ஆசிரமம், ஆசாரியன் சிஷ்யன், பிள்ளை தகப்பன் என்கிற முறை இவைகளைக் கவனித்துச் சில வியவஸ்தைகளைச் சொல்லியிருக்கிறது. அவைகளை மீறாமல் நாம் பாகவத கைங்கரியம் செய்யவேண்டியது. அதாவது:- ஒரு பிராமணன் பாகவதனாயிருக்கும் சூத்திரனையும், ஸந்நியாஸி பாகவதனாயிருக்கும் கிருஹஸ்தனையும், ஆசாரியன் பாகவதனாயிருக்கும் சிஷ்யனையும், தகப்பனார் பாகவதனாயிருக்கும் புத்திரனையும் நமஸ்காரம் செய்யக்கூடாது.

17. சாஸ்திரீய நியமநாதிகாரம்.

கீழ் இரண்டு அதிகாரங்களில் எம்பெருமானுக்கும், பாகவதர்களுக்கும் கைங்கரியம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்த கைங்கரியங்கள் எவைகள் என்றும், அவைகளை

எப்படிச் செய்யவேண்டுமென்றும், இப்போது சாஸ்திரத்தைக் கொண்டே பிரபந்நன் அறியவேண்டியதாகையால், அதில் சொன்னவைகளுக்குக்கட்டுப்பட்டு பிரபந்நன் இருக்கவேண்டியது என்றும் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— (1) பிரபந்நன் முக்தியை அடைந்த பின், எம்பெருமானுக்கு எந்த கைங்கரியம் இஷ்டமோவென்று தன்னுடைய விரிவை அடைந்த ஜ்ஞானத்தாலே பார்க்கலாம். இப்போது பிரபந்நனுடைய ஜ்ஞானமானது சுருங்கி யிருப்பதினாலே அப்படிச் செய்யமுடியாது. ராத்திரியில் விளக்கைக் கொண்டு ஒன்றை நாம் அறிவது போல், எம்பெருமானுக்கு இஷ்டமான கைங்கரியத்தைச் சாஸ்திரத்தைக் கொண்டே பிரபந்நன் அறியவேண்டியது.

(2) இந்த விஷயத்தில் சிலர் சொல்லும் அதிவாதங்கள். (1) ஸ்ரீபாஷியகாரர் திருநாட்டுக்கு எழுந்தருளும்போது சில கைங்கரியங்களைச் செய்யும்படி சொல்லியிருக்கிறார். அவைகளில் சாஸ்திரப்படி நடக்கவேண்டுமென்பதைச் சேர்க்கவில்லையே. (2) ஸ்ரீ ஆளவந்தார் பிரீதியினாலேயே பிரபந்நன் வேலையைச் செய்யும்படி தூண்டப்படுவனென்று சொல்லியிருப்பதினாலே சாஸ்திரம் தள்ளப்படவில்லையா? இவைகளுக்குப் பதில் சொல்லப்படுகிறது.

(3) ஜனங்கள் அநுகூலரென்றும், பிரதிகூலரென்றும், உதாஸீனரென்றும் ஸ்ரீ பாஷியகாரர் பிரித்து அவர்களிடத்தில் பிரபந்நன் இருக்கவேண்டிய விதத்தை அருளிச் செய்திருக்கிறார். அவர்களில் அநுகூலர் எம்பெருமானிடத்தில் பக்தியுள்ளவர்கள்; பிரதிகூலர் அவனிடத்தில் த்வேஷம் செய்பவர்கள்; உதாஸீனர் பிரீதியும் த்வேஷமும் இல்லாதவர்கள். அநுகூலரைக் கண்டால் ஸந்தோஷப்பட வேண்டியது; பிரதிகூலரைக் கண்டால் பயப்பட வேண்டியது; உதாஸீநரைக் கண்டால் அவர்களையொரு பொருளாக நினைக்காமல் இருக்க வேண்டியது.

அதிகாரத்தின் முக்கியமான அர்த்தத்தைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

நின்றன மன்புடை வானோர் நிலையி னிலமளந்தான்
நன்றிது தீபதி தென்று நடத்திய நான்மறையால்
இன்று நமககிர வாதலி லிம்மதி யிங்கிலவே
அன்றி யடிக்கடி யாரிரு டீர்க்க வடியுளதே. (24)

(ப-ரை.) நிலம் அளந்தான் - பூமியை மூன்று அடியாக அளந்த எம்பெருமான், நன்று இது - இது நல்லது, தீயது இது- இது கெடுதலானது, என்று, நடத்திய - நடத்திக் கொண்டிருக்கிற, நால் மறையால் - நான்கு வேதங்களைக் கொண்டு, அன்பு உடை - எம்பெருமானிடத்தில் பக்தியுள்ள, வானோர் - வைகுந்தத்திலிருக்கும் நித்தியஸூரிகளுடைய, நிலையில் - இருப்பில், அதாவது— பிரீதி மிகுந்து அது உள்ளடங்காது செய்யும் கைங்கரியங்களில், நின்றனம் - இருக்கிறோம். இன்று - இப்போது நமக்கு, இரவு ஆதலில் - ராத்திரியாகையால், இ மதி - இந்த வேதமாகிய சந்திரனுடைய, இ நிலவே -அதின் அர்த்தத்தை நன்றாகக் காட்டுகிற ஸ்மிருதிகளாகிய வெளிச்சம், அன்றி - இல்லாமல், அடிக்கடி, ஆர் - நிறைந்திருக்கிற, இருள் - அஜ்ஞானமாகிற இருட்டை, தீர்க்க - போக்க, அடி உளதே - ஸாதநம் உண்டோ.

(கருத்து.) நித்தியஸூரிகள் எப்படி ஸ்வயம் பிரயோஜநமாகக் கைங்கரியம் செய்கிறார்களோ, அப்படியே நாமும் கைங்கரியங்களைச் செய்கிறோம். அவர்களுக்குத் தங்களுடைய ஜ்ஞாநமே துணையாயிருக்கிறது. நமக்கு இப்போது ஜ்ஞாநம் சுருங்கியிருப்பதாலே சாஸ்திரத்தைத் துணையாகக் கொண்டு கைங்கரியங்களைச் செய்கிறோம். ஏனென்றால்- இங்கு இருக்கிற காலத்தில் நம்முடைய அறிவு குறைந்திருக்கிறது. ராத்திரியில் ஒருவன் ஒன்றை அடையமுடியாதது போல், நாம் எம்பெருமானுடைய திருவுள்ளம் இன்னதென்று அறியமுடியாது. ராத்திரியில் சந்திரனுடைய நிலாவெளிச்சத்தைக் கொண்டு ஒன்றை அறிவதுபோல், நாம் வேதத்தையும் ஸ்மிருதிகளையும் கொண்டு எம்பெருமான் திருவுள்ளத்தை அறியவேண்டியது. இப்படிக்கில்லாவிட்டால் நெருங்கியிருக்கிற இருட்டைப் போக்க வேறு உபாயமில்லை.

குறிப்பு:-- 'நிலமளந்தான்' என்று சொல்லுகையாலே எம்பெருமான் நடத்துகிற சாஸ்திரமே நம்பத்தகுந்தது. மற்ற பசுபதி முதலானவர்கள் செய்திருக்கிற ஆகமங்கள் அப்படியன்று என்று காட்டப்படுகிறது. அந்த அவதாரத்திலேயே பிரும்மாவையும் பசுபதியையும் காட்டிலும் உயர்ந்தவன் என்று தெரிவிக்கப்பட்டது. பிரும்மலோகம் போன அவனுடைய திருவடிக்குப் பிரும்மா திருமஞ்ஜனம் செய்தான். அந்த ஜலத்தைப் பசுபதி தலையில் தாங்கிக்கொண்டதினாலே அவனுக்குச் சிவன் என்று பெயர் வந்தது.

18. அபராத பரிஹாராதிகாரம்.

இப்படி எம்பெருமானுக்கும் பாகவதர்களுக்கும் கைங்கரியங்களைச் சாஸ்திரத்தைத் துணையாகக்கொண்டு செய்யும்போது, அபராதம் ஒன்றும் வாராதபடி பிரபந்நன் நடக்கவேண்டியது. அபராதம் வந்தால் அதற்குப் பரிஹாரம் பண்ணும் விதத்தை இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— (1) முமுக்ஷுவுக்கு வேண்டிய அடையாளங்கள் உள்ளவனாயிருந்து பிரபத்தி பண்ணினவனுக்கு அபராதம் உண்டாகாது. முன்செய்த வினையால் அபராதம் நேர்ந்தால், பிரபந்நன் உடனே லஜ்ஜைப்பட்டு வருத்தப்படுவன். அவன் அபராதத்திற்கு ஏற்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டியது. அதற்குச் சக்தியில்லாவிட்டால் பிரபத்தியைப் பண்ணவேண்டியது.

(2) இதைச் செய்யாவிட்டால் எம்பெருமான் அவனைத் தண்டித்து அவனுடைய அபராதத்தைப் போக்குவன். ஆனால் தண்டனையானது முன்போல் கடுமையாய் இல்லாமல் லகுவாக இருக்கும். ஒருகாலும் அவன் யமனுக்கு உட்படமாட்டான்.

(3) இன்ன வயது முடிவில் மோக்ஷம் வேண்டுமென்று கேட்டவனுக்கு அந்த காலத்திற்குள் சொன்னபடி அபராதபரிஹாரம் ஏற்படும். இப்படிக் காலம் குறிக்காமல் மோக்ஷம் வேண்டுமென்று கேட்டவனுக்கு அபராதத்திற்குப் பரிஹாரம் உண்டாகும்வரையில் வயது வளர்ந்துவரும்.

(4) இதில் சொல்லிய அதிவாதங்கள்:— (1) தெரிந்து செய்கிற அபராதத்தையும் எம்பெருமான் க்ஷமிப்பன் என்று ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார். (2) பிராட்டி 'உங்களுக்குச் சரணமாக இருக்கிறேன்' என்று சொன்னபிறகு ராக்ஷஸிகள் செய்த அபசாரங்களை அவள் பொறுக்கவில்லையா? (3) ஒரே குற்றத்திற்கு ஒருவனுக்கு லகுவான தண்டனையும் மற்றொருவனுக்குக் கடுமையான தண்டனையும் கூடுமோ? (4) 'எல்லாப் பாபங்களிலுமிருந்து உன்னை விடுவிப்பேன்' என்று எம்பெருமான் ஸ்ரீகீதையில் சொல்லியிருக்கிறபடியால், 'எல்லா பாபங்களிலும்' என்கிற சொல்லில் பின்பு செய்யும் அபராதமும் அடங்கவில்லையா? இந்த அதிவாதங்கள் கண்டிக்கப்படுகின்றன.

(5) பிரபந்நன் விலக்கவேண்டிய அபசாரங்களில் முக்கியமானது பாகவதஅபசாரம். ஜாதி, குணம், வ்ருத்தம் இவைகளாலே உயர்ந்தவர்களின் மேன்மையைக் குறைக்கப் பார்ப்பதும், பாகவதனை சூத்திரனை மற்ற சூத்திரர்களைப்போல் பார்ப்பதும், அபசாரங்கள். பாகவத அபசாரத்திற்குப் பாகவதர்களிடத்திலேயே க்ஷமை கொள்ளவேணும்.

(6) ஒரு பாகவதன் தன்னை வெறுத்தால் தான் குற்றம் செய்யாதிருந்தபோதிலும், அவனிடம் க்ஷமை கொள்ளவேணும். தான் முன்செய்த வினைக்காக எம்பெருமான் அவனைக்கொண்டு தன்னைத் தண்டிக்கிறான் என்று எண்ணவேண்டியது.

முதல் உட்பிரிவில் சொன்ன விஷயத்தைப் பாட்டாலே அருளிச் செய்கிறார்.

உளதான வல்வினைக் குள்ளம் வெருவி யுலகளந்த
வளர்தா மரையிணை வன்சர ணாக வரித்தவர்தாம்
களைதா னெனவெழுங் கன்மந் துறப்பர் துறந்திடினும்
இளைதா நிலைசெக வெங்கள் பிரானருட் டேனெழுமே. (25)

(ப-ரை) உளதான - இப்போதிருக்கிற, வல்வினைக்கு - பலமான பாபங்களுக்கு, உள்ளம் வெருவி - மனது பயப்பட்டு, உலகு அளந்த - பூமியையளந்த எம்பெருமானுடைய, வளர் - பிரும்மலோகம் வரையில் வளர்ந்துபோன, தாமரைஇணை-இரண்டு திருவடித்தாமரைகளை, வன் - பலமான, சரணாக - உபாயமாக, வரித்தவர்தாம் - பற்றின பிரபந்நர்கள், களைதான் என - வயல்களில் பயிர்களையமுக்கும் களைகள்போல், எழும் - கைங்கரியங்களுக்கு விரோதியாகும், கன்மம் - கர்மங்களை, துறப்பர் - விட்டு விடுவர், அதாவது அவைகளைச் செய்யமாட்டார்கள். துறந்திடினும் - இப்படி அவைகளைச் செய்யாதிருக்கிற விஷயத்திலும், இளைது ஆ - மந்தபுத்தியுள்ளவனாயிருக்கிற, நிலை - இருப்பானது, செக - கெடும்படி, எங்கள் - நம்முடைய, பிரான் . உபகாரகனான எம்பெருமானுடைய; அருள் தேன் - கருணையாகிய தேனானது, எழும் - உண்டாகும்.

(கருத்து) பிராரப்தம் என்று சொல்லப்பட்ட பலமான பாபங்களுக்குப் பயப்பட்டு ஒருவன் பிரபத்தி பண்ணுகிறான். அவன் இங்கேயிருந்து எம்பெருமானை அநுபவிப்பதற்கு விரோ

தியான கர்மங்களைச் செய்யமாட்டான். பாபத்தை உண்டாக்கும் பாபங்களுக்கும் சேர்த்துப் பிரபத்தி பண்ணியிருப்பதாலே. அவனுக்கு புத்திமாந்தியத்தாலே அவிவேகம்வந்து பாபத்தைப் பண்ணுவனோவென்று ஸந்தேஹப் படவேண்டாம். அந்த அவிவேகம் வராதபடி எம்பெருமானுடைய கருணை அவனை ரக்ஷிக்கும்.

குறிப்பு:— (1) பிராரப்தத்தை 'வல்வினை' என்று சொன்னதின் கருத்து அது பக்தியோகத்தால் போகாதென்று.

(2) எம்பெருமானுடைய உலகளந்த திருவடி என்று சொன்னதற்கு அவன் எப்படி அஸுரர்களை ஜயித்து தேவர்களை ரக்ஷித்தானோ, அப்படியே பிரபந்நனுக்குண்டாகும் விரோதங்களைப் போக்கி அவனை ரக்ஷிப்பன் என்று கருத்து.

(3) தாமரை என்றது தாமரைபோன்ற திருவடிகள். அதில் ஒன்று அந்த அவதாரத்தில் வளர்ந்து பிரும்மலோகம் வரையில் போயிற்று.

(4) எம்பெருமானுடைய கருணையைத் தேனாகச் சொன்னதின் கருத்து—தேனை அநுபானமாக வைத்து மருந்து சாப்பிடுகிறவனுக்கு அது தோஷத்தைப் போக்கி நாக்குக்கும் இனிமையாகவும் இருப்பதுபோல், எம்பெருமானுடைய கருணையானது பிரபந்நனுடைய இடஞ்சல்களைப் போக்கும்; போக்கியமாகவும் இருக்குமென்று.

---

19. ஸ்தாநவிசேஷாதிகாரம்.

கீழ் நான்கு அதிகாரங்களினால் பிரபந்நன் அபராதமில்லாமல் எம்பெருமானுக்கும் பாகவதர்களுக்கும் சாஸ்திரத்தைக் கொண்டு கைங்கரியம் பண்ணவேண்டுமென்று சொல்லி, அப்படி கைங்கரியம் பண்ணும்போது, எங்கே இருக்கவேண்டியது என்பது இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

இதில் சொல்லிய விஷயங்கள்:— (1) வர்ணதர்மங்களையும் ஆசிரமதர்மங்களையும் எங்கே ஸரியாய்ச் செய்யக்கூடுமோ அங்கே பிரபந்நன் இருக்கவேண்டியது அவைகளிலும் பாகவதர்கள் வஸிக்கும் இடமே தகுந்தது. அவைகளிலும் எம்பெருமான் அர்ச்சையாக எழுந்தருளியிருக்கும் இடம் மிகவும் சிலாக்கியமானது.

(2) எங்கே வேண்டுமானாலும் வஸிக்கலாமென்று ஒரு வசனமும், புண்யதீர்த்தத்திலோ ச்வபாகன் வீட்டிலோ உடம்பை விட்டுப் போகிறவனும் மோக்ஷத்தை அடைகிறான் என்கிற வேறு வசநமும், எங்கே வேண்டுமோ அங்கே பிரபந்நன் இருக்கலாம் என்று சொல்லவில்லையா ? பதில்- முதல் வசனம் வேறு கதியில்லாதவன் விஷயம். இரண்டாவது வசனத்திற்கு மோக்ஷமாகிற பலன் வராமல் போகாதென்று கருத்து.

தேனார் கமலத் திருமக ணாதன் றிகழ்ந்துறையும்
வானாடு கந்தவர் வையத் திருப்பிடம் வன்றருமக்
கானா ரிமயமும் கங்கையுங் காவிரி யுங்கடலும்
நானா நகரமு நாகமுங் கூடிய நன்னிலமே. (26)

(ப-ரை) தேன் ஆர் கமலம்-தேன் நிறைந்த தாமரைப்பூவில் வாஸம் செய்கிற, திருமகள் நாதன் - பிராட்டியின் கணவனான எம்பெருமான், திகழ்ந்து உறையும் - விளங்கி வஸிக்கிற, வான் நாடு - வைகுந்தமாகிய தேசத்திலிருப்பதை, உகந்தவர் - ஆசைப்படுகிறவர்கள், வையத்து இருப்பிடம் - இந்த பூமியிலிருக்கிற இடமானது, வன் தருமம் - நல்ல தபஸ்ஸுகள் செய்யத்தகுந்த, கான் ஆர் - காடுகள் நிறைந்த, இமயமும் - இமயம் என்கிற மலையும், கங்கையும், காவிரியும், கடலும்-ஸமுத்திரத்திலிருக்கிற ச்வேதத்வீபமென்கிற தீவும், நானாநகரமும் - அயோத்யை முதலான பலவிதமான பட்டணங்களும், நாகமும் - வைகுந்தமும், கூடிய - சேர்ந்த, நல் நிலம் - நல்ல இடம்.

(கருத்து) எம்பெருமான் வஸிக்கிற வைகுந்தமாகிய லோகத்தில் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்ட பாகவதர்கள் பூமியில் எந்தவிடத்திலிருக்கிறார்களோ, அது மிகவும் சிலாக்கியமானது. அதில் பாட்டில்சொன்ன எல்லாவிடங்களும் சேர்ந்திருக்கின்றன.

குறிப்பு:— இந்தப் பாட்டில் எம்பெருமானுடைய கோயிலிருக்குமிடத்தைச் சொல்லாமல் பாகவதர் வஸிக்குமிடத்தைச் சொல்லுகையாலே இரண்டு இடங்களும் சேராதபோது பின் சொன்னதையே ஒருவன் எடுத்துக்கொள்ளவேணுமென்று கருத்து.

20. நிர்யாணுதிகாரம்.

இப்படி ஏழு அதிகாரங்களாலே பிரபந்நன் எப்படியிருக்க வேண்டியது, எதைச் செய்துகொண்டிருக்கவேண்டியது, எங்கே யிருக்கவேண்டியது என்று சொல்லப்பட்டது. இனி இருபது முதல் இருபத்திரண்டாவது வரையில் உள்ள மூன்று அதிகாரங் களிலுல் பிரபத்தியின் பலன்கள் சொல்லப்படுகின்றன. அவை களில் இரண்டு பலன்களை இந்த அதிகாரம் சொல்லுகிறது. அவை களாவன:—

(1) பிரபந்நன் பிரபத்திவாக்கியத்தைச் சொல்லுகிற முதல் க்ஷணத்தில் அவனுடைய புண்ணியங்களையும் பாபங்களையும் அவ னிடமிருந்து பிரித்துவைத்து, அவன் திருநாட்டுக்குப் போகும் போது புண்ணியங்களை அவனுக்கு வேண்டியவர்களிடத்திலும் பாபங்களை அவனுக்கு வேண்டாதவர்களிடத்திலும் எம்பெரு மான் சேர்க்கிறுன். இது ஒரு பலன்.

(2) ஜீவனை ஸூக்ஷ்மமான ஐந்து பூதங்களுடனும் பிராணன் மனது பத்து இந்திரியங்கள் இவைகளுடனும் சேர்த்து அவனைத் தன்னிடம் இளைப்பாறும்படி எம்பெருமான் செய்கிறுன். இது எல்லா ஜீவன்களுக்கும் உண்டு.

(3) ஹிருதயத்திலிருந்து உச்சந்தலைக்கு ஒரு நாடி போகி றது. அதினுடைய துவாரத்தைப் பிரகாசிக்கும்படி செய்து அதுவழியாய்ப்பிரபந்நனை உடம்பைவிட்டு வெளியே எம்பெருமான் கொண்டுபோகிறுன். இது பிரபந்நனுக்கு மாத்திரம் உண்டு. இது இரண்டாவது பலன்.

(4) பக்தன் கடைசி நிமிஷத்தில் எம்பெருமானைத் தான் முன்னுல் தியானம் செய்தபடி நினைக்கிறுன். இதற்கு அந்திம ஸ்மிருதி என்று பெயர். பிரபந்நனுக்கு இதை எம்பெருமானே உண்டுபண்ணுகிறுன்.

(5) நிர்யாணத்திற்குப் பிரபந்நன் விஷயத்தில் காலநியமம் இல்லை. பகலிலோ, இராத்திரியிலோ, சுக்லபக்ஷத்திலோ, கிருஷ்ண பக்ஷத்திலோ, உத்தராயணத்திலோ, தக்ஷிணுயநத்திலோ மர ணம் நேரலாம். சாஸ்திரத்தில் ஏற்பட்ட நியமங்கள் மற்றவர் களுக்காக.

3, 5 உட்பிரிவுகளில் சொன்ன விஷயங்களைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

நன்னில மாமது நற்பக லாமது நன்னிமித்தம்
என்னலு மாமதி யாதானு மாமங் கடியவர்க்கு
மின்னிலே மேனி விடும் பயணத்து விலக்கிலதோர்
நன்னிலே யாநடு நாடி வழிக்கு நடைபெறவே. (27)

(ப—ரை) மின் நிலை மேனி - மின்னலைப்போல அதாவது கொஞ்சகாலமேயிருக்கும்படியான உடம்பை, விடும் பயணத்து - விட்டுப்போகும் பிரயாணகாலத்தில், விலக்கு இலது - பிரதிபந்தகமொன்றுமில்லாமல், ஓர் நல் நிலையாம் - ஒரு விலக்ஷணமான நல்ல இருப்பை அதாவது ஸ்வபாவத்தையுடையதான, நடுநாடி - நடுவிலிருக்கிற நாடியிலிருந்து ஆரம்பிக்கிற, வழிக்கு - வழியில், நடைபெற - போவதற்கு, அடியவர்க்கு - பிரபந்நருக்கு, அங்கு - எல்லாவிடங்களிலும், அது-அவைகளுக்குள் அவரிருந்து போகுமிடமானது, நல் நிலம் ஆம் - நல்ல இடமாகும். அது - அவர் போகும் காலமானது, நல் பகல் ஆம் - நல்ல பகல்காலமாகும், அது - அப்போதுண்டாகும் நிமித்தத்தை, நல் நிமித்தம் என்னலும் ஆம் - நல்ல நிமித்தமென்று சொல்லலாம். யாதானும் அது- வேறு எதுவும், ஆம் - தகுந்ததாக ஆகும்.

(கருத்து) பிரபந்நர்கள் ஸ்திரமில்லாத உடம்பை விட்டுத் திருநாட்டிற்குப் போகிற பிரயாணத்தில் பிரதிபந்தகமில்லாமல் நடுநாடியை ஆரம்பமாகவுடைய தேவயாநம் என்கிற வழியில் அவர்கள் போவதற்கு இன்ன இடம், இன்ன காலம், இன்ன சகுநம் வேண்டுமென்பது இல்லை. அவர்கள் விஷயத்தில் எதுவும் நல்லது; அவர்கள் இருந்து போகும் இடமே நல்லது; அவர்கள் போகிற காலமே நல்ல பகல்; அவர் போகும்போது உண்டாகும் சகுநத்தையே நல்ல சகுநம் என்று சொல்லலாம்.

குறிப்பு:- (1) ஒருவன் ஒரு வேலையைச் செய்ய ஆரம்பிக்கும்போது இடமும் காலமும் நன்றாயிருக்கின்றனவா ? நல்ல சகுநங்கள் நேருமா ? என்று பார்க்கிறான். முக்தியை அடையப் போகிறவனுக்கு இப்படிப் பார்க்கவேண்டாமென்று கருத்து.

(2) 'மின்னிலே மேனி' என்றது ஸ்தூலமான சரீரம். அது மரணகாலத்தில் விடப்படுகிறது. ஸூக்ஷ்மமான சரீரத்துடன் அவன் போகிறான். விரஜை என்கிற ஆற்றின் கரையில் அதையும் விட்டுவிடுகிறான்.

(3) நடுநாடி என்பது ஹிருதயத்திலிருந்து உச்சந்தலைக்குப் போகிற நாடி. இது எல்லா நாடிகளுக்கும் நடுவிலிருப்பதால் நடுநாடி என்று சொல்லப்படுகிறது. மற்ற நாடிகளைப்போல் நரகத்திற்கும் ஸ்வர்க்கத்திற்கும் ஜீவனைக் கொண்டுபோகாமல் மோக்ஷத்திற்குக் கொண்டுபோவதால் அது 'நன்னிலை' என்று ஸ்தோத்ரம் பண்ணப்படுகிறது.

(4) இந்த நாடிவழியாய் வெளிக்கிளம்பினவுடனே தேவயாநம் என்கிற வழி வருகிறபடியால் இவை அதற்கு ஆரம்பம் என்று சொல்லிற்று.

(5) நடுநாடியில் பிரவேசத்திற்கு ஸ்தூலசரீரம் விலக்காயிருக்கிறது. பக்தனுக்கு பிராரப்தகர்மம் முடிந்தவுடனும் பிரபந்நனுக்குக் கோலின காலம் வந்தவுடனும் அந்த உடம்பு போய் பிரதிபந்தகம் நீங்கிவிடுகிறது.

---

21. கதிவிசேஷாதிகாரம்.

பிரபத்தியின் மூன்றுவது பலன் தேவயாநம் வழியாய்த் திருநாட்டுக்குப் போவது. அது இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

அந்த வழியை அதிகாரப்பாட்டாலே விரிவாய் அருளிச்செய்கிறார்.

நடைபெற வங்கிப் பகலொளி நாளுத் தராயணமாண்
டிடைவரு காற்றி ரவியிர வின்பதி மின்வருணன்
குடையுடை வானவர் கோமான் பிரசாபதி யென்றிவரால்
இடையிடை போகங்க ளெய்தி யெழிற்பத மேறுவரே. (28)

(ப-ரை) நடைபெற - தேவயாநம் என்கிற வழியில் போகும்போது, அங்கி - அக்கினி, பகல், ஒளிநாள் - சுக்கிலபக்ஷம், உத்தராயணம், ஆண்டு - வருஷம், இடைவரு காற்று - வருஷத்துக்கும் ஸூரியனுக்கும் நடுவிலிருக்கிற வாயு, இரவி - ஸூரியன், இரவின் பதி-இராத்திரிக்கு யஜமாநனாகிய சந்திரன், மின் - மின்னல், வருணன், குடையுடைவானோர் கோமான் - மூன்று லோகங்களையும் ஆளுவதற்கு அடையாளமான குடையையுடைய

தேவர்களுக்கு யஜமானனாகிய இந்திரன், பிரஜாபதி, என்று இவரால் - என்று சொல்லப்பட்ட இவர்களால், இடையிடை - தங்கள் தங்கள் எல்லைக்குள் கொடுக்கப்பட்ட, போகங்கள் - போகங்களை, எய்தி - அடைந்து. எழில் - பிரகாசிக்கிற, பதம் - வைகுந்தத்திற்கு, ஏறுவர்.

(கருத்து) முக்தனாகப்போகிறவன் தேவயாநத்தில் போகும்போது பாட்டில் சொன்னவர்கள் அழைத்துக்கொண்டுபோய், அவனுக்கு தங்கள் தங்கள் எல்லைக்குள் போகங்களைக் கொடுக்கிறார்கள். அவைகளை அநுபவித்துக்கொண்டு அவன் திருநாட்டுக்குப் போகிறான்.

குறிப்பு:- (1) முதல் ஐந்து சொற்கள் காலங்களைச் சொன்னபோதிலும், அவைகளின் அபிமானி தேவதைகளைச் சொல்லுகின்றன.

(2) இந்தப் பாட்டில் சொல்லப்பட்டவர்கள் முக்தி அடைகிறவனைத் திருநாட்டுக்கு அழைத்துக்கொண்டுபோகிறார்கள். அவர்களுக்கு ஆதிவாஹிகர்கள் என்று பெயர்.

(3) மின்னலில் இருக்கிற ஒரு புருஷன் இவனை நேராக எம்பெருமானிடம் கொண்டுபோகிறான். மின்னலுக்கு மேலே சொல்லப்பட்ட மூன்று பேர்களும் அவனுக்கு ஸஹாயமாயிருக்கிறார்கள்.

---

22. பரிபூர்ண ப்ரம்மாநுபவாதிகாரம்.

பிரபத்தியின் நாலாவது பலன் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

அதில் எம்பெருமானை அவனுடைய திருமேனி,நல்ல குணங்கள், அவன் ஆளும் இரண்டு விபூதிகள் இவைகளுடன் கூட முக்தன் அநுபவிக்கிறான், இந்த விஷயத்தில் சில ஸந்தேஹங்கள் இந்த அதிகாரத்தில் தீர்க்கப்படுகின்றன. அவைகளாவன—

(1) இங்கிருந்த காலத்தில் வஸ்துக்கள் கொஞ்ச ஸுகத்தையும், துக்கத்தையும் கொடுப்பதாக எல்லாருக்கும் தெரியுமே. அவைகள் முக்தனுக்குக் கர்மம் போய்விட்டதாலும் முன்போல் எம்பெருமானை விட்டு அவைகளை அநுபவிக்காமல், எம்பெருமானுடன் கூட சேர்த்து அநுபவிப்பதாலும் மிகுந்த ஆநந்தத்தைக் கொடுக்கும்.

(2) முக்தனுடைய ஸ்வரூபமும் எம்பெருமானுடைய ஸ்வரூபமும் ஒன்றாக ஆகிறதில்லை, ஆனால் அவனுக்கு ஸமமாக ஆகிறான்.

(3) உலகத்தை உண்டுபண்ணி ரக்ஷித்து அழிக்கும் வேலையும், மோக்ஷத்தைக் கொடுப்பதும் முக்தனுக்கு இல்லை. ஸமமாயிருப்பது போகத்தில் மாத்திரம்.

(4) எம்பெருமானுக்கு எவைகள் ஆநந்தத்தைக் கொடுக்குமோ, அவைகளெல்லாம் முக்தனுக்குமுண்டு. அவைகள் எம்பெருமானுக்கு எவ்வளவு ஆநந்தத்தைக் கொடுக்குமோ, அவ்வளவும் முக்தனுக்கும் உண்டு. இவைகளுக்கு ஸாயுஜ்யம் என்றும் ஸார்ஷ்டிதை என்றும் பெயர். எல்லா முக்தர்களுக்கும் ஆநந்தம் ஒரேவிதமாயிருக்கும்.

(5) இவை இரண்டும்தான் மோக்ஷமென்று சொல்லப்படுகிறது. ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம் என்கிற மூன்று மாத்திரம் மோக்ஷமல்ல. ஸாலோக்யம் என்பது எம்பெருமான் இருக்கும் உலகத்தில் இருப்பது. ஸாமீப்யம் என்பது அவன் கிட்டே இருப்பது. ஸாரூப்யம் என்பது அவனுடைய வேஷம் போன்ற வேஷமுள்ளவனாயிருப்பது. முக்தனுக்கு இவை மூன்றும் ஸாயுஜ்யம் என்பதில் அடங்கியிருக்கின்றன.

(6) எம்பெருமானை அநுபவித்து ஸந்தோஷம் உள்ளடங்காமல் அவனுக்குக் கைங்கரியம் செய்யும் முக்தன் ஸம்ஸாரத்திற்கு மறுபடியும் தன் இச்சையால் வரமாட்டான். எம்பெருமானும் அவனை அனுப்பமாட்டான்.

ஆறாவது உட்பிரிவில் உள்ள விஷயத்தைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

எறி யெழிற்பத மெல்லா வுயிர்க்கு மிதமுகக்கும்
நாறு துழாய்முடி நாதனை நண்ணி யடிமையினம்
கூறு கவர்ந்து குருக்கள் குழாங்கள் குறைகழற்கீழ்
மாறுத லின்றி மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே. (29)

(ப-ரை.) எழில் பதம் - பிரகாசிக்கிற வைகுந்தமென்கிற இடத்தில், எறி, எல்லா உயிர்க்கும்-எல்லா ஜீவன்களுக்கும், இதம்-உபாயமான சின்ன வியாபாரத்தை, உகக்கும்- பெரிதாக எண்ணி

ஸந்தோஷப்படும், நாறு துழாய் முடி - வாஸனையை யுடைய துளஸிமாலையைத் திருமுடியிலுடைய, நாதனை - யஜமாநனை எம்பெருமானை, நண்ணி - கிட்டி, அடிமையில் - அவனுக்குச் செய்யும் கைங்கரியங்களில், நம் கூறு - நம்முடைய பாகத்தை, கவர்ந்து - அடைந்து, குருக்கள்- ஆசாரியர்களுடைய, குரை கழல் கீழ் - சப்திக்கிற திருவடிகளின் கீழ், எழும் போகத்து - மேல் மேல் அதிகமாகும் எம்பெருமானுடைய அநுபவத்தில், மகிழ்ந்து- ஸந்தோஷப்பட்டு, மாறுதல் இன்றி - ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருதலில்லாமல், மன்னுவம் - ஸ்திரமாயிருப்போம்.

(கருத்து.) வைகுந்தமென்ற இடத்தில் போய்ச் சேர்ந்து எல்லா ஆத்மாக்களும் செய்யும் ஸ்வல்பமான ஹிதத்தைப் பெரிதாக ஸந்தோஷப்பட்டு அவர்கள் வேண்டியதைச் செய்யும் எம்பெருமானைக்கிட்டி அவனுடைய கைங்கரியத்தில் நமக்குண்டான பாகத்தை அடைந்து, நம்முடைய ஆசாரியர்களின் திருவடியின் கீழ் இருந்து அங்கே எம்பெருமானுடைய அநுபவத்தில் மகிழ்ந்து ஸ்திரமாய் இருப்போம். இதற்கு ஒருநாளும் மாறுதல் கிடையாது. அதாவது:- ஒரு நாளும் இந்த அநுபவத்தைவிட்டு ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வரமாட்டோம்.

குறிப்பு:— (1) ஹிதம் என்பது அநுகூலமான வியாபாரம். அதாவது:- நாம் செய்யும் பிரபத்தி. இதை வியாஜமாகக்கொண்டு நமக்குப் பரிபூர்ணமான தன்னுடைய அநுபவத்தை எம்பெருமான் கொடுக்கிறான் என்று கருத்து.

(2) 'நம் கூறு'- எம்பெருமானுக்கும் நமக்கும் இருக்கிற உறவாலே அவனுடைய கைங்கரியத்தில் நமக்கும் பாகம் உண்டு. எப்படி தகப்பனாருடைய ஸொத்தில் ஒவ்வொரு பிள்ளைக்கும் அவனுடைய உறவினாலேயே பாகம் உண்டோ, அப்படியே.

(3) 'குரை கழல்'- நம்முடைய ஆசாரியர்கள் விரோதிகளைக் கண்டித்து நல்ல மதத்தை உறுதிப்படுத்தி நம்மை எம்பெருமானிடம் சேர்த்ததால், அவன் ஸந்தோஷப்பட்டு அவர்களுடைய திருவடிகளில் தரிக்கும்படி ஒரு நகையைக் கொடுத்திருக்கிறான். அது சப்தித்துக் கொண்டிருக்கிறது.

23 ஸித்தோபாய சோதநாதிகாரம்.

இப்படி இருபத்திரண்டு அதிகாரங்களாலே மூன்று ரஹஸ்யங்கள் சொல்லுகிற ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் என்கிற இவைகளை விரிவாய்ச் சொல்லி, உபாயவிஷயமாய்ச் சிலர் செய்யும் அதிவாதங்களை நான்கு அதிகாரங்களால் கண்டிக்கிறார். அவைகளில் இந்த அதிகாரத்தில் எம்பெருமானுடைய ஸ்வபாவங்களைக் கொண்டு செய்யும் அதிவாதங்களைக் கண்டிக்கிறார்.

அவைகளாவன:— (1) எம்பெருமான் மிகுந்த கருணை உள்ளவன். அவன் ஸ்வதந்திரன். ஆகையாலே ஒருவனை எப்போது ரக்ஷிக்கவேண்டுமென்று எண்ணுகிறானோ, அப்பொழுது ரக்ஷிப்பன். அதற்காக நாம் ஒன்றையும் செய்யவேண்டாம்.

(2) நாம் எம்பெருமானுடைய ஸொத்து. அவன் ஸொத்துக்காரன். ஸொத்துக்காரன் தன் ஸொத்தைத் தானே ரக்ஷிப்பன். நாமோ தாயார் பால் குடிக்கிற குழந்தைகள் போல் இருக்கிறோம். ஆகையால் நம்மை ரக்ஷிக்கவேண்டுமென்று எம்பெருமானைப் பிரார்த்திப்பது நம்முடைய ஸ்வரூபத்திற்குப் பொருந்தாது.

(3) பிராட்டிக்கு நாம் செய்யும் பிரபத்தியில் ஸம்பந்தமில்லை. எம்பெருமான் ஒருவனே நம்முடைய கர்மங்களைப் போக்கி ரக்ஷிக்கிறான். நாம் செய்யப் போகும் கைங்கரியங்களிலே மாத்திரம் பிராட்டியும் எம்பெருமானும் உத்தேச்யர்கள்.

இந்த அதிவாதங்களுக்குக் கண்டனத்தையும் அவைகளுக்குப் பரிஹாரத்தையும் பாட்டாலே அருளிச் செய்கிறார்.

மன்னு மனைத்துறை வாய்மருண் மாற்றரு ளாழியுமாய்த்
தன்னினை வாலனைத் துந்தரித் தோங்கும் தனியிறையாய்
இன்னமு தத்த முதாலிரங் குந்திரு நாரணனே
மன்னிய வன்சரண் மற்றோர்பற் றின்றி வரிப்பவர்க்கே. (30)

(ப-வை.) மன்னும் - ஸ்திரமாயிருக்கும், அனைத்து உறவாய் - எல்லாவிதமான உறவாயும், மருள் மாற்று - அஜ்ஞாநத்தைப் போக்கும்படியான, அருள் ஆழியும் ஆய் - கருணை ஸமுத்திரமாய். தன் நினைவால் - தன்னுடைய ஸங்கல்பத்தாலே, அனைத்

தும் - எல்லாவற்றையும், தரித்து - தூக்கிக்கொண்டு, ஓங்கும் - விளங்குகிற, தனி இறையாய் - ஒப்பற்ற ஈசுவரனுயும், இன் அமுதத்து - இனிமையான திருப்பாற்கடலில் பிறந்த, அமுதால் - அமுதம் போல் போக்கியையான பிராட்டியின் சிபார்சைக்கேட்டு, இரங்கும் - தயை செய்கிறவனுயுமிருக்கிற, திரு நாரணனே - பிராட்டியோடு கூடிய நாராயணனே, மற்று ஓர் பற்று இன்றி - வேறு உபாயமில்லாமல், வரிப்பவர்க்கு - தன்னை உபாயமாகக் கேட்டுக் கொள்ளுபவர்களுக்கு, வன் சரண் - திடமான உபாயம்.

(கருத்து.) எம்பெருமான் எல்லாவிதமான உறவாயும், நம்முடைய அஜ்ஞாநத்தைப் போக்கும் கருணு ஸமுத்திரமாயும், தன்னுடைய ஸங்கல்பத்தாலே எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு நியமநம் செய்துகொண்டும் இருக்கிறுன். பிராட்டி நம்மைப்பற்றி சிபார்சு செய்ய அதற்கு இரங்குகிறுன். பக்தியாகிய உபாயமில்லாமல் வருத்தப்பட்டு, ரக்ஷிக்கவேண்டுமென்று பிரபத்திபண்ணுகிறவர்களுக்கு அவனும் பிராட்டியும் சேர்ந்தே உபாயமாய் இருக்கிறுர்கள்.

குறிப்பு:— (1) இந்தப் பாட்டில் முதல் இரண்டு அடிகளாலே எம்பெருமானுக்கும் நமக்கும் இருக்கும் உறவும், அவனுடைய கருணையும், அவன் ஸ்வதந்திரனுயிருப்பதும் சொல்லப்படுகின்றன. இதினுலே அதிவாதம் பண்ணுகிறவர்களுக்கு ஒரு காரணம் ஏற்படுகிறது.

(2) பின் இரண்டு அடிகளாலே அதிவாதங்களுக்குப் பதில் சொல்லப்படுகிறது. 'வரிப்பவர்க்கே' என்பதினுல் சரணுகதி பண்ணவேண்டுமென்றும், அதை வியாஜமாகக் கொண்டு எம்பெருமான் ரக்ஷிப்பன் என்றும் காட்டப்படுகிறது. இந்த வியாஜமில்லாவிட்டால் அவனுக்குப் பக்ஷபாதம் என்கிறகுற்றம் உண்டாகும்.

(3) 'திரு நாரணனே வன் சரண்' என்பதினுலே பிராட்டியோடு கூடிய எம்பெருமான் உபாயம் என்று காட்டப்படுகிறது. எம்பெருமான் மாத்திரம் உபாயமன்று.

(4) இப்படி உபாயமாய் இருப்பதுமன்றி பிராட்டி புருஷகாரமாயும் இருக்கிறுள். புருஷகாரமென்பது ஒருவன் ஒருவனுக்கு வேண்டியதைக்கொடுக்கும் சேதநன்முன்னுல் போவதற்கு உபாயமாயிருக்கிற இன்னெருசேதநன். பிராட்டி எம்

பெருமானிடத்தில் சிபார்சு செய்து பிரபத்தி செய்கிறவனை எம்பெருமான் முன்னாலே வரும்படிசெய்கிருள். ஆகையால் அவள் புருஷகாரம்.

(5) 'வன்சரண்' என்பதின் கருத்து- பக்தியோகஸ்தானத்திலிருந்து எம்பெருமானும் பிராட்டியும் அது செய்யும் வேலைகளைப் பிரபந்நனுக்குச் செய்து அவனை ரக்ஷிக்கிறுர்கள்— என்று.

24. ஸாத்திய உபாய சோதநாதிகாரம்

இப்படி ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றி யுண்டாகும் அதிவாதங்களுக்குப் பதில் சொல்லி, இந்த அதிகாரத்தில் பக்தி பிரபத்தி என்கிற உபாயங்களைப் பற்றிச் சொல்லும் அதிவாதங்களுக்குப் பரிஹாரங்களை அருளிச்செய்கிறுர்.

அந்த அதிவாதங்களாவன —

1. பிரபத்தியானது வேதத்தில் சொல்லப்பட்ட தர்மம். அதில் எல்லாருக்கும் அதிகாரம் இல்லை.

2. விச்வாஸமே பிரபத்தி—பிரார்த்தனையே பிரபத்தி—ஆகையாலே பரஸமர்ப்பணம் என்பது ஒன்று இல்லை.

3. (1) நாம் எம்பெருமானுக்குச் சேஷன் என்கிற ஞானமே போதும். ஆகையால் ஆத்மஸமர்ப்பணம் வேண்டியதில்லை. (2) 'சரணம் வ்ரஜ' என்பது விதியன்று. என்னை உபாயமாக அறி என்று அதன் பொருள். ஆகையால் ஒரு வாக்கியத்தால் உண்டாகும் ஜ்ஞானமே பிரபத்தி என்கிற உபாயம். (3) தன்னை ரக்ஷிக்கிற வியாபாரத்திலிருந்து தான் திரும்புவதே பிரபத்தி. (4) பிரபத்தியானது உபாயமாயிருந்தாலும், ஸஹகாரியாயிருந்தாலும், ஈச்வரனுடைய ஸ்வபாவத்திற்கு விரோதம். (5) பிரபத்தியை ஒருவன் தானே செய்வான்; ஆகையால் அதை விதிக்கவேண்டியதில்லை. விதித்துப் பிரயோஜநமில்லை.

4. பக்தியாகிற உபாயம் ஸ்வரூபத்திற்குப் பொருந்தாது. இதை மூன்று விதமாக விகல்பித்து என்ன விரோதமென்று கேட்கப்படுகிறது. (1) அது ஸ்வரூபத்தை நாசம் செய்கிறதா? (2) ஆத்மஸ்வரூபத்துக்கு வியாபாரம் இல்லையா? ஞானம், செய்யவேணுமென்கிற இச்சை, பிரயத்னம் ஆகிய கர்த்ருத்துவம் இல்லை என்று? (3) ஸ்வரூபத்திற்கு ஏதாவது கெடுதலைச் செய்கிறதா?

5. (1) பக்தியோகத்திற்கு வர்ணாசிரமதர்மங்கள் ஸஹகாரிகள் என்று சொல்லப்படுகின்றன. ஸ்வரூபத்தில் வர்ணமும் ஆச்ரமமும் இல்லை. அவைகளை எப்படிச் செய்யக்கூடும்? (2) உபாஸநத்திலும், அதின் அங்கங்களிலும் அஹங்காரம் கலந்திருக்கிறது. ஆகையால் அவைகளைச் செய்யக்கூடாது. (3) கர்மயோகம் முதலானவைகள் உடம்பாலும், இந்திரியங்களாலும் செய்யவேண்டியவைகள். அவைகள் கர்மமாகிய உபாதியால் வந்தவைகள், ஸ்வரூபத்தில் உபாதி இல்லை. ஆகையால் அதற்கு அவைகள் பொருந்தா. (4) பக்தியோகம் முதலானவைகள் தான் எம்பெருமானுக்குச் சேஷனாயிருப்பதற்கு அநுரூபமன்று. தான் பரதந்திரனாய் இருப்பதால் அவைகளைச் செய்யமுடியாது. (5) பிரபந்நன் பரமைகாந்தி, அதாவது எம்பெருமானைத்தவிர ஒருதேவதையையும் கனவிலும் நினைக்கமாட்டான். இந்திரன், அக்னி முதலான தேவதைகளின் பெயர்களையுடைய மந்திரங்களைச்சொல்லி அவன் எப்படி வர்ணதர்மங்களையும் ஆசிரமதர்மங்களையும் செய்கிறது. (6) பிரபத்தியில் ஒருவனுக்கு ருசிபிறப்பதற்காக பக்தி விதிக்கப்படுகிறது. அதை ஒருவன் செய்யவேண்டுமென்று கருத்து இல்லை. (7) பக்தியானது விதிக்கப்பட்டதேயாகிலும், அதை ஆசாரியர்கள் எடுத்துக்கொள்ளாததினாலே அது செய்யக்கூடாது. (8) கலியுகத்தில் பக்தியைச் செய்கிறவர்கள் துர்லபமாகையால் அது காலத்திற்குப் பொருந்தாது.

6. (1) அநுகூலனாய் இருப்பேன், பிரதிகூலனாய் இருப்பதை விட்டுவிடுவேன் என்பவைகள் பிரபத்திக்கு அங்கமன்று. (2) ஆஸ்திகனுக்கு சாஸ்திரத்தில் சொன்ன விஷயங்களில் விச்வாஸம் உண்டு. இதற்கு அதிகமாக மஹாவிச்வாஸமென்பது ஒன்று கிடையாது. (3) மஹாவிச்வாஸ விஷயத்தில் கேள்விகள் (4) பக்தியும் பிரபத்தியும் புத்திபேதத்தாலே விருத்தமானபலன்களைக் கொடுக்குமோ? (5) பக்தியைத் தினம் செய்யவேண்டியது. பிரபத்தியையோ ஒரே தடவை. அவை இரண்டும் ஒரே பலனை எப்படிக் கொடுக்கும்? (6) பிரபத்தி பண்ணுகிறவர்களுக்கு உபாயம் ஒரேவிதமானது, பலனும் ஒன்று, அப்படியிருக்க ஒருவனுக்குபலன் உடனேயும், மற்றொருவனுக்கு தாமதித்தும் எப்படி வரக்கூடும்? (7) எம்பெருமானை யாதானுமொருவன் பார்க்கிறான்,

மற்றவர்கள் பார்க்கிறதில்லை. இது எப்படி? (8) நாம் இப்போதே பார்க்கக்கூடிய பலனுக்காகச் செய்யும் பிரபத்தி சில வேளையில் பலனைக் கொடுக்கவில்லையே, ஏன்?

7. பிரபத்தியை ஒரேதடவை செய்வதாலே மோக்ஷம் கிடைக்கும்போது நாராயணனை எப்போதும் தியானம் செய்ய வேண்டியது என்கிற வசனத்திற்கு என்ன கதி?

அதிகாரத்தின் அர்த்தங்களைப் பாட்டாலே அருளிச் செய்கிறார்.

வரிக்கின் றனன்பரன் யாவரை யென்னு மறையதனில்
விரிக்கின் றதுங்குறி யொன்றால் வினையரை யாதலினும்
உரைக்கின்ற நன்னெறி யோரும் படிகளி லோர்ந்துலகம்
தரிக்கின்ற தாரக ஞர்தக வாற்றரிக் கின்றனமே. (31)

(ப-ரை)பரன் - எல்லாருக்கும் மேற்பட்ட எம்பெருமான், யாவரை - எவரை, வரிக்கின்றனன் - வரிக்கிறானோ என்று, மறையதனில் - வேதத்தில், விரிக்கின்றதும் - விஸ்தாரமாய்ச் சொல்லுகிறதுவும், வினையரை - கர்மங்களைச் செய்திருக்கிறவர்களை, குறியொன்றால் - ஒரு வியாஜத்தாலேதான், ஆதலில் - ஆகையாலே, நாம், உரைக்கின்ற - சாஸ்திரம் சொல்லுகிற, நல்நெறி - பக்தி பிரபத்தி என்கிற நல்ல உபாயங்களை, ஓரும்படிகளில் - சாஸ்திரம் சொல்லுகிறவிதமாகவே, ஓர்ந்து - அவைகள் உபாயங்கள் என்றும், அவைகளால் ஸந்தோஷப்படும் எம்பெருமானே முக்கியமான உபாயம் என்றும் தெளிந்து, உலகம் - உலகங்களை, தரிக்கின்ற - தூக்கிக்கொண்டும், தாரகனர் - ஜீவன்களை ஸம்ஸாரத்திலிருந்து வெளியே கொண்டுபோகும் எம்பெருமானுடைய, தகவால் - கருணையால், தரிக்கின்றனம் - பிழைத்திருக்கிறோம்.

(கருத்து) எம்பெருமான் எவனை வரிக்கிறானோ அவன்தான், அவனை அடையலாம் என்று வேதம் விஸ்தாரமாய்ச் சொல்லுகிறது. கர்மங்களைச்செய்து எம்பெருமானுடைய கோபத்திற்கு விஷயமாயிருக்கிற நம்மை வரிப்பது ஒரு வியாஜத்தாலே தான். அப்படியில்லாவிட்டால் எல்லாரையும் ரக்ஷிக்கும்படி நேரிடும். ஆகையால் சாஸ்திரம் விதிக்கிற பக்தி பிரபத்தி என்கிற உபாயங்களை அது சொல்லுகிற பிரகாரம் செய்தால், அவைகள் எம்பெருமானுடைய பிரஸாதத்தை உண்டுபண்ணுகின்றன,

நேரே உபாயமானது எம்பெருமான்தான் என்று தெளிந்து உலகத்தைத் தூக்கிக்கொண்டு ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கும் எம்பெருமானுடைய கருணையால் நாம் உஜ்ஜீவிக்கிறோம்.

25. பிரபாவ வியவஸ்தாதிகாரம்.

இப்படி இரண்டு அதிகாரங்களாலே உபாயவிஷயமான அதிவாதங்களைக் கண்டித்து, இந்த அதிகாரத்தில் பிரபத்திக்கு என்ன பெருமை இருக்கிறதோ, அதற்கு மேற்பட்டு அதுவிஷயமாய்ச் சொல்லும் அதிவாதங்களைக் கண்டிக்கிறார். அதிவாதங்களாவன:--

1. எம்பெருமானிடத்தில் பக்தியுள்ள எல்லாரும் ஒரேஜாதி.

2. பிரபந்நன் விஷயமான இரண்டு சுலோகங்கள்.

அந்த சுலோகங்களின் பொருள்- நாராயணன் ஒருவனையே நினைத்துக்கொண்டிருக்கிறவன் எந்த விருத்தியால் பிழைக்கிறானே, அது எம்பெருமானுடைய ஆராதனம்; அவன் எதைச் சொல்லுகிறானே, அது ஜபம்; அவன் எதைப் பார்க்கிறானே, அது தியானம்; அவன் காலில் பட்ட ஜலம் ஒப்பில்லாத தீர்த்தம்; அவனுடைய எச்சில் மிகுந்த பரிசுத்தியைக் கொடுப்பது; அவன் எது சொல்லுகிறானே, அது உயர்ந்த மந்திரம்; அவன் எதைத் தொடுகிறானே, அது சுத்தமாகிறது.

3. (1) சரமச்லோகத்தில் "எல்லா தர்மங்களையும் விடு" என்று சொல்லுகிறபடியாலே பிரபந்நன் எல்லா தர்மங்களையும் விட்டுவிட வேண்டியது. நிவிருத்திரூபமான தர்மத்தை விட வேண்டுமென்கிற வசனத்தினால் செய்யக்கூடாதென்கிற கார்யங்களையும் செய்யவேண்டியதென்று சொல்லப்படுகிறது. (2) பிரபந்நன் புத்திபூர்வமாக ஒரு பாபம் செய்தால் அது அவனிடம் ஒட்டாது.

(4) பாகவதனுடைய புத்திபூர்வமான பாபம் பொறுக்கப்படும்.

அதிகாரத்தின் அர்த்தத்தைப் பாட்டால் அருளிச்செய்கிறார்:-

தகவாற் றரிக்கின்ற தன்னடி யார்களைத் தன்றிறத்தில்
மிகவா தரஞ்செய்யு மெய்யருள் வித்தகன் மெய்யுரையின்
அகவா யறிந்தவ ராரண நீதி நெறிகுலைதல்
உகவா ரெனவெங்க டேசிக ருண்மை யுரைத்தனரே. (32

(ப-ரை) தகவால் - எம்பெருமானுடைய கருணையால், தரிக்கின்ற - பிழைத்திருக்கிற, தன் அடியார்களை-தன்னுடைய தாஸர்களை, தன் திறத்தில் - தன்னைப்போல் செய்வதில், மிக ஆதரம் செய்யும் - மிகுந்த பிரீதிபண்ணும், மெய் அருள் - பழுதில்லாத கருணையையுடைய, வித்தகன் - ஆச்சரியமான வேலைகளைச் செய்யும் எம்பெருமானுடைய, மெய் உரையின் - உண்மையான சொல்லாகிய சரமச்லோகத்தின், அகவாய் - உட்கருத்தை, அறிந்தவர் - அறிந்தவர்களான வியாஸர் முதலானவர்கள், ஆரணம் நீதி நெறி - உபநிஷத்துக்களில் சொல்லிய தர்மமார்க்கமானது, குலைதல் - கெட்டுப்போவதை, உகவார் - ஒப்புக்கொள்ளமாட்டார்கள், என - என்று, எங்கள் தேசிகர் - நம்முடைய ஆசாரியர்கள், உண்மை உரைத்தனர் - சரமச்லோகத்தின் உண்மையான அர்த்தத்தைச் சொல்லிக்கொடுத்தார்கள்.

(கருத்து) எம்பெருமானுடைய கருணை ஒருபோதும் வீணாகிறதில்லை. அவனுடைய உண்மையான சொல்லாகிற ஸ்ரீகீதையின் கடைசி ச்லோகத்தினுடைய உட்கருத்தை அறிந்த வியாஸர் முதலான பெரியோர்கள் வேதாந்தத்தில் சொல்லப்படுகிற தர்மமார்க்கமானது கெட்டுப்போவதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று அந்த ச்லோகத்தின் ஸரியான அர்த்தத்தை நம்முடைய ஆசாரியர்கள் நமக்கு உபதேசித்திருக்கிறார்கள். அந்த எம்பெருமான் எப்படியிருக்கிறான் என்றால்:-- அவனுடைய கருணையைக் கொண்டு பிழைத்திருக்கும் தன்னுடைய தாஸர்களைத் தன்னைப்போல் செய்து அவர்களிடத்தில் மிகவும் பிரீதி செய்கிறவன். ஆகையால், அவனுடைய வசநமானது உண்மையானதென்று நம்பலாம்.

குறிப்பு:-(1) ஸ்ரீகீதையின் கடைசி ச்லோகத்தின் உட்கருத்தை வியாஸர் முதலான பெரியோர்கள் நன்றாய் அறிந்தவர்கள். அவர்களுடைய மதத்திற்குக் கீழ்சொன்ன அதிவாதங்கள் விருத்தங்களாகையால் அவைகளை ஒருவரும் ஒப்புக்கொள்ளக் கூடாது என்று கருத்து.

(2) அந்தப் பெரியோர்கள் சொன்னபடி உண்மையான அர்த்தத்தை நம்முடைய ஆசாரியர்கள் சொல்லிக்கொடுத்திருக்கிறபடியாலே நம்முடைய ஸம்ப்ரதாயமே ஸரியானது என்றும் கருத்து.

(3) எம்பெருமானுடைய கருணையினாலே பிழைத்திருப்பதாவது:- அந்தக் கருணையை நம்பி அவனிடத்தில் பிரபத்தி செய்வது.

(4) "தன்னைப் போல் செய்து" என்று உரையில் சொன்னதற்குத் தன்னைப்போல் அபஹதபாப்மத்வம் முதலான எட்டு குணங்களை யுடையவனாகச் செய்கிறது என்று பொருள். இப்படி அதிகம் பிரீதியை எம்பெருமான் செய்கிறான். இதற்கு வேறு விதமாகவும் பொருள் சொல்லலாம்— எம்பெருமான் தனக்கு எவ்வளவு மஹிமை இருக்கிறதோ, அதைக்காட்டிலும் அதிக மஹிமையுள்ளவர்களிடத்தில் போல் பிரபந்நர்களிடத்தில் மிகுந்த பிரீதி பண்ணுகிறான்.

(5) இப்படி எம்பெருமானுடைய ஸ்வபாவம் இருப்பதால் தன்னிடத்தில் பிரபத்தி பண்ணின அர்ஜுநனுக்கு உண்மையையே சொல்லவேண்டியவன். ஆகையால் ஸ்ரீ கீதை முழுவதையும் அதின் கடைசி சுலோகத்தையும் மெய் உரை என்று சொல்லலாம்.

26. பிரபாவ ரக்ஷாதிகாரம்.

இப்படி பிரபத்திக்குள்ள மஹிமைக்கு மேல் அதிக மஹிமையுள்ளதாகச் சொல்லும் அதிவாதங்களைக் கண்டித்து, அதன் பெருமையைக் குறைக்கிறவர்கள் சொல்லும் தூஷணங்களுக்குப் பரிஹாரத்தை இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

அந்த தூஷணங்களாவன:—

(1) பிரபந்நனுக்கு எம்பெருமான் ஏன் துக்கத்தை உண்டுபண்ணுகிறான்? (1) துக்கம் கலப்பில்லாத ஸுகத்தை ஏன் கொடுக்கவில்லை? (2) பிரபத்தி பண்ணின காகாஸுரனுடைய ஒரு கண்ணை ஏன் சக்கிரவர்த்தி திருமகன் அழித்துவிட்டான். (3) பிரபத்தியானது ஒரு க்ஷணத்தில் செய்யப்படுகிறது, அது அளவில்லாத ஆநந்தமாகிய பலனை எப்படிக் கொடுக்கக்கூடும்? இவைகளுக்குப் பரிஹாரங்கள் சொல்லப்பட்டன.

(2) மேலே சொல்லப்பட்ட விஷயங்கள்— பாகவதர்கள் ஒரு கால் பணத்தில் ஆசையுள்ளவர்களாயும், பஞ்சஸம்ஸ்காரங்களில்

ஏதேனும் ஒன்று இல்லாதவர்களாயும், கெட்டநடவடிக்கை உள்ளவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் விஷயத்தில் மரியாதைக் குறைவைச் செய்யக்கூடாது. நம்முடைய மதத்தின் உண்மையை உள்ளபடி அறிந்து அதை எப்போதும் நினைத்துக்கொண்டு கர்ம பந்தத்திலிருந்து எப்போது நாம் விடுபடுவோம் என்று பரபரப்புள்ளவர்களாய், எம்பெருமானிடத்தில் மனது படிந்து மோக்ஷோபாயம்ஒன்றில் இரங்கினவர்கள் பாகவதர்கள்.

(3) பாகவதனுயில்லாமல் பாகவதன்போல் தன்னைக் காட்டுகிறவனை அவனுடைய உண்மையான தன்மையை நாம் அறிகிற வரையில் அவனிடத்தில் பிரீதி பண்ணவேண்டியது.

(4) எம்பெருமானிடத்தில் த்வேஷம் இல்லாதிருந்தால் மாத்திரம் அவனுடைய நாமங்களைக் கீர்த்தனம்செய்வது பாபத்தைப் போக்கும். த்வேஷமுடைய சிலர் மோக்ஷமடைந்தது அவர்களுடைய முன் செய்த புண்ணியத்தினுலே. அவர்கள் விசேஷ அதிகாரிகள்.

(5) எம்பெருமானுக்குப் பிரதிகூலனுய் இல்லாதிருந்தால் மாத்திரம் ஒருவனுக்குத் திவ்யதேசத்திலிருப்பது நல்லகதியைக் கொடுக்கும். இந்த இரண்டு விஷயங்களுக்கு நேரே இந்த அதிகாரத்தில் ஸம்பந்தமில்லாவிட்டாலும் பிரஸங்கத்தினுலே அவைகளின் நினைவு வந்தது. அவைகளை விடக்கூடாதென்று ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்கிறுர்.

இரண்டாவது பிரிவில் சொன்ன ஸங்கதியைப் பாட்டாலே அருளிச்செய்கிறுர்.

உண்மை யுரைக்கு மறைகளி லோங்கிய வுத்தமனுர்
வண்மை யளப்பரி தாதலின் வந்து கழல்பணிவார்
தண்மை கிடந்திடத் தரமள வென்ன வியப்பிலதாம்
உண்மை யுரைத்தன ரோரந் தவிர வுயர்ந்தனரே. (33)

(ப-ரை.) உண்மை உரைக்கும் - உண்மையான விஷயங்களையே சொல்லும், மறைகளில் - உபநிஷத்துக்களில், ஓங்கிய - விளங்குகிற, உத்தமனுர் - புருஷோத்தமன் என்று சொல்லப்பட்ட எம்பெருமானுடைய, வண்மை - பெருமையை, அளப்பு அரிது - இவ்வளவென்று எண்ண முடியாது. ஆதலின் - ஆகையால், வந்து கழல் பணிவார் - அவனிடம் வந்து அவனுடைய திருவடிகளில்

நமஸ்காரம் பண்ணுகிறவர்களிடத்தில், அதாவது பிரபத்தி பண்ணுகிறவர்களிடத்தில், தண்மை - தாழ்ச்சியானது, கிடந்திட - இருந்தபோதிலும், தரம் - அவர்களுடைய பெருமை, அளவு என்ன - இவ்வளவென்று, வியப்பு இலதாம் - சொல்லமுடியாததான, உண்மை - உண்மையை, உயர்ந்தனர் - உயர்ந்த நம்முடைய ஆசாரியர்கள், ஓரம் தவிர - பக்ஷபாதமில்லாதபடி, உரைத்தனர் - உபதேசித்திருக்கிறார்கள்.

(கருத்து.) எம்பெருமானிடம் வந்து அவன் திருவடிகளில் பிரபத்தி பண்ணுகிறவர்களிடத்தில் ஏதாவது தாழ்ச்சி யிருக்கலாம். ஆனபோதிலும் அவர்களுடைய பெருமைக்கு இவ்வளவு அளவு என்று சொல்லமுடியாது. இந்த உண்மையான விஷயத்தை உயர்ந்த நம்மாசாரியர்கள் பக்ஷபாதம் போகும்படி நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். எம்பெருமான் எப்படிப்பட்டவனென்றால் உண்மையான விஷயங்களையே சொல்லுகிற வேதத்தில் எல்லாருக்கும் மேற்பட்டவனாகச் சொல்லப்பட்டவன். அவனே புருஷோத்தமன். அவனுடைய பெருமையை இவ்வளவென்று அளவிடமுடியாது. ஆகையால் ஒரு க்ஷணத்தில் செய்கிற பிரபத்திக்கு அளவில்லாத ஆநந்தமாகிய பலனை எம்பெருமான் கொடுக்கலாம். எம்பெருமான் நமக்கு ஹிதமாகச் செய்வதை நம்மால் அறியமுடியாது. அதை அறியாமல் தூஷணம் செய்வது பிசகு.

குறிப்பு:- (1) தாழ்ச்சியாவது மேலே இரண்டாவது பிரிவில் சொன்னபடி பணத்தில் ஆசையுள்ளது முதலானவைகள். அவைகளுக்கு எம்பெருமான் எப்படியாவது பரிஹாரம் செய்து அவர்களின் குறைவை நீக்கிவிடுவான்.

(2) பாட்டில் "உயர்ந்தவர்" என்கிற சொல்லாலே வியாஸர் முதலானவர்களைக் காட்டிலும் நம்முடைய ஆசாரியர்கள் உயர்ந்தவர் என்று காட்டப்படுகிறது.

(3) ஓரம்- பக்ஷபாதம், அதாவது- இவன் குறைவில்லாத பாகவதன், இவன் குறைவுள்ள பாகவதன் என்று இவர்களைப் பிரித்து ஒருவனிடம் கௌரவமும் மற்றொருவனிடம் அலக்ஷியமும் பண்ணுவது. இதை நாம் செய்யக்கூடாதென்று அவர்களுடைய மஹிமையை நம் ஆசாரியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

---

27. மூலமந்திராதிகாரம்.

இப்படி இருபத்திரண்டு அதிகாரங்களாலே மூன்று ரஹஸ்யங்கள் காட்டுகிற ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் என்கிற இவைகளை விரிவாய்ச் சொல்லி, மேல் நான்கு அதிகாரங்களாலே உபாயவிஷயத்தில் சொல்லும் அதிவாதங்களைக் கண்டித்து, மேல் மூன்று அதிகாரங்களாலே மூன்று ரஹஸ்யங்களுடைய அர்த்தத்தை விரிவாய் அருளிச்செய்கிறார். அவைகளில் மூல மந்திரத்தின் அர்த்தத்தை இந்த அதிகாரத்தில் அருளிச்செய்கிறார்.

அதில் சொல்லிய விஷயங்கள்:— (1) இந்த மந்திரத்தில் மூன்று சொற்களிருக்கின்றன. பிரணவம் என்று சொல்லப்பட்ட முதல் சொல் முழுவதற்கும் ரக்ஷகன் என்று அர்த்தம். அதின் எழுத்துக்களைப் பிரிக்கும்போது முதல் எழுத்திற்கு உலகத்தை உண்டுபண்ணி அதை எல்லாவிதத்தாலும் ரக்ஷிக்கும் எம்பெருமான் என்று பொருள். 'அ' என்கிற எழுத்திலிருந்து எல்லா எழுத்துக்களும் உண்டாவது போல், உலகம் முழுவதும் எம்பெருமானிடமிருந்து உண்டாகிறது. ஆகையால் அந்த எழுத்து அவனைச் சொல்லுகிறது. ரக்ஷிக்கிறது என்கிற பொருளுள்ள 'அவ' என்கிற தாதுவிலிருந்து அது உண்டாயிருக்கிறபடியால், அதற்கு ரக்ஷிக்கிறவன் என்று பொருள். இன்னாரை ரக்ஷிக்கிறது, இன்ன விதமாய் ரக்ஷிக்கிறது என்று சொல்லாமையால், எல்லாரையும் எல்லா விதத்தாலும் ரக்ஷிக்கிறவன் என்கிற அர்த்தம் கிடைக்கிறது. இதன் கடைசியில் நான்காவது வேற்றுமை உருபு இருந்து தொக்கியிருப்பதால், அந்த எழுத்துக்கு இப்படிப்பட்ட எம்பெருமானுக்காக என்று பொருள்.

(2) மூன்றாவது எழுத்திற்கு ஜீவன் என்றும், ஜ்ஞான் என்றும் பொருள். மகரம் வடமொழியில் ககரம் முதல் இருபத்தைந்தாவது எழுத்தாயிருக்கிறபடியாலும், ஜீவன் இருபத்தைந்தாவது தத்துவமாக இருக்கிறபடியாலும், மகரம் ஜீவனைச் சொல்லுகிறது. மேலும் அளவைக்காட்டுகிற மஸ் என்கிற தாதுவிலிருந்தும் ஞானத்தைக்காட்டும் 'மந' என்கிற தாதுவிலிருந்தும் இதுஉண்டாகிறது. ஆகையால் அதற்கு ஜீவனுடைய ஸ்வரூபம் அணுவென்றும், அவன் தானும் தோன்றுகிறவனென்றும், ஜ்ஞானமென்கிற

குணமுடையவனென்றும் காட்டப்படுகிறது. ஆகையால் உடம்பு, இந்திரியங்கள், பிராணன் ஆகிய இவைகளைக் காட்டிலும் ஜீவன் வேறு. அவன் அணுவாயிருப்பதால் எங்கும் நிறைந்திருக்கிற எம்பெருமானைக் காட்டிலும் வேறு என்று ஏற்படுகிறது. மேலும் 'அஸ்மத்' என்கிற சொல்லிலிருந்து முன்னாலே இருக்கிற அஸ் என்பதையும், பின்னாலே இருக்கிற அத் என்பதையும் விட்டு விட்டால் ம என்கிற எழுத்து மீருகிறது. அப்போது அதற்கு நான் என்று பொருள்.

(3) இரண்டாவது எழுத்தான 'உ' என்பதற்குப் பொருள் தேற்றம். அப்பொழுது உலகத்தை உண்டுபண்ணி ரக்ஷிக்கிற எம்பெருமானுக்காக நான் இருக்கிறேன், வேறு ஒருவனுக்காக இருக்கவில்லை என்று பொருள். 'உ' என்கிற எழுத்து பிராட்டியையும் சொல்லும். அப்போது இந்தச்சொல்லுக்கு எம்பெருமானுக்காகவும் பிராட்டிக்காகவும் நான் இருக்கிறேன் வேறு ஒருவனுக்காக இருக்கவில்லை என்று பொருள். இப்படி இருக்கிறவனைச் சேஷன் என்றும், சேஷன் எவனுக்காக இருக்கிறானோ, அவனைச் சேஷி என்றும் சொல்லுகிறது. எம்பெருமானும் பிராட்டியும் சேர்ந்து ஜீவனுக்குச் சேஷி அவர்கள் தனித்தனியாய் சேஷி அன்று.

(4) நம: என்கிற இரண்டாவது சொல்லுக்கு முழுவதற்கும் பிரபத்தி என்றும், அதன் பலனான சேஷியினுடைய வ்ருத்தி என்றும் பொருள். அந்தச் சொல்லின் எழுத்துக்களைப் பிரித்துப் பார்க்கும்போது, ந என்பதற்கு இல்லை என்றும், ம: என்பதற்கு எனக்கு (மம) என்றும் பொருள். ஆகவே இந்த சொல்லுக்கு எனக்கு இல்லை என்று பொருள். இல்லாதது இன்னதென்று சொல்லாவிட்டாலும், ஸ்வதந்திரனாயிருப்பது எனக்கு இல்லை என்றும், நான் எம்பெருமானுக்கு உட்பட்டவன் என்றும் பொருள். ஒரு வண்டியில் பூட்டின மாடு வண்டிக்காரனுக்கு உட்பட்டு இருப்பதுபோல், உடம்போடு சேர்க்கப்பட்டிருக்கிற ஜீவன் எம்பெருமானுக்கு உட்பட்டவன்.

(5) நாராயண என்கிற சொல் நார + அயன என்கிற இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு சொல். நார என்பது நாசமில்லாதவன் என்கிற பொருளைச் சொல்லி, ஸ்வரூபத்தில் மாறுதலில்லாத எம்

பெருமானையும் ஜீவனையும் சொல்லுகிறது. அது எம்பெருமானைச் சொல்லும்போது நார என்பதற்கு எம்பெருமானிடமிருந்து உண்டான தத்துவங்கள் என்றும், நரனுடைய ஸொத்துக்கள் என்றும் பொருள். இந்த ஸொத்துக்களில் எம்பெருமானுடைய திருமேனியும், மேன்மையான குணங்களும், இரண்டு விபூதிகளும் அடங்கி இருக்கின்றன. ஜீவன்கள் எம்பெருமானுடைய விபூதியாகையால் அவர்கள் அவனுடைய ஸொத்து, இதனாலும் அவர்கள் எம்பெருமானுக்குச் சேஷபூதர்கள் என்று காட்டப்படுகிறது. நர என்கிற சொல் ஜீவனைச் சொல்லும்போது நார என்பதற்கு ஜீவர்களுடைய கூட்டம் என்று பொருள். இதனாலே ஜீவன்கள் அநேகம் பேர்கள் என்று காட்டப்படுகிறது.

(6) அயநம் என்கிற சொல்லுக்கு ஆதாரம் என்றும், ஒருவன் அடையவேண்டிய வஸ்துவென்றும், அதை அடைவதற்கு ஸாதநமென்றும் பொருள். நார என்பதற்கு எம்பெருமானிடமிருந்து உண்டாகும் தத்துவங்கள் என்றும் அவனுடைய ஸொத்துக்கள் என்றும்பொருளாகும்போது அயநம் என்பதற்குஆதாரமென்று பொருள். அப்போது எல்லா தத்துவங்களுக்கும் ஆதாரமானவன் என்று முழுச்சொல்லுக்கும் பொருள். நார என்பதற்கு ஜீவன்கள் கூட்டமென்று பொருளாகும்போது அயநம் என்கிற சொல்லுக்கு மற்ற இரண்டு பொருள்களும் வரும். அப்போது முழுச் சொல்லுக்கும் ஜீவன்கள் அடைய வேண்டிய புருஷார்த்தமென்றும், அதை அவர்களுக்குக் கொடுக்கும் உபாயமானவன் என்றும் பொருள். இதுவன்றியில் நாரங்கள் எவனுக்கு ஆதாரம், அதாவது:— இருப்பிடம் என்று பொருளாகி எம்பெருமான் எல்லாவற்றிலும் இருப்பதைச் சொல்லும். ஆகையினாலே உலகவழக்கப்படி அறிவில்லாதவைகளையும், அறிவுள்ள ஜீவன்களையும் சொல்லும் சொற்கள் எல்லாம் எம்பெருமானையே சொல்லுகின்றன.

(7) நாராயண என்கிற சொல்லுக்குக் கடைசியில் இருக்கும் நான்காம் வேற்றுமையுருபுக்கு நாராயணனுக்காக என்று பொருள். அது முதல் சொல்லாலே கிடைக்கிறபடியால், சேஷனாயிருப்பதற்குப் பலனான கைங்கர்யம் அதற்குப் பொருள் என்றுகொள்ள வேணும்.

(8) முதல் சொல்லில் தொக்கியிருக்கிற நான்காம் வேற்றுமை உருபாலும் நடுவில் இருக்கிற உ என்கிற எழுத்தாலும் ஜீவன் எம்பெருமானுக்குச் சேஷனாயிருப்பதும், இரண்டாவது சொல்லாலே அவனுக்கு உட்பட்டிருப்பதும், மூன்றாவது சொல்லில் நார என்கிற சொல்லாலே அவனாலே தாக்கப்படுகிறதுவும் சொல்லப்படுகிறபடியாலே ஜீவன் எம்பெருமானுக்குச் சரீரம் (உடம்பு) என்று காட்டப்படுகிறது. சரீரமென்பது ஒரு அறிவுள்ளவனாலே தாக்கப்பட்டு, அவனால் ஏவப்பட்டு, அவனுக்காக இருப்பதான ஒரு திரவியம், இந்த லக்ஷணப்படி ஜீவன்களும் அறிவில்லாத வஸ்துக்களும் எம்பெருமானுக்குச் சரீரம். (உடம்பு) எம்பெருமான் அவைகளுக்கு ஆத்மா. இப்படி ஜீவனுடைய ஸ்வரூபம் சொல்லப்படுகிறது. நமஸ் என்கிற இரண்டாம் சொல்லால் பிரபத்தி என்கிற உபாயம் காட்டப்படுகிறது. அயநம் என்கிற சொல்லானது ஸித்தோபாயமான எம்பெருமானைக் காட்டுகிறது. நாராயண என்கிற சொல்லில் அயநம் என்பதாலும், அதன் கடைசியிலிருக்கிற நான்காம் வேற்றுமை உருபாலும் புருஷார்த்தமான எம்பெருமானும் அவனுடைய கைங்கரியமும் காட்டப்படுகிறது.

இந்த மூன்று சொற்களையும் ஒரு வாக்கியமாகவும், இரண்டு வாக்கியங்களாகவும், மூன்று வாக்கியங்களாகவும் சேர்த்துப் பொருள் சொல்வதுண்டு. அவைகளாவன:—

(1) ஒரு வாக்கியமாகும்போது பிரணவத்தினாலே சொல்லப்பட்ட ஸ்வபாவத்தை யுடைய நாராயணனுக்கு நம: என்று பொருள். நம: என்பதற்கு பிரபத்தி பொருளாகையால் பிரபத்தி என்கிற உபாயம் சொல்லப்படுகிறது.

(2) நம: - என்பதற்கு சேஷ விருத்தி பொருளாய், அது இங்கே வேண்டப்படுகிறது.

(3) இரண்டு வாக்கியமாகும்போது நான் (ம்), அ என்கிற எழுத்தாலே சொல்லப்பட்ட நாராயணனுக்காகவே இருக்கிறேன். நான் எனக்குச் சேஷன் அல்ல. வேறு ஒருவனுக்கும் சேஷன் அல்ல. இப்படி ஸ்வரூபம் சொல்லப்படுகிறது.

(4) ஆத்மாவாகிற ஹவிஸ்ஸானது (ம்), அகரத்தால் சொல்லப்பட்ட நாராயணனுக்காகவே பரமாகவே(சுமையாகவே)கொடுக்

சப்படுகிறது. இந்த விஷயத்தில் எனக்குப் பரமில்லை; எனக்கு ஸ்வாதந்திரியமில்லை; அல்லது வேறு ஒருவனுக்கும் பரமன்று; எனக்குமன்று. இப்படியாகும்போது அங்கங்களோடு கூடிய பிரபத்தியாகிய உபாயம் சொல்லப்படுகிறது.

(5) நான் அகாரத்தாலே சொல்லப்பட்ட நாராயணனுக்காகவே இருக்கவேண்டும். நான் எனக்காக இருக்கவேண்டாம்—அதாவது நான் எம்பெருமானுக்காகவே இருக்கிறேன். அவனுக்கு வேலை செய்து அவனை ஸந்தோஷப்படுத்தவேணும்— என்னுடைய ஸந்தோஷத்திற்காக நான் இருக்கவேண்டியதில்லை. இதனாலே இஷ்டமில்லாதது விலகுவதும், இஷ்டமான கைங்கரியம் கிடைப்பதும் சொல்லப்படுகின்றன.

(6) மூன்று வாக்கியமாகும்போது, நான் எம்பெருமானுக்காகவே இருக்கிறேன்; எனக்காக இருக்கவில்லை; எம்பெருமானுடைய கைங்கரியம் எனக்கு வேண்டும். இதில் முதல் இரண்டு வாக்கியங்களாலே ஸ்வரூபமும், மூன்றுவது வாக்கியத்தாலே புருஷார்த்தமும் சொல்லப்படுகின்றன.

(7) நான் எம்பெருமானுக்காகவே இருக்கிறேன்; எனக்கு அவித்யை, கர்மம், வாஸனை, பிரகிருதி ஸம்பந்தம் இவைகள் போகவேண்டும்; எம்பெருமானுடைய கைங்கரியம் வேண்டும். இதில் முதல் வாக்கியத்தால் ஸ்வரூபமும், இரண்டாவது வாக்கியத்தால் அநிஷ்டம் போவதும், மூன்றுவது வாக்கியத்தால் இஷ்டம் வருவதும் சொல்லப்படுகின்றன.

(8) நான் எம்பெருமானுக்காகவே இருக்கிறேன்; எனக்கு அநிஷ்டம் போகவேண்டும்; இஷ்டமான கைங்கரியம் வரவேண்டியது. முதல் வாக்கியம் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. மற்ற இரண்டாலும் கோப்த்ருத்வம் சொல்லப்பட்டபோதிலும் அந்த வழியாய் உபாயம் சொல்லப்படுகிறது. கோப்த்ருத்வம் பக்தனுக்கும் பிரபந்நனுக்கும் பொதுவாயிருப்பதினால் பிரபத்தி பண்ணுகிறவனுக்கு அது பிரபத்தியாகிய உபாயத்தையே சொல்லுகிறது.

(9) நான் நாராயணனுடைய பரமாகக்கொடுக்கப்படுகிறேன்; எனக்கு அநிஷ்டம் போகவேண்டும்; இஷ்டம் வரவேண்டும். இதில் முதல் வாக்கியம் உபாயத்தையும், மற்ற இரண்டும் புருஷார்த்தத்தையும் சொல்லுகின்றன.

(10) நான் நாராயணனுக்காகவே இருக்கிறேன்; என்னை ரக்ஷிக்கிற பரம் என்னுடையதன்று; நாராயணனுடைய கைங்கர்யம் வேண்டும். இதில் முதல் வாக்கியம் ஸ்வரூபத்தையும், இரண்டாவது உபாயத்தையும், மூன்றுவது புருஷார்த்தத்தையும் சொல்லுகின்றன.

கீழே சொன்ன பத்து யோஜனைகளில் கடைசி யோஜனையே ஸ்ரீ தேசிகனுல் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த யோஜனையைப் பாட்டாலே அருளிச்செய்கிருர்:—

உயர்ந்த நங்காவல னல்லார்க் குரிமை துறந்துயிராய்
மயர்ந்தமை தீர்ந்து மற்ருேர் வழியின்றி யடைக்கலமாய்
பயந்தவந் நாரணன் பாதங்கள் சேர்ந்து பழவடியார்
நயந்த குற்றேவ லெல்லா நாடுநன் மனுவோதினமே. (34)

(ப-ரை) உயர்ந்த நம் காவலன் அல்லார்க்கு - நம்முடைய ரக்ஷகனுகிய எம்பெருமானைக் காட்டிலும் வேருனவர்களுக்கு, உரிமை - சேஷமாயிருக்கிருேம் என்கிற எண்ணத்தை, துறந்து - விட்டு, உயிராய் - உடம்பு முதலானவைகளைக் காட்டிலும் வேருனவர்களென்று நம்மையறிந்து, மயர்ந்தமை தீர்ந்து-உடம்போடு ஆத்மாவைச் சேர்த்து உடம்பே ஆத்மா என்கிற எண்ணம் போய், மற்று ஓர் வழியின்றி - பக்தியாகிய வேறு உபாயத்தில் சக்தியில்லாமல் வருத்தப்பட்டு, அடைக்கலம் ஆய் - எம்பெருமானுல் ரக்ஷிக்கவேண்டிய ஸொத்தாய் அவனிடம் கொடுக்கப்பட்டு, பயந்த - உலகத்தையுண்டுபண்ணின, அ நாரணன் - அந்த நாராயணனுடைய, பாதங்கள் - திருவடிகளை, சேர்ந்து, பழ அடியார் - பழமையான நித்தியஸூரிகள், நயந்த-ஆசைப்பட்டுச் செய்கிற, குற்றேவல் எல்லாம் - கைங்கரியங்களையெல்லாம், நாடும்- பிரார்த்திப்பதைச் சொல்லுகிற, நல் மனு - நல்ல மந்திரத்தை, ஓதினமே. ஆசாரியர்களிடத்தில் தெரிந்துகொண்டோம்.

(கருத்து)எம்பெருமான் உலகத்தை உண்டுபண்ணுகிறவனுகையாலே ஒப்பில்லாமல் உயர்ந்த நம்முடைய ரக்ஷகன்; அவனைத்தவிர மற்றவர்களுக்குச்சேஷமாயிருக்கிற உறவைப்போக்கி உடம்புமுதலானவைகளைக்காட்டிலும் வேருன ஆத்மாவாய், உடம்போடு ஆத்மாவைச்சேர்த்துஉடம்பே ஆத்மாஎன்கிற எண்ணம் போய், பக்தியாகியஉபாயத்தில் சக்தியில்லாமல் வருத்தப்பட்டு,ரக்ஷிக்கும்பரம்

எம்பெருமானுடையதாய்க் கொடுக்கப்பட்டு, உலகத்தை உண்டு பண்ணினவனை நாராயணனுடைய திருவடியை உபாயமாகப் பற்றி, வைகுந்தத்திலிருக்கும் நித்தியஸூரிகள் பிரீதியுடனே செய்யும் எல்லாவிதங்களான கைங்கரியங்களைப் பிரார்த்திக்கும் விதத்தைச்சொல்லுகிற நல்ல மந்திரத்தை ஆசாரியர்களிடம் நாம் கேட்டோம்.

குறிப்பு:- (1) 'உயர்ந்த, காவலன்' என்கிற இரண்டு சொற்களால் மந்திரத்தின் முதல் சொல்லின் முதல் எழுத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது.

(2) 'அல்லார்க்கு உரிமை துறந்து' என்பதற்கு எம்பெருமானுக்கு அல்லாமல் நமக்கே சேஷம் என்றும், மற்றவர்களுக்குச் சேஷம் என்றும் எண்ணின தப்பெண்ணம் போய் என்று பொருள். எம்பெருமானுக்குச்சேஷம் என்பதினால் முதல்எழுத்தின் மேலே இருந்த நான்காம் வேற்றுமையின் அர்த்தமும், வேறு ஒருவருக்கும் இல்லை என்பதினால் இரண்டாவது எழுத்தின் பொருளும் சொல்லப்படுகின்றன. இவைகளாலே பிரணவம் என்கிற முதல் சொல்லின் பொருள் காட்டப்படுகிறது.

(3) உயிராய் என்பதினாலே 'ம'என்கிற எழுத்தின் பொருள் சொல்லப்படுகிறது. கீழே சொன்னபடி 'ம' என்கிற எழுத்துக்கு ஜீவனுடைய ஸ்வரூபம் என்றும், அது ஸ்வயம்பிரகாசமென்றும், அவன் ஜ்ஞானமாகிய குணமுடையவன் என்றும் காட்டுகிறபடியால் அவன் உடம்பு முதலானவைகளைக் காட்டிலும் வேறு என்றும், அவன் ஆத்மாவென்றும் காட்டப்படுகிறது. உயிர் — ஆத்மா.

(4) 'மயர்ந்தமை' என்பது அஜ்ஞானம்; அது உடம்பை ஆத்மாவாகவும், உடம்பைச் சேர்ந்தவர்களை ஆத்மாவைச் சேர்ந்தவர்களாகவும் எண்ணின அஹங்கார மமகாரங்கள். ஆத்மாவினுடைய உண்மையான ஸ்வரூபம் அறியப்பட்டபடியால் அவைகள் போயிற்று என்று கருத்து.

(5) ஓர் வழியின்றி என்பதினால் பக்தியோகம் செய்யும் திறமையில்லாமையால் அந்த உபாயம் இல்லை என்று சொல்லி, அகிஞ்சந்யம் என்கிற அதிகாரம் சொல்லப்பட்டது. இது இரண்டாவது சொல்லின் பொருள்.

(6) அடைக்கலமாய் என்பதினால் ரக்ஷிக்கிற பரமானது எம்பெருமானிடத்தில் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுகிற படியால், பிரபத்தியாகிய ஸாத்திய உபாயம் சொல்லப்படுகிறது. இதுவும் இரண்டாவது சொல்லின் பொருள்.

(7) பயந்தவன் என்கிற சொல்லாலே நரனிடத்தில் உண்டானவைகள் என்று பொருளான நார என்கிற சொல்லின் அர்த்தம் சொல்லப்படுகிறது.

(8) 'பாதங்கள் சேர்ந்து' என்கிற சொல்லினால் எம்பெருமானுடைய திருவடிகளை உபாயமாகப்பற்றி என்று பொருளைச் சொல்லி அயனம் என்கிற சொல்லாலே சொல்லப்பட்ட ஸித்தோபாயம் சொல்லப்படுகிறது.

(9) 'குற்றேவலெல்லாம்' என்பதினாலே நித்தியஸூரிகள் செய்கிற எல்லாவிதமான கைங்கரியங்கள் சொல்லப்படுகின்றன. இது மூன்றாவது சொல்லின் மேலேயிருக்கும் நான்காம் வேற்றுமையின் பொருள்.

(10) இப்படி ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் ஆகிய மூன்றும் விரிவாய்ச் சொல்லப்படுகின்றன.

28. த்வயாதிகாரம்.

இந்த அதிகாரத்தில் த்வயம் என்கிற ரஹஸ்யத்தின் அர்த்தம் சொல்லப்படுகிறது.

இதில் சொல்லிய விஷயங்கள்— (1) இதுபிரபத்தி செய்யும்போது சொல்லப்படுகிற மந்திரம். அதில் ஆறு சொற்களிருக்கின்றன. அவைகளில் முதல் சொல்லானது மூன்று சொற்கள் சேர்ந்தது. அவைகளைப் பிரித்து இந்த மந்திரத்தில் எட்டு சொற்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறதும் உண்டு. அப்போது சரணௌ என்கிற சொல்லுக்கு முன்னாலே (தவ) உன்னுடைய என்கிற சொல்லைச் சேர்க்கவேண்டியது. அப்போது ஸ்ரீமானான நாராயணனே! உன்னுடைய திருவடிகளை என்று பொருள்.

(2) ஸ்ரீமத் என்கிற சொல்லுக்கு ஸ்ரீயை (பிராட்டியை) உடையவனான என்று பொருள். ஸ்ரீ என்கிற சொல்லானது

நாலு தாதுக்களிலிருந்து ஏற்பட்டது. (1) ச்ரி தாது ஆகும்போது, நல்லகதி கிடைக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறவர்களால் அடையப்படுகிறாள் என்றும், அவர்களுக்காக எம்பெருமானைத் தான் அடைகிறாள் என்றும் பொருள். (2) ச்ரு (ஶ்ரு) தாதுவாகும்போது ஸம்ஸாரத்தில் வருத்தப்பட்டவர்களுடைய வருத்தத்தைக் காட்டும் குறலைத் தான் கேட்டு, அதை எம்பெருமானைக் கேட்கும்படி செய்கிறாள் என்றும், பிரபத்தி பண்ணினவனை ரக்ஷிப்பேன் என்று எம்பெருமான் சொன்ன வார்த்தையைத் தான் கேட்டு ஸமயம் வந்தபோது அதை எம்பெருமானுடைய நினைவிற்கு கொண்டுவருகிறாள் என்றும் பொருள். இப்படிப் பிராட்டி புருஷகாரமாய் இருப்பது இந்த மந்திரத்தில் சொல்லப்பட்டது. புருஷகாரம் என்கிற சொல்லின் பொருளை 68-ஆம் பக்கத்தில் பார்க்க. (3) ச்ரு (ஶ்ரூ) தாதுவாகும்போது பிரபத்தி செய்கிறவனுக்கு விரோதியான கர்மங்களையும் அதன் பலனான பிரகிருதி ஸம்பந்தத்தையும் போக்குகிறாள் என்று பொருள். (4) ஸ்ரீ தாதுவாகும்போது தன்னை அடைந்தவர்களுக்கு கைங்கரியம் செய்யும்படியான நல்ல குணங்களை உண்டுபண்ணுகிறாள் என்று பொருள். இதினாலே எம்பெருமானுடன் கூட இருந்து ஒருவன் செய்கிற பிரபத்தியை ஒப்புக்கொண்டு மோக்ஷத்தைக் கொடுக்கிறாள் என்கிற ஆகாரம் சொல்லப்படுகிறது.

(3) ஸ்ரீமத் என்கிற சொல்லில் 'மத்' என்கிற விகுதியானது எப்போதும் சேர்ந்திருப்பதைச்சொல்லுகிறது. பிரபத்தி பண்ணுகிறவர்கள் எம்பெருமானிடம் வரும்போதும், அவர்கள் பிறகு கைங்கரியம் செய்யும்போதும் தான் கூடவே இருக்கவேண்டுமென்று அவள் ஒருபோதும் அவனைவிட்டுவிலகுகிறதில்லை.

(4) நாராயண என்கிற சொல்லின் பொருள்கள் கீழ் அதிகாரத்தில் சொல்லப்பட்டன. அவைகளில் நாரம் என்கிற சொல்லால் சொல்லப்பட்ட குணங்களில், உபாயத்திற்கு வேண்டிய பன்னிரண்டு குணங்கள் பிரபத்தி பண்ணும்போது நினைக்கவேண்டியவைகளில் முக்கியங்கள். அவைகளாவன— (1) வாத்ஸல்யம்:— தன்னை அடைந்தவர்களின் குற்றங்களைப் பாராமல் அவர்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்யும் இரக்கம். இதினாலே பிரபத்தி செய்கிறவன் தன் குற்றங்களை நினைத்துக்கொண்டு

ஓடிப்போகாமல் இருப்பது ஏற்படும். (2) ஸ்வாமித்வம்-தன்
ஸொத்தாக உடையவனாயிருப்பது. இதனாலே தன்னுடை
லாபமாக எம்பெருமான் ரக்ஷிப்பன் என்று ஏற்படும். (3) ஸௌ
சீல்யம்— எம்பெருமான் மிகவும் உயர்ந்தவனாயிருந்தபோதிலு
மிகவும் தாழ்ந்தவர்களோடு இடைவிடாமல் சேர்ந்திருக்கும் ஸ்
பாவம். இதனால் அவனுடைய பெருமையைப் பார்த்து ஓடி
போகாமல், வண்டி ஓட்டுவது முதலானதைத் தான் வேண்டினல்
அவன் செய்வன் என்று நம்பிக்கை ஏற்படும். (4) ஸௌலப்யம்-
மிகவும் உயர்ந்தவர்களும்கூட கிட்டமுடியாத எம்பெருமான்
எல்லாரும்பார்க்கும்படியாய் வருகை. இதனாலே நாம் அவனை
எங்கே பார்க்கப்போகிறோம் என்று ஆசையை விட்டு இருப்பது
நீங்கும். (5) ஸர்வஜ்ஞத்வம்— எல்லாம் அறிந்தவனாயிருக்கை
இதினாலே தன்னை அடைந்தவர்களுக்குக் கொடுக்கவேண்டிய நன்
மைகளிலும் போக்கவேண்டிய விரோதிகளிலும் அவனுக்குத்
தெரியாதது ஒன்றுமில்லை. (6) ஸர்வசக்தித்வம்— எதையும்
செய்யும்திறமை. இதினாலே ஸம்ஸாரிகளான நம்மைத்தான்
நினைத்தபோது நித்யஸூரிகளுடன் சேர்ப்பன் என்ற நம்பிக்கை
ஏற்படும். (7) ஸத்யஸங்கல்பத்வம்— அவன் நினைத்ததை அவ
னாலும் விலக்கமுடியாதிருக்கும் ஸ்வபாவம். இதனாலே 'எல்லா
பாபங்களிலிருந்து உன்னை விடுவிப்பேன்' என்று எம்பெருமான்
சொன்ன வார்த்தையானது பொய் ஆகாது என்கிற நம்பிக்கை
உண்டாகும். (8) பரமகாருணிகத்வம்— மிகுந்த கருணை உள்ள
வனாயிருக்கை. இதனால் மிகவும் குற்றமுள்ளவர்களைக் கூட ஒரு
வியாஜத்தாலே எம்பெருமான் ரக்ஷிப்பன் என்கிற நம்பிக்கை ஏற்
படும். (9) கிருதஜ்ஞத்வம்— செய்ததை மறந்து போகாதிருப்
பது. இதனாலே நம்மை எம்பெருமான் ஒருபோதும் கைவிட
மாட்டான் என்கிற நம்பிக்கை ஏற்படும். (10) ஸ்திரத்வம்—
தன்னை அடைந்தவர்களை ரக்ஷிப்பதில் நிலையாய் இருப்பது. இத
னாலே அவனை எவர்கள் விலக்கினாலும் நம்மை விடமாட்டான்
என்கிற நம்பிக்கை ஏற்படும். (11) பரிபூர்ணத்வம்— எல்லாம்
நிறைந்திருப்பது. இதனாலே நாம் எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்
பதில் உயர்வு தாழ்ச்சி பார்க்கமாட்டான். நம்முடைய எண்
ணத்தையே பார்ப்பன் என்கிற நம்பிக்கை ஏற்படும். (12) பர
மோதாரத்வம்— நாம் செய்யும் பிரபத்தியின் சிறுமையையும்,

தான் கொடுக்கும் பலனின் பெருமையையும், அதைப் பெறுகிற நம்முடைய தாழ்மையையும் பார்க்கமாட்டான். கேட்டதைக் கொடுப்பன்; தன்னையும் கொடுப்பன். இவ்வளவு செய்தபோதிலும் தான் செய்தது போதாது என்று எண்ணும் ஸ்வபாவம். இதனாலே தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையும் ரக்ஷிக்க வேண்டுமென்று எம்பெருமானைக் கேட்கலாம் என்ற எண்ணம் ஏற்படும்.

(5) சரணௌ என்கிற சொல்லிற்கு இரண்டு திருவடிகளை என்று பொருள். இதனாலே எம்பெருமானுடைய உயர்ந்த திருமேனியானது சொல்லப்பட்டது. பிரபத்தி பண்ணும்போது அதை நினைக்கவேண்டியதுஎன்பது காட்டப்படுகிறது. இது சுபமாயும் ஆச்ரயமாயும் இருக்கும். சுபம் என்பது பாபத்தைப் போக்கும் தன்மை. ஆச்ரயம் என்பது மனதினால் பிடிக்கும்படியாய் இருப்பது. பக்த ஜீவனிடத்தில் முதலில்சொன்ன சுபத்வம் இல்லை. எம்பெருமானுடைய ஸ்வரூபத்தில் இரண்டாவதான ஆச்ரயத்வம் இல்லை. முக்த ஜீவனிடத்தில் இரண்டுமில்லை. ஆகையால் எம்பெருமானுடைய திருமேனியே சுபமாயும் ஆச்ரயமாயுமிருக்கிறது. இதைத்தான் தியானம் செய்யவேண்டியது. திருமேனியில் திருவடிகளைச் சொன்னதின் கருத்து—அவைகள் மனதாலே லகுவாய் பிடிக்கக்கூடியவைகள்; வேலைக்காரனாயிருக்கிறவனுக்கு மிகவும் தகுந்தவைகள்; மிகுந்த கருணையை உண்டாக்கும்படியானவைகள்; மிகவும் இனிமையாய் இருக்கிறவைகள் என்று.

(6) சரணம் என்கிற சொல்லுக்கு உபாயம் என்று பொருள்; சரணம் ப்ரபத்யே என்பதற்கு உன்னை உபாயமாகப் பற்றுகிறேன் என்று பொருள், அதாவது என்னை ரக்ஷிக்கிற சுமையை என் தலையில் வைக்காதே. தேவரீரே பக்திஸ்தானத்தில் நின்று அது செய்யும் எல்லா வேலைகளையும் செய்து என்னை ரக்ஷிக்கவேண்டும் என்று பொருள்.

(7) இந்த மந்திரத்தில் அங்கங்கள் இருக்கிற இடங்கள்—நாராயண சப்தத்தில் சொல்லப்பட்ட ஸம்பந்தத்தாலே அநுகூலனாய் இருப்பேன் என்கிற எண்ணமும், பிரதிகூலமாயிருப்பதை விடுவதும்; ப்ரபத்யே என்கிற சொல்லில் கடைசியில் இருக்கும்

விருதியினாலே அதை சொல்லும்போது காட்டப்படும் அழு
யினாலே வேறு கதியில்லாமல் வருத்தப்படுவதாகிய கார்பண்
மும்; அந்தச் சொல்லில் முன்னாலே இருக்கிற ப்ர என்கிற உ
ஸர்க்கத்தாலே மஹாவிச்வாஸமும் காட்டப்படுகின்றன. பக்
ஸ்தாநத்திலேயிருந்து ரக்ஷிக்கவேண்டுமென்று சொல்லுவதின
ரக்ஷிக்கிற சுமையை எம்பெருமானிடம் கொடுப்பதாகிய பிரபத்
சொல்லப்படுகிறது. இதில் ரக்ஷிக்கவேணுமென்கிற பிரார்த்
னையும் அடங்கியிருக்கிறது.

(8) பின்பாதியில் ஸ்ரீமத் என்கிற சொல்லையும், நாராயண
என்கிற சொல்லையும் மறுபடியும் சொல்லுவது—பிரபந்நன் செ
யப்போகிற கைங்கரியங்கள் இருவர்களுக்கும் செய்யப்படவேண்
டும் என்பதையும், எம்பெருமான் ஸ்வாமியாய் இருப்பதையும்
அவன் எல்லா மேன்மையான குணங்களோடும், இரண்டு விபூதி
களோடும் கூடி இருப்பதையும், அவன் மிகுந்த ஆநந்தத்தை
கொடுக்கிறவன் என்பதையும் காட்டுவதற்காக.

(9) நாராயண சப்தத்தின்மேல் இருக்கிற நான்காம் வேற்
றுமைக்கு அவனுக்காக இருக்கிறேன் என்று பொருள். இதி
னாலே அவனைப் பரிபூர்ணமாக அநுபவித்து எல்லாவிதமான
கைங்கரியங்களைச் செய்வது பிரயோஜநம் என்பது காட்டப்படு
கிறது. நான்காம் வேற்றுமைக்கு மேலே 'பவேயம்' என்ற
சொல்லைச் சேர்க்கவேண்டும். அதன் பொருள் ஸ்ரீமானான நாரா
யணனுக்காக நான் இருக்கவேண்டுமென்று.

(10) நமஸ் என்கிறதற்கு எனக்கு ஒன்றும் இருக்கவேண்
டாம் என்று பொருள். அதாவது ஒரு வேலையைச் செய்யும்போ
தும், அதன் பலனை அநுபவிக்கும்போதும் நான் செய்கிறேன்
நான் அநுபவிக்கிறேன் என்கிற எண்ணமும், எனக்காகச் செய்
கிறேன், எனக்காக அநுபவிக்கிறேன் என்கிற எண்ணமும் போக
வேணுமென்று கருத்து. இந்த வேலையை எம்பெருமான் செய்
கிறான். அவன் ஸந்தோஷத்திற்காக நான் அநுபவிக்கிறேன்
என் ஸந்தோஷத்திற்காக இல்லை என்று இந்தச் சொல்லாலே
பிரார்த்திக்கப்படுகிறது.

(11) இந்த மந்திர விஷயத்தில் சொல்லப்படும் அதிவாதங்
கள்— (1) பிராட்டி எம்பெருமானுடன் கூடவே பிரியாமல்

இருக்கிறபடியால், ஸ்ரீமான் என்று 'மதுப்' என்கிற விகுதியை ஸ்ரீ என்கிற சொல்லுடன் சேர்த்து சொல்லக்கூடாது. (2) எம் பெருமான் எதையும் செய்ய சக்தியுள்ளவனுகையால் ஸ்ரீஸம்பந்தம் எதற்காக? ஸ்ரீஸம்பந்தம் வேண்டுமானல் அவன் "ஸர்வ சக்தன்" என்பது போய்விடுமே? (3) சரணௌ என்கிற த்வி வசநத்தாலே ஸ்ரீமத் என்கிற சொல் உபலக்ஷணம் என்று ஏற்படாதா? உபலக்ஷணம் என்பது ஒரு வஸ்துவினிடத்தில் இல்லாமல் அதைக் காட்டுவதற்கு மாத்திரம் உபயோகப்படுவது.

(12) இந்த மந்திரத்தில் இரண்டு பாதிகளுக்கு வேறுவிதமாயும் பொருள் சொல்லலாம். முன்பாதி ஐந்து அங்கத்தைச் சொல்லுகிறது. பின்பாதி ஆத்மஸமர்ப்பணத்தைச் சொல்லுகிறது. அப்போது அதற்கு ஸ்ரீமானன நாராயணனுக்கு நான் கொடுக்கப்படுகிறேன் என்று பொருள். நான் என்கிற இந்த வஸ்து அவனது. எனக்கு அதில் ஸம்பந்தமில்லை. இதனாலே அதை ரக்ஷிக்கும் சுமையும், ரக்ஷணத்தின் பலனும் அவனிடம் கொடுக்கப்பட்டதாகவே ஏற்படும். பின்பாதியில் பிரபத்தி சொல்லப்படுவதினால் அதின்பலனன கைங்கரியமும் ஸித்திக்கும்.

(13) இந்த மந்திரத்தினுடைய திரண்ட பொருள்—எல்லாருக்கும் ஸ்வாமியாய், எல்லாவிதத்தாலும் மிகவும் இன்பமாய், பிராட்டியோடுகூட எப்போதும் இருக்கிற நாராயணன் திருவடிகளில் என்னுடைய ஸ்வரூபத்திற்குத்தகுந்த எல்லா கைங்கரியங்களையும் நான் செய்யவேண்டும்; அதற்கு விரோதியானவைகள் எல்லாம் போய், அந்த கைங்கரியங்களைப் பூராவாகப் பெறவேண்டியதற்காக அகிஞ்சநனயிருக்கிற நான் என்னை ரக்ஷித்துக்கொள்கிற விஷயத்தில் என்னுடைய ஸம்பந்தமில்லாதபடியாக ஸ்ரீமானன நாராயணன் திருவடிகளில் ஐந்து அங்கங்களோடு கூடிய ஆத்ம ரக்ஷாபரத்தை நான் ஸமர்ப்பிக்கிறேன்—என்று.

இந்த அர்த்தத்தைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

ஓது மிரண்டை யிசைந்தரு ளாலுத வுந்திருமால்
பாத மிரண்டுஞ் சரணெனப் பற்றி நம் பங்கயத்தாள்
காதலனை நண்ணி நலந்திகழ் நாட்டி லடிமையெல்லாம்
கோதி லுணர்த்தி யுடன்கொள்ளு மாறு குறித்தனமே. (35)

(ப-ரை) ஓதும் - கடச்ருதியென்கிற வேதத்தில் தனித்தனியாகச் சொல்லப்படும், இரண்டை - இரண்டு வாக்கியங்களை, இசைந்து - சேர்த்து, அருளால் - கருணையாலே, உதவும்-உதவிசெய்கிற, திருமால் - பிராட்டியோடு சேர்ந்திருக்கிற எம்பெருமானுடைய, பாதம் இரண்டும் - இரண்டு திருவடிகளையும், சரண் என - உபாயமாக, பற்றி,நம் பங்கயத்தாள் நாதனை - நம்முடைய தாமரையிலிருக்கிற பிராட்டியின் கணவனை, நண்ணி - கிட்டி, நலம் திகழ் - ஆநந்தம் விளங்கும்படியான, நாட்டில் - வைகுந்தமென்கிற தேசத்தில், அடிமை எல்லாம் - கைங்கரியங்களையெல்லாம், கோது இல் - குற்றமில்லாத, உணர்த்தியுடன் - எண்ணத்துடன், கொள்ளுமாறு - நாம் அடையும் வழியை, குறித்தனம் - தெரிந்துகொண்டோம்.

(கருத்து) வேதத்தில் இரண்டு வாக்யங்களாகத் தனித்தனியாகச் சொல்லப்படும் இந்த மந்திரத்தை நாம் ஆசாரியர்களிடத்தில் தெரிந்துகொண்டு "இதை ஒரு தரம் சொல்லு, நான் ரக்ஷிக்கிறேன்" என்று கருணையினாலே சொல்லுகிற, பிராட்டியோடு சேர்ந்திருக்கிற எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளையும் உபாயமாகப் பற்றி, பரமபதத்தில் போய்ச் சேர்ந்து, ஆநந்தம் மிகுதியாயிருக்கும் அந்த இடத்தில் அவர்களுக்கு எல்லாவிதங்களான கைங்கரியங்களையும் குற்றமில்லாத நினைவுடன் செய்யும் விதத்தை இந்த மந்திரத்தில் இருக்கிற சொற்களில் ஒன்றின் பின் ஒன்றாக நினைக்கும்படியான பாக்யத்தை நாம் அடைந்தோம்.

குறிப்பு:— (1) கடச்ருதியில் இந்த மந்திரத்தின் முன் பாதியை ஒரு இடத்திலும், பின் பாதியை வேறு இடத்திலும் சொல்லியிருக்கிறது. இரண்டையும் சேர்த்து நாம் பிரபத்தி பண்ணும்போது சொல்லவேண்டியது என்று சொல்லியிருக்கிறது.

(2) உரையில் "தெரிந்துகொண்டு" என்கிற சொல்லை கடைசியில் இருக்கும் "இந்த மந்திரத்தில்...அடைந்தோம்" என்பதுடன் சேர்க்கவேண்டியது.

(3) திருமால்— பிராட்டியிடம் எம்பெருமான், ஆசையுள்ளவன் ஆகையினால் அவள் பண்ணும் சிபார்சை அவன் தட்டமாட்டான் என்று கருத்து.

(4) 'பாதம் இரண்டும் சரணெனப் பற்றி' என்பது மந்திரத்தின் முன்பாதியின் பொருள்.

(5) கோது—குற்றம், அதாவது— நான் செய்கிறேன், நான் அனுபவிக்கிறேன்; எனக்காகச் செய்கிறேன்; எனக்காக அநுபவிக்கிறேன் என்கிற எண்ணம். இது நமஸ்ஸின் பொருள்.

(6) 'அடிமை எல்லாம் ... கொள்ளுமாறு' என்பது மந்திரத்தின் பின்பாதியின் பொருள்.

---

29. சரம ச்லோகாதிகாரம்.

இந்த அதிகாரத்தில் சரமச்லோகத்தின் பொருள் சொல்லப்படுகிறது. கிருஷ்ணனாக அவதாரம் செய்த எம்பெருமானுடைய உபதேசத்தில் (ஸ்ரீ கீதையில்) இது கடைசி ச்லோகம்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்கள்:— (1) இந்த ச்லோகத்தின் முதல் பாதத்திற்குப் பொருள்-எல்லா தர்மங்களையும் நன்றாக விட்டு இருக்கிற நீ-என்று. தர்மம் என்கிற சொல்லுக்கு ஒரு பலனுக்கு உபாயமாக வேதத்தினால் சொல்லப்பட்ட கர்மம் என்று பொருள். இங்கே அது மோக்ஷத்திற்கு உபாயமாகச் சொல்லப்பட்ட பிரும்மோபாஸநம். இதை உபநிஷத்துக்கள் வெவ்வேறு விதமாய்ச் சொல்லுகிறபடியால் அவைகளை இங்கே தர்மங்கள் என்று சொல்லுகிறது. எல்லாம் என்கிற சொல்லாலே அதற்கு உதவி செய்கிற கர்மயோகம் முதலானவைகள் சொல்லப்படுகின்றன.

(2) இவைகளைச் செய்ய ஸாமர்த்தியமில்லாமல் விட்டு இருக்கிறவனுக்கு பிரபத்தியானது விதிக்கப்படுகிறது. நன்றாய் விடுகையாவது— இவைகளைச் செய்யமுடியாமல் போனபோதிலும் சக்தி உள்ளவரையில் அவைகளைச் செய்கிறோம் என்றும், அதுவும் முடியாவிட்டால் அநுகல்பங்களைச் செய்வோம், அதுவும் முடியாவிட்டால் உபாயத்திற்கு உபாயமாகிறவைகளைச் செய்கிறோம் என்றும் எண்ணும்படி செய்கிற துராசையை விடுவது. ஸ்நாநம் என்றால் ஜலத்தில் முழுகி ஸ்நானம் செய்வது. அதைச் செய்யமுடியாதவனுக்கு மந்திரஸ்நானம் முதலானவைகள் சொல்லப்படுகின்றன. இவைகளை ஸ்நானத்திற்கு அநுகல்பம் என்று

சொல்லுகிறது. அதுபோல் அநுகல்பங்களையாவது செய்வோம் என்கிற ஆசையை விடுவது.

(3) இதினாலே பிரபத்திக்கு அதிகாரம் சொல்லப்படுகிறது. 'பரி' என்கிற உபஸர்க்கத்தாலே இந்த அதிகாரம் பூர்ணமாயிருக்கிறதென்று காட்டப்படுகிறது.

(4) சிலர் 'பரித்யஜ்ய' என்கிற சொல்லுக்கு விட்டுவிடு என்று பொருள்கொண்டு, அதை விதியாய்ச்சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லும்போது எல்லா தர்மங்களும் எனக்கு யோக்கியதை இல்லை என்று என்னை விட்டுவிட்டன என்று நினை என்று பொருளாகும். அப்போது கார்ப்பண்யம் என்கிற அங்கம் சொல்லப்படுகிறது.

(5) வேறுவிதமாயும் விதிபக்ஷத்திற்குப் பொருள் சொல்லலாம். அதாவது—பிரபத்திக்கு அங்கமாக ஒரு தர்மத்தையும் செய்யவேண்டாம்—என்று. இதனாலே பிரபத்தியினுடைய நைரபேக்ஷ்யம் சொல்லப்படுகிறது. பரி என்கிற உபஸர்க்கத்தாலே எல்லா தர்மங்களுக்கும் பொதுவான ஆசமநம் முதலானவைகளும் அங்கமாக வேண்டாமென்று காட்டப்படுகிறது,

(6) இந்த விஷயத்தில் சிலர் சொல்லும் துர்வாதங்களாவன- (1) தர்மம் என்கிற சொல்லுக்கு கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் என்று பொருள்; அவைகளை விடுகையாவது; அவைகளைச் செய்யாமலிருப்பது, இப்படி விடுவது பிரபத்திக்கு அங்கம். (2) எவன் இவைகளைச் செய்யச் சக்தியுள்ளவனோ அவனை விடும்படியாகச் சொல்லுகிறது. அவைகளைச் செய்யமுடியாதவனுக்கு முடியாமல் இருக்கிற நீ என்று அர்த்தம். (3) இவைகளைச் செய்ய சக்தியிருக்கிறவனைக்குறித்து இவைகள் கடுமையானவைகள், அவைகளை விட்டுவிடு லகுவான பிரபத்தியைச் செய், என்று சொல்லுகிறது" என்று பொருள். (4) லகுவான பிரபத்தியைச் செய்யும்படி ஒருவனைத்தூண்ட குருவான பக்தியோகத்தை சாஸ்திரம் விதிக்கிறது, அதை ஒருவன் செய்யவேண்டுமென்று சாஸ்திரத்தின் கருத்து அன்று. (5) ஜ்ஞாநமோ விச்வாஸமோ பூர்ணமாயுள்ளவன் பிரபத்தியைச் செய்யவேண்டியவன். அவைகள் குறைந்தவன் பக்தியோகம் செய்யத் தகுந்தவன். (6) பிரபத்தி செய்யத் தகுந்தவன் பக்தியோகத்தை எம்பெருமானுடைய கைங்கரியம் என்று செய்யவேண்டியது.

7. இதுவரையில் தர்மம் என்கிற சொல்லுக்கு கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் என்று பொருள் கொண்டு, அவைகளை விடவேண்டுமென்கிற துர்வாதங்கள் சொல்லப்பட்டன. இப்போது அந்த தர்மம் என்கிற சொல்லுக்கு தன்னுடைய ஜாதிக்குப் பொருந்தினவையாகவும், தன்னால் செய்யமுடிந்தவையாகவுமிருக்கிற தர்மங்கள் என்று பொருள். அவைகளை ஒருவன் விடவேண்டியது. அப்படி விடுவது பிரபத்திக்கு அங்கம். இப்படி விடுவதை ஒருவன் உயிரோடு இருக்கிறவரையில் செய்யவேண்டியதா? அல்லது பிரபத்தி செய்கிற காலத்தில் மட்டும் செய்யவேண்டியதா? என்று கேட்டு தூஷணம் சொல்லப்படுகிறது.

(8) ச்லோகத்தில் இரண்டாவது பாதத்திற்கு பொருள்—என்னை ஒருவனையே உபாயமாகப்பற்று—என்று. 'என்னை' என்கிற சொல்லானது அர்ஜுநனுக்கு முன்னாலே இருந்த எம்பெருமானைச் சொல்லுகிறபடியால், திவ்விய மங்கள விக்ரஹத்தையும் பரத்வம், ஸௌலப்யம் இவை இரண்டிற்கு வேண்டிய குணங்களையும் அநுஸந்தாநம் செய்யவேண்டியது என்று காட்டுகிறது.

(9) என்னை ஒருவனை என்பதற்கு அநேகவிதமாகப் பொருள் கொள்ளலாம். அவைகளை நாற்பத்தெட்டாவது பாட்டின் உரையில் பார்க்கவும்.

(10) உபாயமாகப்பற்று என்கிற இடத்தில் பற்று(வ்ரஜ)என்கிற சொல்லாலே எல்லா அங்கங்களோடு கூடிய பிரபத்தி சொல்லப்படுகிறது. இதை ஒரே தடவை செய்யவேண்டியது. இதை அர்ஜுநனுக்கு உபதேசித்தபோதிலும் இந்த விதிக்கு எல்லாரும் விஷயம். இந்த விஷயத்தில் சிலர் சொல்லும் துர்வாதங்கள்— (1) ஜீவன் மிகவும் பரதந்திரனாகையாலே இந்த விதியை விதிக்கக்கூடாது. (2) ஜீவனுக்கு கர்த்ருத்வம் ஒரு வழியாலும் கிடையாது. (3) ஈச்வரனுக்கு அதிகமான கர்த்ருத்வம்—ஜ்ஞாத்ருத்வமாத்ரம்.

(11) ச்லோகத்தின் பின்பாதிக்குப் பொருள்— நான் உன்னை எல்லா பாபங்களிலுமிருந்து விடுவிப்பேன்; துக்கப்படாதே— என்று. பாபம் என்கிற சொல்லுக்கு அநிஷ்டமானதை உண்டு பண்ணுவதாக சாஸ்திரம் சொல்லும் செய்கை, போகும்வேண்டு

மென்பவனுக்கு புண்ணியமும் அநிஷ்டமானதைச் செய்வதால், அது பாபம் என்கிற சொல்லில் அடங்கியிருக்கிறது. 'பாபேப்ய:' என்கிற பன்மைச் சொல்லாலே பாபங்களினுடைய கணக்கில்லாமை சொல்லப்படுகிறது. எல்லா பாபங்களிலும் இருந்து என்கிறதில் எல்லாம் என்ற சொல்லாலே அவித்யையும், கெட்ட விஷயங்களில் வாஸனையும், ருசியும், ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயுமிருக்கிற பிரகிருதி ஸம்பந்தமும் சொல்லப்படுகின்றன. எல்லா பாபங்களிலுமிருந்து என்று சொன்னபோதிலும்,புத்திபூர்வமாக ஒருவன் பிரபத்திக்குப் பின்னுலே செய்யும் பாபங்கள் அவைகளிலிருந்து விலக்கப்படுகின்றன. பலனைக்கொடுக்க ஆரம்பித்தபாபங்களையும் அதில் சேர்த்துக்கொள்ளவேண்டியது. அவைகளில் பிரபத்தி செய்கிறவன் எவ்வளவு ஒப்புக்கொள்கிறுனே அவைகள் தவிர மற்றவைகள் கழிந்துபோகும்.

(12) பாபங்களிலிருந்து விடுவிக்கையாவது எம்பெருமான் நிக்ரஹம் செய்யவேண்டுமென்கிற ஸங்கல்பத்தைவிடுவது.இப்படி எல்லா பாபங்களிலுமிருந்து பிரபந்நன் விடுபட்டால் அவனுக்கு எம்பெருமானுடைய பரிபூர்ணமானஅநுபவம் தானுகவேகிடைக்கும். அதற்காக அர்ச்சிஸ் முதலாக உடைய தேவயாநம் வழியாய் போய் வைகுந்தம் என்கிற திருநாட்டுக்குப் போகவேண்டியது.

(13) நீ துக்கப்படாதே என்று ச்லோகம் சொல்லுகிறபடியால்,மோக்ஷத்திற்கு ஏற்பட்ட பக்தியாகிய உபாயத்தைச் செய்ய முடியவில்லையே என்று ஒருவன் அழவேண்டுமென்று காட்டப்படுகிறது. இப்படி அழாவிட்டால் அதிகாரமில்லாததினுல், பிரபத்தி நிறைவேறுகிறதில்லை. சிஷியனுக்காகப் பிரபத்தி செய்யும் ஆசாரியனும் சிஷியனைக் காப்பாற்றுவதற்கு ஏற்பட்ட வழி எனக்கு இல்லையே என்று அழவேணுமென்றும் காட்டப்படுகிறது.

சரமச்லோகத்தின் பொருளைப் பாட்டாலே அருளிச் செய்கிறுர்.

குறிப்புடன் மேவுந் தருமங்க ளின்றியக் கோவலனுர்
வெறித்துள வக்கழல் மெய்யர ணென்று விரைந்தடைந்து
பிரித்த வினைத்திரள் பின்துட ராவகை யப்பெரியோர்
மறுப்புடை மன்னருள் வாசகத் தான்மரு ளற்றனமே. (36)

(ப-ரை) குறிப்புடன் - ஜாக்கிரதையுடன், மேவும் - செய்ய வேண்டிய, தருமங்கள் இன்றி - கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பக்தியோகம் ஆகிய தர்மங்களில்லாமல்,அ கோவலனார் - கோபாலனை அவதரித்த அந்த எம்பெருமானுடைய, வெறி - வாஸனையுடைய, துளவம் - துளஸியையுடைய, கழல் - திருவடிகளை, மெய் அரண் - உண்மையான உபாயம் - என்று, விரைந்து - சீக்கிரமாய் அதாவது நம்பிக்கையுடன், அடைந்து, பிரித்த-பிரபத்தி பண்ணின காலத்தில் நம்மைவிட்டு பிரித்துவைத்த, வினை திரள் - கர்மங்களுடைய கூட்டங்கள், பின்துடராவகை - நமக்குப் பின்னால் வாராதபடி, அ பெரியோர் - எல்லோரைக் காட்டிலும் மேற்பட்டவனைச்சொல்லப்பட்ட அந்த எம்பெருமானுடைய, மறிப்பு உடை - நம்மை வளைத்துக்கொள்ளுகிற, மன் அருள் வாசகத்தால் - திடமான கருணையினாலுண்டான ச்லோகத்தால், மருள் - அஜ்ஞாநத்தை, அற்றனம் - போக்கினோம்.

(கருத்து) எங்கே குற்றங்கள் நேரிடுமோ என்று பயந்து ஜாக்கிரதையாய் செய்யவேண்டிய கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் ஆகிய தர்மங்கள் இல்லாமல், கோபாலனை அவதாரம் செய்த எம்பெருமானுடைய திருவடிகளை உண்மையான உபாயமாக நாம் நம்பி அடைந்திருக்கிறோம். இப்படி அடையும்போதே நம்மைவிட்டுப் பிரித்துவைத்த கர்மங்களுடைய கூட்டங்கள் நம்மைப் பின்னாலே துடராதபடி அஜ்ஞாநத்தை விட்டுவிட்டோம். எதினாலேயென்றால் வேதாந்தங்களில் எல்லாரைக் காட்டிலும் மேற்பட்டவனைச் சொல்லப்பட்ட அந்த எம்பெருமானுடைய உண்மையான கருணையே சரமச்லோக ரூபமாக வழிந்து வந்ததுபோல்இருக்கிறது அந்த ச்லோகத்தினால் உண்டாயிருக்கிற நம்பிக்கையினாலே. இந்த ச்லோகத்தை நன்றாகத் தெரிந்த எவனும் அதை நம்பி அதற்குட்படுவன்.

குறிப்பு:— மெய் அருள் வாசகம் என்று சொன்னதினால் அர்ஜுநனை ஏமாற்றுவதற்காக இது சொல்லப்பட்டதன்று என்று காட்டப்படுகிறது.

30. ஆசாரிய கிருத்யாதிகாரம்.

இனி பாக்கி மூன்று அதிகாரங்களினாலே ஆசாரியன் செய்ய வேண்டிய வேலையையும், சிஷ்யன் செய்யவேண்டிய வேலையையும் சொல்லி கிரந்தத்தை முடிக்கிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்களைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

மருளற்ற தேசிகர் வானுகப் பாலிந்த வையமெல்லாம்
இருளற் றிறையவ னிணையடி பூண்டிட வெண்ணுதலால்
தெருளுற்ற செந்தொழில் செல்வம் பெருகிச் சிறந்தவர்பால்
அருளுற்ற சிந்தையி னாலழி யாவிளக் கேற்றினரே. (37)

(ப-ரை) மருள் அற்ற - அஜ்ஞாநமில்லாத, தேசிகர் - ஆசாரியர்கள், வான் உகப்பால் - பரமபதத்தில் ஆசையால், இந்த வையம் எல்லாம் - இந்த பூமியிலுள்ள ஜநங்களெல்லாம், இருள் அற்று - அஜ்ஞாநமில்லாமல், இறையவன் இணையடி - எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளை, பூண்டிட - அடைந்து பிரபத்தி செய்து பிழைக்கவேண்டுமென்று. எண்ணுதலால்-எண்ணுகிறபடியால், தெருள் உற்ற - நல்ல ஜ்ஞாநத்தோடு கூடிய, செந்தொழில் - நல்ல கைங்கரியமாகிய, செல்வம் - ஸம்பத்து, பெருகி-நிறைந்து, சிறந்தவர்பால் - நல்ல குணங்களையுடையவர்களென்று பிரஸித்தர்களான சிஷ்யர்களிடத்தில், அருள் உற்ற சிந்தையினால்-கருணையோடு கூடிய எண்ணத்தினாலே, அழியா - அழியாமலிருக்கிற, விளக்கு - ஸம்பிரதாயமாகிற விளக்கை, ஏற்றினர் - கொடுத்திருக்கிறார்கள்.

(கருத்து) ஆசாரியர்களுக்கு நித்தியவிபூதிக்குப் போக வேண்டுமென்கிற ஆசை உண்டாகும்போது, தகுந்த சிஷ்யனிடத்தில் ஸம்பிரதாயமான அழியாத விளக்கை ஏற்றிவைத்து அவர்கள் போகிறார்கள். எதற்காக இதைச் செய்கிறார்களென்றால், இந்த பூலோகத்தில் கர்மத்தினால் கட்டுப்பட்டவர்கள் எல்லாரும் அஜ்ஞாநம் போய் எம்பெருமானுடைய திருவடிகளை மோக்ஷத்திற்கு உபாயமாகப் பற்றவேண்டுமென்கிற எண்ணத்தினால். சிஷ்யனை அவர்கள் நன்றாகப் பரீக்ஷித்து அவன், தன்னையும் எம்பெருமானையும் பற்றி உள்ளபடி அறிந்திருக்கிறான் என்றும்,

அவன் எல்லாவேலைகளையும் எம்பெருமானுடைய கைங்கரியமாகச் செய்கிறான் என்றும் தெரிந்து, இந்த ஸம்பத்தானது நிறைந்திருக்கிற அந்த சிஷ்யனிடத்தில் ஸம்பிரதாயத்தைக் கொடுக்கிறார்கள். இதுவும் கருணையோடு கூடிய எண்ணத்தால் செய்யப்படுகிறது. அந்த ஆசாரியர்கள் தாங்கள் இங்கே இருந்தகாலத்தில் ஸம்பிரதாயத்தைக் கண்டவர்களுக்கு வெளியிடாமல் காப்பாற்றி வந்தார்கள். கடைசிகாலத்தில் அப்படியே போய்விட்டால் உலகம் கெட்டுப்போகுமென்று நினைத்துத் தகுந்த சிஷ்யனைக் கண்டுபிடித்து அவனிடம் கொடுத்துவிட்டுப் போகிறார்கள்.

31. சிஷ்யகிருத்யாதிகாரம்.

இந்த அதிகாரத்தில் சொல்லிய விஷயங்களைப் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும்
மாற்றின வர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ்
சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்ல வோமுன்னம் பெற்றதற்கே. (38)

(ப-ரை) மனத்து - மனதில், எழில் - நன்றாய்ப் பிரகாசிக்கிற, ஞானவிளக்கை - ஞானமாகிய விளக்கை, ஏற்றி, இருள் அனைத்தும்-அஜ்ஞானமெல்லாவற்றையும், மாற்றினவர்க்கு-போக்கினவருக்கு, ஒரு கைமாறு - ஒரு பதில் உபகாரம், மாயனும் - ஆச்சரியமான வேலைகளைச் செய்யும் எம்பெருமானும், காணகில்லான் - காணமுடியாதவன், போற்றி - ஸ்தோத்திரம்செய்து, உகப்பதும் - ஸந்தோஷப்படுவதும், புந்தியில் - புத்தியில், கொள்ளுவதும் - நினைப்பதும், பொங்குபுகழ் - வளர்கின்ற நல்ல குணங்களை, சாற்றி - சொல்லி, வளர்ப்பதும் - எல்லாருக்கும் தெரியும்படி சொல்லுவதும், முன்னம் - முன்னாலே, பெற்றதற்கு - அவரிடமிருந்து பெற்ற உபகாரத்திற்கு, சற்று அல்லவோ - ஸ்வல்பமல்லவோ.

(கருத்து) ஆசாரியர்கள் சிஷ்யனுடைய மனதில் ஜ்ஞானமாகிய விளக்கை ஏற்றி, அவனுடைய எல்லாவிதங்களான அஜ்ஞானங்களை மாற்றுகிறார்கள். அவர்கள் செய்த உபகாரத்திற்கு எம்

பெருமானும் பதில் உபகாரத்தைக் காணமுடியாதவன். ஆனால் சிஷ்யன் ஒன்றும் செய்யவேண்டாமோ என்றால்; ஆசாரியனை ஸ்தோத்திரம் செய்து ஸந்தோஷப்படவேண்டியது, இது வாயால் செய்யும் வேலை. அவர்கள் செய்த உபகாரத்தை எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கவேண்டியது; இது மனஸாலே செய்யும் வேலை. ஆசாரியர்களுடைய நல்ல குணங்களை எல்லாருக்கும் தெரியும்படியாய்ச் சொல்லவேண்டியது; இப்படிச் செய்கிறோம் என்று கர்வப்படக்கூடாது. சிஷ்யன் முன்னாலே ஆசாரியர்களிடம் தான் அடைந்த உபகாரத்தை நினைக்கும் போது இவைகளெல்லாம் மிகவும் அல்பமானவைகள் என்று தோன்றும்.

குறிப்பு:— ஜ்ஞாந விளக்கு—விளக்கானது எப்படி இருட்டைப் போக்குமோ அப்படி ஜ்ஞாநமானது அஜ்ஞாநத்தைப் போக்குகிறது. இங்கே ஜ்ஞாநமென்பது ஜீவனை தன்னையும் எம்பெருமானையும் உள்ளபடி அறிவது. அஜ்ஞாநமென்பது ஜ்ஞாநமில்லாமையும், ஒரு வஸ்துவின் குணத்தை வேறொரு வஸ்துவின் குணமாக எண்ணுவதும், ஒரு வஸ்துவை வேறு வஸ்துவாக எண்ணுவதும். வெண்மையான சங்கைப் பார்த்து இது மஞ்சளானதென்று எண்ணுவது இரண்டாவது அஜ்ஞாநம். கயிற்றைப் பார்த்துப் பாம்பாக எண்ணுவது மூன்றாவது அஜ்ஞாநம்.

கடைசி அதிகாரத்தின் பாட்டுக்கள்

முன்பெற்ற ஞானமு மோகந் துறக்கலு மூன்றுரையில்
தன்பற்ற தன்மையுந் தாழ்ந்தவர்க் கீயுந் தனித்தகவும்
மன்பற்றி நின்ற வகையுரைக் கின்ற மறையவர்பால்
சின்பற்றி யென்பயன் சீரறி வோர்க்கிவை செப்பினமே. (39)

(ப-ரை) முன்பெற்ற - பிறந்த காலத்தில் எம்பெருமானுடைய கடாக்ஷத்தைப் பெற்று அதுமுதல் ஆசாரியர்களிடமிருந்து அடைந்த, ஞானமும், மோகம் துறக்கலும் - துர்வாதங்களாலுண்டாகும் கலக்கத்தை விடுவதும், மூன்று உரையில் - மூன்று ரஹஸ்யங்களில், தன்பு அற்ற - தன்னுடைய இளப்பம் போன, தன்மையும் - ஸ்வபாவமும், தாழ்ந்தவர்க்கு - அகிஞ்சநரான நமக்கு, ஈயும் - கொடுக்கும், தனி தகவும் - ஒப்பில்லாத கருணையும், மன் -

மன்னவரான அதாவது எல்லாருக்கும் மேற்பட்ட ராஜாவான எம்பெருமானை, பற்றி - உபாயமாக அடைந்து, நின்றவகை - இருக்கும் நிலையை. உரைக்கின்ற - சொல்லுகிற, மறையவர்பால் - வேதமறிந்த ஆசாரியர்களிடத்தில், சின் - அல்பமானவைகளை, பற்றி - கேட்டுத் தெரிந்துகொண்டு, என் பயன் - என்ன பிரயோஜநம், சீர் - நல்ல விஷயங்களை, அறிவோர்க்கு - அறிகிறவர்களுக்கு, இவை - இந்த கிரந்தத்தில் சொன்ன விஷயங்களை, செப்பினம் - சொன்னோம்.

(கருத்து) முன்னாலே ஆசாரியனிடம் போய் ஒருவன், அடைகிற ஜ்ஞாநத்தையும் அதாவது தத்வம், ஹிதம், புருஷார்த்தம் என்கிற இவைகளை அறிகையும், துர்வாதிகள் சொல்லுகிற துர்வாதங்களால் உண்டாகும் கலக்கத்தை விடுகையும், தான் ஒருவனுக்கு உட்படாதவன், தனக்காகவே இருக்கிறவன் என்கிற கெட்ட எண்ணங்கள்போய் தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை அறிகையும், பக்தியோகம் செய்ய சக்தியில்லாமல் வருத்தப்படுகிற நமக்கு அந்த பக்தியோகஸ்தாநத்தில் இருக்கும்படி தன்னைக் கொடுக்கும் எம்பெருமானுடைய ஒப்பற்ற கருணையும், ஸர்வேச்வரனை எம்பெருமானையே மோக்ஷத்திற்கு உபாயமாகப்பற்றியிருக்கும் வகையும்— இந்த நல்ல விஷயங்களை மூன்று ரஹஸ்யங்களாலே அறிகிறவர்களுக்கு இவைகளைச் சொன்னோம். நல்ல விஷயங்களைச் சொல்லிக்கொடுக்கிற வேதமறிந்த ஆசாரியர்களிடத்தில் அல்பமான தர்மம், அர்த்தம், காமம் என்கிற விஷயங்களைக் கேட்பதினால் என்ன பிரயோஜநம்?

குறிப்பு:— (1) 'முன்பெற்ற ஞாநமும்' என்பதினால் முதல் இருபத்திரண்டு அதிகாரங்களின் அர்த்தம் சொல்லப்படுகிறது. 'மோகம் துறக்கலும்' என்பதினால் அதற்குமேல் நான்கு அதிகாரங்களாகிய ஸ்திரீகரணபாகத்தின் அர்த்தம் சொல்லப்படுகிறது. 'தன்பற்ற தன்மையும்' என்பதினால் மூலமந்திர அதிகாரத்தின் அர்த்தமும், 'தாழ்ந்தவர்க்கியும் தனித்தகவும்' என்பதினால் த்வயாதிகாரத்தின் அர்த்தமும், 'மன்பற்றி நின்றவகை' என்பதினால் சரமச்லோகாதிகாரத்தின் அர்த்தமும் காட்டப்பட்டன.

(2) இவைகளைத் தெரிந்துகொள்வதற்கு அதிகாரிகள் இது நல்லது இது கெட்டது என்று அறியும்படியான சக்தியுள்ளவர்

கள். அவர்களுக்காக இந்த விஷயங்கள் சொல்லப்பட்டன. தர்மம், அர்த்தம், காமம் இவைகளை ஆசைப்படுகிறவர்கள் இவைகளுக்கு அதிகாரிகள் அல்ல.

செப்பச் செவிக்கமு தென்னத் திகழுஞ் செழுங்குணத்துத்
தப்பற்ற வர்க்குத் தாமே யுகந்து தருந்தகவால்
ஒப்பற்ற நான்மறை யுள்ளக் கருத்தி லுறைத்துரைத்த
முப்பத் திரண்டிவை முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே.(40)

(ப-ரை) செப்ப - சொல்லும்போதே, செவிக்கு - காதுக்கு, அமுது என்ன - அமிருதம்போல, திகழும் - விளங்கும், செழுங் குணத்து-நல்ல குணங்களையுடையவைகளும், தப்புஅற்றவர்க்கு - குற்றமில்லாதவர்களுக்கு, தாமே உகந்து - தாங்களே ஸந்தோஷப்பட்டு, தரும் - தம்முடைய ஸ்வபாவங்களைக் கொடுக்கும், தகவால் - கருணையினால், ஒப்பு அற்ற - ஒப்பில்லாத, நால்மறை- நான்கு வேதங்களும், உள்ளம் கருத்தில் - உள்ளே இருக்கிற கருத்தில், உறைத்து - பரிசயம் செய்து, உரைத்த - என்னால் சொல்லப்பட்டவைகளுமான, முத்தமிழ் சேர்ந்த - மூன்றுவிதங்களான தமிழ் இலக்ஷணங்களுடன் சேர்ந்தவைகளுமான, இவை முப்பத்திரண்டு - இந்த முப்பத்திரண்டு பாட்டுக்களும், மொழி - சொற்களாகிய இந்த கிரந்தத்திற்கு, திரு - அழகைக் கொடுக்கின்றவைகளாக இருக்கின்றன.

(கருத்து) இப்படி முப்பத்திரண்டு அதிகாரங்களின் கடைசிப் பாட்டுக்கள், அர்த்தத்தைக் கவனிக்காமல் சொல்லும்போதே காதுக்கு அமிருதம்போல் விளங்கும். ஆசாரியர்கள் சமம் தமம் முதலான நல்ல குணங்களை உடையவர்களாயும், கோபம்முதலான கெட்ட குணமற்றவர்களாயுமிருக்கிறநல்ல சிஷ்யர்களுக்குத்தாமே ஸந்தோஷப்பட்டு ஒப்பற்ற நான்கு வேதங்களுடைய கருத்தானது தோன்றும்படி கருணையால் உபதேசம் செய்வார்கள். இவ்விதமான உபதேசத்தைப் பெற்று வெகுகாலம் அதை நினைத்து நினைத்து இந்த முப்பத்திரண்டு பாட்டுக்களை எழுதியிருக்கிறேன். அவைகளில் சொல் அழகும், பொருள் அழகும், கானத்தின் அழகும் சேர்ந்திருக்கின்றன. இவைகள் இந்த ரஹஸ்யத்ரயஸாரமென்கிற கிரந்தத்துக்கு மணியையும் பவழத்தையும் சேர்த்தது போல் ஒரு அழகை உண்டுபண்ணுகின்றன.

இந்தப் பாட்டுகளுக்குமேல் 11 பாட்டுக்கள் சில அதிகாரங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் தத்துவத்திரய சிந்தனாதிகாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற பாட்டு, இருபத்தைந்து தத்துவங்களையும் எம்பெருமான் தன் திருமேனியில் நகைகளாகவும் ஆயுதங்களாகவும் வைத்துக்கொண்டிருக்கிறான் என்று சொல்லுகிறது. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்று குணங்களையுடைய பிரகிருதியிலிருந்து இருபத்துமூன்று தத்துவங்கள் உண்டாகிறபடியால், அதற்கு மூலப்பிரகிருதி என்று பெயர். அதினுடைய ஸ்வரூபத்திற்கு நாசம் கிடையாது. ஆனால் அது எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும், அதிலிருந்து மஹத் உண்டாகிறது; மஹத்திலிருந்து அஹங்காரம். ஸத்துவகுணம் மேலிட்டிருக்கும் அஹங்காரத்திலிருந்து மனதும் பத்து இந்திரியங்களும் உண்டாகின்றன; தமஸ் என்கிற குணம் மேலிட்டிருக்கும் அஹங்காரத்திலிருந்து ஐந்து தந்மாத்திரங்களும் ஐந்து பூதங்களும் உண்டாகின்றன. ஆக இருபத்துமூன்று தத்துவங்கள் பிரகிருதியிலிருந்து உண்டாகின்றன. பிரகிருதியையும் சேர்த்து தத்துவங்கள் இருபத்து நான்கு. ஜீவன் இருபத்தைந்தாவது.

புருடன் மணிவரமாகப் பொன்னு மூலப்
 பிரகிருதி மறுவாக மான்றண் டாகத்
தெருண்மருள்வாண் மறைவாக வாங்கா ரங்கள்
 சார்ங்கஞ்சங் காகமனந் திகிரி யாக
இருடீகங்க ளீரைந்துஞ் சரங்க ளாக
 விருபூத மாலைவன மாலை யாக
கருடனுரு வாமறையின் பொருளாங் கண்ணன்
 கரிகிரிமே னின்றனைத்துங் காக்கின் றனே. (41)

(ப-ரை) புருடன் - ஜீவன், மணிவரம் ஆக - கௌஸ்துபம் என்னும் சிலாக்கியமான மணியாகவும், பொன்னு மூல பிரகிருதி - ஸ்வரூபத்தில் நாசமில்லாத மூலப்பிரகிருதியானது, ஸ்ரீவத்ஸமென்னும் மருவாகவும், மான் - மஹத், தண்டு ஆக - கதையாகவும், தெருள் மருள் - ஞானமும், அஜ்ஞானமும், வாள் மறைவு ஆக - கத்தியாகவும் அதின் உறையாகவும், ஆங்காரங்கள் - அஹங்காரங்கள், சார்ங்கம் - தாமஸாஹங்காரம் சார்ங்கமாகவும், சங்கு

ஆக - ஸாத்துவிகாஹங்காரம் சங்கயாகவும், மனம் - மனது, திகிரியாக - சக்கிரமாகவும்,, இருடீகங்கள் - இந்திரியங்கள், ஈர் ஐந்தும் - பத்தும், சரங்கள் ஆக - பாணங்களாகவும், இருபூதமாலைதன் மாத்திரைகள் ஐந்தும், பூதங்கள் ஐந்தும், வனமாலையாக - வநமாலையாகவும், இப்படி இவைகளை நகைகளாகவும் ஆயுதங்களாகவும் வைத்துக்கொண்டு, கருடன் உருவாம் - கருடனுடைய ரூபமான, மறையின் - வேதத்தினுடைய, பொருள் ஆம் - பொருளாக இருக்கிற கண்ணன், கரிகிரிமேல் - ஹஸ்திகிரியின் மேலே, நின்று - இருந்து, அனைத்தும் - எல்லாவற்றையும், காக்கின்றான் - ரக்ஷிக்கிறான்.

குறிப்பு:— தத்துவங்களைச் சொன்னது அவைகளினுடைய அபிமானிதேவதைகளைச் சொன்னபடி.

ஸ்தாநவிசேஷாதிகாரத்தில் எம்பெருமானை அர்ச்சையாக எழுந்தருளப்பண்ணி பூஜை செய்யும் கோயில் இருக்கிற இடத்தில் பிரபந்நன் இருக்கவேண்டியது என்று சொல்லப்பட்டது. அந்த இடங்களில், கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்று மூன்று பேர்பெற்றவைகள். அவைகளைப் பற்றி ஒவ்வொன்றுக்கும் ஒரு பாட்டை அருளிச்செய்கிறார்.

கோயிலைப் பற்றின பாட்டு.

ஆராத வருளமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தோ னயோத்திமன்னர்க் களித்த கோயில்
தோராத தனிவீரன் றொழுத கோயில்
துணையான வீடணற்குத் துணையாங் கோயில்
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்
தீராத வினையனைத்துந் தீர்க்குங் கோயில்
திருவரங்க மெனத் திகழுங் கோயிறானே. (42)

(ப-ரை) திரு அரங்கம் என - ஸ்ரீரங்கம் என்று, திகழும் - விளங்கும் கோயில்தானே, ஆராத - எவ்வளவு அநுபவித்தாலும் திருப்தி வாராத, அருள் அமுதம் பொதிந்த - கருணையாகிய அமிருதம் நிறைந்த, கோயில், அம்புயத்தோன் - தாமரையிலிருக்கும் பிரம்மாவானவர், அயோத்திமன்னர்க்கு - அயோத்தியின் ராஜா

வான இக்ஷ்வாகுவுக்கு, அளித்த - கொடுத்த, கோயில், தோராத- ஒருபோதும் தோல்வியடையாத, தனிவீரன் - ஒப்பற்ற வீரனான சக்கிரவர்த்தி திருமகன், தொழுத - பூஜை செய்த, கோயில், துணையான-ராவணனோடு சண்டைபோடும்போது தனக்கு ஸஹாயமாக இருந்த, வீடணற்கு - விபீஷணனுக்கு, துணையாம் - ரக்ஷகமான கோயில், சேராத - வேறு எவனாலும் சேர்க்கமுடியாத, பயன் எல்லாம் - தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமென்கிற எல்லா பலன்களையும், சேர்க்கும், கோயில், செழுமறையின் - சிலாக்கியமான வேதத்தினுடைய, முதல் எழுத்து - பிரணவம் என்கிற முதல் எழுத்து, சேர்ந்த கோயில், தீராத வினை அனைத்தும் - வேறு உபாயத்தினால் போக்கமுடியாத பிராரப்தம் முதலான பாபங்களையும், தீர்க்கும் கோயில்.

குறிப்பு:— (1) ஸ்ரீரங்கமென்கிற கோயிலானது திருப்தி வராத கருணையாகிய அமிருதம் நிறைந்த கோயில்; ஸ்ரீரங்கநாதனுடைய கருணையே அந்த ரூபமாக வந்திருக்கிறது என்று கருத்து. எதற்காகவென்றால் ஸம்ஸாரமாகிய காட்டுத்தீயினால் கொளுத்தப்பட்டு வருந்தப்படுகிறவர்களைப்பிழைப்பு மூட்டுவதற்காக. ஆகையால் அவனை அமுதம் என்று பாட்டு சொல்கிறது.

(2) முதலெழுத்துச் சேர்ந்த—பிரணவமானது சேஷியான எம்பெருமானைக்காட்டுகிறதுபோல்,இந்தக்கோயிலானது அவனைக் காட்டுகிறதென்றும், அந்தக் கோயிலுடைய ஆகாரமானது பிரணவத்தின் ஆகாரம்போலிருக்கிறதென்றும் கருத்து.

திருமலையைப் பற்றிய பாட்டு.

கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்புக்
கடுவினைய ரிருவினையுங் கடியும் வெற்புத்
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்புத்
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்புப்
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும் வெற்புப்
பொன்னுலகிற் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும் வேத வெற்பே. (43)

(ப-ரை) வேங்கடவெற்பு என - திருவேங்கடமலையென்று விளங்குகிற, வேதவெற்பு - வேதத்தில் சொல்லப்பட்ட மலை?

னது, கண்ணன் அடியிணை - கிருஷ்ணாவதாரம் செய்த எம்பெருமானுடைய ஒன்றுக்கொன்று ஒப்பான இரண்டு திருவடிகளை, எமக்கு - மிகவும் தாழ்ந்தவர்களான நமக்கு, காட்டும் வெற்பு, கடுவினையர் - கொடுமையான பாபங்களையுடையவர்களுடைய, இருவினையும் - புண்ணியம் பாபம் என்கிற இரண்டுவித கர்மங்களையும், கடியும் - போக்கும்படியான, வெற்பு, திண்ணம் - உண்மையாகவே, வீடு இது என்ன - இது வைகுந்தமென்று சொல்லும்படி, திகழும் - விளங்கும், வெற்பு, தெளிந்த - தெளிவான, பெரும் தீர்த்தங்கள் - ஆகாசகங்கை பாபநாசம் முதலான பெரிய தீர்த்தங்கள், செறிந்த - நிறைந்த, வெற்பு, புண்ணியத்தின்புகல் இது என்ன - புண்ணியங்களுக்கு இது இருப்பிடமென்று சொல்லும்படி, புகழும் - கொண்டாடும்படியான வெற்பு, பொன் உலகில் - அழகிய வைகுந்தத்தில் இருக்கும், போகமெல்லாம் - எல்லா போகங்களையும், புணர்க்கும் - ஒருவனிடம் சேர்க்கும், வெற்பு, விண்ணவரும் - நித்தியஸூரிகளும், மண்ணவரும் - பூமியிலுள்ளவர்களும், விரும்பும் - ஆசைப்படும், வெற்பு.

குறிப்பு:— முதலடிக்கு வேறு விதமாயும் பொருள் சொல்லலாம்— ஸ்ரீநிவாஸன் வலது திருக்கையால் தன் திருவடிகளைக் காட்டி இவைகளை நீங்கள் அடையுங்கள் என்று காட்டுகிற மலை என்று.

பெருமாள் கோயிலைப் பற்றின பாட்டு.

உத்தம வமர்த்தல மமைத்தோ
  ரெழிற்றனு வுயர்த்த கணையால்
அத்திர வரக்கன்முடி பத்துமோரு
  கோத்தென வுதிர்த்த திறலோன்
மத்துறு மிகுத்ததயிர் மொய்த்தவெணை
  வைத்ததுணு மத்த னிடமா
மத்திகிரி பத்தர்வினை தொத்தற
  வறுக்குமணி யத்தி கிரியே. (44)

(ப-ரை) உத்தமம் அமர்த்தலம் - எம்பெருமான் சக்கிரவர்த்தி திருமகனாய் அவதரித்த காலத்திலிருந்த ஒப்பற்ற போர்க்களத்தில், அமைத்தது - இருந்ததான, ஓர் - ஒப்பற்ற, எழில்

தனு - அழகான வில்லாலே, உயர்த்த - விடப்பட்ட, கணையால்-பாணத்தால், அத்திரம் அரக்கன் - அஸ்திரங்களையுடைய ராக்ஷஸனை ராவணனுடைய, முடிபத்தும் - பத்துத் தலைகளும், ஒரு கொத்து என - ஒரு பனம்பழக்கொத்துபோல, உதிர்த்த - கீழே உதிரும்படி செய்த, திறலோன் - ஸாமர்த்தியமுடையவனும், மத்துஉறுமிகுத்த தயிர் - மத்தை வைத்துக்கடையும்படியான அதிகமான தயிரில், மொய்த்தவெண்ணெய் - மேலே வந்த வெண்ணெய்யை, வைத்து - உறியில் வைத்ததை யெடுத்து, அது உணும் - அதைச் சாப்பிடுகிற, அத்தன்-நமக்கு வேண்டியவனுயுமிருந்த எம்பெருமானிருக்கும், இடமாம் - இடமான, அத்தி கிரி-ஹஸ்தி மலையானது, பத்தர்வினை - பக்தர்களுடைய கர்மங்களை, தொத்து அற - வாஸனையுடன், அறுக்கும் - அறுத்துவிடும், அத்திகிரி - அந்த சக்கிராயுதமானது, அணி - அது செய்யும் வேலையை மலை செய்துவிட்டபடியால் அது திருக்கைக்கு வேறும் அலங்காரமே.

குறிப்பு:— (1) முதல் 'அத்தி கிரி' என்பதற்கு ஹஸ்திகிரி என்றும், இரண்டாவது 'அத்திகிரி' என்பதற்கு சக்ரம் என்றும் பொருள்.

மூலமந்திர அதிகாரத்தில் மூலமந்திரத்தினால் ஸித்தி அடைந்தவனை ஸ்தோத்ரம் பண்ணுகிற இடத்தில் ஒரு பாட்டு.

எட்டுமா மூர்த்தி யெண்கண்ண னெண்டிக்
　கெட்டிறை யெண்பிர கிருதி
எட்டுமா வரைக ளீன்றவெண் குணத்தோ
　னெட்டெனு மெண்குண மதியோர்க்
கெட்டுமா மலரெண் சித்தி யெண்பத்தி
　யெட்டு யோகாங்க மெண்செல்வம்
எட்டுமா குணமெட் டெட்டெனுங் கலையெட்
　டிரதமே லனவுமெட் டினவே. (45)

(ப-ரை) எட்டு மா மூர்த்தி - எட்டுப் பெரிய உடம்புகளை உடைய ருத்திரன், எண்கண்ணன் - நான்கு முகங்களில் எட்டுக் கண்களையுடைய பிரம்மா, எண்திக்கு - எட்டுத் திக்குக்கள், எட்டு இறை - கிழக்கு முதலான எட்டுத் திக்குகளுக்குப் பாலகர்களான இந்திரன் முதலான எட்டு திக்பாலர்கள், எண் பிரகிருதி -

ஐந்து பூதங்கள், மஹத், அஹங்காரம், மனது ஆகிய எட்டுவித மான பிரகிருதிகள், எட்டு மா வரைகள்-ஹிமயம் முதலான எட்டு பெரிய மலைகள், ஈன்ற எண் குணத்தோன் - இவைகளையெல்லாம் உண்டுபண்ணின எட்டு குணமுள்ளவனான எம்பெருமான், எட்டு எனும் - இவ்விதமான எம்பெருமானைச் சொல்லுகிற எட்டெழுத்தாகிய மூலமந்திரத்தை அநுஸந்தாநம் பண்ணுகிற, எண் குணம் மதியோர்க்கு - எட்டுக் குணமுள்ள புத்திமான்களுக்கு, மேலே சொல்லப்போகிறவைகளில் கிடைக்காதது ஒன்றுமில்லை. எட்டு மா மலர் - எட்டுப் பெரிய புஷ்பங்கள், எண்சித்தி - எட்டு ஸித்திகள், எண்பத்தி - எட்டுவிதங்களான பக்திகள், எட்டு யோகாங்கம் - யமம், நியமம், ஆஸநம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியாநம் ஆகிய இந்த ஏழு அங்கங்களுடன் சேர்ந்த ஸமாதி, எண் செல்வம் - அணிமா முதலான எட்டு ஐசுவரியங்கள், எட்டுமாகுணம் - எட்டுப் பெரிய குணங்கள், எட்டு எட்டு எனும் கலை - அறுபத்துநான்கு கலைகள், எட்டு இரதம் மேலனவும் - எட்டு ரஸங்களுக்கு மேலான சாந்தி ரஸமும், இவைகளெல்லாம் மூலமந்திரத்தை அநுஸந்தாநம் பண்ணுகிறவர்களுக்குப் பிரயாஸமில்லாமல் வரும்.

குறிப்பு:— (1) ருத்திரனுடைய எட்டு உடப்புகளாவன— ஐந்து பூதங்கள், சந்திரன், ஸூரியன், யாகம் பண்ணுகிறவன்.

(2) எம்பெருமானுடைய எட்டு குணங்களாவன— கர்மத்துக்கு உட்படாமை, கிழத்தனமில்லாமை, மரணமில்லாமை, பசியில்லாமை, தாஹமில்லாமை, சோகமில்லாமை, நித்தியமான போகங்களை யுடையவனாயிருப்பது, நினைத்ததை முடிக்கவல்லனாய் இருப்பது.

(3) புத்தியின் எட்டு குணங்கள்— (1) சொல்லும் விஷயத்தை வாங்கிக்கொள்வது, (2) அதை மறந்துபோகாமல் வைத்துக்கொள்வது, (3) அதை நினைவுக்குக் கொண்டுவருவது, (4) பிறருக்குச் சொல்லுவது, (5) சொல்லாத விஷயத்தைச் சேர்த்துக்கொள்வது, (6) சொல்லியிருப்பதை விடவேண்டிய இடத்தில் விட்டுவிடுவது, (7) அர்த்தத்தை நன்றாய் அறிவது, (8) உண்மையை அறிவது.

(4) எட்டுப் புஷ்பங்களாவன— (1) ஒருவனுக்கும் தீங்கு செய்யாமை, (2) இந்திரியங்களை யடக்குவது, (3) எல்லாரிடத்தும்

இரக்கமுள்ளவனாயிருப்பது, (4) ஒருவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்வது, (5) தன்னையும் எம்பெருமானையும் பற்றிய அறிவு, (6) தபஸ், அதாவது போகங்களைக் குறைத்துக் கொள்ளுதல், (7) தியாகம், (8) உண்மை பேசுவது. புஷ்பங்கள் எப்படி எம்பெருமானுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்குமோ, அப்படியே இந்த எட்டும் அவனுக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பதால் புஷ்பங்கள் என்று சொல்லப்படுகின்றன.

(5) எட்டு ஸித்திகளாவன— இதை யெடுத்துக்கொள்ள வேண்டியது, இதை விடவேண்டியதென்கிற விசாரமாகிய ஊஹம், யுக்திகளைக் கொண்டு விசாரிப்பதாகிய தர்க்கம், ஆசாரியனிடத்தில் ஒரு விஷயத்தைக் கேட்பது, மூன்று விதங்களான துக்கங்களைப் போக்குவது, வேண்டியவனுடன் சேருவது, தானம். எட்டு ஸித்திகளை வேறுவிதமாயும் சொல்லலாம். அவைகளாவன— (1) அத்யயநம்: (2) அங்கங்களைப் படிப்பதாலுண்டாகும் வேதத்தின் அர்த்த ஜ்ஞாநம், (3) நியாயங்களைக்கொண்டு விசாரித்து அர்த்தம் இன்னதென்று தீர்மானிப்பது, (4) பெரியோருடன் சேர்ந்து தான் அறிந்ததை ஸ்திரப்படுத்திக்கொள்வது, (5) ஸந்தேஹமும் தப்பெண்ணமுமில்லாமல் உண்மையான அர்த்தத்தை எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பது, (6,7,8) மூன்று தாபங்கள் போவது. தாபங்களாவன— தன் உடம்பினாலுண்டாவது, மழை காற்று முதலான தேவர்களாலுண்டாவது, பிராணிகளால் உண்டாவது.

(6) எட்டு பக்திகள்— இதைப் பற்றி 52-வது பக்கம் புருஷார்த்தகாஷ்டாதிகாரத்தின் 1-வது பாராவைப் பார்க்க.

(7) எட்டுச் செல்வங்களாவன— தன்னுடைய உடம்பை ஸூக்ஷ்மமாகப் பண்ணிக்கொள்வது- அணிமா; அதைப் பெரிதாகப் பண்ணுவது- மஹிமா; அதைக் கனமில்லாமல் பண்ணுவது- லகிமா; அதைக் கனமுள்ளதாகப் பண்ணுவது- கரிமா; இதற்கு உடம்பை எல்லாரும் ஆசைப்படும்படியாய் பண்ணுவதென்றும் பொருள் கொள்ளலாம். எல்லாரையும் தன் வசப்படுத்திக்கொள்வது- வசித்வம்; எல்லாரையும் நியமநம் பண்ணுவது- ஈசுவரியம்; தனக்கு வேண்டியதை யடைவது- ப்ராப்தி; தான் நினைத்ததற்குத் தடையில்லாமை- பிராகாமியம்

(8) எட்டுமோ குணம்— இவைகள் ஒருவன் மோக்ஷத்தை யடையும்போது தோன்றும். அவைகள் கீழே எம்பெருமானுக்குச் சொன்ன குணங்கள்.

சரமச்லோகாதிகாரத்தில் நான்கு பாட்டுக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் முதல் பாட்டு.

ஒண்டொடியாள் திருமகளுந் தானு மாகி
யொருநினைவா லீன்றவுயி ரெல்லா முய்ய
வண்டுவரை நகர்வாழ வசுதே வர்க்காய்
மன்னவர்க்குத் தேர்ப்பாக னாகி நின்ற
தண்டுளவ மலர்மார்பன் றானே சொன்ன
தனித்தருமந் தானெமக் காய்த் தன்னை யென்றுங்
கண்டுகளித் தடிசூட விலக்காய் நின்ற
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின் றானே. (46)

(ப-ரை) ஒண் தொடியாள்-விளங்குகிற கைவளைகளையுடைய, திருமகளும் - பிராட்டியும், தானும் ஆகி, ஒரு நினைவால் - ஒரே ஸங்கல்பத்தாலே. ஈன்ற உயிர் எல்லாம்-உண்டுபண்ணின எல்லா ஜீவன்களும், உய்ய - பிழைப்பதற்காக, வண் துவரை நகர் வாழ - மஹிமை பொருந்திய துவாரகையென்னும் பட்டணத்திலிருக்கும் ஜநங்கள் வாழும்படி, வசுதேவர்க்கு ஆய் - வஸுதேவர்க்குத் திருமகனாய் அவதாரம் செய்து, மன்னவற்கு-ராஜாவான அர்ஜுநனுக்கு, தேர் பாகன் ஆகிநின்ற, தண் துளவம் மலர்மார்பன்-குளிமையான துளஸீ புஷ்பமாலையை மார்பிலுடையவனான எம்பெருமான், தானே சொன்ன, தனி தருமம்தான் - ஒப்பில்லாத ஸித்தோபாயனான அவன், எமக்காய்-நமக்கு உபாயமாக ஆகி, தன்னை, என்றும் - எப்போதும், கண்டு, களித்து - ஸேவித்து ஸந்தோஷப்பட்டு, அடிசூட - அவன் திருவடிகளில் கைங்கரியம் பண்ணுவதற்கு, விலக்காய் நின்ற - பிரதிபந்தகமாயிருந்த, கண்புதையல் விளையாட்டை - கண்ணுமூச்சி விளையாட்டை, கழிக்கின்றான் - விட்டுவிடுகின்றான்.

(கருத்து) எம்பெருமான் பிராட்டியுடன் கூட ஒரே மனதினால் உண்டுபண்ணின எல்லா ஆத்மாக்களும் பிழைப்பதற்காக, துவாரகை என்னும் பட்டிணத்தின் ஜனங்கள் வாழும்படி வஸுதேவருக்குத் திருமகனாய் அவதாரஞ் செய்து, பிறகு அர்ஜுந

ளுகிய ராஜாவை ரதத்தில் வைத்துத் தான் அந்த ரதத்தை ஓட்டிக்கொண்டு நின்று, தானே ஸ்ரீகீதையை உபதேசம் பண்ணினன். அதன் கடைசி சுலோகத்தில் ஸித்தோபாயமாக காட்டப்பட்ட அவனை நாம் ஸமர்ப்பித்த ஆத்மரக்ஷாபரத்தை ஒப்புக்கொண்டு, நாம் திருநாட்டுக்குப் போய் எப்போதும் அவனை ஸேவித்து ஸந்தோஷப்பட்டு, அவனுக்குக் கைங்கரியங்கள் செய்வதற்கு விலக்காய் நின்ற கர்மபந்தத்தை நடத்துகிற விளையாட்டை விட்டுவிடுகிறான்.

குறிப்பு:— (1) பிராட்டியுடன் கூட ஆத்மாக்களை உண்டு பண்ணினன் என்பதினால், உண்டுபண்ணி, ரக்ஷித்து, அழிப்பதையும், மோக்ஷம் கொடுப்பதையும் எம்பெருமானொருவனே செய்கிறதில்லை என்றும், பிராட்டியுடன் கூடவே நின்று செய்கிறான் என்றும் காட்டப்படுகிறது. ஆகையினால் சரம ச்லோகத்தில் என்னை (மாம்) என்று தன்னை மாத்திரம் சொன்னபோதிலும், அதற்குத் தன்னையும் பிராட்டியையும் என்று பொருள். இது த்வயம் என்கிற ரஹஸ்யத்தில் தெளிவாய் விளங்குகிறது.

(2) ஆத்மாக்கள் பிழைப்பதற்காக என்பதற்கு தானே உபதேசம் செய்தான் என்பதுடன் ஸம்பந்தம்.

(3) வாழும்படி என்பதற்குத்திருமகனாய் அவதாரம் செய்து என்பதுடன் ஸம்பந்தம்.

(4) தானே உபதேசம் செய்தான். வேறொருவன் முகமாய் இதைச் செய்யவில்லை.

(5) பாட்டில் 'தனித் தருமம்' என்று சொல்லியிருக்கிறது. தருமம் என்றால் ஒரு பலனை ஒருவன் அடைவதற்கு ஸாதனம் என்று பொருள். அந்த ஸாதனம் இரு வகைப்படும். (1) பலனைக் கொடுக்கிறவன். (2) அவனை அதைக் கொடுக்கும்படி செய்வது மற்றொன்று. முதல் உபாயத்தை ஸித்தோபாயம் என்றும், இரண்டாவதை ஸாத்திய உபாயம் என்றும் சொல்லுகிறது. இங்கே எம்பெருமான் முதலில் சொன்ன உபாயம்.

6. இதுவரையில் நாம் எம்பெருமானிடம்போய் அவனை அநுபவித்துக் கைங்கரியம் செய்வதற்குத் தடையாய் இருந்தது எம்பெருமானுடைய விளையாட்டு. குழந்தைகள் ஒருவன் கண்ணைக்கட்டி மற்றவர்களைப் பிடிக்கும்படி செய்து அவன் அங்கும்

இங்கும் திரிவதைப்பார்த்து ஸந்தோஷப்படுகிறார்கள். அப்படியே எம்பெருமானும் தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் இவைகளில் நமக்கு உண்மையான அறிவில்லாமல் செய்து விஷயங்களை அநுபவிப்பதற்காக அங்குமிங்கும் ஓடுவதைப் பார்த்து லீலாரஸத்தை அநுபவிக்கிறான். அவனிடம் நாம் பிரபத்தி பண்ணினவுடன் நம்முடைய விஷயத்தில் தன் விளையாட்டை முடித்துக் கொண்டு நமக்கு அறிவைக்கொடுத்து தன்னிடம் அழைத்துக் கொண்டு போகிறான்:

சரமச்லோகத்தில் 'எல்லாதர்மங்களையும் விட்டு' என்பதை விதியாகக்கொண்டு அப்படி விடுவது பிரபத்திக்கு அங்கமென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த பக்ஷத்தில் அந்த வாக்கியத்திற்கு ஸரியான பொருள்களைப் பாட்டினால் அருளிச்செய்கிறார்.

மூண்டாலு மரியதனின் முயல வேண்டா
  முன்னமதி லாசைதனை விடுகை திண்மை
வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு
  வேண்டிலயனத்திரம்போல் வெள்கி நிற்கும்
நீண்டாகு நிறைமதியோர் நெறியிற் கூடா
  நின்றனிமை துணையாக வென்றன் பாதம்
பூண்டா லுன்பிழை களெல்லாம் பொறுப்பே னென்றப்
  புண்ணியனார் புகழனைத்தும் புகழுவோமே (47)

(ப-ரை) அரியதனில் - செய்யமுடியாத உபாயத்தை, மூண்டாலும் - செய்ய ஆரம்பித்தாலும், முயலவேண்டாம் - அதில் பிரயாஸப்படவேண்டாம், முன்னம் - செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே, அதில் ஆசைதனை - அதைச் செய்யவேண்டும் என்கிற ஆசையை, விடுகை - விடுவது, திண்மை - நல்லது. சரணநெறி - பிரபத்தியாகிய உபாயமானது, வேறு ஓர் கூட்டு - வேறொன்றின் சேர்க்கையை, வேண்டாது, வேண்டில் - ஒருவன் தன் புத்தியினால் ப்ரபத்திக்கு ஒன்றை அங்கமாக எண்ணிச் செய்தால், அயன் அத்திரம்போல் - பிரம்மாஸ்த்ரம்போல் வெள்கி - வெட்கப்பட்டு, நிற்கும், நிறைமதியோர்-நிறைந்த புத்தியையுடையவர்கள், நீண்டாகும் - நீண்டகாலம் செய்து முடிக்கவேண்டிய, நெறியில் - மார்க்கத்தில், அதாவது பக்தி யோகத்தில், கூடா-சேராத, நின் - உன்னுடைய, தனிமை - உபா

யமில்லாமலிருக்கும் இருப்பை, துணையாக, என் தன் பாதம் - என்னுடைய திருவடிகளை, பூண்டால் - சரணமாகப் பற்றினால், உன் பிழைகளெல்லாம் பொறுப்பேன், என்ற - என்று சரமச்லோகத்தில் சொல்லுகிற, புண்ணியனார் - ஸநாதநதர்மமென்று சொல்லப்பட்ட எம்பெருமானுடைய, புகழ் அனைத்தும் - புகழும்படியான எல்லா நல்ல குணங்களையும், புகழுவோம் - பிரீதியுடன் கொண்டாடுவோம்.

(கருத்து) ஒருவன் தன்னாலே செய்ய முடியாத கர்மயோகம் முதலானவைகளைச் செய்ய ஆரம்பித்தாலும் அவைகளில் மறுபடியும் பிரயாஸப்படவேண்டாம். இது ஒரு அர்த்தம். (2) அவைகளைச்செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அவைகளைச் செய்யவேணுமென்கிற ஆசையைவிட்டு அவைகளை ஆரம்பிக்காமல் இருப்பதே நல்லது. (3) பிரபத்தி ஆகிய உபாயமானது பரிகரவிபாக அதிகாரத்தில் சொன்ன ஐந்து அங்கங்களைத் தவிர வேறு அங்கங்களை வேண்டுகிறதில்லை. (4) ஒருவன் தன் புத்தியினால் பிரபத்திக்கு ஒன்றை அங்கமாக எண்ணிச் செய்தால் பிரம்மாவினுடைய அஸ்திரமானது வேறொன்றினுடைய சேர்க்கையைப் பொறுக்காமல் வெட்கப்பட்டு ஒதுங்கியிருப்பதுபோல், பிரபத்தியும் விலகி நிற்கும். ஆகையால் வெகுகாலம் செய்து முடிக்கக் கூடிய பக்தியோகத்தைச் செய்யமுடியாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிற நீ, இப்படி வேறு உபாயமில்லாமல் இருக்கிற உன்னுடைய தாழ்மையைத் துணையாகக்கொண்டு, என்னுடைய திருவடிகளை உபாயமாகப்பற்றினால், நான் உன்னுடைய எல்லாப் பிழைகளையும் பொறுப்பேன் என்று எம்பெருமான் தானே அருளிச்செய்திருக்கிறான். அவ்விதமான வாத்ஸல்யத்தையுடைய எம்பெருமானுடைய கல்யாண குணங்களை நாம் கொண்டாடுவோம்.

குறிப்பு:— பாட்டில் முதல் இரண்டு அடிகளால் எல்லா தருமங்களை விட்டு என்பதற்குச் சரியான பொருள் சொல்லப்பட்டது. மூன்றாவது அடியால் சரணம் விரஜ என்பதின் பொருளும், நான்காவது அடியால் சுலோகத்தின் இரண்டாவது பாதியின் பொருளும் சொல்லப்பட்டன.

"என்னை ஒருவனையேஉபாயமாகப்பற்று" என்பதில் ஒருவனை யே என்பதற்குப் பொருளைப் பாட்டாலே அருளிச் செய்கிறார்.

சாதனமு நற்பயனு நானே யாவன்
சாதகனு மேன்வசமா யென்னைப் பற்றும்
சாதனமுஞ் சரணநெறி யன்று மக்குச்
சாதனங்க ளிந்நிலைக்கோ ரிடையி னில்லா
வேதனைசேர் வேறங்க மிதனில் வேண்டா
வேறெல்லா நிற்குநிலை நானே நிற்பன்
தூதனுமா நாதனுமா மென்னைப் பற்றிச்
சோகந்தீ ரெனவுரைத்தான் சூழ்கின் றானே (48)

(ப-ரை) நல் பயனும் - நீ வேண்டுகிற நல்ல பலனும், சாதனமும் - அதற்கு வேண்டிய (ஸித்த) உபாயமும், நானே ஆவன், சாதகனும் - ஸாத்தியமான உபாயத்தைச் செய்கிறவனும், என் வசமாய், என்னை பற்றும் - என்னை உபாயமாகப் பற்றுவன், சரணநெறி-ஸாத்திய உபாயமான பிரபத்தியும், உமக்கு, சாதனமும் - முக்கியமான சாதனமும், அன்று, சாதநங்கள் - பக்தியாகிய ஸாதநங்கள், இ நிலைக்கு - இந்த பிரபத்திக்கு, ஓர் இடையில் நில்லா - நடுவில் இருக்காது. வேதனைசேர்-துக்கம் சேர்ந்த, வேறு அங்கம் - வேறு அங்கங்களை, இதனில் - இந்த பிரபத்தியானது, வேண்டா-வேண்டாது, வேறுஎல்லாம் நிற்கும்-வெவ்வேறு பலன்களுக்கு உபாயமாகச் சொல்லப்பட்டவைகளின், நிலை - நிலையில், நானே நிற்பன் - நானேயிருப்பன், தூதனும் - தூதனும், நாதனும்-நாதனுமிருக்கிற, என்னைப் பற்றி, சோகம் தீர் என - உன்னுடைய சோகத்தை விட்டுவிடு என்று, உரைத்தான் - சொன்னவன், சூழ்கின்றான் - வளைத்துக்கொள்ளுகிறான்.

(கருத்து) 1. நீ வேண்டுகிற நல்ல பலனும் அதற்கு உபாயமும் நானே. அதாவதுஉனக்குப்பலனான நானே உனக்கு அதைக் கொடுப்பேன்: 2. பிரபத்தியைச் செய்கிற நீயும் எனக்குட்பட்டு என்னை உபாயமாய் பற்றுகிறாய். ஆகையால் நீ பிரதானமான உபாயமன்று; நானே பிரதானமான உபாயம். 3. நீ செய்கிற பிரபத்தியானது உனக்கு மோக்ஷத்தைக் கொடுக்கிற உபாயமன்று, அது வியாஜமாத்திரம், கொடுக்கிறவன் நானே. 4. பக்தி யோகம் செய்கிறவன் முதலில் பிரபத்தி பண்ணி பிறகு பக்தி

யோகத்தைச் செய்து மோக்ஷத்தை அடைகிறான். அப்படி பக்தியானது பிரபத்திக்கும் மோக்ஷத்திற்கும் நடுவில் அங்கியாக இருக்கவில்லை. பிரபத்தியே நேரே மோக்ஷம் கிடைக்கும்படி செய்யும். 5. பரிகரவிபாக அதிகாரத்தில் சொன்ன அங்கங்கள் தவிர கஷ்டப்பட்டுச் செய்யும்படியான வேறு அங்கங்கள் பிரபத்திக்கு வேண்டியதில்லை. 6. எவனெவனுக்கு எந்தெந்த உபாயம் செய்யமுடியாமல் வருத்தம் உண்டாகிறதோ, அவனவனுக்கு அந்தந்த உபாயங்களின் ஸ்தாநத்தில் நான் இருந்து அவனவன் வேண்டுவதைக் கொடுப்பேன். இப்படி 'என்னை ஒருவனையே' என்கிற சொல்லுக்கு அர்த்தம் கொள்ளலாம். இப்படி உனக்கு ஸ்வாமியாய், வாத்ஸல்யத்தினாலே பாண்டவர்களுக்குத் தூதனைப்போன என்னை உபாயமாக நீ பற்றி உன்னுடைய துக்கத்தைத் தீர் என்று சொன்ன எம்பெருமான் தன் லாபமாக தானே வந்து நம்மை வளைக்கிறானே.

இந்த அதிகாரத்தின் நாலாவது பாட்டு

தன்னினைவில் விலக்கின்றித் தன்னை நண்ணார்
நினைவனைத்துந் தான்விளைத்தும் விலக்கு நாதன்
என்னினைவை யிப்பவத்தி லின்று மாற்றி
யிணையடிக்கீ ழடைக்கலமென் றென்னை வைத்து
முன்னினைவால் யான்முயன்ற வினையால் வந்த
முனிவயர்ந்து முத்திதர முன்னே தோன்றி
நன்னினைவா லுமிசையுங் கால மின்றே
நாளையோ வென்றுநகை செய்கின் றானே (49)

(ப-ரை) தன் நினைவில் - தன்னுடைய ஸங்கல்பத்திற்கு. விலக்கு இன்றி - தடையில்லாமல் தன்னை நண்ணார் - தன்னை அடையாதவர்களுடைய, நினைவு அனைத்தும் - எண்ணங்கள் எல்லாவற்றையும், தான் விளைத்து - தானே உண்டுபண்ணி, விலக்கும் - போக்கும்படி பண்ணுகிற, நாதன், என் நினைவை - என்னுடைய எண்ணத்தை, இ பவத்தில் - இந்த ஜந்மத்தில், இன்று, மாற்றி - ஏதோ ஒரு விஷயத்தைக் கொண்டு மாற்றி, இணை அடிக்கீழ் - தன்னுடைய இரண்டு திருவடிகளின் கீழ், என்னை அடைக்கலம் என்று வைத்து - என்னை ரக்ஷிக்கவேண்டிய வஸ்துவாக எண்ணிவைத்து, முன் நினைவால் - முன்னாலேயிருந்த என்னு

டைய தப்பெண்ணங்களாலே, யான் முயன்ற வினையால் - நான் செய்த கர்மங்களாலே, வந்த - உண்டான, முனிவு - கோபத்தை, அயர்ந்து-விட்டுவிட்டு, முத்தி தர - மோக்ஷத்தைக் கொடுப்பதற்கு, முன்னே தோன்றி, நல் நினைவால் - நல்ல எண்ணத்தாலே, நாம் இசையும் காலம் - வைகுந்தத்திற்கு வருகிறோம் என்று நாம் ஒப்புக்கொள்ளும் காலமானது, இன்றோ நாளையோ என்று, நகை செய்கின்றான் - சிரிக்கிறான்.

(கருத்து) எம்பெருமான் எவன் தன்னை அடையவில்லையோ அவனுடைய எல்லா எண்ணங்களையும் தானே உண்டாக்கி அவைகள் போரும்படியாகவும் செய்கிறான். இப்படி அவன் ஸங்கல்பத்தினாலே செய்யும்போது அவனைத் தடுப்பவர் ஒருவருமில்லை. இப்படிப்பட்ட என் ஸ்வாமியான எம்பெருமான் இந்தப் பிறப்பில் ஸம்ஸாரத்தில் உண்டாகும் என்னுடைய ஆசைகளை யாதிருச்சிக ஸுக்ருதம் முதலான வியாஜம் உண்டான இப்போது மாற்றி, என்னைத் தன்னாலே ரக்ஷிக்க வேண்டியவஸ்துவாக தன்னுடைய திருவடிகளில் வைத்தான். முன்னாலே உடம்பே ஆத்மா என்கிற எண்ணத்தினால் நான் செய்த கர்மங்களினால் உண்டான கோபத்தை அதாவது நிக்ரஹம் செய்யவேணுமென்கிற எண்ணத்தை விட்டுவிட்டு, மோக்ஷத்தைக்கொடுப்பதற்காக முன்னாலே தோன்றுகிறான். நாம் நல்ல நினைவினால் உடனே திருநாட்டுக்கு வருகிறோம் என்று சொல்லுவோமா? அல்லது இங்கே கொஞ்சகாலமிருந்து உடம்பு கீழே விழுந்தவுடன் வருகிறோம் என்று சொல்லுவோமாவென்று சிரிக்கிறான்.

ஆசாரியகிருத்ய அதிகாரத்தில் சேர்த்திருக்கும் பாட்டு. இந்த ரஹஸ்யத்ரய ஸாரத்தை எம்பெருமான் ஸ்ரீ தேசிகனுக்குத் தெளிவாகக் காட்டி, அதைப் பிழையில்லாமல் எழுதும்படி செய்தான் என்று அந்த இடத்தில் சொல்லியிருக்கிறது. இதற்கு உதாரணமாக முதலாழ்வார் மூன்று பேர்கள் இருக்குமிடத்தில் எம்பெருமான் வந்து, இருட்டு வேளையில் அவர்களை நெருக்கியபோது, அவர்கள் ஜ்ஞானத்தினால் எம்பெருமானைத் தெரிந்துகொண்டு, மூன்று அந்தாதிகளைப்பாடினார்கள். இப்படி எம்பெருமான்தான் அவர்களைப் பாடும்படி செய்தான் என்று ஒரு பாட்டை அருளிச் செய்கிறார்.

பாட்டுக் குரிய பழையவர் மூவரைப் பண்டோருகால்
மாட்டுக் கருடரு மாயன் மலிந்து வருத்துதலால்
நாட்டுக் கிருள்செக நான்மறை யந்தி நடைவிளங்க
வீட்டுக் கிடைகழிக் கேவெளி காட்டுமிம் மெய்விளக்கே.

(ப-ரை) பாட்டுக்குஉரிய - எம்பெருமானைப்பாட்டுக்களாலே ஸ்தோத்திரம் பண்ணத் தகுந்தவர்களான, பழையவர் மூவரை - முதலாழ்வார்கள் மூன்று பேரை, பண்டு ஒருகால் - முன்னே ஒரு காலத்தில், மாட்டுக்கு - தனத்துக்கு, அதாவது தன்னுடைய விபூதிகளான ஜீவன்களுக்கு, அருள் தரும் - கிருபை செய்யும், மாயன் - ஆச்சரியங்களான வேலைகளைச் செய்யும் எம்பெருமான், மலிந்து - மிகவும், வருத்துதலால் - வருத்தப்படுத்தினதால், நாட்டுக்கு - லோகத்துக்கு, இருள் - அஜ்ஞானம், செக - போகும்படியாயும், நால் மறை அந்தி - நான்கு வேதங்களின் முடிவிலிருக்கிற உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட, நடை - பக்தி பிரபத்தி என்கிற உபாயங்கள், விளங்க - நன்றாய் தெரியும்படியும், வீட்டுக்கு இடைகழிக்கு - ஒரு வீட்டின் ரேழியில் உண்டான, இ மெய்விளக்கு - உண்மையைக் காட்டும்படியான அந்தாதிரூபமான விளக்கானது, வெளிகாட்டும் - பிரகாசத்தை யுண்டுபண்ணும்.

(கருத்து) முதலாழ்வார்கள் மூன்று பேர்களை முன்னொரு காலத்தில் எம்பெருமான் ஒரு ரூபம் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு நடுவே புகுந்து அவர்களை நெருக்கினான். எதற்காகவென்றால் அவன் தன்னுடைய ஸொத்தான ஜீவன்களுக்குக் கிருபைசெய்கிற ஆச்சரியமான வேலைகளைச்செய்பவனாகையாலே, இவர்களைக் கொண்டு அந்தாதிகளைச் செய்வித்து அவைகளைக் கொண்டு அந்த ஜீவன்களைப் பிழைப்பிக்கவேண்டுமென்று. அந்த ஆழ்வார்கள் இருந்த வீட்டின் ரேழியில் அவர்கள் செய்த அந்தாதிரூபமான ஒரு விளக்கு உண்டாயிற்று. அவை நான்கு வேதங்களில் கடைசி பாகமான உபநிஷத்துகளில் சொல்லப்பட்ட பக்தி, பிரபத்தி என்கிற உபாயங்களை நன்றாய் வெளியிடுகின்றன. அவைகளாலே லோகத்திலுள்ள அஜ்ஞாநமாகிய இருள் போய் விட்டது. ஆகையால் அவைகள் விளக்குப்போல் இருந்தன. உண்மையான உபாயங்களைக் காட்டுவதினால் அவைகளை மெய் விளக்கு என்று பாட்டு சொல்லுகிறது.

நிகமநாதிகாரத்தில் எம்பெருமானுடைய திருவடிகளை ஒருவன் உபாயத்தைச் செய்யும்போதும், பிறகு அதின் பலனை அநுபவிக்கும்போதும் அவனுக்கு உபஜீவ்யங்கள் என்று சொல்லப்பட்டன. அந்தத்திருவடிகளை ஒரு பாட்டாலே ஸ்தோத்திரம் செய்கிறார்.

உறுசகட முடைய வொருகாலுற் றுணர்ந்தன
  உடன்மருத மோடிய வொருபோதிற் றவழ்ந்தன
உறிதடவு மளவி லுரலூடுற்று நின்றன
  உறுநெறியோர் தருமன் விடுதூதுக் குகந்தன
மறநெறியர் முறிய பிரதானத்து வந்தன
  மலர்மகள் கைவருட மலர்போதிற் சிவந்தன
மறுபிறவி யறுமுனிவர் மாலுக்கி சைந்தன
  மனுமுறையில் வருவதோர் விமானத் துறைந்தன
அறமுடைய விசயனமர் தேரிற் றிகழ்ந்தன
  அடலுரக படமடிய வாடிக் கடிந்தன
அறுசமய மறிவரிய தானத் தமர்ந்தன
  அணிகுருகை நகர்முனிவர் நாவுக் கமைந்தன
வெறியுடைய துளவமலர் வீறுக் கணிந்தன
  விழுகரியோர் குமரனென மேவிச் சிறந்தன
விறலசுரர் படையடைய வீயத் துடர்ந்தன
  விடலரிய பெரியபெருமாள்மெய்ப் பதங்களே. (51)

(ப-ரை) விடல் அரிய - ஜ்ஞாநிகளாலே விடமுடியாத, பெரிய பெருமாள் - ஸ்ரீரங்கநாதனுடைய, மெய் பதங்கள் - மிருதுவான திருவடிகள், உறுசகடம் - பலமுள்ள ஒரு வண்டி ரூபமாயிருந்த ஒரு அஸுரன், உடைய - உடைந்துபோகும்படி, ஒருகால் - ஒரு காலத்தில், உற்று - ஜாக்கிரதையாய், உணர்ந்தன - விழித்துக்கொண்டிருந்தன; உடன் மருதம் - ஒன்றோடொன்று சேர்ந்திருந்த மருதமரங்கள், ஓடிய - ஒடிந்து கீழே விழும்படி, ஒருபோதில் - ஒரு காலத்தில், தவிழ்ந்தன - தவிழ்ந்து அவைகளின் நடுவே போயின; உறி தடவும் அளவில் - உரியில் வைத்த வெண்ணெய்யையும் தயிரையும் எடுக்கும்போது, உரலூடு - கோபங்கொண்ட யசோதையால் உரலோடு கட்டப்பட்டு, உற்றுநின்றன - அத்தோடு சேர்ந்து நின்றன; உறுநெறி - யோக்கியமான நல்ல

வழியையுடைய, ஓர் - ஒப்பில்லாத, தருமன் - தருமபுத்திரனால், விடு - விடப்பட்ட, தூதுக்கு - தூதன் செய்யும் வேலையை, உகந்தன - ஸந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டன; மறநெறியோர்-கோபத்தையே ஸ்வபாவமாகவுடைய விரோதிகள், முறிய-நாசமாகும்படி, பிரதானத்து - பிருந்தாவனத்தில், வந்தன - வந்து ஸஞ்சரித்தன. மலர்மகள் - தாமரைப்பூவில் வஸிக்கும் பிராட்டி, கைவருட - தன் கைகளாலே பிடிக்க, மலர்போதில் - மலர்கிற தாமரைப்பூவைக் காட்டிலும், சிவந்தன - அதிகமாகச் சிவந்தன; மறுபிறவி அறு முனிவர் - மறுபடியும் பிறப்பு வேண்டாமென்று வேண்டுகிற ருஷிகளுடைய, மாலுக்கு - பக்திக்கு, இசைந்தன - விஷயமாய் நின்றன; மனுமுறையில் - பிரும்மாவின் லோகத்திலிருந்து வைவஸ்வத மனுவின் ஸந்ததியிலிருந்து, வருவது - வந்து, ஓர் விமானத்து - ஸ்ரீரங்கமென்கிற ஒரு விமானத்தில், உறைந்தன - நித்தியவாஸம் செய்கின்றன; அறம் உடைய விசயன் - பகவானையுடைவதாகிய புண்ணியத்தையுடைய அர்ஜுனன், அமர் தேரில் - இருந்த தேரில், திகழ்ந்தன - ஸாரதியாக விளங்கின; அடல் உரகம் - பலமுடைய காளியன் என்கிற பாம்பினுடைய, படம் - படங்கள், மடிய - நசுங்கும்படி, ஆடி - அவைகளின்மேல் நர்த்தநம் செய்து, கடிந்தன-அவன்கர்வத்தைப் போக்கின; அறுசமயம் - ஆறுமதங்களால், அறிவு அரிய - அறிய முடியாத, தானத்து - பரமபதத்தில், அமர்ந்தன - ஸ்திரமாயிருக்கின்றன; அணி குருகை நகர் - பூமிக்கு அலங்காரமான குருகை என்னும் பட்டிணத்துக்குத் தலைவனான, முனிவர் - நம்மாழ்வாருடைய, நாவுக்கு - நாக்கினால் பாடப்பட்ட பாட்டுக்களுக்கு, அமைந்தன - விஷயமாய் இருந்தன; வெறி உடை துளவ மலர் - வாஸனையையுடைய திருத்துழாய்மாலையினுடைய, விழுக்கு - பெருமைக்கு, அமர்ந்தன - யோக்கியங்களாய் இருந்தன; விழுகரி - உத்தரையின் கர்ப்பத்திலிருந்து கீழே விழுந்த கரிக்கட்டையானது, ஓர் குமரன் என - ஒப்பில்லாத பரீக்ஷித்து என்ற ராஜகுமாரனாகும்படி, மேவி சிறந்தன - பிரீதியுடன் செய்தன; விறல் அசுர் - பலமுடைய அசுரர்களுடைய, படை - சேனைகளானது, விய - நாசமாகும்படி, துடர்ந்தன - அவைகளைத் துரத்திக்கொண்டு போயின.

குறிப்பு:— எம்பெருமானை ஸ்ரீமந் நாராயணனே சக்கிரவர்த்தி திருமகனாகவும், கிருஷ்ணனாகவும் அவதாரம் செய்து, அவனே ஸ்ரீரங்கத்தில் சயநித்துகொண்டிருக்கிறான் என்று கருத்து. அவன் திருவடிகள், பாட்டில் சொன்னபடி பக்தர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து அவர் விரோதிகளை நாசம் செய்தன. அப்படியே நாமும் அவைகளை அடைந்தால் நமக்கும் இஷ்டங்களைக்கொடுத்து அநிஷ்டங்களைப் போக்குமென்று காட்டப்படுகிறது.

கடைசியில் ஐந்து பாட்டுக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வருங்காலத்தில் இந்தப் புஸ்தகத்தைப்படிக்கிறவர்கள் இல்லாமல் வீணாய்ப் போய்விடுமோவென்று ஸந்தேஹப்படவேண்டாம், யாராவது தகுந்தவன் பிறந்து இதைப் படித்து விஷயங்களைத் தெரிந்துகொள்வன் என்று ஐம்பத்திரண்டாவது பாட்டால் அருளிச்செய்கிறார்.

மறையுரைக்கும் பொருளெல்லாம் மெய்யென் றோர்வார்
  மன்னியகூர் மதியுடையார் வண்கு ணத்தில்
குறையுரைக்க நினைவில்லார் குருக்க டம்பாற்
  கோதற்றமனம் பெற்றார் கொள்வார் நன்மை
சிறை வளர்க்குஞ் சிலமாந்தர் சங்கேதத்தாற்
  சிதையாத திண்மதியோர் தெரிந்த தோரார்
பொறைநிலத்தின் மிகும்புனிதர் காட்டு மெங்கள்
  பொன்றாத நன்னெறியிற் புகுது வாரே. (52)

(ப-ரை) மறை உரைக்கும் பொருள் எல்லாம் - வேதம் சொல்லுகிற எல்லா விஷயங்களும், மெய் என்று ஓர்வார் - உண்மையென்று நம்புவர், மன்னிய - திடமான, கூர்மதி உடையார் - கூர்மையான புத்தியை யுடையவர், வண்குணத்தில் - பிறருடைய நல்ல குணங்களில், குறை உரைக்க - தோஷங்களைச் சொல்ல, நினைவு இல்லார் - எண்ணமில்லாதவர், குருக்கள் தம்பால் - ஆசாரியர்களிடத்திலிருந்து, கோது அற்ற - குற்றமில்லாத, மனம் பெற்றார் - மனதையடைந்தவர், நன்மை கொள்வார் - நல்ல விஷயங்களையே எடுத்துக்கொள்ளுகிறவர்கள், சிறை வளர்க்கும் - ஜயில்போலிருக்கும் ஸம்ஸாரத்தை வளர்க்கும்படியான, சில மாந்

தர் - சில மனிதர்களுடைய, சங்கேதத்தால் - கட்டுப்பாட்டால், சிதையாத - கலங்காத, திண்மதியோர் - திடமான புத்தியை யுடையவர்கள், தெரிந்தது - பிரயோஜநம் அல்பமென்று தெரிந்தவைகளில், ஓவார் - ஆசையில்லாதவர்கள், பொறை நிலத்தில் - பொறுமையுடைய பூமியில், மிகும் புனிதர் - மிகுந்த புண்ணியவான்களான ஆசாரியர்கள், காட்டும் - காட்டின, பொன்றாத - நாசமில்லாத, எங்கள் நல் நெறியில் - நம்முடைய நல்ல மார்க்கத்தில், புகுதுவார் - சேருவார்கள்.

(கருத்து) வேதம் சொல்லுகிற தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் முதலானவைகள் எல்லாம் உண்மையானவைகள் என்று நம்பிக்கை உள்ளவர்; திருடமான கூர்மையான புத்தியையுடையவர்; பிறருடைய நல்ல குணங்களை விட்டு அவர்களிடத்தில் குற்றங்களைப் பார்க்கும் எண்ணமில்லாதவர்; ஆசாரியர்களிடத்திலிருந்து தோஷமில்லாத ஜ்ஞாநத்தைப் பெற்றவர்; நல்ல விஷயங்களையே எடுத்துக்கொள்ளுகிறவர்; ஸம்ஸாரத்தை வளர்க்கும்படியான சில மந்தபுத்திகளுடைய கட்டுப்பாடுகளால் கெடாத திருடமான மனதையுடையவர்; அல்பமான புருஷார்த்தங்களை ஆசைப்படாதவர்—இந்த குணங்களை உடைய ஒருவர் பின்காலத்திலும் பிறந்து பொறுமையே ஸ்வபாவமாக உடைய இந்த பூமியில் இருக்கும் பெரியோர்கள் காட்டும் நம்முடைய சாச்வதமான மார்க்கத்தில் பிரவேசிப்பர். ஆகையால் இந்த ஸித்தாந்தம் வீணாகாது.

நம்முடைய மனது விஷயங்களில் போய் இழிவதினாலே இந்த தோஷத்தைப் பார்த்து ஆசாரியர்கள் நமக்கு நல்ல அர்த்தத்தை உபதேசிப்பார்களோ மாட்டார்களோ என்று வரும் ஸந்தேஹத்திற்குப் பதில் பாட்டாலே அருளிச்செய்கிறார்.

இதுவழி யின்னமு தென்றவ ரின்புலன் வேறிடுவார்
இதுவழி யாமல வென்றறி வாரெங்க டேசிகரே
இதுவழி யெய்துக வென்றுகப் பாலென் பிழைபொறப்பார்
இதுவழி யாமறை யோரரு ளால்யா மிசைந்தனமே. (53)

(ப-வை) இதுவழி இன்அமுது - இந்த மார்க்கம் இனிமையான அமிருதம், என்றவர் - என்று உபதேசித்தவர்களும், இன்

புலன் - அல்பமான சப்தம் முதலான விஷயங்களை, வேறு இரி வார் - விலக்குகிறவர்களுமான, எங்கள் தேசிகர் - நம்முடைய ஆசாரியர்கள், இது வழியாம் - இது நல்ல வழியாகும், அல இது நல்ல வழியன்று, என்று அறிவார் - என்று தெரிந்தவர்கள் இது வழி - இந்த வழியாக, எய்துக என்று - நீங்கள் போக வேண்டுமென்று, உகப்பால் - ஸந்தோஷத்தாலே, என் பிழை - என்னுடைய பிழைகளெல்லாம், பொறுப்பர் - பொறுப்பார்கள், மறையோர் அருளால் - வேதமறிந்தவர்களுடைய கருணையாலே, இது வழியாம் - இது வழியென்று, யாம் இசைந்தனம் - நாம் ஒப்புக்கொண்டோம்.

(கருத்து) நம்முடைய ஆசாரியர்கள், இந்தப் புஸ்தகத்தில் சொன்ன விஷயங்களை நல்ல மார்க்கம்; இவைகள் அமுதம்போல் மிகவும் இன்பமாய் இருக்கும் என்று உபதேசம் செய்திருக்கிறார் கள். அவர்கள் ஸாரமில்லாத சப்தம் முதலான விஷயங்களைத் தாங்களும் விலக்கி நம்மிடத்திலிருந்தும் அவைகளை விலக்குவார் கள். எம்பெருமானுடைய கிருபையே மோக்ஷத்திற்கு உபாயம், வேறு ஒன்றும் அல்ல என்று அவர்கள் அறிவார்கள். இந்த பிரபத்தி மார்க்கமே பூமியில் எங்கும் பரவவேண்டும் என்று நினைத்து நல்ல வழியை நாலு பேருக்குச் சொல்லிக்கொடுக்கிற ஸந்தோஷத்தாலே நம்முடைய எல்லாக் குற்றங்களையும் பொறுப் பார்கள். வேதமறிந்த ஆசாரியர்களின் கருணையினாலே இந்த புஸ்தகத்தில் சொன்ன மார்க்கத்தை நாமும் நல்ல மார்க்கமாக ஒப்புக்கொண்டோம்.

எட்டு மிரண்டு மறியாத வெம்மை யிவையறிவித்
தெட்டவொண் ணாத விடந்தரு மெங்களம் மாதவனார்
முட்ட வினைத்திரள் மாள முயன்றிடு மஞ்சலென்றார்
கட்டெழில் வாசகத் தாற்கலங் காநிலை பெற்றனமே. (54)

(பதவுரை) எட்டும் - எட்டெழுத்தான மூலமந்திரத்தையும், இரண்டும் - த்வயம் சரமச்லோகம் என்கிற இரண்டையும், அறி யாத நம்மை, இவை அறிவித்து - இவைகளைத் தெரியும்படி செய்து, எட்ட ஒண்ணாத இடம் - கிட்டப்போகமுடியாத பரம பதத்தை, தரும், எங்கள் அம் மாதவனார் - நம்முடைய அந்த லக்ஷ்மீ

பதியான எம்பெருமான் கிருஷ்ணனாய் அவதரித்து, வினைத்திரள்-கர்மங்களுடைய கூட்டமானது, முட்ட - முழுவதும், மாள - நசிக்கும்படி, முயன்றிடும் - பிரயத்நம் செய்கிறவராயும், அஞ்சல் என்றார் - பயப்படவேண்டாமென்று சொன்னவராயுமிருக்கிற அவருடைய, கட்டு எழில் - நன்றாய் விளங்குகிற, வாசகத்தால் - சரமச்லோகத்தால், கலங்கா நிலை - கலங்காதிருக்கும்படியான இருப்பை, பெற்றனம் - அடைந்தோம்.

(கருத்து) எட்டெழுத்தான மூலமந்திரத்தையும், த்வயம் சரமச்லோகம் என்கிற மற்ற இரண்டு ரஹஸ்யங்களையுமறியாத நம்மை ஆசாரியர்களிடம் சேர்த்து, அவர்களைக்கொண்டு அவைகளின் அர்த்தத்தை நமக்கு லக்ஷ்மீபதியான எம்பெருமான் அறிவித்தான். அவனை அடையாதவர்களாலே எட்ட முடியாதபரமபதத்தை நமக்குக்கொடுப்பன்; நம்முடையவினைக்கூட்டங்கள் முழுவதும் நாசமாகும்படி அவன் பிரயத்நம் பண்ணுவன்; அவன் 'நீ பயப்படாதே' என்று சொல்லியிருக்கிறான். நன்றாய் விளங்குகிற அவனுடைய வாக்கியமான சரமச்லோகத்தாலே கலங்காதிருக்கும்படியான இருப்பை அடைந்தோம்.

நம்முடைய புஸ்தகத்தை வேறு ஸம்பிரதாயத்தில் இருப்பவர்கள் தாழ்த்தியாக நினைத்தால் என்ன செய்கிறது என்பதற்கு இரண்டு பாட்டுக்களாலே பதில் அருளிச்செய்கிறார்.

வானு ளமர்ந்தவர்க்கும் வருந்தவரு மிந்நிலைகள்
தானுள னுபுகக்குந் தாமிங்கு நமக்குளதே
கூனுள நெஞ்சுகளாற் குற்றமெண்ணி யிகழ்ந்திடினும்
தேனுள பாதமலர்த் திருமாலுக்குத் தித்திக்குமே. (55)

(ப-ரை) வானுள் அமர்ந்தவர்க்கும் - ஸ்வர்க்கலோகத்திலிருந்தவர்களுக்கும், வருந்த வரும் - கஷ்டப்பட்டுவருகிற, இந்நிலைகள், இப்புஸ்தகத்தில் சொன்ன இருப்புகளை, தான் உளனாய் - தாம் உடையவராய், உகக்கும் தாம் - பிருக்கு இவைக

ளிருப்பதைக் கண்டு ஸந்தோஷப்படும் ஸ்வபாவமானது, இங்கு - இந்த உலகத்திலே, நமக்கு, உளது - உண்டு, ஆகையால், கூன் உள - கோணலையுடைய புத்திகளையுடைய, நெஞ்சுகளால் - மனதையுடையவர்களால், குற்றம் எண்ணி - குற்றங்களை நினைத்து, இகழ்ந்திடினும் - இகழப்பட்டாலும், தேன் உள - தேனிருக்கிற, பாதமலர் - தாமரைகள்போலிருக்கிற திருவடிகளையுடைய, திருமாலுக்கு - ச்ரிய:பதிக்கு, தித்திக்கும் - போக்யமாயிருக்கும்.

(கருத்து) ஸ்வர்க்கலோகத்தில் இருக்கிறவர்களுக்கும் இந்த புஸ்தகத்தில் சொன்ன இருப்புகள் பிரயாஸப்பட்டு வரும். அந்த இருப்புகள் நமக்கு உண்டாய், அவைகள் உள்ளவரைக்கண்டு ஸந்தோஷப்படும்படியான ஸ்வபாவமானது விரோதிகள் அதிகமாயிருக்கிற இந்த பூமியிலே இருக்கும்போதே நமக்கு உண்டாகியிருக்கிறது. வக்ரமான புத்தியை உடையவர்கள் இந்தப் புஸ்தகத்தில் குற்றத்தை நினைத்து அதைத் தூஷித்தாலும் எனக்கு வருத்தமில்லை. எம்பெருமானுக்கு இது போக்கியமாயிருக்கும்.

வெள்ளைப் பரிமுகர் தேசிக ராய்விர காலடியோம்
உள்ளத் தெழுதிய தோலையி லிட்டனம் யாமிதற்கென்
கொள்ளத் துணியினுங் கோதென் றிகழினுங் கூர்மதியீர்
எள்ளத் தனையுக வாதிக ழாதே னெழின் மதியே. (56)

(ப-ரை) கூர்மதியீர்-கூர்மையான புத்தியையுடையவர்களே, வெள்ளைப் பரிமுகர் - வெண்மை நிறமுள்ள ஹயக்ரீவர், தேசிகராய் - அப்புள்ளாராகிய ஆசாரியராக அவதரித்து, விரகால் - உபதேசரூபமான உபாயத்தால், அடியோம் உள்ளத்து - என்னுடைய மனதில், எழுதியது - எழுதியதை, யாம் ஓலையில், இட்டனம் - எழுதினோம், இதற்கு என் - இதில் என்ன குற்றமுண்டு? கொள்ள - இது நன்றாயிருக்கிறதென்று ஒருவன் எடுத்துக்கொண்டாலும், கோது என்று - குற்றமென்று, இகழினும் - இகழ்ந்து பேசினாலும், என் எழில் மதி - அழகான என்னுடைய மனதானது, எள்ளத்தனை உகவாது-கொஞ்சங்கூட ஸந்தோஷப்படாது, இகழாது - வருத்தப்படாது.

(கருத்து) கூர்மையான புத்தியுள்ளவர்களே! வெண்மை நிறமுள்ள ஹயக்ரீவர், என்னுடைய ஆசாரியரான அப்புள்ளாராக அவதரித்து, என் மனதில் எதை எழுதினரோ, அதை எழுத்தாணிபோல் ஓலையில் நான் எழுதினேன். இந்தப் புஸ்தகத்தில் என்ன குற்றம் இருக்கும்? அது நன்ருய் இருக்கிறதென்று ஒருவன் அதை எடுத்துக்கொண்டாலும் என் மனது கொஞ்சமும் ஸந்தோஷப்படாது; அதில் குற்றம் எண்ணி ஒருவன் தூஷித்தாலும் என் மனது கொஞ்சமும் வருத்தப்படாது. ஏனென்ருல் என் மனது சாஸ்திரம் சொல்லுகிற விஷயத்தில் திருடமான நம்பிக்கை உடையதாகிய ஸம்பத்தை உடையது.

குறிப்பு:— இது ஸர்வேச்வரனுலே எழுதப்பட்டபடியாலே ஒரு குற்றமிருக்கமாட்டாது. மனிதனுல் எழுதப்பட்டதானுல் குற்றமிருக்கலாம்.

ஶ்ரீமதே வேதாந்தராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

ஶ்ரீமதே கோபாலார்ய மஹாதேஶிகாய நம: ॥

ஜ்ஞாநவைராக்யாநுஷ்டாநவைபவயுஜே ஶ்ரீமதே வேதாந்தராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

அதிகாரஸங்கிரஹம் முற்றிற்று.

பாட்டுக்களின் அகராதி.

பாட்டு.	பக்கம்.
அந்தணரந்தியர்	37
அமையாவினை	17
அறவே பரமென்று	43
அறிவித்தன ரன்பர்	41
ஆரண நூல்	8
ஆராதவருள்	102
ஆளுமடைக்கலம்	13
இதுவழியின்னமுது	119
இன்பத்தில்	4
உண்மையுரைக்கும்	75
உத்தம வமர்த்தலம்	104
உயர்ந்தநங் காவலன்	82
உளதான வில்வினை	58
உறுசகடமுடைய	116
எட்டுமாமூர்த்தி	105
எட்டுமிரண்டும்	120
என்னுயிர் தந்து	6
எறியெழிற்பதம்	65
ஏற்றிமனத்தெழில்	97
ஒண்டொடியாள்	108
ஓதுமிரண்டை	89
கண்ணனடியிணை	103
கானம் வலம்புரி	11
குறிப்புடன் மேவும்	94
சாதனமுகற்யனும்	112
செப்பச் செவிக்கு	100
தகவாற்றரிக்கின்ற	72
தன்னிணைவில் விலக்கு	113

பாட்டு.	பக்கம்.
திருவுடன் வந்த	1[illegible]
தேறவியம்பினர்	2[illegible]
தேனார் கமலத் திரு	6[illegible]
நடைபெறவங்கி	6[illegible]
நன்னிலமாமது	6[illegible]
நிலை தந்த	1[illegible]
நின்ற நிலைக்கு	3[illegible]
நின்ற புராணன்	2[illegible]
நின்றனமன்புடை	5[illegible]
நீளவந்தின்று	[illegible]
பாட்டுக்குரிய	11[illegible]
புருடன் மணிவரமாக	10[illegible]
பொய்கை முனி	[illegible]
பொருளொன்றென	2[illegible]
மருளற்ற தேசிகர்	9[illegible]
மறையுரைக்கும்	11[illegible]
மன்னவர் விண்ணவர்	4[illegible]
மன்னுமனைத்துறைவாய்	6[illegible]
முக்கிய மந்திரம்	4[illegible]
முன்பெற்ற ஞானமும்	9[illegible]
மூண்டாலுமரியதனில்	11[illegible]
வரிக்கின்றனன்	7[illegible]
வாதியர்மன்னும்	2[illegible]
வானுளமர்ந்தவர்க்கும்	12[illegible]
விண்ணவர் வேண்டி	5[illegible]
வெள்ளைப்பரிமுகர்	12[illegible]
வேண்டும் பெரும்பயன்	3[illegible]
வேதமறிந்த பகவர்	5[illegible]

S.T.

ஸ்ரீராமாநுஜதயாபாத்ரோத்ஸவ மலர்.

ஆசிரியர்:

மஹாமஹோபாத்யாய - சேட்லூர்

நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி.


பஹுதான்ய ஹு ஆவணி மீ 12௳ ஞாயிற்றுக்கிழமை
திருவஹீந்திரபுரத்தில் சிங்காகிரிப்பேட்டை ஸத்ஸம்
ப்ரதாய வர்த்தனீ சபையாரால் ப்ரசுரிக்கப்பட்டது.

சென்னை:

ஆர். ஆர். பிரிண்டிங் ஒர்க்ஸ், வேப்பேரி போஸ்ட்.

1938—ஆகஸ்டு.

॥ 𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁 ॥



𑌤𑌰𑌙𑍍𑌗𑌮𑌵𑌨𑌦𑍀𑌤𑍀𑌰 𑌹𑍇𑌮𑌾𑌬𑍍𑌜𑌨𑌾𑌯𑌿𑌕𑌾 𑌸𑌮𑍇𑌤

𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌨𑌾𑌥 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑌕𑍁𑌲𑌭𑍂𑌷𑌣 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

திருவஹீந்திரபுரம் மஹாமஹோபாத்யாய
பண்டித பூஷண பகவத்விஷய வித்வான்
ஸ்ரீதேசிக தர்சனாசார்ய
சேட்லூர் - நரஸிம்மாசார்ய ஸ்வாமி அருளிச்செய்த

ஸ்ரீ ராமாநுஜதயாபாத்ரத் தனியன் வ்யாக்யானம்.

அவதாரிகை.

ஸ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸ்வாபாவிக நிரவதிக
ருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்யாதி ஸகல கல்யாணகுண பரிபூர்ணனா
ருந்த எம்பெருமான் (1) "அநாதிமாயயா ஸுப்த:" என்கிறபடி
றியான கர்மப்ரவாஹங்களாலே மயங்கிக் கிடந்த சேதன வர்க்கங்
ால் எம் "ஆவாரார் துணையென்று அலைநீர்க்கடலுள் அழுந்தும் நாவாய்
ால்" பிறவிக்கடலுள் நின்று துளங்குகிறபடியைக்கண்டு பார்வை

வைத்து மிருகம் பிடிப்பாரைப்போலே ஸஜாதீயரைக் கொண்டு இவைகளை உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமென்கிற திருவுள்ளத்தினால் (1) நித்யஸூரிகளைப் பூலோகத்தில் அவதரிக்கும்படி நியமித்துத் தானும் அவர்களில் அநுப்ரவேசித்து அவதரித் தருளினான் என்பது சாஸ்திர ஸத்ஸம்ப்ரதாய ஸித்தம்.

இவ்விடத்தில் (2) "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து" (3) "அறியாதன அறிவித்த அத்தா" (4) "ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் । மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா ॥" (5) "யஸ்யாஸௌ ஹஜதே க்ஷமா விஷ ஜநஸ்ய ஸம்ப்ரதாயம் ஸாம்ப்ரதாயிகாநாம் மஹதாம் ஹவிதாம் ஹவாணஸ்வ ஸமுத்தாராய நாராயண: ॥" இத்யாதிகளை அநுஸந்திப்பது.

இப்படிப்பட்ட ஆசார்யர்களுள் ஶ்ரேஷ்டதமன் நம் நிகமாந்த மஹாதேசிகன் என்பது (6) "யதீந்த்ராந்ய ஸாமாந்யா வேதாந்தாசார்யதா கதா । யதா வாசாம் பதிர் விஷ்ணௌ ॥" என்றும் (7) "தேஶிகோ நிகமாந்தாக்யஸ் தத்ர காலே ஸாக்ஷி கோஜந: । தத்ஸ்தைஸ் ஸ்ருஷ்டேஸ்வ ஸூப்ரயோகேந்த்ய நாஸ்தி நாஸ்தி மஹீதலே ॥" (8) "பூர்வாசார்யா: ப்ரணீதா: பஹவ: தேஶிகை: வேதவேதாந்தா: ஸர்வஶாஸ்த்ரார்ணவஸ்ய: ஸமுத்த விபவா: ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரா: ஶிஷ்யைர் ஆசார்யா: ஸுப்ரபந்தப்ரணாமா: நாந்யதா ப்ராப்ய தேஶிகேந்த்ர ஸமா: ॥" என்றும் ஸாத்விகர்களான பூர்வர்களால் நிர்ணயம் செய்யப்பட்டது. இதுதன்னையும் மேல் ப்ராப்த ஸ்தலங்களில் பரக்க நிரூபிக்கக் கடவோம்.

(9) "தேசிக" என்னும் (10) "ஆசார்ய" என்னும் பதங்களுக்கு தூப்புல் குலமணியான வேதாந்த தேசிகனே முக்யமான அர்த்தம். மற்றவர்கள் "ஔபசாரிகமாக" அந்தப் பதங்களால் சொல்லப்படுகிறார்கள் என்பது திண்ணம். அஃதெங்ஙனே பொருந்தும் எனின் (11) "தத்வஜ்ஞ வதாயெதாக்கி வஸிஹாஷா ஸமந்வித: । ஶுத்தாயம் தேவவரேண ஹ்ருத்ய ஹ்ருவஸ்தத: ॥"

என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும் (1) "யஸ்மிந் ப்ருஹத்த்வாதிகா குணயோகஸ் ஸாகல்யத: । தஸ்மிந்நேவ முக்யவ்ருத்தோऽயம் அந்யத்ர ஹ்யுபசாரத: ॥" என்று காருட புராணத்திலும் "பகவத்" சப்தத்தையும் "ப்ரஹ்'ம" சப்தத்தையும் பற்றிச் சொல்லி யிருப்பதை அநுஸரித்து ஸ்ரீ பாஷ்யகாரரும் (2) "அதோ ப்ரஹ்மஶப்தஸ் தத்ரைவ முக்யவ்ருத்த: । தஸ்மாதந்யத்ர தத்குணலேஶயோகா தௌபசாரிக: ॥" என்று நிர்ணயம் செய்திருப்பதினாலந்த ந்யாயத்தினாலே நன்கு பொருந்தும்.

இங்ஙனம் தேசிகாதி சப்தங்களுக்கு முக்யார்த்தமான ஆசார்ய ஸார்வபௌமன் விஷயமான தனியனே,—

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் ।
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஶிகம் ॥

என்னும் ச்லோகம்.

தனியன் என்றால், தனி - ஒப்பற்றது என்றும் ஒரு க்ரந்தத்தில் சேராமல் தனிப்பட்டது என்றும், பொருள் பெற்ற உரிச்சொல்லின்மேல் அன் என்னும் சாரியை பெற்று முடிந்தது. அதாவது தம் ஆசாரியர்களைத் தண்டனிட ஒப்பற்ற ச்லோகம் எனப் பொருள் பெற்றுள்ளது. இது வேதாந்த ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ஆரம்பிக்கும் பொழுதும் முடிக்கும் பொழுதும் குருபரம்பரையைப் பற்றி அநுஸந்திக்க வேண்டியதென, சாஸ்திரங்களில் விதித்திருக்கும் கட்டளையின்படி அநுஸந்திக்கப்படும். அவ்வோ குருவினுடைய குணாதிசயங்களையும் அவரவர் செய்த உபகாராதிசயத்தையும் சுருக்கமாகவும் ஸாரமாகவும் அநுஸந்திக்குமாறு அவ்வாசார்யர்களிடமிருந்து பெற்ற மஹோபகாரத்தைப் பாராட்டும் பக்திமான்களால் தனியே ஒவ்வொரு ஆசார்யனையும் பற்றி அருளிச்செய்யப்பட்டு ஸம்ப்ரதாய முறைப்படி அநுஸந்திக்கப்படும் ச்லோகங்களுக்கும் பாட்டுக்களுக்கும் பெயராக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த ராமாநுஜ தயாபாத்ரத் தனியன் ஸ்வாமியின் திருக்குமாரராகிய ஸ்ரீ நயினாராசார்யருடன் ஸதீர்த்யராய் ஸ்ரீமந் நிகமாந்த மஹா

தேசிகன் ஸ்ரீபாதத்தில் ஸகலார்த்தங்களையும் க்ரஹித்த ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் ஸ்ரீ நயினாராசார்யருடைய திருவடி ஸம்பந்தமும் தமக்கு வேண்டுமென்கிற அபேக்ஷையினால் ஸ்ரீ தேசிகன் ஸ்ரீபாதத்தில் மற்ற சிஷ்யர்கள் பகவத்விஷய காலக்ஷேபம் செய்கையில் அந்தக் கோஷ்டியி லிருந்து விலகி நின்றார். பிறகு நயினாராசார்யர் ஸ்ரீபாதத்தில் ஸ்ரீதேசிகன் அருளிச் செய்த ஸ்ரீத்ரமிடோபநிஷத் ஸாரம் மேற்படி தாத்பர்ய ரத்னாவளி, ஸ்ரீ நிகம பரிமளம் முதலியதிலருளிச் செய்த பல விசேஷார்த்தங்களுடன் ஆறாயிரப்படியை ஸேவித்துச் சாத்தின பஹுதாந்ய வருஷம் ஆவணி மாதம் ஹஸ்த நக்ஷத்திரம் சுக்ல பக்ஷம் த்விதீயையும் கூடிய சுபதினத்தில் திருநாராயணபுரத்தில் அந்த ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயர் தாம் காலக்ஷேபம் செய்யும் பொழுது ஸ்ரீதேசிகனுடைய பகவத்விஷயார்த்த நிரூபண வைகரியி லீடுபட்டுத் தம் க்ருதஜ்ஞதையாலே அருளிச் செய்யப்பட்டதா யிருக்கும்.

இந்த ச்லோகம் அவதரித்த வ்ருத்தாந்தத்தை த்ருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால ஸ்வாமியும்

(1) கல்யப்தே வேதஸாஹஸ்ரே ஶதவக்ஷ்யேயதுர்க்ஷாயநே
ஹஸ்தர்க்ஷே பஹுதாந்யவத்ஸர நபஶ்ஶுக்லத்விதீயாயுதே ।
ஶ்ரீ ஶ்ரீஶாம்ஶஜிஹ்வயதீ ஶமிதமோஜ்ஞாயுக் வ்யாஹாரோஜ்ஜ்வல:
ஸாக்ஷாத் ஶ்ரீகோவதாரஶ்ஶ்ரீவிஹவ: ராமாநுஜார்யாதிபி: ॥

என்றருளிச் செய்தார். (கலி வருஷம் (4440) வதான பகுதான்ய வருஷம் ஆவணி மாதத்தில் சுக்ல பக்ஷம் த்விதீயை திதி ஹஸ்த நக்ஷத்திரத்தோடு கூடிய சுபதினத்தில் ஸ்ரீய:பதியான எம்பெருமானுடையவும், பெரிய பிராட்டியாருடையவும், நம்மாழ்வாருடையவும், நம்மி ராமாநுஜனுடையவும், ஸ்ரீதேசிகனுடையவும் ப்ரபாவ விசேஷங்களை ப்ரதிபாதிக்கிற படியினால் மிகுந்த ப்ரகாச முடையதும் இனிய பெருமையை உடையதுமான "ராமாநுஜ" என்னும் பதத்தினால் தொடங்கப்பட்ட இந்த ச்லோகம் அவதரித்தது.)

இதில் எம்பெருமான் முதலியவர்களுடைய பெருமை ப்ரதி பாதிக்கப்படுகிறது என்பது எவ்விதம் பொருந்தும் எனில்? அன்னோர் நம் தேசிகனிடத்தில் விசேஷ கடாக்ஷம் செய்யவேண்டியதற்குக் காரணங்களை நிரூபிக்க வேண்டியது இன்றியமையாததாகும். அதெங்ஙனே யெனில்? அவர்கள் அருளிச்செய்த சரம ச்லோகாதிகளின் மெய்ப் பொருள்களைப் பரமத நிரஸன பூர்வகமாய் நம் தேசிகன் ஸ்தாபித்தார் என்று சொல்லுமிடத்தில், அவ் வெம்பெருமான் முதலியவர்கள் செய்த உபகார விசேஷங்களையும் நிரூபிக்க வேண்டியது மிகவும் அவசியமான காரியமே யாகும். அப்படி நிரூபிக்குமிடத்து அவர்களுடைய ப்ரபாவங்களும் சொல்லப்பட்டதாகிறது என்று திருவுள்ளம். பின்பு ஒரு காலத்தில் ஸ்ரீரங்கத்தில் ஸம்பவித்த துருஷ்கோபத்திரவத்தை தம் நியமனப்படி கொப்பணார்யன் நிவ்ருத்தி செய்து ஸ்ரீரங்கநாதனை முன்போல் திருப்ரதிஷ்டை செய்து வைத்தபிறகு அதற்கடுத்த ஸர்வதாரி வருஷம் மார்கழி மாதத்தில் திருமங்கைமன்னன், ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ பாஷ்யகாரர் முதலியவர்கள் நடத்திவைத்த திரு அத்யயனோத்ஸவத்தை த்தாமும் நடத்த ஆரம்பிக்கும்பொழுது சிலர் இது புதிய உத்ஸவம், இதில் பல ஜாதிகளில் பிறந்த ஆழ்வார்களின் ப்ரதிஷ்டார்ச்சனங்களும், அவர்களுக்கு மரியாதைகள் செய்தலும் அவர்கள் தமிழ்ப் பாஷையில்செய்த ப்ரபந்தங்களை அநுஸந்திப்பதும் உசித மன்று என்று ராஜாவினிடத்தில் ஆக்ஷேபித்து உத்ஸவத்தைத் தடுத்துவிட

(1) காயந்நஹாஷ்டாக்ஷரதீந்த்ர
தத்க்வகாவந்ராஶ்வ ந வர்ஜநீயா: ।
உத்ப்ரேக்ஷவக்ஷம் ந்ருபதே ஸ்ஸக்ஷா
யஃப்ராக்ஷிப்தம் ஹரிஶ்ரியாம் ॥

என்கிற படியே ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் குமதிமதஜால வாதஜாலங்களான யுக்திகளை உபந்யஸித்து அவர்களை நிராகரித்து ராஜாவினால் உண்டான தடையை நீக்கி யதாக்ரமம் உத்ஸவத்தை நடத்திவைத்தார், பின்னும் (2) "வ்யாவ்யாம ஸாஷ்ட்யக்ருத்யாக்ருபோவ நிஷ்டாம் பொஹ்ராதிபிநாம் வ்யயாக: ।

வ-ஷிவ-ம் தம் கூாரா கெஜூாரம் ஶாராவாரம் காராணு்வ-ஷிண-ம் ஸ்ஜெ ||" என்கிறபடியே திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்குத் திருவாய்மொழியிலுள்ள ஈடுபாட்டையும், அவர் தம்முடைய திருவுள்ளத்தை உள்ளபடியே அறிந்தமையையும், அவருக்குள்ள ஆழ்வாருடைய க்ருபைக்கு முக்ய பாத்திரமான ஸ்ரீமந் நாதமுனிகளின் குடல் துவக்கையும் யோசித்து நம்மிராமாநுஜன் அவரைக்கொண்டே தமக்குப் பரமாசார்யனை ஸ்ரீஆளவந்தார் நியமனத்தைத் தலைக்கட்டத் திருவுள்ளம்பற்றி "நீரே திருவாய்மொழிக்கு ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளத்துக் கிணங்க ஒரு வ்யாக்யான மிட்டு நம்மிடம் காட்டும்" என்று நியமிக்க, அந் நியமனத்தைப் பிள்ளானும் சிரஸாவஹித்து அவ்விதமே ஒரு வ்யாக்யானம் செய்து தலைக்கட்டி ஸ்ரீ பாஷ்யகாரர் திருவடிகளில் ஸமர்ப்பிக்க, அதை ஆதியோடந்தம் கடாக்ஷித்தருளிப் போர உகந்து திருக்குருகைப்பிரான்பிள்ளானுக்கு உபய வேதாந்த ஸிம்மாஸனத்தை ப்ரஸாதித்தருளி, அந்த வ்யாக்யான க்ரந்தத்திற்குப்பகவத் விஷயமெனத் திருநாமம் சாற்றியருளி அந்த ஆறுயிரப்படியையே காலக்ஷேபம் செய்யக் கடவர் என நியமித்தருளினர். இங்ஙனம் பாஷ்யகாரர்திருவுள்ளமுகந்த ஆறுயிரப்படியை அநுஸரித்தும், அதில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற அர்த்தங்களுக்கு விரோதமான அர்த்தங்களை நிரூபித்தும் உண்டாகிய ஆந்தர க்ஷேபங்களைச் சமிப்பித்து நிகம பரிமளம் த்ரமிடோபநிஷத் ஸாரம் முதலிய க்ரந்தங்களில் திருவாய்மொழியின் அர்த்தங்களை விஸ்தாரமாக நிரூபித்தருளினர். நிகமாந்த மஹாதேசிகன் இன்றியும் வேதாந்தங்களில் சொல்லப்படுகிற அவச்யம் அறியவேண்டிய அர்த்தங்களைத் தெளிவாகத் தெரிவிப்பதில் ச்ரேஷ்டதமங்கள் திவ்ய ப்ரபந்தங்களே என்பதை (1) "யத்தத்க்ரு்த்யம் ஶ்ருதீநாம் முநிஶணவிஹிதெதெ ஸெஷகிஹாவெஸ்ஃ வாராவெணஃ தத்ராவஸள ஸத்வஸீஃ ஶம்யுநஹேநெ ஸுஹிதாவஸரவஹளீ ||" என்றும் (2) "இவ் வர்த்தத்தைச் சித்தரஞ்சனத்தோடே ஸர்வரையும் எளிதாகத் தெரிவிக்குமவற்றில் தொண்டர்க்கமுதுண்ணலாயப் பொய்யில்பாடலான ஆழ்வார்கள் அருளிச்செயல் ப்ரதானம்" என்றும் (3) "மாசில் மனந்தெளிமுனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கொவ்வா" என்றும் (4) "வராஶர வ்யாஸநாரதவி வெஷாஜுாரஹஸ்ய வெஶஷு்ராதிஶய ஹெதாஹிநெதெஃ ||" என்

றும் (1) "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்று ஸ்வாநுபவ பர்யந்தமாகவே அவைகளின் மேன்மையை விளக்கிப் பலமுகமாக நிரூபித்தருளினார். பரதேவதா விசேஷத்தை நிர்கர்ஷிப்பதில் ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளே உயர்ந்தவைகள் என்பதை (2) 'ஒன்றும் தேவு மித்யாதிகளிற்படியே பரதேவதா விசேஷ நிச்சயமில்லாதபோது "உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால்" என்கிற பரமைகாந்தித்வம் கூடாமையாலும், பரமைகாந்திக்கல்லது வ்யவதான ரஹித மோக்ஷம் கிடையாமையாலும்,' என்று உபக்ரமித்து, "இத்தை மயர்வற மதிநல மருளப்பெற்ற [illegible] என்கிற படியே ப்ரபந்நஸந்தான கூடஸ்தரான நம்மாழ்வாரும்" என்று உபஸம்ஹாரத்தில் நிரூபித்தருளினார்.

பின்னும் (3) "அறியக்கற்றுவல்லார் வைஷ்ணவராழ்கடல்ஞாலத்துள்ளே" இத்யாதிகளால் இத்திருவாய்மொழியை ப்ரபன்னர் அவசியம் அத்யயனம் செய்யவேண்டுமென்கிற விதியை (4) "[illegible]" என்று நிரூபித்தருளினார். அப்படியே இப்ரபந்தங்கள் பரமபதத்தில் நித்யமுக்தர்களால் அநுஸந்திக்கப் படுகின்றன, என்பதை (5) "[illegible]" என்று ப்ரஹத் ப்ரஹ்ம ஸம்ஹிதையில் சொல்லியிருப்பதையும் (6) "பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" என்பதையும் அநுஸரித்து (7) "விண்ணவர்தம் குழாங்களுடன் வேதம் பாடிப் பண்ணுலகில் படியாத விசையால் பாடும் பல்லாண்டே பல்லாண்டும் பாடுவமே"; (8) "பாவளரும் தமிழ்ப் பல்லாண்டிசையுடன் பாடுவோமே" என்றருளிச் செய்தார்.

மற்றும் ஆழ்வார்கள் இப்ரபந்தங்களை ப்ரவசனம் செய்தவர்களேயன்றி இயற்றியவர்களல்ல என்பதை (9) "என்முன் சொல்லும் மூவுருவாயமுதல்வனே" (10) "தாமுதல் பத்தர்க்குத்தான் தன்னைச் சொன்ன" (11) "என்னால் தன்னை வன்கவி பாடும் என்வைகுந்த நாதனை" இத்யாதி மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாரருளிச் செய்த பொய்யில் பாடல்களை அநுஸரித்து, (12) [illegible]

ஶடாரிவக்த்ரேந்தோ: நிஷ்யந்தீ ஸர்வாத்தே ப்ராவீணானாம் ஶ்ருதி
விஶிஷ்டானாம் வாக்யே வைமுக்யமண்யா, (1) த்ராவிடானாம்
ப்ரக்ருதிவேதானாம் ஸம்ஹிதாம் த்ருஷ்டவதாம் । (2) வகுளாபரண
ஸம்ஸம்ஹிதாம் பாவேஶ்ய: ॥ (3) த்ரமிடோபநிஷத்த்ரஷ்டாரஸ்ய
யாதாத்ம்ய தர்ஶிதம் ॥ (4) தத்த்வத்ருக் தாத்பர்யணீ தத்த்வதர்ஶ
ஜித்ருஷ்ட ஸவர்ணயஶாவா (5) கவீந்த்ர த்ராவிடப்ரஹ்மதர்ஶீ
(6) ப்ரபந்நஜநஸார்த்த வஶீக்ருத வகுளாபரண ஸஹஸ்ர
த்ருஷ்டே த்ரமிடநிகமே இத்யாதிகளாலே ப்ரதிபாதித்தருளினர்.

மற்றும் இத்திவ்யப்ரபந்தங்களை ப்ரவசனம் செய்தவர்களின் உபகாராதிசயத்தை (7) "நற்காத வடியவர்க்குத்தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசைதந்தவள்ளல் ...." என்று க்ருதஜ்ஞதை தோற்ற நிருபித்தருளினர். இன்றியும் இத் திருவாய்மொழியைக் கற்றவரே ஸகல பரிசுத்த வஸ்துவுக்கும் விஞ்சின பரிசுத்தர், என்று நம்மாழ்வார் அநுக்ரஹித்தருளிய (8) "தீர்த்தனுக்கற்றபின் ... தீர்த் தங்களாயிரத்து ளிவையுமொரு பத்தும் வல்லார்களைத் தேவர் வைகல் தீர்த்தங்களே யென்று பூசித்துநல்கி யுரைப்பர்தம் தேவியர்க்கே" என்னும் பாசுரத்தின் கருத்தை அடியொற்றி (9) "நம்பண்ணாரும் தமிழ்வேத மறிந்த பகவர்களே" என்றருளிச் செய்தார். தமக்குத் திவ்ய ப்ரபந்தங்களிலிருக்கும் ஆதராதிசயத்தை (10) "வையம் தகளியான தொடை நூறின் செழும் பொருளை எனக்கருள்செய்திருந்த நீயே" (11) "என்பவை நாலாயிரமும் எங்கள் வாழ்வே" என்றும் இவையே தமக்கு வாழ்வு என்று மருளிச் செய்தார். அவ்வளவோடு நிற்காமல் ஸாமசாகீ, யஜுச்சாகீ, என்னுமாப்போலே (12) "தமிழ்மறையோன்" எனவும் தம்மை நிர்த்தேசம் செய்து கொண்டார். ஆக இப்படிப் பலமுகங்களாகத் திவ்யப்ரபந்தங்கள் விஷயத்தில் நம் தூப்புல் பிள்ளை மஹோபகாரம் செய்திருப்பதினால் இதை முன்னுருச் சொல்லி உலகை ஸுலபமாய் வாழ்விக்கக் கருதிய திவ்ய தம்பதிகளின் வைபவமும் அதை ஈன்ற முதல்தாயான நம்மாழ்வாருடைய வைபவமும், மொய்ம்பால் வளர்த்த இதத்தாயான நம்மிராமாநுஜனுடைய வைபவமும் நம் தூப்புல் பிள்ளை வைபவமும் இத் தனியனில் பிரகாசிப்பிக்கப்பட்டது என்பது நன்கு பொருந்தும். பிறகு

ஸர்வதாரி வருஷம் மார்கழி மாதத்தில் ப்ரதிவாதிகள் அத்யயனோத்ஸவம் செய்யக்கூடாதென்று தடுக்க, வாதம் செய்து அவர்களை ஜயித்து நம் கவிவாதி சிங்கம் தடையின்றி அத்யயனோத்ஸவத்தை நடத்திவைத்தருளினர். அப்பொழுது அந்த வோலக்கத்திலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும் ஸ்ரீதேசிகன் செய்த மஹோபகாரத்திற்காக ஸ்ரீராமாநுஜதயாபாத்ரத் தனியனை ஆங்கே அநுஸந்திக்கும்படி நியமிக்க வேணுமென்று ஸ்ரீரங்கநாதனை ப்ரார்த்திக்க கருணாஸாகரனை ஸ்ரீயப்பதியும் போர வுகந்து தம்முடைய க்ருதக்ஞதை உலகமெங்கும் துலங்குமாறு அர்ச்சகமுகேன "ததைவாஸ்து" என்று ஆனந்த நிர்பரராய் நியமிக்க இவற்றையெல்லாம் திருச்செவி சாத்தி அத்திருவோலக்கத்தில் எழுந்தருளியிருந்த நம் தேசிகனும் எம்பெருமான் முதலிய பூர்வாசார்யர்களுடைய க்ருபைக்குத் தாம் விஷயமானமையைச் சொல்லுகிறபடியினாலும் பெருமாள் திருவுள்ளத்தின்படியே தாம் நடக்கக் கடமைப்பட்ட படியினாலும், பாகவதர்கள் நியமனத்தைத் தடுக்காமலே எழுந்தருளியிருந்தார். பிறகு மற்றுமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் அப்படியே மற்றெல்லா ஸந்நிதிகளிலும், திருமாளிகைகளிலும் தமிழ் வேதாத்யயன ஆரம்பத்திலும், முதலில் "இராமாநுஜ தயாபாத்ரம்" என்பதை அநுஸந்தானம் செய்து பின்பு "லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்" முதலிய தனியன்களை அநுஸந்திக்க வேண்டும், என ப்ரார்த்திக்க "அங்ஙனமே யாகுக" என்றருளிச் செய்தார். எம்பெருமானார் முதலியவர்களுடைய நியமனத்தினால் எங்கும் இங்ஙனம் ஸாத்விகாக்ரேஸரர்களால் அநுஸந்திக்கப்பட்டு வருவதே "ராமாநுஜ தயாபாத்ரம்" எனத் தொடங்கும் தனியன். இவ் வர்த்தத்தை—

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

என்று குருபரம்பரை பன்னீராயிரப்படியில் ஆசார்யர்கள் அருளிச் செய்திருக்கிறார்கள். அங்ஙனமின்றி திவ்யப்ரபந்தாதிகளுக்கு எவ்வித உபகாரமுமின்றி இடையே தனியன் என வழங்குமவை யெல்லாம் வழிதவறி வந்தவையே.

இங்ஙனம் ப்ரபன்னஜன ஸமுதாயத்துக்கே அவச்யம் அநுஸந்தேயமான இச்லோக ரத்னமாகிய ராமாநுஜ தயாபாத்ரத் தனியனுக்குப் பதார்த்தங்களையும் தாத்பர்யார்த்தங்களையும் ஸதாசார்ய ஸகாசத்தில் அஸக்ருதா வ்ருத்தி க்ரஹித்தவைகளுள் என் சிற்றறிவுக் கெட்டியவற்றை இங்குக் கூறுவன்.

இந்த ச்லோகத்தில் "ராமாநுஜ தயாபாத்ரம்" என்னும் முதலடி எம்பெருமான் முதலான ஸதாசார்யர்களுடைய விசேஷ கடாக்ஷங்களுக்கு இவர் விஷயமான படியைச் சொல்லுகிறது. "ஞான வைராக்ய பூஷணம்" என்னும் இரண்டாவது அடி அந்த ஸதாசார்ய கடாக்ஷ விசேஷங்களால் உண்டான பலத்தைச் சொல்லுகிறது. "ஸ்ரீமத்வேங்கட நாதார்யம்" என்னும் மூன்றாவது அடி அவ்வளவுக்கும் காரணமாகிய அவதார விசேஷத்தையும் இவற்றால் உண்டான ப்ரயோஜனத்தையும் சொல்லுகிறது. நான்காவது அடி மற்றவர்களுக்கில்லாமல் இவ்வாசார்யனுக்கு மாத்திரம் அஸாதாரணமாயுள்ள பெருமையைச்சொல்லி இவ் வாசார்யன் விஷயத்தில் சேதனனாயுள்ளவன் யதா சக்தி செய்ய வேண்டிய சேஷவ்ருத்தியையும் சொல்லுகிறது.

இவருடைய ஞானாதி ஸம்ருத்திகளுக் கெல்லாம் பிரதம காரணம் ஸதாசார்ய கடாக்ஷமாதலால் அதற்குப் பாத்திரமானமை முதலில் சொல்லப் படுகிறது. ராமாநுஜேத்யாதியால் ராமாச, ராமச்ச-ராமௌ, ராமா—என்பது "விராம ராமா" என்கிற விடத்தில்போல் ஸ்த்ரீ ஸாமான்யத்தைச்சொல்லி "நாரீணாமுத்தமா வதூ:" என்று சொல்லப்பட்ட பிராட்டியைக் குறிக்கிறது. 'ராம' என்பது—

ரமந்தே யோகிநோநந்தே நித்யாநந்தே சிதாத்மநி ।
இதி ராமபதேநாஸௌ பரப்ரஹ்மாபிதீயதே ॥

என்று அகஸ்திய ஸம்ஹிதையில் நிர்வசனம் செய்திருப்பதை அநுஸரித்து எம்பெருமான் சொல்லப்படுகிறார்.

அன்றிக்கே "ரமயதீதி - ராமா, ரமயதீதி ராம:" என்று நிர்வசனம் செய்யப்பட்ட இரண்டு பதங்களுக்கும் முன்போல 'ராமா ச, ராமச்ச, ராமௌ என்று ஸமாஸமாகவுமாம். அப்பொழுது ' தவஶ்ரீபா, உன்திரு, ஶ்ரிய:ஶ்ரிய:, திருவுக்கும் திருவாகிய செல்வா, இந்துதன் நிலவுடனிலங்கும் தன்மையனே' என்கிறபடியே ஒருவருக்கொருவர் மேன்மையைச் செய்துகொண்டு '[illegible] [illegible] [illegible]' என்கிறபடியே ஒருவருக்கொருவர் ப்ரீதி விசேஷங்களை உண்டாக்கிக் கொண்டிருப்பதினாலே 'அகலகில்லேனிறையும்' என்றும் 'நஜீவேயம் க்ஷணமபி' என்றும் தாங்கள் சொல்லிக்கொண்டிருக்கும்படி ஒரு க்ஷணகாலமும் விச்லேஷத்தைப் பொறுக்காதபடியான சேர்த்தி சொல்லப்படுகிறது. இத்தால் எம்பெருமானுடைய தயையை 'பரதுக்கதுக்கித்வம்' என்று அவனுக்கு துக்காதிகள் உண்டென்றும், லக்ஷ்மிக்கு ஈச்வரகோடி ப்ரவேசமில்லை, விபுத்வமில்லை, என்றும் சொல்லுமவர்களை ப்ரமாணங்களைக் கொண்டு நிராகரித்து நாராயணனுக்கு துக்கமில்லை பரதுக்க நிராசிகீர்ஷையே துக்கம், என்றும், லக்ஷ்மிக்கு விபுத்வம் உண்டு என்றும், ஸ்தாபித்த இவ்வாசார்யன் விஷயத்தில் திவ்ய தம்பதிகள் ஒருமுகமாகக் கடாக்ஷித்தபடி சொல்லிற்றாயிற்று. இத்தை முன்னோர்கள் '[illegible] [illegible] [illegible] ॥' என்று அநுஸந்தித்தார்கள்.

இந்த இரண்டாவது யோஜனையினால் 'ஒருவருக்கொருவருள்ள ப்ரீதி விசேஷத்தாலே க்ஷணகாலமும் பிரிவை ஸஹிக்காத இம் மிதுனத்தை ஆச்ரயணவேளையோடு போகவேளையோடு வாசியற ஒரு மிதுனமே உத்தேச்யம்' என்றும் 'இவ்விருவருமான சேர்த்தியிலேயிறே இவன் அடிமை செய்வது அச்சேர்த்திதன்னையிறே இவன் உபாயமாகப் பற்றுகிறதும்' என்றும் 'இவர்களைத் தனித்தனியே பற்றினார்க்கு ஸ்வரூப விநாசமிறே, மிதுனமே உத்தேச்யம் என்றிருப்பார்க்கு ஸ்வாத்மோஜ்ஜீவனமிறே. ராவணாதிகள் பக்கலிலே இவ்வர்த்தம் காணலாம், இத்யாதிகளான தங்கள் முன்னோர் க்ரந்தங்களுக்கு விரோதமாய் லக்ஷ்மிக்கு உபாயத்வமில்லையாகையால் உபாயத்தில் சேர்த்தியில்லை, த்வயத்தில் பூர்வகண்டத்தில்

இருக்கிற 'ஸ்ரீமத்' என்னும் பதம் உபலக்ஷணம், என்று சிலர் பிரிவை ப்ரஸங்கிக்க அவர்களை 'வேரிமாருத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே, இங்குமங்கும் திருமாலின்று இன்மைகண்டு, 'ஸீதா ராவா தியுராः ராவலஹு ஹோவ்ருதம்' இத்யாதி ப்ரமாணங்களைக் கொண்டு நிராகரித்து, ப்ரதிபுத்ரான நமக்குப் பெரியபிராட்டியாருடனே இருந்து என்றுமொக்கப் பரிமாறுகிற இவனையொழிய ப்ராப்யாந்தரமும் சரண்யாந்தரமு மில்லை, இத்தம்பதிகளே ப்ராப்யரும் சரண்யரும் என்று பிரிவற்ற சேர்த்தியை ஸ்தாபித்த பிறகு தங்கள் க்ருதக்ஞதையாலே இவ்வாசார்யன் திறத்தில் விசேஷ கடாக்ஷம் பண்ணினது சொல்லப்படுகிறது. 'அநுஜ' என்பதற்குப் பிறகு உண்டான என்று பொருள், அதாவது தங்கள் விஷயத்தில் தேசிகன் கிஞ்சித்காரம் செய்தபிறகு உண்டான என்பதாயிற்று. இத்தால் ஸர்வ ஜனங்களுக்கும் பொதுவான ஸஹஜ காருண்யம் வ்யாவர்த்திக்கப்படுகிறது.

அன்றிக்கே, 'ராம' என்று சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லி 'அநுஜ' என்று இளையபெருமாள், ஸ்ரீபரதாழ்வான், ஸ்ரீசத்ருக்னாழ்வான் ஆகியமூவரையும் சொல்லி அவருடையக்ருபைக்குப் பாத்ரமானவென்றபடி. இந்த யோஜனையில் ஸ்ரீ ரகுவீரகத்யம், ஸ்ரீ அபயப்ரதானஸாரம் முதலிய ஸ்ரீஸூக்திகளில் பெருமாளுடைய நித்ய நிஸ்ஸீம வைபவத்தையும் சரணாகதர்களைக் காப்பாற்றுவதையே தனக்கு விடமுடியாத தர்மமாய்க் கைக்கொண்டிருப்பதையும் பரத்வம் ஸௌசீல்ய முதலிய சரண்யத்வோப யுக்த குணங்களையும் அவ் விராமபிரானுக்கு மிகவும் அபிமததமமான ஶரணாகதியின் பெருமையையும் பலவிதமாகப் பரக்க நிரூபித்திருக்கிறபடியினால் பெருமாள் க்ருபை செய்தருளினமை சொல்லப்படுகிறது.

கஹம்ஸவ-ம் கரிஷ்யாமி ஜாக்ருத ஸ்வபதஸ்ச தே ।
க்ரியதாமிதி மாம் வத ஸ்வயம் ப்ரப்ருதே ॥

என்று தான் ஸ்வயம் ப்ரயோஜனமாக ப்ரார்த்தித்த கைங்கர்யமாகிய புருஷார்த்தத்தைச் சிலர் "ஸேவாஶ்வவ்ருத்திः, என்றும் ஸேவா ஹி ஶ்வவ்ருத்தி ராக்யாதா ஸேவகாக " என்றும் தூஷித்ததை இவ் வாசார்யன் உலகத்தில் கர்மங்களால் ஏற்பட்ட ஸேவை துக்கமாயிருந்தபோதிலும் ஸ்வபாவத்தினால் ஏற்பட்ட சேஷத்வத்தினாலும் "தேனும்பாலும்நெய்

யும்" இத்யாதிகளின்படியே எல்லா போக்யங்களிலும் சிறந்த போக்ய வஸ்துவை அநுபவிப்பதினால் உண்டான ப்ரீதியினாலும் செய்யப்படு கிற கைங்கர்யம் ஸ்வயம்ப்ரயோஜனமாகத் தட்டில்லை யென்று ஸ்ரீமந் நியாய ஸித்தாஞ்சனம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்க ளில் ஸ்தாபித்திருக்கிறபடியால் இளையபெருமாளுடைய விசேஷ க்ரு பைக்குப் பாத்திரமானபடி சொல்லப்படுகிறது.

> 8 ந ாஜ ஙு கிரொஹிெத ந ஶெ கூவவ ாெஷ
>
> கெநவிரொயிநாம் நிரொவெ ।
>
> ஈஹஜஜ ர தாஜிஹெஜீஶஃ ஷுயம் குராயயிதாம்
>
> வஷாவகீஙாம் ॥

என்கிறபடியே தன் அவதாரத்திற்கு முக்ய ப்ரயோஜனமாக ஸ்ரீபர தாழ்வான் அங்கீகரித்த பாதுகாரத்னத்தின் மஹிமையையும், "யஷாவஜூெஶஷதஃ வ்யயிவ்யாம் வூயிெகா ராவவவாஷாகா வூஹாவஃ" என்கிறபடியே தன்னால் உலகத்தில் ப்ரகாசப்படுத்தப் பட்ட பாதுகா ப்ரபாவத்தையும் ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தில் ஆயிரம் ச்லோகங்களாலும் பரக்க நிரூபித்திருப்பதினாலே ஸ்ரீ பரதாழ்வானும் தன்னுடைய க்ருபைக்குப் பாத்திரமாக்கினபடி சொல்லப்படுகிறது.

ஸ்ரீசத்ருக்னாழ்வானும் தன்னால் அனுஷ்டிக்கப்பட்ட பாகவத கைங்கர்யத்தின் பெருமையை புருஷார்த்தகாஷ்டாதிகாரம் முதலிய இடங்களில் நிரூபித்திருப்பதினாலே தம்முடைய க்ருபைக்கு நம் தேசி கனைப் பாத்திரமாக்கினபடி சொல்லப்படுகிறது. அன்றிக்கே 'ராம' என்று நம்பிமூத்தபிரானை (பரசுராமனை)ச் சொல்லி, அவருக்குத் திருத் தம்பியாராகிய ஸ்ரீக்ருஷ்ணனைச் சொல்லுகிறது. அப்பொழுது "அரு ளினால் குறைவில்லா அகல்ஞாலத் தவரறிய நெறியெல்லா மெடுத் துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி" என்கிறபடியே ஸ்வதஸ்ஸர்வ ஜ்ஞனான கண்ணபிரான் ஸர்வஜ்ஞ ஜீவனார்த்தமாக அருளிச்செய்த கீதாசாஸ்திரத்துக்கு ப்ரகரண விருத்தமாக ஜகத் எல்லாம் பொய் என்று ப்ரதிபாதிக்கிறதென்றும் இன்னும் அநேகவிதமாக ப்ரதிவாதி கள் சொல்லுகிற அர்த்தங்கள் எல்லாவற்றையும் ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகையில் நிராகரித்து ப்ரகரணத்துக்குப் பொருத்தமாயும் கண் ணபிரான் திருவுள்ளத்துக்கு அனுகுணமுமான அர்த்தத்தை ஸ்தாபித் திருப்பதினாலும்,

𑌨 𑌹𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌜𑌾𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ।
𑌨𑌹𑌿 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑌾 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍁𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 ॥
𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌚 𑌤𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌧𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ।
𑌯𑍇 𑌮𑍇 𑌮𑌤𑌮𑌿𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ॥
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑍋𑌽𑌨𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇𑌽𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ।
𑌯𑍇 𑌤𑍍𑌵𑍇𑌤𑌦𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑌷𑍍𑌟𑌾𑌨𑌚𑍇𑌤𑌸𑌃 ॥

என்று முன் ப்ரகரணங்களில் நிரூபித்திருப்பதற்கும் மேலே அர்ஜுனன் அநுவாதம் செய்யுமிடத்தில்—

𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌗𑌤𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑍇 𑌵𑌚𑌨𑌂 𑌤𑌵 ।

என்கிற ஶ்லோகத்தின் வ்யாக்யானத்தில் ஸ்ரீபாஷ்யகாரர்—

𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌦𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾 𑌵𑌿𑌷𑌯𑌂 𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌚𑌨𑌂
𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑍇 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

என்று அருளிச்செய்திருப்பதற்கு விருத்தமாக ஸர்வ தர்மங்களினுடைய ஸ்வரூப த்யாகத்தை ப்ரபத்திக்கு அங்கமாக விதித்திருக்கிறது என்று ‘பரித்யஜ்ய’ என்பதற்கு அர்த்தம் சொல்லுவதை நிராகரித்து அநுவாதமாகவும், விதி பக்ஷத்திலும் ஸ்வரூப த்யாகம் ஏற்படாமல் ஆறுவிதமாக அர்த்தத்தை நிரூபித்து “தீதற்றநற்குணப்பாற்கடல் தாமரை செம்மலர்மேல் மாதுற்ற மார்பன் மருவ இக்கீதையின் வண்பொருளைக் கோதற்ற நான்மறைமௌளியின் ஆசிரியன் குறித்தான் காதற்றுணிவுடையார் கற்கும் வண்ணம் கருத்துடனே” என்று தாமே அநுஸந்தித்தபடி கண்ணன் திருவுள்ளத்திற்குப் பாங்காக அர்த்தம் அருளிச்செய்திருப்பதினாலே கண்ணபிரான் தம்முடைய திருவருளுக்கு நம் தேசிகனை முக்கியமான பாத்திரமாக்கினபடி சொல்லப்பட்டது.

அன்றிக்கே ‘ராம’ என்று முன்பு நிரூபித்திருப்பதைப் போலவே பெருமாளையும் பிராட்டியையும் சொல்லி அவர்களுக்கு ‘அநுஜ’ என்று 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌜𑌨𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌕𑍂𑌟𑌸𑍍𑌥ரான ஆழ்வாரைச் சொல்லி அவர் தயைக்குப் பாத்ரமான வென்றாகவுமாம். இந்த யோஜனையில்

'அநுஜ' என்பதற்குப் பின் பிறந்த என்று பொருள். ஆசார்ய கோஷ்டியில் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் அடுத்தபடி இப் பூமியில் அவதரித்தவர் நம்மாழ்வாரே. விஷ்வக்ஸேனர் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் அடுத்தபடி ஆசார்ய கோஷ்டியில் அநுப்ரவிஷ்டரான போதிலும் இப்பூமியில் அவதாரம் செய்யாமல் தானான தன்மையிலேயே ஆழ்வாருக்குப் பஞ்சஸம்ஸ்கார மந்த்ர மந்த்ரார்த்தங்களை அருளினாத்தனே. ஆழ்வாரோ வென்னில் அப்படிக்கல்லாமல்

அவோசத்ய: ஸஹஸ்ரம் ஹரிசரண ஸந்தாநகவிதாம்
அவிச்சேதாதீயஸ் தநுதநு காருண்ய விவஶ: ॥

என்கிறபடி தன்கரைபுரண்ட காருண்யத்தினால் சேதனர்களை உஜ்ஜீவிப்பதற்காக இக் கர்மபூமியில் அவதரித்தவர். ஆகையாலே அவரே 'ராமாநுஜ' என்கிற பதத்தால் குறிக்கப்படுகிறார். அப்பொழுது முன் அவதாரிகையில் சொன்னபடி திவ்ய ப்ரபந்த விஷயமாகவும் ஆழ்வார்கள் விஷயமாகவும் இவர் செய்தருளிய உபகாரங்களையும்—

த்ரமிடோபநிஷத்ஸாரஸ்ய யாதாத்ம்யம் ஸூசிதம் ।
ஸத்யைஶ் ஶ்ரூயதாம் நாத்ர ஶங்கநீய உபப்லவ: ॥

என்றும் "தனித்திருமால் தாளில் தலைவைத்தோம் சடகோபனருளினாலே" என்றும் ஆழ்வாருடைய மஹிமையைப் பரக்க வருளிச்செய்திருப்பதினால், ஆழ்வார் தம்முடைய க்ருபைக்கு ஸ்ரீ தேசிகனைப் பாத்ரமாக்கினபடி சொல்லப்படுகிறது.

அன்றிக்கே 'ராம' என்று ராமமிச்ரர் என்று திருநாமமுடைய மணக்கால்நம்பியைச் சொல்லி 'அநுஜ' என்று அவருடைய கடாக்ஷ விஷயரான பிறகு ஞான ஜன்மத்தை அடைந்தவரான ஸ்ரீ ஆளவந்தாரைச் சொல்லுகிறது. அப்பொழுது "ஸ்வஸூக்திபிர் ஹரிஷ்டம் யாமுநஸ்தோத்ர த்ரயம் வ்யாக்யாத த்ரமிடோபநிஷத்கம் வேதேஶ:॥" என்கிறபடியே தம்முடைய உபயவேதாந்தாசார்யர் என்கிற பிருதை ஸார்த்தமாக்கவல்ல பெருமையை யுடைய ஸ்ரீஸ்தோத்ர பாஷ்யம், சதுஶ்லோகீ பாஷ்யம், கீதார்த்தஸங்கிரஹரக்ஷை என்கிற வ்யாக்யான க்ரந்தங்களில் ஆளவந்தாருடைய திருவுள்ள முகக்கும்படி அர்த்த விசேஷங்களை யருளிச்செய்தபடியினாலே தம்முடைய பரமக்ருபைக்கு இவ்வாசார்யனைப் பாத்ரமாக்கினபடி சொல்லப்படுகிறதாகவுமாம்.

அன்றிக்கே 'ராமாநுஜ' என்று நம் தர்சனஸ்தாபகரான உடையவரைச் சொல்லுகிறது. இந்த ஸ்ரீபாஷ்யகாரர்—

ஸமஸ்த்வாய ந க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம்

வ்யஸூத்ரவாய மாஸ்ஸங்க்ஷிபவ:

தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே ॥

என்றல்லவோ ப்ரதிக்ஞை செய்தார். இதற்கு ஸ்ருதப்ரகாசிகையில் "தந்மதாநுஸாரேண . நது ஸ்வோத்ப்ரேக்ஷித ரீத்யேண"

என்றும் "ஸூத்ராக்ஷராணி - ஸௌத்ர பதாநாம் ப்ரக்ருதி ப்ரத்யய விபாகாநுஸாரேண, நது ஸ்வோத்ப்ரேக்ஷிதார்த்தே ஸூத்ராணி யதாகதஞ்சித்யோஜயிதவ்யாநீதி, இதி பாவ: ॥"

என்றும் வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே போதாயனர் முதலிய ரிஷிகளுடையவும் பூர்வாசார்யர்களுடையவும் மதத்தை அநுஸரித்து ஸூத்ரங்களுடைய ஸ்வாரஸ்யத்துக்கு அநுகுணமாக ஸ்ரீ பாஷ்யகாரரால் அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீ பாஷ்யத்துக்கு அன்யபரத்வமும் அதை அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யகாரருக்கு விப்ரலம்பகத்வமும் தோன்ற சிற்சில வாக்யங்களைத் தங்களிஷ்டபடியே வர்ணித்தும் "தமேவ" இத்யாதி வாக்கியஜந்ய ஞானமே மோக்ஷஸாதனம், என்றும் சொல்லுகிற குத்ருஷ்டிகளை நிரஸிக்கைக்காகக் கர்மாங்கமாய் "வேதந, த்யாந, உபாஸநாதிஸப்தவாச்யமாய் ஸகிரதாவாவமான உபாஸநாத்மக ஞானமே வேதாந்த ப்ரதிபன்னமான மோக்ஷ ஸாதனம் என்று இவர் நிச்சயித் தருளிச்செய்திருக்கையாலே, இவர் மோக்ஷஸாதனமாக அறுதியிட்ட அர்த்தம் இது, என்றுகொண்டு தம்முடைய ருசிபரிக்ரஹீதமான அர்த்தத்தையே விச்வஸித்திருக்கும் ஸாத்விகர் இத்தையே !விச்வஸித்திருக்கும், என்று பார்த்தருளி, ஆசார்யருசி பரிக்ரஹீதமுமாய் தமக்குத் தஞ்சமுமாகத் தாமறுதியிட்டிருக்கு மர்த்தம் பிரபத்தி என்னுமிடத்தை கத்ய ரூபேண வெளியிடுகிறார். ஆனால் இப்ரபத்திதன்னையே கொண்டு குத்ருஷ்டி நிரஸனம் பண்ணதொழிவானேனென்னில், ப்ராம்மணன் சண்டாளனுக்கு வேதத்தை உபதேசித்தாப்போலே தூரஸ்த்தரானவர்களுக்குப் பரம ரஹஸ்யமான இவ்வர்த்தத்தை வெளியிடவொண்ணாது, என்று பார்த்து அவர்களிழிந்த சாஸ்த்ரமுக

த்தாலேயே அவர்களை நிரஸித்து சாஸ்த்ர தாத்பர்யமான ஸ்வஸித்தாந்தத்தை இம்முகத்தாலே வெளியிடுகிறார் என்று கல்பித்தும், ஸ்ரீபாஷ்யத்தில் ஆநுமானிகாதிகரணத்தில்—

1 "तस्य वशीकरणं तच्छरणागतिरेव यया, संसारव्यसनहतानां हृदयेष्वेवं जृम्भते । तयैव शरणं वः ॥ इति ॥" என்றும் ஸ்ருதப்ரகாசிகையில் முதல் ச்லோக வ்யாக்யானத்தில் 2 "विशेषणतया विनताः भक्तिहताः, न्यासोपासनात्मकशेषविद्या विशेषनिष्ठाः विवक्षिताः" என்றும் 3 'नानाशब्दादिभेदात्' என்றும் 4 'विकल्पोऽविशिष्टफलत्वात्' என்கிற ஸூத்ரங்களிலும் "अक्षरविद्यादिकाः इति श्रुतिशब्देन न्यासविद्या विवक्षितः सत्त्वविशब्दादि भेद सद्भावात्" என்றும் 5 "सविद्यकरणे न्यासविद्या सविशेषा" என்றும் வ்யாக்யானம் செய்தும் சரணாகதியை வெளிப்படுத்தியிருப்பதற்கு விருத்தமாக 6 'ப்ராம்மணர் சண்டாளனுக்கு வேதத்தை உபதேசித்தாப்போலே தூரஸ்த்தரானவர்களுக்குப் பரம ரஹஸ்யமான இவ்வர்த்தத்தை வெளியிட வொண்ணாதென்று பார்த்து' என்று அபிப்ராயம் கல்பித்தும் இப்படியே ஆவ்ருத்த்யதிகரணத்துக்கு ஸங்கதியை நிரூபிக்குமிடத்து ச்ருதப்ரகாசிகையில் 7 "भक्तिरूपापन्न ज्ञानस्य वृत्तिरूपतया फलकोटिनिवेशज्ञापनायेदं" என்றும், 8 'तदधिगमाधिकरण' ச்ருதப்ரகாசிகையிலும், 'उपायभूतोपासनस्य उपास्य निरतिशय प्रियत्वेन स्वयं प्रियरूपत्व

बोधनाय उपायभूतत्वबोधनं कीर्तितमन्तः तस्मिन् रूपेणाकृतं, दिव्यालोकहारोरुदुःखे नविदेहात्मनामान्तर्मुखं तदन्तः स्वतन्त्र्य

साध्यसंभवितः । तदीय विषयानन्द कीर्तनवर्णसुपसदा ॥

इत्यादिभिः प्रीतिरूपत्वं हि दर्श्यते ॥

என்றும் அருளிச்செய்திருப்பதற்கு விருத்தமாக பக்தியை ப்ராப்யத்துக்கு விளம்பநசமாயிருக்கும்' என்று நிரூபித்தும் மற்றும்—

9 "उपायेत्वेनान्यत्र वाञ्छायन रूपेण वक्ष्ये ॥" என்று ப்ரபன்னர்களுக்கு என்று அருளிச்செய்யப்பட்ட நித்ய க்ரந்த

த்தில் ப்ரதிபாதிக்கப்பட்டும் பிறகு அவருடைய திருவடியான வங்கி புரத்து நம்பியால் அனுஸரிக்கப்பட்டும் அப்படியே எம்பாரால்—

1 '' ஸ்வயமேவ ஸர்வேஷாம் ஸமாராதநக்ரமம் ''

என்று உபக்ரமித்து நிரூபிக்கப்பட்டு ஸ்ரீபராசரபட்டராலும் அனுஸரிக்கப்பட்ட திருவாராதன க்ரமத்தை அநாதரித்து வேறுவிதமான ஆராதன க்ரமத்தை நடத்தியும், வந்த மதஸ்தர்களால் பற்பலவிதங்களான ஆக்ஷேபங்களுண்டான காலங்களில் அவற்றை யெல்லாம் நம் தேசிகன் பரச்சதங்களான க்ரந்தங்களைச் செய்தருளி உடையவருடைய ஸித்தாந்தத்தை ஸ்தாபித் திருப்பதினால் எம்பெருமானார் தம்முடைய பரமக்ருபைக்கு இவரைப் பாத்திரமாக்கினபடி சொல்லப் படுகிறது. இவ்வர்த்தத்தை—

2 ஸ்ரீபாஷ்யகார: பந்தாநமாத்மநா தர்சிதம் புந: ।
உத்தர்த்துமாகதோ நூநமித்யுக்தாயாஸ்து ஸம்மதம் ॥

என்று நயினாராசார்யரும்—

3 ஸ்ரீபாஷ்யம் விவரய்ய ஸம்யக் விவேசிகா ஸ்வயம் வாதிநோ
ப்ராஹ்மம் ஸ்தாபிகாஹ்யுக்திகாநுஸாரி ஸந்தர்ஷ்ய
ஸம்ப்ரதிஷ்டாபயா ।
ஸ்ரீமத் வேங்கடநாத தேசிக சிரோரத்நாவிர்பாவ
விசேஷ்யம் ஸமுத்தக்ஷிணக்ருதிந: ஸ்ரீகாந்தக்ஞாதிந: ॥

4 '' வேங்கடேசாவதாரோ விஸ்வஜிதாதே ஸிம்ஹவத் தேவ த்ருப்யபாஷ்யம் ''

என்றிப்படி பலமுகமாக மற்றும் பல பின்புள்ளாரும் அனுஸந்தித்தார்கள்.

அன்றிக்கே 'ராமாநுஜ' என்று கிடாம்பி அப்புள்ளாரைச் சொல்லுகிற தாகவுமாம். அப்பொழுது—

5 '' ராமாநுஜாய முநயே த்ரய்யா நாதாய ஸ்வாதந்த்ர்யகாய: ।
ஸ்வாமிவிம்சத்யப்தேய: ॥ ''

என்றும், 6 'காவலனெங்கள் கிடாம்பிக் குலபதி அப்புள்ளார்தம் தேமலர் சேவடி சேர்ந்தவர்த மருளால் நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற நம்பி' என்றும் சொல்லுகிறபடியே கிடாம்பி அப்புள்ளாருடைய க்ருபையினால் ஸர்வ சாஸ்த்ரங்களையும் இருபது வய

துக்குள்ளே அறிந்தமை சொல்லப்படுகிறது, இவ்வர்த்தத்தை நம் தேசிகன் தாமே 'ஆசார்யன் பக்கலிலே தாம் கேட்டருளினபடியே, கிடாம்பி யப்புள்ளா ரடியேனைக் கிளியைப் பழக்கிவைக்குமாப்போலே பழக்கிவிக்க', என்று அநுஸந்தித்தார். அன்றிக்கே—

1 "ஸ்ரீமத்ப்யாம் ஸாத்விகஸாவித்ர்யந்வயி வரதாசார்ய
ராமாநுஜாப்யாம் ஸமுபதிஷ்டேந ॥"

2 "தத்த்வாதீர்த்தரத்ப்ரஷிவாத ஶாஸ்த்ரேண ॥"

அவர் திருவுள்ளத்தி லிரக்க மடியாக என்று தாமே அநுஸந்திக்கும் படி—

3 "ப்ரதிஷ்டாபித வேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத: ।
பூயாத்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாண பாஜநம் ॥"

என்று விசேஷ கடாக்ஷம் செய்தமை சொல்லப்படுகிறது.

இப்படி பூர்வாசார்யர்களுடைய க்ருபைக்குப் பாத்ரம் என்றது அதற்கு விஷயமானவர் என்பது மாத்திரம் அன்றிக்கே அந்த க்ருபை களை யிட்டுவைக்கும் கொள்கலம் (ப்ரதிக்ரஹ பாத்ரம்) என்று பொருள்படக் கடவதாயிற்று. இத்தால் அந்த பூர்வாசார்யர்களு டைய க்ருபையைப் பெற விருப்பமுள்ளவர்கள் நம் தேசிகனை யாச்ர யித்து இவருடைய க்ருபையைப் பெற்று அதன்மூலமாகவே அவர்க ளுடைய க்ருபையைப் பெறவேண்டும் என்று சொல்லப்பட்ட தாகி றது. இவ்வர்த்தத்தை—

4 "நிஶ்ரேயஸாய நிகிலஸ்ய ஸமஸ்தஶாஸ்த்ர
ராமாநுஜஸ்ய தயயா யதிராஜஸூக்தி
ஜாகர்த்தி ஹ்ருத்தி: கவிதார்க்கிகஸிம்ஹே ॥"

5 "ஸேவாவிஷ்ண ஸேவாராயநந்தா
[illegible]
வேதாந்தாசார்யம் ப்ரபத்யாநந்தா"

6 "ராமாநுஜாதி ஸம்ப்ரதாய ஶிஷ்யஜநாபஹ்ருதிநா
யதீந்த்ர ப்ரியாஸ்ய: । யதீந்த்ர ப்ரியாவிஷ்ணு காருண்ய

ஶிஷ்யா: ஸதேஶிகாஸ்ரீத்வாத் ஆசார்யப்ருத்யாநாம் ॥

என்று அந்வயவ்யதிரேக முகேந ப்ரபஞ்சித்தார்கள்.

இப்படி எம்பெருமான் முதலாகக் கிடாம்பியப்புள்ளார் வரையி லான பூர்வாசார்யர்கள் ஒருமிக்க இவரைத் தங்கள் க்ருபைக்குப் பாத்திரமாக்கினபடியினால் உண்டான ப்ரயோஜனத்தைச் சொல்லுகிறது 'ஜ்ஞாநவைராக்ய பூஷணம்' என்றது. 1 வ்யாஸப்ரஸாதாச்ச்ருதவாந் ஏதத்குஹ்யமஹம் பரம் । யோகம் யோகேஶ்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம் ॥ என்று ஒரு ஆசார்யனுடைய கடாக்ஷத்தினாலே அதீந்த்ரியங்களான வஸ்துக்களை அறியும் சக்தியுண்டா னால் எம்பெருமான் முதலான எல்லா ஆசார்யர்களுடைய கடாக்ஷங்க ளுக்கும் விஷயபூதரான இவ்வாசார்யனின் ஜ்ஞானத்தின் மேன்மை யைச் சொல்லவேண்டா மன்றோ? இவ்வர்த்தத்தை—

2 ஸரதாசார்யதாஸேந ஜாஹ்நவ்யாம் ஸ்ம்ருத்யுபேஷ்டந
ஸஸத்ரம் ஸஹ நிஶ்சிதயியா ॥ என்றும்,

3 ஶர்வப்ரஸாதநஸர்வபூர்ணஶஶிஶ்ரீபூர்ணா நவைஸஸக்த்யஸ்தாதி
வஸ்தத: நஹி கிஞ்சித்யவஸ்ய ஶ்ருதி ॥

என்றும் 4 'அவர் திருவுள்ளத்தி லிரக்கமடியாகப் பெருமாள் மறவா மல்காத்து' என்றும் 4 'அடியவர்பால் மெய்யைவைத்துத்தெருள்தர நின்ற தெய்வநாயக,' என்றும் பலபடியாக இவ்வாசார்யன் தாமே அருளிச்செய்தார்.

இங்கு ஜ்ஞான மென்கிறது பரமாத்ம ஸ்வரூப ஸ்வபாவங்களில் உண்டான தத்வ ஞானத்தைச் சொல்லுகிறது. இது ஸாமான்யமாய் பிறந்த த்வேஷத்துக்குக் காரணமாகில் ஆஸுர ஸ்வபாவமாய்—

6 தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் ।
க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு ॥

என்கிறபடியே நரகப்ராப்திக்குக் காரணமாகையினாலும்—

7 ஶுஶ்ரூஷாவந்தோ தாஸக்த்யா ஶாஸ்த்ராவேத்தி ஜநார்தந: ॥ என்றும், பக்த்யா த்வநந்யயா ஶக்ய: என்றும், 8 'ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந என்றும் சொல்லுகிறபடியே ப்ரீதி வேண்டிய தாகையினாலும் ப்ரீதி யாகிய ஜ்ஞானத்தைச் சொல்லி அப்படி பரமாத்மாவினிடத்தில் உண்

டாகிய ப்ரீதியினால் மற்ற விஷயங்களில் ஆசையில்லாமையை 'வைராக்³ய' என்னும் பதமும் சொல்லுகிறது. இங்கு 1'வைராக்³யே நிர்வேத:³ விரக்தோ வைராகி³ணி ॥' 2'மாற்பால் மனம்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு,' இத்யாதிகள் அநுஸந்தேயங்கள். இவ்வாசார்யர் தாமும் வைராக்ய பஞ்சகத்தில்—

3 க்ஷுத்³ரநரேந்த்³ர சாடுரசநாத⁴ந்யாந் ந மந்யாமஹே ।
தே³வம் ஸேவிதுமேவ நிஶ்சிநுமஹே ॥

என்றும் தம்முடைய ஜ்ஞான வைராக்யங்களை அருளிச் செய்திருக்கிறார். அன்பிக்கே ஜ்ஞானமென்பது அர்ச்சா ரூபத்தில் பாவநத்வ ஸௌலப்யங்கள் விஞ்சியிருப்பதையும், மிறுக்கற அதற்கு மோக்ஷத்தைக் கொடுக்கும் ஸ்வபாவ மிருப்பதையும் பற்றிய ஜ்ஞானத்தையும் 'வைராக்யம்' என்பது 4'ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே, 5'இச்சுவை தவிரயான்போ யிந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்கிறபடியே பரம புருஷார்த்தமான மோக்ஷத்திலும் உண்டான வைராக்யத்தையும் சொல்லுகிறது.
இவ்வர்த்தத்தை—

6 நிரஞ்ஜநம் நிகி²லஶக்திபக்ஷபாதம் விஜ்ஞாநதா³பி⁴ரதிரம்யம் ।
ஸத்யம் ஶிவம் ஶரணமேவ நாத² ஸௌலப்⁴யவாத்ஸல்ய
நதே³ஹிஷாஷ: ॥

7 ஸ்வத³த்தம் ஸ்வஷித யபாஹி ஸேவஸ்வ ॥

8'நின்வடிவழகுமறவாதார் பிறவாதாரே', 9'ஓர் விலங்காமயல் பெற்றனமே' என்று தாமே அருளிச்செய்தார்.

அன்பிக்கே 10'அடியார்களுடன் உடன்கூடுவதென்றுகொலோ' 'அடியவரோடென்றுகொலோ அணுகும் நாளே' 8'நெடுமாற்கடிமை', 11'பயிலும் சுடரொளி', 'கேட்டரும் திறல் தேனினை' என்பவைகளில் சொல்லுகிறபடியே பாகவதர்களே பரமோத்தேச்யர் என்கிறதுவே 'ஜ்ஞானம்', மற்ற பலன்களில் ஆசையில்லாமை 'வைராக்யம்'. இவ்வர்த்தத்தை—

நாபேக்ஷணீயாந்யபி நாகநாதி² நாஸ்திகீ நாஸ்திக
ஸ்வாராஜ்யவைரஸ்ய ஸம்பாதா³ ஸமாதே⁴ஹே ।

[illegible] ।
[illegible] ॥

என்று தாமே அருளிச்செய்தார்.

1 'மற்றுமோர் தெய்வமுளதென்றிருப்பாரோ டுற்றிலேன் உற்றது முன்னடியார்க் கடிமை, மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் கண்ணபுரத்துறை யம்மானே' என்று ஸர்வேச்வரன் பக்கலில் ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணின திருமங்கையாழ்வார் அருளிச்செய்தபடியே பாகவத கைங்கர்யமே ப்ரதான கர்த்தவ்யம் என்கிற க்ஞானமும், தேவதாந்தர பக்தர்களிடத்தில் வைராக்யமும் சொல்லப்படுகிறது.

இப்படிப்பட்ட க்ஞானவைராக்யங்களைப் பூஷணமாக உடையவர் என்றபடி. அதாவது 2 'ஜ்ஞாநவைராக்ய [illegible]' என்கிறபடியே இந்த க்ஞான வைராக்யங்கள் ஸூர்யனுடைய தேஜஸ் ஸூர்யனை ப்ரகாசப்படுத்துமாப்போல இவ்வாசார்யனை இவ் வுலகத்தில் இணையற்றபடி ப்ரகாசப் படுத்துகின்றன என்றபடி. அன்றிக்கே,—

3 ராகவம் ஶோபயந்த்யேதே ஷட்குணா: புருஷோத்தமம் ॥

என்கிற விடத்திலேபோல திருவாபரணங்க ளில்லாத பொழுதே ஸ்ரீராமபிரானை ஆறு குணங்களும் திருவாபரணம் அணிந்திருக்குமாப் போலே மிகுந்த சோபையைக் கொடுத்துக்கொண்டிருந்தாற்போலே நம்மாசார்யன் திறத்திலும் இந்த க்ஞான வைராக்யங்கள் திருவாபரணங்களைப் போலப் புதியதோர் சோபையைக் கொடுத்துக்கொண்டு விளங்கியபடி சொல்லப்படுகிறது. அதெங்ஙனே ஒக்குமெனில்? சாந்தோக்ய உபநிஷத்தில் ஆசார்யன் சிஷ்யனைப் பார்த்து உன்னுடைய முகம் ப்ரம்மக்ஞானியினுடைய முகம்போல ஸௌம்யமாய் விளங்குகின்றதே என்ன? என்று கேட்டதை அநுஸரித்து ஸ்ரீ விஷ்ணு புராணத்தில்—

4 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

என்று சொல்லியிருக்கிற படியினால் கேவலம் ஆத்மாவைப் பற்றிக்கிடக்கிற விலக்ஷண க்ஞான வைராக்யங்கள் திருமேனியிலே நிழலெழுந்து தோன்றுகிற படியாலே திருமேனிக்குத் திருவாபரணங்களைப் போலே விலக்ஷணமான சோபையைச் செய்து கொண்டிருக்குமை மிகப் பொருத்தமுடையதே என்று கருத்து.

அன்றிக்கே க்ஞான வைராக்யயோ: பூஷணம், என்று ஸமாஸத்தைச் சொல்லி க்ஞானத்திற்கும் வைராக்யத்திற்கும் நம் தேசிகன் பூஷணமா யிருப்பவர் என்று அவைகளுக்கும் ஒப்பற்ற சோபையைச் செய்துகொண்டிருந்தமை சொல்லப்படுகிறது. அப்பொழுது—

1 "ஶரணாயத்தம் ப்ரோக்ஷணீஷு ஹிதம் ஜந்தவம்
விஷயஸ்ஸம்ஸக்தி க்ஷிதியாவதே தத்வயிஷ்வாந: ।
ஶரணாஸ்த்ர ஜ்ஞாந ரூஹ்ய தயஜ ஹஸ்த தயா
ஶரஹீஹஸ்வம் யாதாஜ திஹி நிஶ்ரேணஷ ப்ருதிவஶாக ॥"

என்கிறபடியே குணங்களுக்கும் பெருமையைக் கொடுத்துக்கொண்டிருக்கும்படியான ஆஶ்ரயகௌரவம் சொல்லப்படுகிறது. ஸ்ரீ ஆளவந்தார் தம்முடைய பரமாசார்யனை ஸ்ரீமந் நாதமுனிகளை 2 'க்ஞான வைராக்யராசயே" என்று க்ஞானம் வைராக்யம் இவைகளுடைய பசும் கூட்டமாக அநுஸந்தித்தார் இவ்விடத்தில் 3"ஹர்ஷாய மேயோயி ஶதம் நிஜகாந்திஹேதா:" என்கிறபடி க்ஞானத்திற்கும் வைராக்யத்திற்கும் பெருமையைக் கொடுக்கும்படியான ஆஶ்ரய கௌரவம் அநுஸந்திக்கப் படுகிறது என்றறியத்தக்கது.

'ஸ்ரீமத் வேங்கட நாயார்யம்.' என்பதினால்' இவ்வளவுக்கும் காரணமான அவதார வைலக்ஷண்யம் சொல்லப்படுகிறது. ஸ்ரீயை உடையவரான வேதாந்தாசார்யன், என்னும் திருநாமத்தை உடைய, என்று பொருள். இத்தால் இவ்வாசார்யனுடைய பிதாவாகிய அனந்தஸூரியின் ஸ்வப்னத்தில் திருவேங்கடமுடையான் தோன்றி நியமித்தருளியபடியே திருவோணத் திருவிழவுக்கு இவர் திருமலைக்குச் சென்றார். பிறகு அங்கே ஒரு திருமாளிகையில் அவர் வஸித்துக்கொண்டிருக்கும் பொழுது ஒருவர் திருவேங்கடமுடையானுடைய ஸந்நிதியில் ஆராதனத்திற்கு உபயோகித்துவந்த இரத்தின கண்டையை அனந்தஸூரி கையில் கொடுக்க அதைப்பெற்று அவர் தம் தேவியாரான தோதாரம்மை கையில் அதைக் கொடுக்க அதைத் தேவியாரும் வாங்கித் தம் மடி

யில் வைத்துக்கொள்ள அந்தத் திருமணியும் அங்கே மறைந்ததாக இவ்விருவரும் கனவு கண்டனர். அன்றுமுதல் தோதாரம்மையார் திருவயிறு வாய்த்து மற்றுமொரு திருவேங்கட முடையானுடைய அவப்ருததினமாகிய திருவோண நக்ஷத்திரத்தன்று அவதரித்த இவ்வாசார்யனுக்குத் திருவேங்கடநாதன், என்று அவ்வெம்பெருமானுடைய திருநாமத்தையே பல காரணங்களால் ஆங்குள்ள அறிவிற் சிறந்த பெரியார் சாற்றினர். இவ்வர்த்தத்தை பெரியோரிடம் ஸூக்ஷ்மமான பூர்வ வ்ருத்தாந்தத்தைக் கேட்டறிந்தவரும் ஸ்வாமிக்கு ஸ்ரீ வரதனே புத்திரனாக அவதரித்தாரென உலகமெங்கும் வழங்கப்பட்டவரும் ஸ்வாமியின் அஸாதாரணமான க்ஞான வைராக்யாதிகளை விடாமல் அனுபவித்தவருமான குமார வரதகுருவும் "அன்றிவ்வுலகினையாக்கி......பின்னும் வென்றிபுகழ்த் திருவேங்கட நாதனென்னும் குருவாய்" என்று அருளிச் செய்தார். "வென்றிபுகழ்த் திருவேங்கட நாதனென்னுங் குருவாய்" என்றதினால் ஜயஸ்ரீயையுடைய திருவேங்கடநாதன்" என்று பொருளாகவுமாம். அதாவது பகவான் பரம க்ருபையினால் பிரளயகால ஸமுத்திரத்தில் அழுந்திக்கிடந்த மூல ப்ரக்ருதியை அதிலிருந்து உத்தரணம் செய்தும், அசேதனத்தோடு அபின்னமாயிருந்த சேதன வர்க்கங்களைக் கடாக்ஷித்து,—

1 "விஷ்ணோ꞉கூ꞉வாகாவ꞉வஜாயதெ ॥"

என்கிறபடி தம்முடைய ஸஹஜகாருண்யத்தினால் "பொருளென்றிவ்வுலகைப் படைத்தவன்" என்கிறபடியே இவைகளுக்கும் புருஷார்த்தம் ஆகக்கடவது" என்கிற திருவுள்ளத்தினால் கரண களேபரங்களைக் கொடுத்தான். சத்ருக்களை ஜயிக்கத் தன் தந்தை கொடுத்த கத்தியைத் தன் கழுத்திலேயே போட்டுக்கொண்டு மாளும் அறிவற்ற ராஜகுமாரனைப்போல "திருக்கோட்டியூர் திருமாலவன் திருநாமங்கள் எண்ணக்கண்ட விரல்கள்" என்கிறபடி பகவானுக்கு பணிவிடை செய்யக் கொடுத்தவைகளைக் கொண்டு மென்மேலும் நரகாதி அநர்த்தங்களை இவன் தேடக்கண்டு பகவான்—

2 "ஶாஸநம்வஹ꞉வஜிவகாரண꞉கொ ஜஊாதி ॥"

என்கிறபடி இதைச்செய், இதைச் செய்யாதே என்று விதத்தைக் கட்டளையிடுகினால் சாஸ்திரம் என்று சொல்லப்பட்ட சாஸ்திரங்களை வ்யாஸாதிகளிடம் அனுப்ரவேசித்தும் நாராயண ராமகீதாசார்யாதி ரூபமாகத் தானே நேரில் அவதரித்தும் உபதேசிக்க அதுவும் ப்ரயோ

ஜனப்படாமற்போக "நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே" என்கிறபடி தன் வடிவழகைக் காட்டி அழகில் ஆர்வமுடைய இச்சேதனர்களை வசப்படுத்திக்கொள்ள வெண்ணி அனேக திவ்ய தேசங்களில் "தேசொத்தாரில்லை" 1 'ஸர்வஸ்வ ஹிதாவதாரோ(அ)ர்ச்யம்' என்னும்படி அர்ச்சாவதாரம் கொண்டு எழுந்தருளினன். அதுவும் இவர்கள் திறத்தில் பயன்படவில்லை. ஆகையினல்—

2 'யஸ்யாஸௌ ஸஜ்ஜதேஷாவிநஜஹஸ்ராவ்யம்
ஸம்ஸ்ரிதாநாம் ஸ்ருநாநாம் ஸவிநாம் ஸவாணஸ்வ
ஸம்ஸ்தாராய நாராயண: '

என்கிறபடியே ஆசார்யரூபேண அவதரித்தருளினன். அவர்களிலும்

3 'கலிதஸ்ஸஸஹ்ஸ்நம் ஜஸஹ்ஸ்நம் ந: ॥'

என்கிறபடியே நம் தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைத் திருவேங்கடமுடையான் அவதரித்த பின்னரேதான் நம் விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயத்தில் அக்ஞான அன்யதாக்ஞான ஸம்சயாதிகளற்று இதொன்றுமே உலகத்திற்கொத்து இணையற்று விளங்குவதாயிற்று. ஏனெனில் ஸ்ரீமன் நிகமாந்த மஹாதேசிகன் ஸம்ஸ்க்ருத ப்ராக்ருத த்ராவிடமணிப்ரவாள ரூபங்களாயும், சாஸ்த்ர காவ்ய நாடக ஸ்தோத்ர ரூபங்களாயும் அவை தம்மிலும் கத்ய பத்ய ரூபங்களாயும் உள்ள ஸ்ரீஸூக்திகளினல் தத்வஹித புருஷார்த்தங்களை எல்லோரும் எளிதில் அறியும்படி செய்தருளினமையால் 'த்வம்மே' என்று எம்பெருமான் கைபிடிக்க 'அஹம்மே' என்று திமிறப்பண்ணும் அஹங்காரத்தைத் தவிர்ந்து சகல சேதனர்களும் இசைந்து நிற்கலாயிற்று. ஆகையினல் 'த்வம்மே' என்று சொன்ன எம்பெருமானுக்கு வெற்றி இவராலே ஆயிற்று.

ஸ்ரீ ராமாவதாரத்தில் 4 'தவாஸ்மி தம்மி' என்று மார்புதட்டி மூன்வந்தும் மூவருக்குமேல் ஆச்ரயித்தாரில்லை அந்தச்சொல் சமுத்ர கோஷமாய் முடிந்ததத்தனையே. ஸ்ரீக்ருஷ்ணவதாரத்தில் தேர்தட்டில் நின்று—

5 'மாமேகம் ஶரணம் வ்ரஜ'

என்று தோள்தட்டிப் பெருங்கூச்சலிட்ட காலத்தும் அதை எதிரே நின்று கேட்டிருந்த அர்ஜுனன் அனுஷ்டித்தானில்லை. நம் வெண்பி

புகழ்த் திருவேங்கடநாத குருமணி ஸர்வ ஸுலபமாகியும் ஸர்வாதிகாரமாகியும் ப்ரதிபந்தக கந்தமுமற்றதாகியும் தான் நினைத்தபொழுது ஸகல பலங்களையும் கொடுக்கவல்ல சரணாகதியாகிய உபாய விசேஷத்தைத் தம்முடைய க்ரந்தங்களில் ஸங்க்ரஹமாயும் விஸ்தாரமாயும் பரமதநிரஸன பூர்வகமாக ப்ரமாணங்களுடன் அருளிச்செய் திருப்பதினாலே எல்லாச் சேதனர்களும் அவ்வுபாய விசேஷத்தை நன்கு உணர்ந்து அனுஷ்டித்து உஜ்ஜீவிக்கலாயினர். ஆதலின் எம்பெருமானுக்கு ராமக்ருஷ்ணாத் யவதாரங்களிலும் ஸித்திக்காத தம்முடைய மனோரதம் இவ்வாசார்ய ரத்னமாக அவதரித்தபின் நன்கு ஸித்திபெற்றமையால் ஜயஸ்ரீயை உடையவர் இந்தத் திருவேங்கடநாதனே என்று தாத்பர்யம். இவ்வர்த்தம் பிள்ளையந்தாதியில் "அன்றிவ்வுலகினையாக்கி அரும் பொருள் நூல்விரித்து, நின்று தன்னீள் புகழ் வேங்கட மாமலைமேவி, பின்னும் வென்றிபுகழ்த் திருவேங்கடநாதனென்னும் குருவாய் நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே" என்று அருளிச் செய்யப்பட்டது. அன்றிக்கே,—

'[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥'

முன்பொருகால் தொண்டை மன்னவன் கலியின் கொடுமை ஓங்கி வளர்ந்து ஸ்ரீமத் ராமானுஜன் அடியாரெனப்படுவரே அவ்விராமானுஜ மதத்திற்கு முரணான விபரீதார்த்தங்களை விளக்கக் கண்டு வருந்தி ஸ்ரீநிவாசனடிகளில் பணிந்து இதைப் பரிஹரிக்க ஸ்வாமி செய்யப்போகும் அவதாரம்தான் யாதோ என்று ப்ரார்த்திக்க 'ஸ்ரீமான் வேங்கடநாதார்ய:' என்னும் ச்லோகத்தை அவ்வரசனுக்குப் பகவான் உபதேசித்து இந்த ச்லோகத்துக்கு விஷயமாக நாம் அவதரித்து வேதாந்த ரஹஸ்யார்த்தங்களைச் செவ்வனே ரக்ஷிக்கிறோம் என்று அருளினர். இம்மந்திரத்தைப் பற்றியேதான் 'துளங்குநீண் முடி அரசர்தம் குரிசில்' என்கிற பாசுரத்தில் 'வளங்கொள் மந்திரம் மற்றவர்க்கருளிச் செய்தவாறு' என்கிற திருமங்கை மன்னன் பாசுர

மும் நிரூபிக்கிறது என்று ஸத்ஸம்ப்ரதாய பரம்பரையால் கிடைத்த அரும் பெரும் பொருள். 'ஸ்ரீமான் வேங்கடநாதார்ய:' என்கிற ச்லோகத்திலுள்ள (ப்ரதமாந்தமான) முதல் வேற்றுமைச் சொல்லில் முடிந்த பதங்களின் வேற்றுமை உருபுகளை மாற்றி "த்விதயாவிபக்தி" இரண்டாம் வேற்றுமை உருபுகளை ஏற்றவைகளாகச் சொல்லப் பட்டன. "ஸ்ரீமத் வேங்கடநாதார்யம்" என்பது "ஸ்ரீமான் வேங் கடநாதார்ய:" என்பதையும் "வேதாந்த தேசிகம்" என்பது "வேதா ந்தாசார்ய:" என்பதையும் (வந்தே) என்கிற நிகழ்கால வினைமுற்று "ஸதா மே ஹ்ருதி ஸன்னிதத்தாம்" என்பதையும் குறிப்பிடுகின்றது "க்ஞான வைராக்ய பூஷணம்" என்பது அறிவிற்சிறந்த கவிகளு க்கும், தார்க்கிகர்களுக்கும் சிங்கம்போன்றவர், எனப் பொருள்கொ ண்ட "கவிதார்க்கிக கேஸரீ" என்பதைக் குறிப்பிடுகின்றது. ராமா னுஜதயாபாத்ரம், என்பதும் இங்ஙனம் இணையற்ற பெருமைக்கு யாது காரணம் எனில் அர்த்தாத் ஸித்தமான குருப்ரஸாதத்திற்கு இவர் பாத்திரம் ஆனமையைச் சொல்லுகிறது. ஆகஇத்தால் இர ண்டு தனியன்களும் ஒரே பொருளைச் சொல்லுகின்றன என்றறி யவும்.

"வந்தே" (வணங்குகிறேன்) என்று வாக்கியத்தின் முடிவில் உபயோகிக்கவேண்டியிருக்க, நம் தேசிகன் திறத்தில் ஆசார்ய க்ருபா விசேஷத்திற்கு கொள்கலமானமையையும் அதிலுண்டான க்ஞான வைராக்யாதி கல்யாணகுணங்களையும் அவற்றிற்கெல்லாம் காரணமான அவதார மாஹாத்மியத்தையும் அனுஸந்தித்தவாறே தனக்கு உண் டாகிய பக்தியின் மிகுதியினால் பரவசராகி "ஸ்ரீபரதாழ்வான்" —

1 'பாவஶுத்தஸ்ஸத்யஸந்தோ வாயுபுத்ரஸ்ய ஹேதுநா |
ஶிரஸாঽঽராதயிஷ்யாமி ||'

என்று பாரித்துக்கொண்டு சித்திரக்கூடத்தில் பெருமாளைக் கண்ட வுடன்—

2 'பாதாவப்ராப்யைவ ராமஸ்ய பபாத பரதோ ருதந் ||'

என்று துக்கத்தின் மிகுதியினால் கால்நடை தளர்ந்து பெருமான் திரு வடியளவும் செல்லப்பெறாமல் நடுவிலே பூமியில் விழுந்து தொழுதாற் போலே இவரும் வாக்கியம் முடியுமளவும் தாமதிக்கப் பொறாது மெய்தளர்ந்து மனம் நைந்து மகிழ்ந்து நடுவே பூமியில் விழுந்து அடிபணிகின்றார். இப்படி உக்தப்ரகாரங்களா லுண்டான அதிசு

ஸாதாரணமான மஹிமையை "வேதாந்த தேசிகம்" என்னும் பதம் சொல்லுகிறது.

1 'யஸ்மிந் நந்ய ஸாமாந்யா வேதாந்தாசார்ய நாமதா ।
யதாவத்பரீக்ஷிதா விசேஷாத் தஸ்மிந் ஸஹஸ்ரச: ॥

என்று அண்ணனும்—

2 'ஜபதி ப்ரத்யயாம் வேதாந்தாசார்ய ஸஞ்ஜ்ஞா
நிதர ஜநஸஹஸ்ராம்சம்ஹி தேசிகேந்த்ரா ॥'

என்று தொட்டயாசார்யரும் மற்றவர்களும் இதரர்களுக்குக் கிடைக்காத வேதாந்தாசார்யன் என, பண்டித பாமரமபமான உலகம் ஒக்கப்போற்றும் திருநாமத்தைப் பெற்றவர் என்றனர். வேதாந்தாசார்யன் என்கிற திருநாமம் புருஷன் என்னும் பதம் வேறெவரையும் குறிப்பிடாமல் எப்படி ஸ்ரீய: பதியைமாத்திம் குறிக்குமோ அப்படியே வேதாந்தாசாரியன் என்னும் பதம் நம்தேசிகன் ஒருத்தரையே குறிக்கும் மற்றெவருக்கும் இத்திருநாமம் பகவானால் கொடுக்கப்படாமையால் மற்றெவரையும் குறிக்காது, என்று கருத்து.

3 'ஸ்ரீமாந் வேங்கடநாத வித்தகவரோ தேந
ஸேவேநந்தாம் வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞா வேஹித
பஹுவித்யாஸ்வநபாயி ॥' என்றும்

4 'ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோ ந ஸோ த்வந்த்யாவ்யாவர்ணத
நாமவேதாந்தாசார்யகம் வேஙூடேச: ॥'

என்றும் "வீண்பெரிய விரிதிரைநீர் வையத்துள்ளே வேதாந்த வாரியன் என வியம்ப நின்றோம்" என்றும் தாமேயும் அருளிச்செய்தார். இவற்றால் உலகத்தைப் படைத்து அவற்றிற்கு ஏற்ற பெயர்களை அளித்த பகவானே 'ஸ்வகம்' இது உனக்குச் சொந்தமானது என்று கொடுத்த திருநாமம். கடல் எங்ஙனம் அலைகளோடு ஒலித்துக்கொண்டிருக்குமோ அங்ஙனம் வாயை மூடாமல் அயலாரைப்பற்றி வம்புரைகளைப்பேசும் இவ்வுலகிலுள்ள ஜனங்களும் பகவான் நமக்கு அருளிய வேதாந்தாசார்யன் என்னும் நாமத்தைப்பற்றி என்னாளும் ஒப்புக்கொண்டு கொண்டாடும்படியாயிற்று என்று கருத்து. இங்ஙனம் நம் தேசிகன் ஒருவருக்கே அஸாதாரண வாசகமான இந்தத் திருநாமமும் அந்தத் திருநாமத்திற்கு அஸாதாரணமும் அன்வர்த்த வாச்

யமுமான நம் தேசிகனும் பொன்னுமாய் நாறுமாப்போலே அன்யோன்ய சோபாவஹமாய் பரஸ்பரம்கிறம் பெற்று விளங்குகிறபடி இங்கே அநுஸந்திக்கப் பட்டதாகிறது. இங்கே சில ஆசார்யர்கள் 'வேதாந்தேசிகா' என்பது த்ராவிடஸம்ஸ்க்ருதமய உபய வேதாந்தங்களுக்கும் பொதுவாக யிருக்கதே யாயினும் நம் தேசிகனும் உபய வேதாந்தங்களுக்கும் தேசிகனாக இருந்த போதிலும் ப்ரக்ருதத்தில் உபயவேதாந்த ஸிம்ஹாஸநம் பெற்ற ஸ்ரீ திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த த்ரவிடோபநிஷத் பாஷ்யத்திற்கு அத்யந்தானுகுணமான நிகம பரிமளாதிகளின் அர்த்த விசேஷானுபவ ஜனித பரபக்தி ப்ரகர்ஷத்தாலே ப்ரும்மதந்த்ரஸ்வாமி அருளிச்செய்தமை கொண்டு த்ராவிட வேதாந்த ப்ரவர்த்தகத்வமே கொள்ளப்படும் என்றருளிச் செய்வார்கள்.

இத்தால் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில், ஸ்ரீ பாஷ்யகாரர் ஆசார்யனாகவும் தாம் சிஷ்யனாகவும் அநுபவித்தவண்ணம் "இராமானுசற்கன்பு பூண்டவர்தாள் சென்னியில் சூடும் திருவுடையாரென்னும் ச்ரியரே" என்ற முதனாலே கொண்டாடப் பட்டவர்களாவார்கள். இப்படி ஸ்ரீமத் ராமானுஜன் திருவடி ஸம்பந்தத்தை முதலித்துக் கொண்டு நம் தேசிகன் அடியிணை பணிபவரே—

3. [illegible]

[illegible]

[illegible] ॥

என்று நம் தேசிகன் அநுஸந்தித்த மஹார்த்தம் தன்னிடையே அமைந்தபடி மிகவும் போற்றத்தக்கது.

இந்தத் தனியன் இதை அநுஸந்திக்கும் பரம பாவனர் செய்த புண்ணியத்தினல் இவ்வனம் அமைந்தமை காண்க. ஏனெனில்—

4 '[illegible] ।

[illegible] ॥'

என்று முமுக்ஷுக்கள் "ராமாநுஜ" என்னும் மந்திரத்தைத் தினம் ஜபிக்கவேண்டியது அவசியம், என்னப்பட்டதும்

5 '[illegible] ।

[illegible] ॥'

என்று பாப நிவ்ருத்தியைச் செய்து மோக்ஷபலத்தைக் கொடுக்க வல்ல பெருமை பெற்றதும்—

1 'நோசேத்ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ ।
காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருஶா: ॥'

(ராமானுஜ, என்கிற நான்கு எழுத்துக்களினாலாகிய மஹாமந்திரமொன்று இல்லாவிடில் என்போல் பசுப்ராயமான ஜந்துக்கள் என்ன தசையை அடையுமோ அறியேன்) என்று கூரத்தாழ்வான் அருளிச்செய்த படியேயும் "ராமானுஜ," என்னும் பதத்தினால் தொடங்கப்பட்ட மேன்மையைப் பெற்றதும் இத்தனியனேயாயிற்று. இவ்விதமான 'ராமானுஜ' பதத்தினால் தொடங்கப்பட்ட பெருமைபெற்ற இந்தத் தனியனை அனுஸந்தித்து நம் தேசிகனை அடிபணியுமவர்களுக்கு ப்ரபன்னஜன காயத்ரியான நூற்றந்தாதியில் அனுஸந்திக்கப்பட்ட அகிஞ்சன ஜன ரக்ஷகமான "ராமானுஜ" என்னும் பதத்தை அடிக்கடி அநுஸந்திப்பதினாலுண்டாகக்கூடிய ஸுக்ருத விசேஷமும் தன்னடைவே வந்து அமைந்தமையும் அனுஸந்திக்கத் தக்கதாகும். இவ்வித விசேஷம் இருப்பதைத்திருவுள்ளம்பற்றியே அண்ணனும்—

2 '[illegible] ।
[illegible] நாஸ்தி நாஸ்தி ஹி [illegible] ॥'

என்று "ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யம்" என்று வ்யாஸபகவான் அறுதியிட்டாப்போலே முக்காலும் கைதூக்கி ஸத்யமிட்டுக் கூறினாராகவுமாம்.

அனுபந்தம் I.

பக்கம் 1.—(1) அனாதி - அனாதியான, மாயயா - ப்ரக்ருதி ஸம்பந்தத்தினாலே, ஸுப்த: - தூங்குகிற (ஜீவன்).

(2) ஆர் - எவர், துணை ஆவார் உதவி செய்பவர், என்று - என எண்ணிக்கொண்டு, அலை - அலைத்துக்கொண்டிருக்கும், நீர் - ஜலத்தை உடைய, கடலுள் - ஸமுத்திரத்திற்குள். அழுந்தும் - அழுந்திக்கொண்டிருக்கிற, நாவாய்போல் - மரக்கலத்தைப் போல்.

பக்கம் 2.—(1) பீதகவாடை - பீதாம்பரத்தைத் தரித்த, பிரானார் - உபகாரனாகிய ஸ்ரீய:பதியே, பிரமகுருவாகி - பரமாசார்யனாகி, வந்து - நாமிருக்குமிடத்திற்கு வந்து.

(2) அறியாதன - தெரியாத விஷயங்களை, அறிவித்த - தெரிவித்த வித்தா - வித்தகனே.

(3) தேவ: - ஒளி நிறைந்த, நாராயண: - ஸ்ரீய:பதி, ஸாக்ஷாத் - தானே நேராக, மர்த்ய மயீம்தனும் - மானிட தேஹத்தை, க்ருத்வா - எடுத்து, சாஸ்த்ரபாணினா - சாஸ்திரங்களாகிய கையினால், காருண்யாத் - தயவுடன், மக்னான் - ஸம்ஸாரத்திலே முழுகும், லோகான் - ஜனங்களை, உத்தரதே - கரையேற்றிவிடுகிறார்.

(4) அஸௌ - இந்த, நாராயண: - ஸ்ரீய:பதியே, கதாசித் - ஒருபொழுதும், அஜஹத்பூமா - தன் மகிமையை விடாமல், மக்னானாம் - ஸம்ஸாரத்தில் ஆழ்ந்த, பவினாம் - ஸம்ஸாரிகளை, பவார்ணவ ஸமுத்தாராய - ஸம்ஸாரமாகிய கடலிலிருந்து கரையேற்றுவதற்காக, ஸ்வயம் - தானே, யஸ்ய - இந்த ஆசார்யனுடைய, பூமிகாம் - வேஷத்தை, பஜதே - தரிக்கிறார்.


(5) யதா - எப்படி, புருஷதா - புருஷன் என்னுதல், விஷ்ணௌ - நாராயணன் ஒருவனிடமே இருக்கின்றதோ அப்படியே, யஸ்மின்குரௌ - இந்த குருவினிடமே, அனன்யஸாமான்யா - வேறொருவருக்கும் உரித்தாகாத வேதாந்தாசார்யதா - வேதாந்தாசார்யன் என்னும் திருநாமம், உரிமையுடைத்து.

(6) நிகமாந்தார்யாத் நிகமாந்த மஹாதேசிகனைத் தவிர்த்து தேசிகஃ - தேசிகன் என்னும் பதத்திற்கு முக்கியமாய்ப் பொருள்படக்கூடிய வேறொருவரும், மஹீ தலே - இந்தப் பூமிப் பரப்பில், நாஸ்தி - இல்லை, நாஸ்தி - இருக்காலும் முக் காலுமே இல்லை, தத்பக்தாத் - அவரிடம் பக்தியுள்ளவர்களைத் தவிர்த்து வேறு, ஸாத்விகஃ ஜனஃ - ஸத்துக்கள், நாஸ்தி, நாஸ்தி - இப்புவியிலில்லை, தத்ஸூக்தேச்ச - அவருடைய திவ்ய ஸூக்திகளைத் தவிர்த்து, அன்யஃ - வேறொரு, ப்ரபந்தஃ உயர்ந்த திவ்யஸூக்தியே, மஹீதலே - இப்பூமியில், நாஸ்தி நாஸ்தி - முக்காலிலில்லை.

(7) ஆசார்யத்வோபயுக்தாஃ - ஆசிரியனாக யிருப்பதற்கேற்றவை யாக, முனிகணவிஹிதாஃ - முனிவர்களால் சொல்லப்பட்டவை களும், தேசிகைஃ - மற்றெல்லா ஆசிரியர்களாலும், ஸ்வேனச - தம்மாலும், உக்தாஃ - சொல்லப்பட்டவைகளுமான, ஸர்வே - எல்லா, பத்ராஃ குண - கல்யாணகுணங்களும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரே - ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனிடம், ஸமுதிதவிப வாஃ - கூடியிருக்கும் பெருமையை உடையவைகளாக, ஸ்யுஃ - ஆகின்றன, சிஷ்யத்வேச - சீடனாக யிருப்பதற்கும், உபயுக் தாஃ - தகுதியான, குணகண அபிச - குணங்களின் கூட்ட மும், கூரநாதேயதா - கூரத்தாழ்வானிடத்தில் இருப்பவை போல, ஸ்யுஃ - ஸ்ரீ தேசிகனிடமே இருக்கின்றன, அன்யத்ர - மற்ற, ஆசார்யவர்கே - ஆசிரியருடைய கும்பலில், கதிசன - சில, குணாஃ - குணங்களே, இருக்கின்றன, ஹி - ஏனெனில், தத்ர - அவ்வாசிரியக் கூட்டத்திலே, ப்ராயசஃ - சிற்சிலகுணங் களே, த்ருஷ்டா - எல்லோராலும் கண்டறியப்பட்டதல்லவோ. முக்யமான அர்த்தம் - நிறைந்த இலக்கணமுள்ள பொருள் ஔபசாரிகமாக - சிறிது பொருந்த யிருப்பதைக் காண்க"

(4) தத்ராது - அவ்விஷயத்தில் (பகவானிடத்து) பூஜ்யபதார்த் தோக்தி பரிபாஷாஸமன்விதஃ - பூஜிக்கத்தக்க பொருளைக்குறி த்து பெரியோர்களால் உபயோகிக்கப்பட்ட, அயம் இந்த, சப் தஃ - பதம், உபசாரண - நிறைந்த பொருளில்லா வகையில், ந - உபயோகிக்கப்பட்டதல்ல, (நிறைந்த பொருடனுபயோகிக் கப்பட்டது) அன்யத்ர - மற்ற இடங்களில், உபசாரதஃ - சிறிது பொருந்தமிருப்பதினலே உபயோகிக்கப்படுகிறது.

ஸஞ்சிகை 1



॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

ஸர்வவேதாந்த தாத்பர்ய ஸங்க்ரஹமான

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்.

திருவஹீந்திரபுரம்-ஸ்ரீமஹாமஹோபாத்யாய- ஸ்ரீதேசிகதர்சந
விஜயத்வஜ-பண்டிதபூஷணம்-பகவத்விஷய-வித்வான்
சேட்லூர். ஸ்ரீ-உ-வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளால்
எளிதான தமிழ் நடையில் எழுதப்பட்ட
வ்யாக்யானத்துடன் கூடியது.

முதல் ஸஞ்சிகை.

மேற்படியார் ஸஹோதரர்
உபயபாஷாபண்டித-தேசிகதர்சநதுரந்தர
சேட்லூர். ஸ்ரீநிவாஸமூர்த்தி அய்யங்காரால்

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை] 1941 [ரூ. 0—8—0

உபோத்காதம்.

॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார மென்னும் இந்த க்ரந்தத்தை அருளிச் செய்த ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் திருவவதாரம் கலி 4370-வது விபவ (இங்கிலீஷ் 1268) வருஷத்தில் புரட்டாசி-மீ சிரவண நக்ஷத்திரத்தில் காஞ்சீபுரத்தில் ஹிமவனம் என்றும், திருத்தண்கா என்றும் சொல்லப்படுகிற விளக்கொளி (தீபப்ரகாசர்) எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் நியமித்த எழுபத்து நாலு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவராய் விச்வாமித்ரகுல திலகரான அநந்த ஸோமயாஜியாருடைய திருப்பௌத்திரரான அநந்தஸூரியாருக்கும் தோதாத்ரி யம்மைக்கும் திருக்குமாரராக அவதரித்தருளினர். இவருடைய அவதார வைபவத்தையும் ப்ரபாவத்தையும் கணிசித்து இவர்குமாரரான தூப்புல் நயினர்

1 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌵𑌤𑌾𑌰𑍋𑌽𑌯𑌂 𑌤𑌦𑍍𑌘𑌣𑍍𑌟𑌾𑌂𑌶𑍋𑌽𑌥𑌵𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑍋𑌽𑌥𑌵𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑍍𑌯𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑍍 ॥

என்றும், 'அன்றிவ்வுலகினையாக்கி அரும்பொருள் நூல் விரித்து** பின்னும் வென்றிபுகழ் திருவேங்கடநாதனென்னும் குருவாய்நின்று நிகழ்ந்து' என்றும் அருளிச்செய்தார். இவர் திருவேங்கடமுடையானுடைய அவதார விசேஷம் என்பது ஸம்ப்ரதாய நிஷ்டர்கள் அறிந்த விஷயம். இத்தைக் கணிசித்தே 2 '𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌮𑍍' என்றனுஸந்தித்தார்கள். திருவேங்கடமுடையானே தமது ஸ்வர்ணகண்டையை இவரது

---

1 वेङ्कटेशावतारोऽयं तद्घण्टांशोऽथवा भवेत् ।
यतीन्द्रांशोऽथवेत्येवं वितर्क्यायास्तु मङ्गलम् ॥

2 'श्रीमद्वेङ्कटनाथार्यम्'

தாய்தந்தையர்க்குக் கொடுத்ததாக அவர்கள் கனவுகண்டு அந்த வ்யாஜமடியாக இவர் அவதரித்தார் என்பதைக் கணிசித்து 1 ‘ தத்குணாம்ஸ: ’ என்றருளிச் செய்தது.

ஸ்ரீபாஷ்யகாரர் அவதார ஸமாபன தசையில் கலங்கியிருந்த சிஷ்யர்களைப் பார்த்து, கொங்குப் பிராட்டியைக் கேட்டு ஸம்சய நிவ்ருத்திசெய்துகொள்ளும்படி அவர்களை நியமித்தார். அவர்கள் அப்படியே அப்பிராட்டியிடம் செல்ல, அவளும் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவடி ஸம்பந்திகளான அம்மஹாத்மாக்களை ஸேவித்து அவர்கள் நடுவில் உட்கார்ந்து, அலைந்திருந்த தன் கூந்தல்களை எண்ணெய் தடவி வாரி முடித்து, சிவந்த நிறமுள்ள பட்டுக்கயிற்றினால் ஒரு கட்டுக் கட்டி, அதன்மேல் வெண்மையான பட்டுக் கயிற்றினால் பின்னும் அழுத்தமாய்க் கட்டிவிட்டு, அவர்களை மறுபடியும் ஸேவித்து, ‘தேவரீர்கள் என்னைத் தேடிவந்த காரியம் இதுதான், இனி தேவரீர்கள் எழுந்தருளலாம்’ என்று விண்ணப்பம் செய்தாள். இதன் அபிப்பிராயத்தை யறியாமல் அவர்கள் திரும்பவும் ஸ்ரீபாஷ்யகாரரிடம் விஜ்ஞாபிக்க, அவர், அவள் வேதங்களின் அவதாரமென்றும், அவளுடைய அலைந்த கூந்தல்கள் துர்வாதிகளின் அபார்த்தங்களினால் கலைக்கப்பட்ட வேத வாக்யங்கள் என்றும், சிவந்த கயிற்றினால் கட்டியது ‘நாம் ஸந்யாஸி ரூபமாய் அவதரித்து வேதார்த்தங்களை ஒன்று சேர்த்து பரிஷ்கரித்தது’ என்றும், பிறகு வெண் கயிற்றினால் அழுந்தக்கட்டியது ‘நாமே இன்னுமோர் அவதாரம் செய்து க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்து அவைகளை ப்ரதிவாதிகள் அசைக்கவொண்ணாதபடி உறுதிப்படுத்தப்போகிறோம்’ என்றும் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கின்றனவாகையால் சோகிக்க வேண்டாம் என்று தேற்றினார். ஸ்ரீயதிராஜஸப்ததியில்

2 ‘ சிரந்தந ஸரஸ்வதீ சிகுரபந்த ஸைரந்த்ரிகா: ’

என்னும் ச்லோகத்தில் அபிப்ரேதமென்று பெரியோர்கள் சொல்லும் இந்த சரித்திரம் இங்கு 3‘யதீந்த்ராம்ஸோऽதவா’ என்று அருளிச்செய்யப்பட்டது.

---

1 ‘ तद्गुणांशः ’

2 ‘ चिरन्तन सरस्वती चिकुरबन्ध सैरन्ध्रिका: ’

3 ‘ यतींद्रांशोऽथवा ’

1 ‘ 𑌆𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌕𑌟𑌿𑌤𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑌾𑌵𑌃 ’ என்கிற ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தைப் போலவே ஸ்ரீ தேசிகனும் தம்முடைய அதிமானுஷசக்தியை வெளியிட்டருளினார் என்பது இவர் சரித்திரத்தில் பல வ்ருத்தாந்தங்களாலும் தெரியவரும். உதாஹரணமாய் இவர் ஐந்து வயதிலேயே ஸ்ரீ அம்மாள் காலக்ஷேப கோஷ்டிக்குத் தம்முடைய மாதுலரான அப்புள்ளாருடன் சென்று அவரைத் தண்டன் ஸமர்ப்பித்து நிற்குங்கால், இவருடைய திவ்ய தேஜஸ்ஸைப் பார்த்து மோஹித்து அதிலீடுபட்டு காலக்ஷேபத்தில் விட்ட இடம் தெரியாமல் சிஷ்யர்கள் திகைத்து நிற்கும் பொழுது, இவர் அந்த இடத்தை எடுத்துச் சொல்லி அர்த்த விசேஷங்களையும் நிரூபிக்க, ஸ்ரீ அம்மாளும்

அவதாரவைபவம்

2 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌿𑌤𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌬𑌹𑌿𑌰𑍍𑌮𑌤𑌃 ।
𑌭𑍂𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌭𑍂𑌰𑌿𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌭𑌾𑌜𑌨𑌮𑍍 ॥

(வேதாந்தங்களை ஸ்தாபித்து புறச் சமயங்களைக் கண்டித்து வேதங்களும் வைதிகர்களும் கொண்டாடும்படி அநந்த கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாவாய்) என்று ஆதரவுடன் அனுக்ரஹித்ததை இவர் தாமே தம் க்ரந்தங்களில் பல இடங்களில் அருளிச்செய்திருக்கிறார். ஒரு ராத்திரியில் ஒரு யாமத்தின் பாதியில் ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தை அருளிச்செய்ததும், ப்ரபோதசந்த்ரோதயத்தைப் பாரீர் என்று ப்ரதிவாதி கொடுக்க அதே க்ஷணத்தில் ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தை அருளிச்செய்ததும் லோகப்ரஸித்தமிறே.

இவர், வேதாந்தோதயனர் என்று விளங்கும் மடப்பள்ளியாச்சானுடைய கொள்பேரனாரும் தமது மாதுலருமான வாதிஹம்ஸாம்புதாசார்யர் என்று பெயர் பெற்ற ஆத்ரேயராமாநுஜர் (அப்புள்ளார்) ஸ்ரீபாதத்திலே, ஸ்ரீ க்ருஷ்ணன் ஸாந்தீபினியிடத்

வித்யாப்யாஸம்.

---

1 ‘ आप्रादुर्भावप्रकटितपरब्रह्मभावः ’

2 प्रतिष्ठापितवेदान्तः प्रतिक्षिप्तबहिर्मतः ।
भूयास्त्रैविद्यमान्यस्त्वं भूरिकल्याणभाजनम् ॥

தில் அறுபத்து நான்கு கலைகளையும் அறுபத்து நாலு நாள்களில் அப்யஸித்தாப்போலே, இருபது வயதிற்குள்ளே ஸகல சாஸ்திரங்களையும் சிக்ஷித்தார் என்பதை 1 '𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌬𑍍𑌦𑍇 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧 𑌵𑌿𑌦𑍍𑌯𑌃' என்றிவர் தாமும், 2 '𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌤𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌤𑍍𑌸𑌕𑌲𑌾𑌃 𑌕𑌲𑌾𑌃। 𑌅𑌵𑌾𑌪 𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌬𑍍𑌦𑍇' என்று தூப்புல் நயினாரும் அருளிச்செய்தார்கள்.

குணாதிசயம்.

இதற்குப் பிறகு தம்மாசார்யனால் உபதேசிக்கப்பட்ட கருட மந்திரத்தை ஆவ்ருத்தி செய்வதற்காக மஹா நதி, திவ்ய க்ஷேத்திரம், பர்வதம் இம்மூன்றும் ஓரிடத்தில் சேர்ந்த மஹாஸித்தி க்ஷேத்திரமாகிய திருவஹீந்திரபுரத்தை நாடி, ஸித்திபெற்று, ஸ்ரீகருடன் உபதேசித்த ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ மந்திரத்தை ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மன் ஸந்நிதியில் ஓர் அச்வத்த வ்ருக்ஷத்தின் அடியில் ஆவ்ருத்தி செய்து ஸ்ரீஹயக்ரீவ ப்ரஸாதத்தாலே 'அருள்தருமடியவர்பால் மெய்யைவைத்துத் தெருள்தரநின்ற தெய்வநாயக' என்றிவர் தாமும், 3 '𑌤𑍁𑌰𑌗𑌵𑌦𑌨𑌤𑍇𑌜𑍋𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌃' என்று பின்புள்ளாரும் அனுஸந்தித்தபடியே அபரிமித ஜ்ஞாந சக்தியுக்தராய், விச்வாமித்திருபதேசத்துக்குப் பிறகு ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகனுக்கு அஸ்திர தேவதைகள் நேரில் நின்று 4 '𑌇𑌮𑍇 𑌸𑍍𑌮 𑌪𑌰𑌮𑍋𑌦𑌾𑌰 𑌕𑌿𑌂𑌕𑌰𑌾𑌸𑍍𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃' என்று விண்ணப்பம் செய்ததுபோல வித்யாபிமானி தேவதைகளெல்லாம் தாங்களே வந்து வரிக்கும்படியான விசேஷ கடாக்ஷத்தைப் பெற்றார். இதை ஹயக்ரீவஸ்தோத்திரத்தில்

---

1 'विंशत्यब्दे विश्रुत नानाविध विद्यः'

2 'रामानुजार्यादात्रेयान्मातुलात्सकलाः कलाः ।
अवाप विंशत्यब्दे'

3 'तुरगवदनतेजोबृंहिताश्चर्यशक्तिः'

4 'इमे स्म परमोदार किंकरास्समुपस्थिताः'

1 "𑌮𑌨𑍋𑌗𑌤𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑌸𑍍𑌸𑌦𑌾 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌾𑌂
𑌮𑌾𑌨𑌸𑌰𑌾𑌜𑌹𑌂𑌸𑌮𑍍 । 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑍁𑌰𑍋 𑌭𑌾𑌵𑌵𑌿𑌵𑌾𑌦
𑌭𑌾𑌜𑌃 𑌕𑌿𑌂𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌗𑌿𑌰𑍋 𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌮𑍍 ॥"

என்றருளிச் செய்தார். இதைத் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீரங்க நாயகியும் பின்பு 'ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்' என்றிவருக்குத் திரு நாமமனுக்ரஹித்தாள். இப்படி இவருக்கு அஸாதாரணமான ஜ்ஞான வைபவத்தை

2 "𑌦𑍂𑌷𑌣𑍍𑌯𑌾𑌦𑍌 𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑌤𑍍𑌵𑌂
𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌸𑍍𑌯 𑌸𑍂𑌰𑍇𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌲𑌭𑍍𑌯𑌾 𑌚𑌾𑌤𑍁𑌰𑍀 𑌪𑌦𑍍𑌯𑌗𑍁𑌮𑍍𑌭𑍇
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌕𑌲𑌾𑌪𑍇 "

(இவர் தார்க்கிகர்களுக்குள் ச்ரேஷ்டர் என்பதைச் சததூஷணீ முதலிய க்ரந்தங்களிலும், ஸர்வஜ்ஞரென்பதையும், கவிதையில் பிறர்க்கு நிலமல்லாத சாதுர்யத்தையுடையவரென்பதையும் ஸ்ரீ தத்வமுக்தாகலாபத்திலும் அறியலாம்) என்று ஸப்தரத்ன மாலிகையில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட ஜ்ஞானத்துக்கனுகுணமான இவருடைய வைராக்யம், விஜயநகரம் மஹாராஜா ஸபையில் வித்யாரண்யருக்கும் அக்ஷோப்யமுனிவருக்கும் நடந்த விவாதத்தில் மத்யஸ்தராயிருக்கும்படிக்கும் அதற்காக விசேஷ தனத்தை ஸமர்ப்பிப்பதாகவும் ப்ரார்த்தித்த காலத்தில் அதற்குப் பதிலாக எழுதியனுப்பிய வைராக்ய பஞ்சகத்தின் அர்த்தானுஸந்தானத்தாலும், ஸ்ரீ தொட்டையாசார்யர் அருளிச்செய்த 3'𑌧𑌨𑌾𑌨𑌿 * * 𑌸𑌮𑌲𑍋𑌷𑍍𑌟𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌮𑍍'

---

1 'मनोगतं पश्यति यस्सदा त्वां मनीषिणां मानसराजहंसम् ।
स्वयं पुरो भावविवादभाजः किंकुर्वते तस्य गिरो यथार्हम् ॥
2 'दूषण्यादौ तार्किकाग्रेसरत्वं दृश्यं श्रीमद्वेङ्कटेशस्य सूरेः ।
अन्यालभ्या चातुरी पद्यगुम्भे सर्वज्ञत्वं तत्त्वमुक्ताकलापे ॥
3 'धनानि * * समलोष्टकमम् '

என்கிற வைபவப்ரகாசிகா ச்லோகத்திலும், மற்றும் இவ சரித்திரத்திலும் ஸுவ்யக்தம். இப்படிப்பட்ட அஸாதாரணமான வைபவத்தைத் திருவுள்ளம்பற்றி 1 'ஜ்ஞாநவைராக்ய பூஷணம்' என்று அனுஸந்தித்தார்கள்.

திவ்யதேச ப்ரதிஷ்டாதிகள்

இவர் இந்த லோகோபகாரமாகச் செய்த திவ்யதேச ஸ்தாபநம் முதலியவைகளும், ஸ்ரீவிசிஷ்டாத்வைத மதாபிவ்ருத்திக்கும் ஜ்ஞாந ப்ரவர்த்தனத்துக்கும் செய்திருக்கும் விசேஷ உபகாரங்களும் எண்ணிறந்தவை. அவைகளில் ப்ரதானமானவை—ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் துலுக்கர் கலாபத்தில் வெளியில் எழுந்தருளப்பண்ணப்பட்டிருந்த ஸ்ரீரங்கநாதனை செஞ்சி ராஜாவாகிய கோபணார்யனைக்கொண்டு மறுபடியும் திருப்ரதிஷ்டாதிகள் செய்வித்தருளினதும், தில்லைத் திருச்சித்திரகூடத்திலிருந்து கீழ்த்திருப்பதியில் எழுந்தருளப்பண்ணப்பட்டிருந்த ஸ்ரீ கோவிந்தராஜனை மறுபடியும் அவ்விடத்தில் திருப்ரதிஷ்டை செய்வித்தருளினதும், ஸ்ரீரங்கத்தில் ஒரு திருவத்யயன உத்ஸவத்தில் ஆழ்வாராதிகளுக்கு ப்ரதிஷ்டையும் ஆராதனாதிகளும் அவர்களுடைய ப்ரபந்த படநாதிகளும் கூடாதென்று ஆக்ஷேபித்தவர்களை நிராகரித்து அவைகளை ஸ்தாபித்தருளினதும், பெருமாள் கோயிலில் ஸ்ரீதேவப் பெருமாளுக்கு ப்ரம்மோத்ஸவம் நடக்கும் பொழுது சைவர்கள் நடத்தக்கூடாது என்றாக்ஷேபிக்க ச்ரிய:பதியின் பரத்வத்தை ஸ்தாபித்து வாதிகளை நிரஸித்து உத்ஸவாதிகளை யதாக்ரமம் நடத்திவைத்தருளினதும் ஆகும். இன்றியும், திவ்யப்ரபந்த வைபவ ஸ்தாபனத்திற்காக ஸ்ரீவரதராஜன் தம்முடைய திருச்சின்னங்களில் ஒன்றை இவருக்குப் பிருதாக அனுக்கிரகித்தது இப்போதும் அந்த ஸந்நிதியில் ஒற்றைத் திருச்சின்னம் ஊதிவருவதினாலும், வைசாக கருடோத்ஸவத்தில் ஸ்ரீதேசிகனுக்கு நடக்கும் விசேஷ மர்யாதைகளினாலும் பிரஸித்தம்.

கிரந்தங்கள்.

இவர் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின்படி தத்வஹித புருஷார்த்தங்களை நிரூபித்திருக்கும் ப்ரகாரம்—பரதத்வமான எம்பெருமான், எல்லா அவஸ்தைகளிலும் லக்ஷ்மியுடன் பிரிவில்லாத சேர்த்தியை உடையவன் என்பதையும், லக்ஷ்மீ தத்வத்தைப்பற்றி

1 'ज्ञानवैराग्यभूषणम्'

ண்டாகும் சங்கைகளுக்கெல்லாம் ஸமாதானமருளிச்செய்து அத் தத்வத்தையும் பரக்க நிரூபித்து, தத்வ ஸ்திதியை ஒருவராலும் கலக்கமுடியாதபடி பூர்ணமாக ஸ்தாபித்தருளினர். இவ்விஷய மான க்ரந்தங்கள்:— ஸ்ரீமந் ந்யாயபரிசுத்தி, ஸ்ரீமந் ந்யாயஸித் தாஞ்ஜனம், ஸ்ரீ சதுச்லோகீ பாஷ்யம் முதலியவை. நாராயணனே பரதேவதை என்னுமர்த்தத்தை ஸ்ரீ ஸ்தோத்ரரத்ன பாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் ஸ்தாபித்தருளினர். மற்ற அவதாரங்களைப் பற்றி ஸ்ரீமந்ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீமந்ந்யாயபரிசுத்தி, ஸ்ரீ தத்வமுக்தாகலாபம், ஸ்ரீ ஸர்வார்த்தஸித்தி முதலிய க்ரந்தங் களில் நிரூபித்தருளினர். ஸர்வாதிகாரமாய் ஸர்வ ஸுலபமா யிருக்கும் ப்ரபத்தியே பரமஹிதமென்னுமர்த்தத்தை ஸ்ரீநிக்ஷேப ரக்ஷை, ஸ்ரீமத்கீதாபாஷ்ய தாத்பர்யசந்திரிகை, ஸ்ரீமந்ந்யாய ஸித் தாஞ்ஜனம், ஸ்ரீ கத்யத்ரய பாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் அரு ளிச்செய்தார். பரிபூர்ண ப்ரம்மானுபவமும் அதின் பரீவாஹ மான கைங்கர்யமும் பரம புருஷார்த்தமென்னும் அர்த்தத்தை ஸ்ரீமந்ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீகத்ய பாஷ்யம், ஸ்ரீ தத்வமுக்தா கலாபம் ஸ்ரீ ஸர்வார்த்தஸித்தி முதலிய க்ரந்தங்களில் வெளியிட் டருளினர். ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்துக்கு விரோத மாக வேதங்களுக்கு அபார்த்தங்களைச் சொல்லுமவர்களை ஸ்ரீ சத தூஷணி, ஸ்ரீ தத்வமுக்தாகலாபம், ஸ்ரீ ஸர்வார்த்தஸித்தி, ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீ ந்யாயபரிசுத்தி, ஸ்ரீ பரமதபங்கம் முத லிய க்ரந்தங்களில் நிராகரித்து இந்த ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தி யருளினர். ஸ்ரீமத் அதிகரணஸாராவளீ, ஸ்ரீமத் தத்வடீகை, ஸ்ரீமத் தாத்பர்யசந்திரிகை, ஸ்ரீமத் கத்யத்ரயபாஷ்யம் இந்த க்ரந் தங்களில் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு அவருடைய திருவுள்ளத்துக்கு அனுகுணமாக வ்யாக்யானம் அருளிச்செய் தார். ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, ஸ்ரீ சதுச்லோகீ ஸ்தோத்ர ரத்ன பாஷ்யங்கள், இவைகளில் ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீஸூக்தி களுக்கு ப்ரமாணானுகுணமான வ்யாக்யானம் அருளிச்செய்தார். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமான சங்கசக்ராங்கனம், திருமண்காப்பு, பகவதாராதனம், பகவத்ப்ரஸாதத்தின் மஹிமை முதலியவைகளை ஸ்ரீஸச்சரித்ரரக்ஷை ஸ்ரீ பாஞ்சராத்திர ரக்ஷை முதலியவைகளில் ஸம்சயவிபர்யயங்களற நிரூபித்து ஆகம ப்ராமா ண்யத்துக்கு வியாக்யானம் செய்தருளினர். பரம

ஹிதமாகிய ப்ரபத்தியின் உபாயத்வத்தைப்பற்றிச் சொல்லப் படும் ஆக்ஷேபங்களை எல்லாம் அநுவதித்து அவைகளை நிக்ஷேப ரக்ஷையில் நிராகரித்தருளி, ந்யாஸவித்யையின் அங்காங்கி விபாகாதிகளை ஸ்ரீமந் ந்யாஸவிம்சதி, ஸ்ரீமந் ந்யாஸதிலகம், ஸ்ரீமந் ந்யாஸதசகம் இவைகளில் நிரூபித்தருளினார். இவ்வர்த்தங்களை எல்லாம் சாஸ்த்ர பரிசயமில்லாதவர்களும் ஸுலபமாய் அறியும் பொருட்டு எளிதான மணிப்ரவாள நடையில் அவரவர்கள் புத்திக்கும், சக்திக்கும் தக்கபடி ஸங்க்ரஹங்களாயும், விஸ்தாரங்களாயும் முப்பத்தொரு ரஹஸ்யங்களில் அருளிச்செய்தார். இவ்வர்த்தங்களையெல்லாம் தழுவி ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயமென்கிற நாடகத்தையும் அருளிச்செய்தார். அநேகம் திவ்யதேசத்து எம்பெருமான்கள் விஷயமாக ஸ்தோத்ர ரூபமாக த்வாத்ரிம்சத் ஸ்தோத்ரங்களை அருளிச்செய்தார். ரஹஸ்யத்ரயார்த்தங்களை ஸுலபமாயறியும்பொருட்டு திருமந்த்ரச்சுருக்கு முதலிய தமிழ் ப்ரபந்தங்களை அருளிச்செய்தார். ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தைப் பற்றி விஸ்தாரமாய் ஸ்ரீ யாதவாப்யுதயம் என்னும் காவ்யமருளிச் செய்தார். இப்படியே மற்றும் ஸ்ரீ ஹம்ஸஸந்தேசம், ஸ்ரீ ஸுபாஷிதநீவி முதலிய அநேகம் க்ரந்தங்களை அருளிச்செய்தார். திருவாய்மொழியின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்து அவைகளின் ஸங்கதி முதலியவைகளை ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத்ஸாரம் என்னும் க்ரந்தத்திலும், திருவாய்மொழியின் ஒவ்வொரு பாட்டின் அர்த்தத்தையும் ஸங்க்ரஹித்து ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவலி என்னும் க்ரந்தத்திலும் அருளிச் செய்தார். இப்படி கீழ்க்கூறிய க்ரந்தங்களில் அங்கங்கு நிரூபிக்கப்பட்ட அர்த்த விசேஷங்களை எல்லாம் ஸ்வல்ப காலத்தில் அறியமுடியாதாகையினால் அவைகள் எல்லாவற்றின் ஸாராம்சத்தையும் ஒருங்கத்திரட்டி இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரஸாரமென்னும் க்ரந்தத்தை ஸங்க்ரஹருசிகளுக்கு இனியொரு க்ரந்தத்திலுமலையவேண்டாதபடி பரிபூர்ணமாக நிரூபித்தருளினார். இதன்பெருமையை

1 அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம் ।
ரஹஸ்யத்ரயஸாராக்யம் பரம் ப்ரஹ்மாஸ்து மே ஹ்ருதி ॥

---

1 अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ।
रहस्यत्रयसाराख्यं परं ब्रह्मास्तु मे हृदि ॥

(இதன் பெருமை இவ்வளவென்று அளவிட்டறிந்தவர்களுக்கு இதின் பெருமை அறியப்படாதது; அப்படி அளவிட்டறியாதவர்களுக்கு இது உண்மையாயறியப்பட்டது, ஆகையால் இது பரப்ரம்மத்தைப்போன்ற பெருமையையுடையது, இது எக்காலும் என் மனதை விட்டகலாமலிருக்கவேண்டும்.) என்று பின்புள்ளார்கள் பல படிகளாலும் அநுஸந்தித்தார்கள். இப்படி ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு க்ரந்த முகேந தாத்பர்யார்த்தங்களைப் பரக்க நிரூபித்த உபகாரத்தைத் திருவுள்ளம் பற்றி [1]'ராமாநுஜதயாபாத்ரம்' என்று அநுஸந்தித்தார்கள்.

ஸித்தாந்தத்தின் ப்ரதான கொள்கைகள்.

இப்படிப் பஹுமுகமாக க்ரந்தத்தினாலும், அநுஷ்டானத்தினாலும், வேதாந்த ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தின இவருடைய ப்ரதானகொள்கை என்னவென்றால்:— எல்லா ஜாதியரும் அவரவர்கள்ஜாதிக்கு உரியதாய் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட தர்மங்களைப் பகவானுடைய கட்டளைகளிவை என்றெண்ணி அவைகளை அநுஷ்டிக்கவேண்டுமென்பதும், அப்படி அநுஷ்டிக்கும்போது பகவத் ப்ரீதியொன்றையே பலமாக உத்தேசித்துத் தன் சக்திக்கு அநுகுணமாகச் செய்யவேண்டும், ஒரு காலத்திலும் அவைகளை விடக்கூடாது என்பதும், இப்படித் தங்கள்தங்கள்ஜாதிக்கு அநுகுணமான கார்யங்களைச் செய்துவரும் எல்லா ஜாதியாரும் சரணாகதியென்றும் ப்ரபத்தியென்றும் சொல்லப்படுகிற உபாயத்தை அநுஷ்டித்து மறு ஜனனமில்லாமல் பரமபுருஷார்த்தமாகிற மோக்ஷமென்னும் மீட்சியில்லா வாழ்ச்சியைப் பெறலாமென்பதும், ப்ரபத்திக்குப் பிறகு சாஸ்திரத்துக்கு வசப்பட்டவனாய் நடக்கவேண்டும், அப்படி நடக்கத்தவறினால் பகவத் நிக்ரஹமுண்டாகும் என்பதும், ப்ராயச்சித்தாதி முகேந அவைகள் நிவ்ருத்தித்துவிடுமாகையால், பரமபுருஷார்த்த லாபத்திற்குத் தடையாகா என்பதும், பகவானிடத்தில் பக்தியுடையவர்கள் எந்த ஜாதியராயினும் அவர்கள் விஷயத்தில் சாஸ்திர ஸம்மதமான சௌரவாதிகளில் குறைவு செய்யக்கூடாதென்பதும், அப்படிச் செய்தால் பகவானுடைய நிக்ரஹம் வரும் என்பதும், ஸர்வ ப்ராணிகளுக்கும் ஹிதமாக நடந்து

---

1 'रामानुजदयापात्रम्'

கொள்ளவேண்டுமென்பதும், அப்படி ஹிம்ஸாதிகளைச் செய்தால் பகவதப்ரீதிக்குப்பாத்திரனாவான் என்பதும். இப்படிவேதாந்தார்த் தங்களைப் பரக்க நிரூபித்த உபகாராதிசயத்தைத் திருவுள்ளம் பற்றி [1]'வந்தே வேதாந்ததேசிகம்' என்று அநுஸந்தித்தார்கள்.

இவர்விஷயமான சில அபிப்பிராயங்கள்.

ஸ்ரீ பாஷ்யகாரர் தாராளமான மனதையுடையவரென்றும், அதை இவர் குறுக்கிவிட்டனர் என்றும், மதத்தில் இவர் ஆக்ரஹமுள்ளவரென்றும், மற்றும் இப்புடைகளில் இவரைப்பற்றிச் சிலர் சொல்வது இவருடைய க்ரந்தங்களில் பரிசயமில்லாதவர்கள் பிதற்றும் வார்த்தை. ஸ்ரீபாஷ்யகாரருடைய அநுஷ்டானத்துக்கும், க்ரந்தங்களுக்கும் முற்றிலும் விருத்தமான கதைகளைக் கல்பித்து மூடர்கள் சொல்லும் ஐதிஹ்யங்களைப் புத்திமான்கள் அங்கீகரியார்கள். இவ்விஷயங்கள் இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தை ஒருதரம் ஸேவித்தவர்களுக்கு நன்கு புலப்படும். இவரைப்போலத் தாராளமான மனதுடையவர்கள் ஒரு மதத்திலும் இல்லையென்று திண்ணமாய்ச் சொல்லலாம். அந்தணர் முதல் அந்திபர் வரையிலான ஜாதியர்களில் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குரிய கர்மாநுஷ்டானத்தினாலும் உபாயாநுஷ்டானத்தினாலும் பரமபுருஷார்த்தத்தை அடையலாம் என்று க்ரந்தமுகமாக நிரூபித்தவர் இந்த மஹான் ஒருவரே. மற்றும் ஆபாதப்ரதீதியால் சாஸ்திரவிருத்தம்போல் தோன்றும் வாக்யங்களைக் கண்டு நம்போலியர்கள் ப்ரமிக்காமலிருக்கும்படி அவைகளை எல்லாம் எடுத்து அவைகளுக்குத் தாத்பர்யார்த்தங்களை நிரூபித்திருக்கிறார்.

இந்த க்ரந்தத்தில் பாஞ்சராத்திரம், இதிஹாஸம், புராணங்கள் ஸ்ரீபாஷ்யகாரர்வரையிலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகள், இவைகள் ப்ரமாணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமத் ஸம்ப்ரதாயபரிசுத்தியில் இவர் தாமே 'ஸ்ரீ பாஷ்யகாரருடைய சிஷ்யப்ரசிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் அர்த்த விரோதமில்லை, யோஜநா பேதமேயுள்ளது' என்றருளிச் செய்திருக்கிற

---

1 'वन्दे वेदान्तदेशिकम्'

படியே பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர் முதலியவர்களுடைய வாக்யங்களில் சில மேற்பார்வையால் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளத்துக்கு விரோதம்போல் தோன்றினபோதிலும், அவ்வாக்யங்களுக்கு ப்ரமாணுனுகுணமான அர்த்தங்களை இக்கிரந்தத்தில் நிரூபித்திருக்கிறார். ஆகையினால் இக்கிரந்தம் ஸர்வ சாஸ்திரங்களுக்கும் ஸாரமென்று பெரியோர்களினால் ஆதரிக்கப்பட்டது. மணவாளமாமுனிகளும், ஈட்டரும்பதக்காரர்களும் ஸாரசாஸ்த்ரத்தை உபஜீவித்ததும் எல்லாரும் அறிந்ததே.

க்ரந்த ஸங்க்ரஹம். இதில் முதல் இருபத்திரண்டு அதிகாரங்கள் அடங்கிய அர்த்தானுசாஸந பாகத்தில், ஆஸ்திகர்கள் சாஸ்திரங்களில் அவச்யம் அறிந்துகொள்ளவேண்டிய தத்வஹித புருஷார்த்தங்களை நிரூபித்தருளினர். மேல் நாலு அதிகாரங்களடங்கிய ஸ்திரீகரண பாகத்தில், கீழ் நிரூபிக்கப்பட்ட அர்த்தங்களில் நேரிடுகிற ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் அருளிச் செய்தார். இதற்குமேல் மூன்று அதிகாரங்கள் அடங்கிய பதவாக்ய யோஜனு பாகத்தில், இப்படி நிரூபித்த ஸகல சாஸ்திரார்த்தங்களும் ரஹஸ்யத்ரயங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறபடியை நிரூபித்தருளினர். முடிவில் மூன்றதிகாரங்களடங்கிய ஸம்ப்ரதாய ப்ரக்ரியா பாகத்தில் இவ்வர்த்தங்களை உபதேசிக்கும் ஆசார்யனிருக்கும்படியும், உபதேசம் பெறும் சிஷ்யன் இருக்கும்படியும், க்ரந்த நிகமனமும் முறையே அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வதிகாரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஸங்கதி முதலியவைகளை வ்யாக்யானத்தில் அங்கங்கே கண்டுகொள்வது. ஆக 'பரமாத்மா ஒன்றை யறிந்தால் ஸர்வமும் அறியப்பட்டதாகும்' என்று ச்ருதியில் சொல்லியிருப்பதைப்போல இக்ரந்தம் ஒன்றைப் பூர்த்தியாயறிந்தால் விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயார்த்தங்கள் எல்லாம் அறியப்பட்டதாகும்.

அவதார ஸமாபனம். இவர் விபவதசையில் நூற்றொரு வருஷம் எழுந்தருளியிருந்து கலி 4471வதான ஸௌம்ய வருஷத்தில் கார்த்திகை-மீ க்ருத்திகா நக்ஷத்திரத்தில் தம்முடைய அவதாரத்தை ஸமாபனம் செய்து தம்முடைய அவதாரத்துக்கு வ்யாஜமான கண்டாக்ருதியை அடைந்தார். இவ்வர்த்தம்

1அப்தே ஸௌம்யே ச வாரே கதவதி தரணௌ
வ்ருஶ்சிகம் க்ருத்திகர்க்ஷே ராகாயாம் வேங்கடேஶோ
யதிந்ருபதிமதம் ஸர்வதஃ ஸ்தாபயித்வா । வேதாந்தா
சார்யவர்யோ விரசிதவிவிதாநேகதிவ்யப்ரபந்தஃ
ஸ்ரீஶைலாதீஶகண்டாக்ருதி வபுரபவத்தேஶிகே
ந்த்ரோ தயாலுஃ ॥

என்று ஸ்ரீநைநாராசார்யரால் அனுஸந்திக்கப்பட்டது.

நிகமனம். இக்ரந்தத்துக்கு அனேக வ்யாக்யானங்கள் இருந்தாலும், அவைகள் எல்லாம் சாஸ்திரங்களில் விசேஷ பரிசயமுள்ளவர்களுக்கே அறியக்கூடியவைகளாயிருக்கிறபடியினால், அந்த வ்யாக்யானங்களை எல்லாம் தழுவி ஸத்ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்ததாய் எளிதான தமிழில் ஒரு வ்யாக்யானம் எழுதும்படி அனேகம் பெரியோர்கள் நியமித்ததை சிரஸா வஹித்து அடியேன் இந்த வ்யாக்யானத்தை எழுதத்துணிந்தேன். இந்த வ்யாக்யானத்தில் அச்சுப் பிழைகளும், அஜ்ஞானத்தினால் ஸஹஜமாய் உண்டாகக்கூடிய மற்றப் பிழைகளும் இருந்தபோதிலும், 2'தத்தரிணயேந டவியா' (உம்முடைய ஸபையில் வேதங்களெல்லாம் உம்மை ஸ்தோத்திரம் செய்து நிற்க அவைகளின் நடுவில் மந்த புத்தியையுடைய அடியேன் ஸ்தோத்ரம் பரிஹாஸார்த்தமாக ஆகட்டும் என்று அருளிச்செய்திருக்கிறப்போலவும், 3 'ஶுநாலீடா காமம் பவது ஸுரஸிந்துர்பகவதீ ததேஷா கிம் பூதா ஸ து ஸபதி ஸந்தாபரஹிதஃ' என்று அருளிச்செய்திருக்கும்

---

1 अब्दे सौम्ये च वारे गतवति तरणौ वृश्चिकं कृत्तिकर्क्षे
राकायां वेंकटशो यतिनृपतिमतं सर्वतः स्थापयित्वा ।
वेदान्ताचार्यवर्यो विरचितविविधानेकदिव्यप्रबन्धः
श्रीशैलाधीशघण्टाकृतिवपुरभवद्देशिकेन्द्रो दयालुः ॥

2 'तत्थरिणयेन ठविया'

3 'शुनालीडा कामं भवतु सुरसिन्धुर्भगवती
तदेषा किं भूता स तु सपदि सन्तापरहितः'

ந்யூனத்தினாலும் இந்த க்ரந்தத்துக்கு அவைகளினால் ஒருவித ந்யூநதையும் வராதென்பதையும் அல்பஜ்ஞனான அடியேனுடைய புத்தியும் வாக்கும் பரிசுத்தமானபடியையும் நினைத்து இதை க்ருபையுடன் பெரியோர்கள் அங்கீகரிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

இதில் குறிப்பிட்டிருக்கும் ப்ரமாணங்களின் ஆகரங்கள், ஸ்ரீ.உ.வே. வித்வான் திருக்கோட்டியூர் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமிகளினுடைய ப்ரமாணத்திரட்டுடன் ஒத்துப்பார்க்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. இப்படி இந்த ப்ரமாணத் திரட்டைக் கொடுத்து உதவி புரிந்த அந்த ஸ்வாமியினிடத்தில் மிகவும் க்ருதஜ்ஞதை உடையவனாயிருக்கிறேன்.

இந்த க்ரந்தத்தை அச்சிட்டு வெளியிட முன்வந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ப்ரசாரண ஸபை அத்யக்ஷர் ஸ்ரீ.உப.வே. எஸ் ராஜகோபாலாசார்யருக்கும், இக்ரந்தம் பூர்த்தியாவதற்கு பரிச்ரமப்பட்ட கார்யதர்சிகளான ஸ்ரீ.உப.வே. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யருக்கும், வன்பாக்கம் வெ. தேசிகாசார்யருக்கும், இக்ரந்த ப்ரசாரணமாகிய இக்கைங்கர்யம் நிர்விக்னமாய் நிறைவேறும்படி இந்த ஸபையின் மற்ற எல்லாக் கார்யங்களையும் ச்ரத்தையுடனும் ஊக்கத்துடனும் செய்துவந்த உதவி கார்யதரிசி ஸ்ரீ.உப.வே. கோமடம் ஸ்ரீநிவாஸய்யங்காருக்கும் நாமெல்லோரும் நம்முடைய நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம்.

ஸித்தார்த்தி-வரு }
தை-மீ 28௳ }

தி. ஏ. நரஸிம்மன்.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத் தனியன்கள்.

[ஸ்வாசார்யன் முதலாகப் பகவான் வரையிலாக உள்ள ஆசார்ய பரம்பரையை அவரவர்கள் ஸம்ப்ரதாய க்ரமப்படி அநுஸந்தித்த பிறகு இந்த ச்லோகங்களை அநுஸந்திக்கவும்.]

विगाहे निगमान्तार्यविष्णुपादसमुद्भवाम् ।
रहस्यत्रयसाराख्यां त्रिस्रोतसमकल्मषाम् ॥
अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ।
रहस्यत्रयसाराख्यं परं ब्रह्मास्तु मे हृदि ॥

𑌵𑌿𑌗𑌾𑌹𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑌾𑌦𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾𑌮𑍍 ।
𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌸𑌾𑌰𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌰𑍋𑌤𑌸𑌮𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌮𑍍 ॥
𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌮𑍍 ।
𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌸𑌾𑌰𑌾𑌖𑍍𑌯𑌂 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇 𑌹𑍃𑌦𑌿 ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.



॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே லக்ஷ்மீஹயவதந பரப்ரஹ்மணே நம: ॥

ஸ்ரீமதே வகுலபூஷணமஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீ குருபரம்பராஸாரம்.

[குருபங்க்தி பஜனம்—பகவானுடைய ப்ரதமாசார்யத்வம்—ஆசார்ய பரம்பராக்ரமம்—ஆசார்யபக்தி அவச்யம் செய்யவேண்டுமென்பது—அப்படிச் செய்யாவிடில் ப்ரத்யவாயம்—நித்ய நைமித்திகங்களில் அதின் அந்வயம்—ஸுலபமாக குருபங்க்தி ஸ்மரணார்த்தம் தத்ஸங்க்ரஹப்பாட்டு—விசேஷோபகாரக ஆசார்யவிஷயகாதாத்ரயம்.]

குருப்யஸ்தத்குருப்யஶ்ச நமோவாகமதீமஹே ।
வ்ருணீமஹே ச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம் பதீ ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

𑌤𑌰𑌜𑍂𑌮𑌵𑌨𑌦𑍀𑌤𑍀𑌹𑍇𑌮𑌾𑌬𑍍𑌜𑌨𑌾𑌯𑌿𑌕𑌾𑌸𑌮𑍇𑌤
𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌨𑌾𑌯𑌕𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑌕𑍁𑌲𑌭𑍂𑌷𑌣𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌃 𑌸𑍍𑌵𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑍁 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌷𑍁
𑌸𑌞𑍍𑌜𑌿𑌤𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑍍𑌯𑌂 𑌚 𑌹𑌾𑌦𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌯𑍀𑌸𑌸𑍁𑌨𑍁𑌂
𑌸𑌂𑌵𑌿𑌦𑍁𑌨𑌿𑌗𑌮𑌵𑍍𑌯𑌾𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌃 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌦𑍁𑌰𑌯
𑌮𑌹𑌿𑌤𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍇𑌽𑌨𑌘𑌾𑌯𑍇
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌶𑍍𑌰𑍀𑌵𑌾𑌸𑌰𑌾𑌮𑌾𑌵𑌰𑌜𑌗𑍁𑌰𑍁𑌵𑌰𑌂
𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌣𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌾𑌯𑍀𑌸𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌵𑌕𑍁𑌲𑌯𑌰𑌮𑍁𑌨𑌿
𑌪𑍍𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑌾𑌗𑍍𑌰𑌹𑌾𑌗𑌾𑌂
𑌨𑌾𑌯𑌶𑍍𑌰𑍀𑌯𑌾𑌮𑍁𑌨𑍇𑌯𑌪𑍍𑌰𑌯𑌿𑌤𑌯𑌤𑌿𑌪𑌤𑌿
𑌪𑍍𑌰𑍋𑌲𑍍𑌲𑌸𑌨𑍍𑌮𑍍𑌯𑌹𑌾𑌗𑌾𑌃 ।
𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑌶𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌤𑌰𑌲𑌸𑌤𑍍
𑌪𑍁𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌹𑌾𑌗𑌾𑌂 𑌸𑍁𑌹𑌾𑌜𑍍𑌞𑌾𑌂
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌮𑌾𑌲𑌾𑌂 𑌗𑍁𑌰𑍂𑌣𑌾𑌂 𑌵𑌿𑌮𑌲𑌗𑍁𑌣𑌗𑌣𑌾𑌂
𑌮𑌞𑍍𑌜𑌿𑌤𑌾𑌂 𑌪𑌞𑍍𑌜𑌿𑌤𑌾𑌗𑍍𑌰𑍇𑌃 ॥
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌹𑌸𑍍𑌤𑌸𑌾𑌲𑌾 𑌮𑌹𑌪𑍍𑌪𑌰𑌿𑌪𑍂𑌨𑍁 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑌂 𑌕𑍁𑌲𑌶𑍇𑌖𑌰𑌂 𑌚 𑌵𑌿𑌮𑌲𑌂 𑌶𑍍𑌰𑍀𑌯𑍋𑌗𑌿𑌵𑌾𑌹𑌂 𑌮𑍁𑌨𑌿𑌂 । 𑌶𑍍𑌰𑍀𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌪𑌾𑌰𑌾𑌗𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌮𑌨𑌘𑌂 𑌶𑍍𑌰𑍀𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌂, 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑌂 𑌕𑌲𑌿𑌵𑍈𑌰𑌿𑌣𑌂 𑌮𑍁𑌰𑌰𑌿𑌪𑍋𑌗𑍋𑌦𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑍋𑌦𑌾𑌪𑌹𑌾𑌃 ॥
𑌯𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌦𑍁𑌨𑍁𑌸𑌿𑌕𑌾𑌯𑌿𑌪𑌨𑌗𑌰𑌪𑌰𑍇
𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌾𑌸𑍀𑌤𑍍𑌤𑍁𑌰𑍇𑌸𑌃

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]

அவதாரிகை.

ஸ்ரிய:பதியான திருவேங்கடமுடையான், ஆவாரார் துணை யென்று அலைநீர்க் கடலுளழுந்தும் நாவாய்போல், பிறவிக்கடலுள் நின்று துளங்குகிற சேதனர்களை ஶாஸ்திரமாகிற ஜ்ஞானக் கை தந்து உஜ்ஜீவிப்பிக்கவேண்டுமென்கிற திருவுள்ளத்தினால் நம்மாழ்வார் முதலான ஆசார்யரூபேண தத்தத் காலங்களில் அவதாரம் செய்து, தம்மால் ப்ரதிஷ்டிதமான ஸம்ப்ரதாயத்திற்கு பாஹ்யாந்தர குத்ருஷ்டிகளாலே பல முகங்களான கலக்கங்கள் நேரிட்ட ஸமயத்தில் அந்த க்ஷோபத்தை ஶமநம் செய்யத் திருவுள்ளம் பற்றி, இது நாவீறுடைய ஒருவனை முன்னிட்டல்லது முடியாதென்று கணிசித்து, சக்ரவர்த்தித் திருமகனாயவதாரம் செய்வதற்குப் பாயஸமென்கிற ஒரு வ்யாஜத்தை முன்னிட்டாப்போலே, தம்முடைய ஸ்வர்ண கண்டையை அதிஷ்டானம் செய்து, அதின் மூலமாகத் தாம் விலக்ஷணமாக ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிக ரூபேண அவதாரம் செய்தருளினா னென்பது 'வெംகடேஶாவதாரோzயழ்', 'உத்தக்ஷ்வைதெ வாயஜதெந ரூவவதிஹூநா வண்டா ஹரெஸஜநிஷ யஊாதநெதி' 'அன்றிவ் வுலகினையாக்கி', என்றிவை முதலிய ப்ரமாணங்களினால் ஸித்தம். இப்படிப்பட்ட 'அவதார வைலக்ஷண்யத்துடன் கூடியவராய், பன்னுகலை நால் வேதப் பொருளையெல்லாம் பரிமுகமா யருளிய பரமனுடைய அருள் பெற்று ஸகல சாஸ்திரங்களிலும் நிபுணராய், ஸ்ரீரங்க நாதனாலேயே அநிதரஜந லப்யமான உபய வேதாந்தாசார்ய பிருத ப்ரதானத்தாலும், தத் ஸஹ தர்மசாரிணியான பெரிய பிராட்டியாரால் ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ர ரென்கிற பிருத ப்ரதானத்தாலும் விஶேஷ கடாக்ஷம் செய்யப்பட்டவராய், ஆசார்யத்வோபயுக்த ஸகல கல்யாணகுண பரிபூர்ணராய், ஸுப்ரக்யாத வைபவரான நம் தேசிகன், முமுக்ஷுக்களான ஸர்வ ஜனங்களும் எளிதாகத் தத்வஹிதபுருஷார்த்தங்களை ஸம்ஶய விபர்யயங்களறத் தெளிந்துகொள்ளவேண்டுமென்கிற அபார காருண்யத்தினாலே ஸகல ஶ்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராண, பாஞ்சராத்ர, ஆசார்ய ஸ்ரீஸூக்த்யாதிகளின் ஸாரதமார்த்தங்களை ஸங்க்ரஹித்து ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் என்கிற ப்ரபந்த ரத்னத்தை அருளிச்செய்யத் திருவுள்ளம் பற்றி, முதலில் குரு

பஜன கர்த்தவ்யதா ஸ்தாபகமான ஸ்ரீகுருபரம்பராஸாரமென்னும் க்ரந்தத்தை யருளிச்செய்கிறார்.

இக் குரு பரம்பரா ஸார மென்னும் க்ரந்தம் இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தோடு சேர்ந்ததா? தனிப்பட்டதா? தனிப் பட்டதாயிருந்தால் நியமேந எல்லா ஸ்ரீகோசங்களிலும் சேர்த்தே எழுதியருளப் பண்ணியிருப்பதும், காலக்ஷேபாதிகளில் சேர்த்தே அநுஸந்திப்பதும் விரோதிக்குமே? மேலும், இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸார க்ரந்தத்தில் அருளிச் செய்யப்படும் அர்த்த விசேஷங்கள் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களி னால் தெளிந்தோம் என்கிற உபகார ஸ்ம்ருதியாலே ஆழ்வார் விஷயமாக மங்களாசரணம் இந்த க்ரந்தத்தின் ஆரம்பத்தில் செய்தருளியிருப்பது விரோதியாதோ? மேலும், குரு பரம்பரா ஸாரத்தில் 'ஜயதி ஜகதாம் பதி:' என்று உபக்ரமித்து, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தின் நடுவில் 'ஸேவதிஜயதி' என்று ப்ரஸ் தாவித்து, கடைசியில் 'ஸாஸ்த்ரம் ஜயதி விஷ்ணு' என்று உபஸம்ஹாரம் செய்திருப்பதினால் உபக்ரம உபஸம்ஹார ந்யா யத்தினாலே ஒன்றென்று தோற்றுவதற்கு விரோதமாகாதோ? மேலும், இவரால் அருளிச்செய்யப்பட்ட க்ரந்தங்களைத் தனித் தனியே நிர்தேசம்பண்ணின பின்புள்ளவாசார்யர்கள் இதைத் தனித்து ஒரு க்ரந்தமாக நிர்தேசிக்காததும் விரோதியாதோ? என்றிவை முதலிய சங்கைகள் உதிக்கலாம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்துடன் சேர்ந்ததென்னில்,உபோத்காதாதிகாரத்தோடு ஏகா திகாரமா? தனித்த அதிகாரமா? என்று விவேகிக்கவேண்டும். உபோத்காதாதிகாரத்தோடு சேர்ந்ததாயிருந்தால், இதின் கடைசி யில் "ஸ்ரீஸம்ப்ரதாயபரிசுத்திர்நாம ப்ரதமோऽதிகார:" என்று அருளிச்செய்திருப்பதும், உபோத்காதாதிகாரத்தில் தனித்து மங்களம் அருளிச்செய்திருப்பதும், மற்ற அதிகாரங்களைப்போல் ஆத்யந்தங்களில் ஸ்லோகங்களும் பாட்டுக்களும் தனித்தருளிச் செய்திருப்பதும் விரோதிக்குமே? உபோத்காதாதிகாரத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறபடியே, இந்த ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரமாகிற ரத்நம் மோக்ஷமாகிற பலத்திற்குப் பரம்பரையாகக் காரணமாகையினால் எல்லோராலும் அவச்யம் அறியத்தக்கது என்று ஸ்தாபிக்கிறதாகிற அர்த்தமும், ஆசார்யபக்தி பண்ண வேண்டுமென்று இங்கு ஸமர்த்தனம் செய்கிற அர்த்தமும் அத்

யந்தம் பின்னமாகையினாலே இவைஇரண்டும் வெவ்வேறாக இருக்க வேண்டுமே? தனித்த அதிகாரமாயிருந்து ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தோடு சேர்ந்திருந்தால் 'ஶ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரஃ ஷஷ்ட்யஃ', 'உபோத்காதாதிகாரோ த்விதீயஃ' என்றருளிச்செய்திருக்க வேண்டாவோ? மேலும் 'முப்பத்திரண்டிவை' என்று முப்பத்திரண்டு அதிகாரங்கள் என்று அருளிச்செய்திருப்பதும் விரோதிக்குமே? ஸந்த்ருஷ்டஃ என்கிற ஶ்லோகத்திலும், நிகமனாதிகாரத்திலும், இக் குருபரம்பரா ஸாரத்தினர்த்தத்தை அனுவதியா தொழிந்ததும் விரோதிக்குமே? அதிகார ஸங்கிரஹப் பாட்டுக்கள் 'திருவுடன்' என்றாரம்பித்து 'மொழித்திருவே' என்கிறவரையில் அந்தாதியாகவருளிச் செய்யப்பட்டிருப்பதினாலும், இந்தக் குருபரம்பராஸாரத்தில் பாட்டுக்கள் அப்படி அந்த அந்தாதியுடன் சேராமலிருப்பதினாலும் விரோதிக்குமே? என்றிவை முதலிய ஶங்கைகள் உதிக்கலாம். இப்படி இது பின்னம், அபின்னம் என்கிற பக்ஷத்தில் உண்டாகும் ஶங்கைளில் இது தனி ப்ரபந்தம்தான் என்று ஸ்தாபிப்பதில், உபக்ரம உபஸம்ஹார ந்யாயம் ப்ரபலமான பாதகமன்று, தனி ப்ரபந்தங்களிலும் அப்படி ஶப்தப்ரயோகம் காணப்படுகிறபடியினால். ஆழ்வார்களும் உபகாரகாசார்யர்களாகையினாலும், அவர்களுடைய அவதாரங்களையும் மேலே ஸங்க்ரஹிக்கப்போகிறபடியினாலும், அவர்களைப் பற்றி மங்களாசரணம் பண்ணியிருப்பது விரோதமாகாது. குருபங்க்திபஜனம் செய்யவேண்டுமென்கிற வேதாந்தார்த்தத்தை உபகரித்தருளினதற்காக ஆழ்வார்கள் விஷயமாக இங்கு மங்களம் அருளிச்செய்திருப்பது பொருந்துமாகையினால், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அருளிச்செய்யப்படும் அர்த்தவிஶேஷங்களுக்கு அவர்களிடத்தில் உபகாரஸ்ம்ருதி இது என்பதற்கு விஶேஷ நியாமகமொன்றுமில்லை; நியமேந உபதேஶமும், ஸ்ரீகோசங்களில் ஏறியருளப்பண்ணியிருப்பதும் ஸ்ரீசதுஶ்லோகீ ஸ்ரீஸ்தோத்ரரத்னத்தைப்போல உபபந்நமாகலாம் என்று சிலர் ஸமாதானம் சொல்லுகிறார்கள். சிலர், 'தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்பதினால் மேலருளிச்செய்யப்போகிற அர்த்தவிஶேஷங்களைத் தெரிவித்ததாகிய உபகாரஸ்ம்ருதி 'பொய்கை முனி' என்கிற பாட்டில் வ்யக்தமாயருளிச்செய்யப்பட்டிருக்கிறபடியினாலும், உபக்ரம உபஸம்ஹாரங்களில் 'ஶ்ரீமதீ' ஶப்தப்ரயோகத்

திலும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்துடன் ஒன்றானது. ஆனால் தனித்து மங்களாசரணம் செய்திருப்பது ஒரு க்ரந்தத்திலேயே அவாந்தரப்ரகரணாரம்பங்களில் மங்களம் செய்கிற ந்யாயத்தினால் உபபந்நமாகும். அப்படியே ஶததூஷணீ முதலிய க்ரந்தங்களில் ஒவ்வொரு ப்ரகரணாரம்பத்திலும் மங்களமருளிச்செய்யப்பட்டிருக்கிறது என்று இது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தோடு சேர்ந்தது என்பதற்கு ஸமாதானம் சொல்லுகிறார்கள். ஆனால் இக் குருபரம்பராஸாரம் தனிப்ரபந்தமேயாகிலும் 'குருப்யஸ்தத்குருப்ய:' என்றும், 'ஸூஹஹவத்து:' என்றுமருளிச்செய்யப்பட்ட குருபஜனம் அவஶ்யம் கர்த்தவ்யம் என்று நிரூபிப்பதற்காக ஏற்பட்டபடியினால் உபோத்காதாதிகாரத்திற்கு ஶேஷமாக இருந்து கொண்டு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தோடு சேர்ந்திருக்கிறதென்று ஸம்ப்ரதாய பரிசயமுள்ளவர்கள் ஸமாதானம் சொல்லுகிறார்கள்.

இப்படி ஆரம்பிக்கப்படும் க்ரந்தம் நிர்விக்னமாக முடிவதற்காகவும், எல்லாவிடங்களிலும் பரவுகிறதற்காகவும், க்ரந்தத்தை ஆரம்பிக்கிற பொழுதெல்லாம் மங்களம் செய்யவேண்டுமென்று நைமித்திக கர்மமாகப் பெரியோர்களினால் நிஶ்சயிக்கப்பட்டிருக்கும் மங்களாசரணத்தைச் செய்தருளாநின்றுகொண்டு, இப்படித் தம்மா லருளிச்செய்யப்பட்ட மங்கள ஶ்லோகத்தையனுஸந்திப்பதனால் சிஷ்யர்களுக்கு விஶேஷமான மங்களமுண்டாகவேண்டுமென்கிற அனுக்ரஹவிஶேஷத்தினால் அதை க்ரந்தாரூடமாக அருளிச்செய்கிறார். 'குருப்ய:' என்றாரம்பித்து

[ப-ரை] குருப்ய: - ஆசார்யர்களின் பொருட்டும், தத் குருப்யஶ்ச - அவர்களின் ஆசார்யர்களின் பொருட்டும், நமோவாகம் - 'நம:' என்கிற வார்த்தையை, அதீமஹே - அத்யயனம் செய்கிறோம், அதாவது அடிக்கடி சொல்லுகிறோம், தத்ர - அந்த ஆசார்யபரம்பரையில், ஆத்யௌ - முதல்வராகிய, அல்லது எல்லாவற்றிற்கும் காரணமாகிய, ஜகதாம் - லோகங்களுக்கு, பதீ - ஸ்வாமிகளான, தம்பதீ - பிராட்டியும் எம்பெருமானுமாகிய தம்பதிகளை, வ்ருணீமஹே - வரிக்கிறோம், அதாவது ஆஶ்ரயிக்கிறோம்.

இந்த ஶ்லோகத்தில், முதலில் 'गुरुभ्यः' என்று தம்முடைய ஆசார்யனைப் பன்மையாகச் சொல்லியிருப்பது கௌரவத்தைக் காட்டுவதற்காக. 'तद्गुरुभ्यः' என்கிற இடத்தில் இருக்கும் பன்மையோவெனில், அவருடைய ஆசார்யன் முதலாகப் பகவான் வரையிலுள்ள ஆசார்யர்களைக் குறிக்கிறது. 'गुरुभिर्ब्रह्म ब्राह्मं तद्गुरुभ्यस्तथा हरिः' என்று ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையில் இவர் தம்மாலேயே உதாஹரிக்கப்பட்டிருக்கும் வசனத்தையனுஸரித்து இங்கிப்படி வ்யாக்யானம் செய்யப்பட்டது. நமஸ்காரத்தைச் செய்கிறோம் என்று மாத்திரம் அருளிச்செய்யாமல் 'नमः' என்கிற வார்த்தையை அத்யயனம் செய்கிறோம் என்றருளிச்செய்திருப்பது 'नमः' என்கிற பதத்தின் அர்த்தங்களெல்லாம் இந்த ஆசார்யர்கள் விஷயத்தில் செய்யவேண்டும் என்கிற தாத்பர்யத்தை வெளியிடுகிறது. 'अधीमहे' என்பதினால் வேதாத்யயனம் விஹிதமானாற்போலே இதுவும் விஹிதமென்பது தெரிவிக்கப்படுகிறது. 'अधीमहे' 'वृणीमहे' என்று ஏகாராந்தமான பாடமே உபதேஶ பரம்பரையில் வந்திருக்கிறது. 'वृणीमहे' என்பதோடு ப்ராப்யர்களாகவும் ப்ராபகர்களாகவும் (प्राप्येभ्य, प्रापकेभ्य) என்று சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆசார்யனைப்போல ஜ்ஞான ப்ரதானம் மாத்திரம் பண்ணுகிறவர்களல்ல என்று தெரிவிப்பதற்காக 'जगताम्पती' என்றருளிச்செய்யப்பட்டது. இத்தால் ஶேஷிகளாகையினால் ரக்ஷகர்களென்றும், கைங்கர்யத்திற்கு உத்தேஶ்யர்களென்றும் அருளிச்செய்யப்பட்டதாகிறது. ஜகத்திற்கு ஈஶ்வரர்கள் இருவராகுமே என்கிற ஸந்தேஹத்தைப் பரிஹரிப்பதற்காக 'दम्पती' என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. பத்னீ எப்பொழுதும் பர்த்தாவிற்கு ஶேஷமாகையினால் ஈஶ்வரத்வித்வ ஶங்கை உதியாது என்று தாத்பர்யம். இந்த ஶ்லோகத்தினால் இந்த க்ரந்தத்திற்கு குரு பங்க்தி பஜனம் விஷயமென்றும், பரம்பரையாக மோக்ஷம் ப்ரயோஜனமென்றும், அதில் ஆசையுடையவன் அதிகாரீ என்றும் தெரிவிக்கப்பட்டதாகிறது.

ஆசார்யர்கள் செய்தருளிய உபகாராதிஶயங்களும் அவர்களின் குணவிஶேஷங்களும் அநுஸந்தேயமென்று ஶ்ருதியில்

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார்
　　தண் பொருநல் வருங் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகர னம்பாணநாதன்
　　தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி
வையமெலா மறை விளங்க வாள் வேலேந்து
　　மங்கையர் கோனென்றிவர்கள்மகிழ்ந்து பாடுஞ்
செய்ய தமிழ் மாலை களுந்தெளிய வோதித்
　　தெளியாத மறை நிலங்க டெளிகின்றோமே. 1

சொல்லப்படுகிறபடியினால் அவர்கள் செய்தருளின உபகார ஸ்ம்ருதியை முன்னிட்டு அவரவர்களுக்கு அஸாதாரணமான ப்ரபாவ விசேஷங்களுடன் அவர்களை அனுஸந்தானம் பண்ணிக்கொண்டு ஒரு மங்களம் அருளிச்செய்கிறார் — 'பொய்கை முனி' என்றாரம்பித்து. இங்கு 'ஸூவாஸவஹாஉதி ஸுஅஸுவாஸூாதிகெவி' என்று இவர் தாமே அருளிச் செய்திருக்கிறபடியே அவர்களுடைய வஸ்துக்களை யனுஸந்தானம் செய்வதும் குருபக்தி பண்ண வேண்டும் என்கிற விதிக்கு தாத்பர்யமென்பது, அவர்களுடைய வஸ்துக்களாகிய திவ்ய ப்ரபந்தங்களையும் அவர்களுடைய இடங்களையும் அனுஸந்தானம் செய்ததினால் தெரிவிக்கப்படுகிறது. அப்படியே பூர்வாசார்யர்களும் 'திருவழுதி நாடென்றும் தென் குருகூரென்றும்' என்றிவை முதலியன அருளிச் செய்திருக்கிறார்கள். அன்றிக்கே 'வஶாஶஶஸூபாஸாஉவி வெஷாக ஶகஸெஹ் ஸெஶஹூாதிஶய ஹெதா ஹ ஸெதைஃ, ஸஷூஃ வஶ ஸாத்ஸிவிஸ்ரஶகதஸெஃ ஸஸெவாவஜீஸெவூ ஶாவஸவூஂஹ ஸெணஃ' என்று ஸ்ரீ ஸ்தோத்ர பாஷ்யத்திலும், 'யதுக க்ரூ க்ரு ஸ்ரூதீநா ஃாவிஜண விஹிஸெதஃ ஸெதிஹாஸெஸஃ ஸாராஸிணஃ தத்ராவஸள ஸக்ஷஸீஃ ஶ௦ஸியஜ ஃாஜெந ஜாஸெஜா ஸாவடுஸாஸி' என்று ஸ்ரீ த்ராமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலும் இவர் தாமே யருளிச் செய்திருக்கிறபடியே த்ராவிட திவ்ய ப்ரபந்தங்களில் த்ராமிடோபநிஷத்துக்கள் ஸாரதமங்களாகையினால் அவைகளை உபகரித்தருளின ஆழ்வார்களைக் குறித்து மங்களம் அருளிச் செய்கிறாராகவுமாம் — 'பொய்கை முனி' என்றாரம்பித்து.

[ப-ரை] பொய்கைமுனி - தடாகத்தில் அவதரித்தவரும் முனியாயிருந்தவருமான பொய்கையாழ்வார், பூதத்தார் - பூதத்தாழ்வார், பேயாழ்வார் - பேயாழ்வார், தண் - குளிர்ச்சி பொருந்திய, பொருநல் - தாம்பரபர்ணியில், அதாவது அதின் கரையில், வரும் - அவதரித்தவரான, குருகேசன் - குருகூர் என்கிற திருநகரிக்கு நிர்வாஹகரான நம்மாழ்வார், விட்டுசித்தன்-பெரியாழ்வார், துய்ய - பரிசுத்தரான, குலசேகரன் - குலசேகராழ்வார், நம் - நம்முடையவரான, பாணநாதன் - திருப்பாணாழ்வார், தொண்டரடிப்பொடி - தொண்டரடிப்பொடியாழ்வார், மழிசைவந்த - திருமழிசை என்கிற திவ்ய க்ஷேத்திரத்தில் அவதரித்தவரான, சோதி - தேஜோரூபியானவர், அதாவது திருமழிசை யாழ்வார், வையமெலாம் - உலகங்கள் எல்லாவற்றிலும், மறை - வேதம், அதாவது வேதார்த்தம் என்று தாத்பர்யம், விளங்க - ப்ரகாஶமாவதற்காக, வாள்வேலேந்தும் - வாள், வேல், என்கிற ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு நின்றவரான, மங்கையர்கோன் - திருமங்கை யாழ்வார், என்றிவர்கள் - என்று சொல்லப்படுகிற, இந்த ஆழ்வார்கள், மகிழ்ந்து - ப்ரீதியுடன், பாடும் - பாடினவையான, செய்ய - கபட ஸ்வபாவமில்லாத, அதாவது தன்னர்த்தங்களை ஸந்தேஹ விபர்யங்களில்லாதபடி எளிதில் தெளிவிக்குமதான, தமிழ் மாலைகள் - எம்பெருமானுக்கு மாலைபோல் ப்ரீதி ஹேதுக்களாகிய த்ரமிட ப்ரபந்தங்களை, நாம், தெளிய - ஸந்தேஹம் முதலியவைகளில்லாமல் நன்றாகத் தெளியும்படி, ஓதி - அத்யயனம் செய்து, தெளியாத - இதற்கு முன் தெரிந்துகொள்ளப்படாதவைகளான, மறை நிலங்கள் - வேதத்தின தாத்பர்யார்த்தங்களை, தெளிகின்றோம் - தெளிந்து கொள்ளுகிறோம்.

இங்கு 'பொய்கை முனி' என்பதினால் அவர் அவதரித்த இடமாகிய பொய்கையும், அவருடைய பக்தியாகிற குண விஶேஷமும் அனுஸந்திக்கப்பட்டதாகின்றன. 'முனி' என்னும் பதத்திற்கு மனனசீலர் என்றர்த்தமாகையினால் இவர் எப்பொழுதும் பகவத் த்யானமே பண்ணிக்கொண்டிருந்தாரென்பது ஏற்படுகிறது. 'பூதத்தார்' என்பதற்கு 'கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்' இத்யாதிகளிற்படியே 'பூத' என்னும் பதம் நித்யஸூரியைச்

சொல்லுகிறபடியினால், அப்படிப்பட்ட நித்யஸூரியின் அவதாரம் இவர் என்று தாத்பர்யம். அன்றிக்கே ‘ஹம்ஸதாயாம்’ என்று தாத்வர்த்தமாகையினால் ‘ப்ரம்ம ஜ்ஞானமுடையவனே இருக்கிறவனென்று சொல்லப்படுகிறான்’ என்கிற ஶ்ருத்யர்த்தத்தின்படி ப்ரம்ம ஜ்ஞானமுடையவர் என்று தாத்பர்யமாகவுமாம். ‘பேயாழ்வார்’ என்பதற்கு ‘பேய்’ என்னும் பதம் பெரிய என்னும் அர்த்தத்தைச் சொல்லுகிறபடியினாலும், ‘ஊஹாஊஹ’ என்று பூர்வாசார்யர்கள் நிர்தேஶம் செய்திருப்பதினாலும், மஹாயோகி என்கிற திருநாமத்தையுடையவர் என்று தாத்பர்யம். அன்றிக்கே ‘ஹ்ருதஸரோவேதாஜாநு’ என்கிற ஸ்ரீ ஸூக்தியை அநுஸரித்து ‘பேயரே எனக்கு யாவரும் யானுமோர் பேயனே’ என்கிறபடியே பகவத் குணானுபவத்தினுண்டான ஆநந்தத்தினால் ஸஸம்ப்ரம நர்த்தனாதிகளைப் பண்ணிக்கொண்டு பேய்பிடித்தவரைப்போலிருந்தவராகையினால் ‘பேயாழ்வார்’ என்று திருநாமமாயிற்று என்றாகவுமாம். இங்கு ‘தண்பொருநல்’ என்று அருளிச் செய்திருப்பது அந்தத் தாம்பரபர்ணீ நதியின் சீதளத்வம் ஆழ்வார்திருவுள்ளத்தில் குடி புகுந்திருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காக. ‘அருள்கண்டீ ரிவ்வுலகினில் மிக்கதே’ என்றல்லவோ மதுரகவிகள் பாசுரம். ‘பொருநல்’ என்று தாம்பரபர்ணீ நதியை இங்கருளிச் செய்திருப்பது ‘கலௌ வஸ ஹவிஷ்யந்தி’ என்றாரம்பித்து ‘தாம்ரபர்ணீ நதீயத்ர’ என்று இவரையே மஹர்ஷி முதலில் நிர்தேஶித்தான் என்பதைத் தெரிவிப்பதற்காக. ‘விட்டுசித்தன்’ என்பதினால் ‘விஷ்ணு: சித்தே யஸ்ய ஸ:’ (விஷ்ணு எவருடைய சித்தத்தில் இருக்கிறாரோ அப்படிப்பட்டவர்) என்கிற வ்யுத்பத்தியின்படி ‘பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டோடி வந்தென் மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ’ என்றும், ‘அரவத்தமளியினோடு மழகிய பாற்கடலோடு மரவிந்தப் பாவையுந்தானுமகம்படி வந்து புகுந்து’ என்றும் சொல்லுகிறபடியே பெரியாழ்வார் திருவுள்ளத்திலேயே ஸபரிவாரமாக பகவான் எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருக்கிறான் என்பது தெரிவிக்கப்படுகிறது. அன்றிக்கே ‘விஷ்ணௌ சித்தம் யஸ்ய ஸ:’ (எவருடைய மனது பகவானிடத்தி

லேயே இருக்கிறதோ)’ என்கிற வ்யுத்பத்தியினால் பகவானையே இவர் ஸதா த்யானித்துக்கொண்டிருந்தார் என்றர்த்தமாகவுமாம். அதுவுமன்றிக்கே ‘வித்தம்’ என்னும் பதம் ஹ்ருதய ஶப்தபர்யாயமாகையினாலும், ஹ்ருதயஶப்தம் ‘ஸுஹம் தே ஹ்ருதயம்’ இத்யாதி ப்ரயோகங்களில்போல புத்ரன் என்னும் அர்த்தத்தைச் சொல்லுமாகையினாலும், இவருடைய திருமகளாகிய ஆண்டாளைச் சொல்லி எவருடைய திருமகளான ஆண்டாள் பகவானிடத்திலேயே இருக்கிறாளோ அப்படிப்பட்டவர் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம். இத்தால் ‘ஶ்வஶுரமமரவந்த்யம் ரங்கநாயகஸ்ய ஸாக்ஷாத்’ என்பதின் அர்த்தம் சொல்லப்பட்டதாகிறது. “இங்கு திவ்யப்ரபந்தமுகேந உபகாரம் செய்தருளின ஆண்டாளைக் தனித்தருளிச் செய்யாதொழிந்தது, இவ்வாண்டாள் ‘விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அதுகாண்டுமே’ என்றருளிச் செய்தபடியே தன்னுடைய பிதாவுக்கு அத்யந்தம் பரதந்த்ரையாயிருந்த உத்கர்ஷம் தோற்றுகைக்காகப் பெரியாழ்வாரை அருளிச்செய்ததினாலே அவளும் அர்த்தாத் ஸித்தை என்கிற திருவுள்ளத்தினால்’ என்று ஸ்ரீஸாராஸ்வாதிநீ வ்யாக்யானத்தில் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. விஷ்ணுசித்த பதத்திற்கு கீழ்ச்சொன்ன மூன்றாவது யோஜனையைத் திருவுள்ளம்பற்றி ஆண்டாள் கண்டோக்தமானாள் என்று நிர்வஹிப்பாருமுண்டு. ‘துய்ய’ என்பதற்கு ‘ஆரங்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்கட்கே வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்ட’ என்கிறபடியே பாகவதர்களிடத்தில் தோஷாரோபணத்தை ஸஹியாமையாகிய பரிசுத்தியையுடையவர் என்று தாத்பர்யம். ‘பாணநாதன்’ என்பதற்கு ‘பாண்’ என்பது கானத்தைச் சொல்லுகிறபடியினால் பகவத்விஷய கானத்தையே தனக்கு நிரூபகமாகவுடையவரென்று இவருக்குப் ‘பாணநாதன்’ என்கிற திருநாமம் உண்டாயிற்றென்று தாத்பர்யம். அங்கு ‘நம்’ என்று விஶேஷித்திருப்பது தமக்கும் திருப்பாணாழ்வாருக்குமுள்ள அஸாதாரண ஸம்பந்தத்தைக் காட்டுகிறது. அதாவது பெரிய பெருமாளுடைய அனுக்ரஹ விஶேஷத்திற்கு அஸாதாரண பாத்ர பூதர்கள் தாங்களிருவர்களும் என்று தாத்பர்யம். எப்படியென்னில்:—ஸ்ரீரங்கநாதனே லோகஸாரங்கமா

முனிக்கு இவரைத் தோளிலே எற்றிவரும்படி நியமித்து இவர் தம் ஸந்நிதி வந்தவாறே இவருக்கு முனிவாஹனர் என்கிற திருநாமம் சாற்றினதும், அப்படியே தமக்கும் 'ஸக்ருதிஹ ஸிஷ்யத்வம் யாஸ்யந்தோ ஜாதா வ்ருத்த்யா வ்யவஹரந்த நிஜஸமாஹ்வயாய்ச்சம் வைஷ்ணவாய' என்றும் 'விஷ்ணு ஸம்ஜ்ஞாஸமேதாம் நாமவிஹிதம் தஸ்ய தேந தேவேந தத்தாம் வைஷ்ணவாய ஸம்ஜ்ஞாம்' என்றும், இவர் தாமே யருளிச் செய்யும்படி உபயவேதாந்தாசார்யர் என்கிற திருநாமத்தைச் சாற்றினதும் அநுஸந்திக்கப்பட்டதாகிறது. 'ஸநாமாசார்யநாமேவ விதாநம் ஸம்ஜ்ஞயா' என்றும், பஞ்சஸம்ஸ்கார காலத்தில் ஆசார்யன் தாஸ்யநாமம் சாத்தவேண்டும் என்றும் சொல்லுகிற ஶாஸ்த்ரார்த்தங்களை அநுஸந்தித்துத் தங்களிருவருக்கும் நாமகரணம் செய்தருளிய பிதாவொருவராகையினால் ஜ்யேஷ்ட ப்ராத்ருபாவத்தை இந்த ஆழ்வாரிடத்தில் அநுஸந்திக்கும்படி தெரிவிக்கப்பட்டதாகிறது. 'தொண்டரடிப்பொடி' என்பதினால் தொண்டர் - பாகவதர்களுடைய; அடி - திருவடிகளிலிருக்கிற, பொடி - தூள் என்றர்த்தமாகை யினால் பக்தாங்க்ரிரேணு என்கிற இவருடைய திருநாமம் விவரிக்கப்பட்டதாகிறது இவருக்கு விப்ரநாராயணரென்று திருநாமமிருக்கச் செய்தே 'தொண்டரடிப்பொடி' என்று குணக்ருத நாமத்தை ப்ரயோகித்தது இதினாலேயே இவ்வாழ்வாருடைய பாகவத ப்ரதிபத்தி முதலிய ஸாரமான குணங்கள் விவக்ஷிதமாகின்றன என்கிற திருவுள்ளத்தினால். 'மழிசைவந்தசோதி' என்பதினால் இவ்வாழ்வார் பெரும்புலியூர் யாகஶாலையில் எழுந்தருளினதைக்கண்டு அங்கேயிருந்த ருத்விக்கு முதலியவர்கள் பரிபவம் பண்ண அப்பொழுது யஜமானனுடைய ப்ரார்த்தனையினால் அப்ராக்ருத அவதார வைபவத்தைக் காண்பிக்கத் திருவுள்ளம்பற்றித் தேஜோரூபமான திவ்யமங்கள விக்ரஹத்தோடே ஸேவை ஸாதிக்க சீக்கிரம் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. அன்றிக்கே, இவர் சக்ரத்தாழ்வாருடைய அவதாரமாக ப்ரஸித்தராகையினாலே தேஜோமயமான அவ்வவதார வைபவத்தைக் கீழ்த்து இப்படிச் சேர்க்கப்பட்டதாகவுமாம். திருமங்கையாழ்வாருடைய லோகஸாஸ்த்ர விலக்ஷணமான குணங்களை ப்ரகாரத்தை அருளிச் செய்கிறார் — 'வையமெலாம்' என்றாரம்பித்து. லோகத்தில் மஹர்ஷி

களுமுள்பட தந்தாமுக்கு வேதாந்தார்த்தம் ப்ரகாசிப்பதற்காக ப்ரணிபாத பரிப்ரஶ்நாதிகளைச் செய்து அஞ்ஜலிபந்தம் செய்து கொண்டும் ஸர்வஸ்வதானம் பண்ணிக்கொண்டும் நிற்கிறார்கள். இது மைத்ரேய ஜாநஶ்ருத்யாதி வ்ருத்தாந்தங்களில் ப்ரஸித்தம். இவரொருவரே லோகத்தில் ஸகலருக்கும் வேதாந்தார்த்தம் ப்ரகாசிப்பதற்காக வாளும் வேலுமேந்திக்கொண்டு ஆசார்யனாகிய ஶ்ரிய:பதியினிடத்தில் ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணிக்கொண்டு ஸம்யக் ஜ்ஞாநோபதேஶத்தைப் பெற்றார். இது ஒரு சிஷ்ய வைலக்ஷண்யமிருக்கும்படி என்று விஸ்மிதராகிறார். அதாவது லோகோஜ்ஜீவனார்த்தம் பகவந் நியமனத்தினாலே ஶார்ங்கமென்னும் நித்யஸூரியின் அம்ஶமாக அவதரித்த இவர் திறத்தில் எம்பெருமான் லோகோஜ்ஜீவன புத்த்யா இப்படி உபதேஶம் செய்தார். ஆகையினாலிது உபபந்நமென்று திருவுள்ளம் 'மங்கையர் கோன்' என்பதற்கு 'மங்கை' என்பது இவ்வாழ்வார் அவதரித்த திருநகரிக்குப் பெயராகையினால் அதில் வஸிப்பவர் மங்கையர், அவர்களுக்கு இவர் நிர்வாஹகர் என்று ஸ்ரீ ஸாராஸ்வாதினியில் வ்யாக்யாதம். இங்கு 'மறை விளங்க' என்று விசேஷித்து நிர்தேஶித்திருப்பது 'யஊஷேஸ்ஷேஶேஷேண' இத்யாதிகளிற்படியே ஸர்வ வேதாந்தார்த்தங்களையும் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கும் திருமந்திரத்தின் அர்த்தத்தை இவர் ஸர்வேஶ்வரன் பக்கல் க்ரஹித்து, 'வாடினேன்வாடி' என்று உபக்ரமித்து பரக்க நிரூபித்தருளின விஶேஷ உபகாரத்தைத் தெரிவிக்கிறது.

இவர்களில் பொய்கையாழ்வார் காஞ்சீபுரத்தில் யதோக்தகாரி ஸந்நிதிமுன் இருக்கும் தாமரைத் தடாகத்தில் தாமரைப் புஷ்பத்தில் ஸ்ரீ பாஞ்சஜந்யாம்ஶராய் த்வாபரயுகம், 862901-வதான ஸித்தார்த்தி-ளு, ஐப்பசி-மீ, சுக்லபக்ஷம் அஷ்டமி, செவ்வாய்க்கிழமை கூடின திருவோண நக்ஷத்திரத்தில் திருவவதரித்தருளினார். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது முதல் திருவந்தாதி. இது நூறுபாட்டு அடங்கியது. பூதத்தாழ்வார் திருக்கடல்மல்லையில் குருக்கத்தி மலரில் த்வாபரயுகம் 862901-வதான ஸித்தார்த்தி-ளு, ஐப்பசி-மீ, சுக்லபக்ஷம், நவமி, புதன் கிழமை கூடின அவிட்ட நக்ஷத்திரத்தில் ஸ்ரீ கதாம்ஶராய் திருவவதரித்தருளினார். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது இரண்டாம்திருவந்தாதி. இது நூறுபாட்டு அடங்கியது.

பேயாழ்வார் மைலாப்பூரில் ஒரு திருக்கிணற்றில் செவ்வல்லிமல ரில், த்வாபரயுகம் 862901-வதான ஸித்தார்த்தி-௵, ஐப்பிசி-மீ, சுக்லபக்ஷம், தசமி, வியாழக்கிழமை கூடின சதய நக்ஷத்திரத்தில் ஸ்ரீ நந்தகாம்ஸராய் திருவவதாரம் செய்தருளினர். இவர் அரு ளிச்செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது மூன்றும் திருவந்தாதி. இது நூறு பாட்டு அடங்கியது. நம்மாழ்வார் திருக்குருகூரில் கலி 43-வது நாள், ப்ரமாதி-௵, வைகாசி-மீ, பௌர்ணமி, வெள்ளிக் கிழமை கூடிய விசாக நக்ஷத்திரத்தில் ஸ்ரீ ஸேநேஸாம்ஸராய்க் காரியாருக்கும் உடையநங்கையாருக்கும் திருக்குமாரராகத் திருவ வதரித்தருளினர். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் நான்கு. அவையாவன—திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன. இவை முறையே நூறு, ஏழு, எண்பத் தேழு, ஆயிரத்து நூற்றிரண்டு பாட்டுகள் அடங்கியவை. பெரி யாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் கலி 47-வதான க்ரோதந-௵ ஆனி-மீ, சுக்லபக்ஷம், ஏகாதசி, ஞாயிற்றுக்கிழமை கூடின ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் ஸ்ரீ கருடாம்ஸராய் ப்ராம்மண குலத்தில் பதுமை யாருக்கும் முகுந்தாசாரியருக்கும் குமாரராகத் திருவவதாரம் செய்தருளினர். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் ஒன்று. அதா வது பெரியாழ்வார் திருமொழி. இது நானூற்றெழுபத்து மூன்று பாட்டு அடங்கியது. இவருடைய குமாரத்தியான ஆண் டாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் துளஸீ வனத்தில் கலி 98-வதான நள-௵, ஆடி-மீ, சுக்லபக்ஷம் சதுர்த்தி, செவ்வாய்க்கிழமை கூடின பூர நக்ஷத்திரத்தில் பூமிப்பிராட்டி அம்ஸமாய் திருவவதரித்தருளி னள். இவளருளிச் செய்த ப்ரபந்தம் இரண்டு. அவையாவன திருப்பாவை, நாச்சியார் திருமொழி. இவை முறையே முப்பது, நாற்றுநாற்பத்து மூன்று பாட்டுகள் அடங்கியவை. குலசேகராழ் வார் கொல்லி நகரில் கலி 28-வதான பராபவ-௵, மாசிமீ, சுக்ல பக்ஷம், துவாதசி, வெள்ளிக்கிழமை கூடின புனர்வஸு நக்ஷத் திரத்தில் ஸ்ரீ கௌஸ்துபாம்ஸராய் சந்திரகுலத்தரசராகிய த்ருட வ்ரதருக்குப்புத்ரராகத் திருவவதரித்தருளினர். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது பெருமாள் திருமொழி. இது நூற்றைந்து பாட்டு அடங்கியது. திருப்பாணாழ்வார் திரு உறையூரில் செந்நெற்பயிரில் கலி 343-வதான துன்மதி-௵, கார்த் திகை-மீ, க்ருஷ்ணபக்ஷம், த்விதியை, புதன்கிழமை கூடின

ரோகிணீ நக்ஷத்திரத்தில் ஸ்ரீவத்ஸாம்ஸராய் திருவவதரித்தருளி ஞர். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் ஒன்று. அதாவது அமல ஞதிப்பிரான். இது பத்து பாட்டு அடங்கியது. தொண்டரடிப் பொடியாழ்வார் திருமண்டங்குடி என்கிற க்ராமத்தில கலி 289-வதான ப்ரபவ-ளுப மார்கழி-மீ, க்ருஷ்ணபக்ஷ, சதுர்தசி, செவ் வாய்க்கிழமை, கூடின கேட்டை நக்ஷத்திரத்தில் ஸ்ரீவநமாலிகாம் ஸராய் திருவவதரித்தருளிஞர். இவர் அருளிச் செய்த ப்ரபந் தம் இரண்டு. அவையாவன திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, இவை முறையே நாற்பத்தைந்து, பத்து பாட்டுகள் அடங்கியவை. திருமழிசையாழ்வார் திருமழிசையில் த்வாபரயுகம் 862901-வதான ஸித்தார்த்தி-ளுப, தை-மீ, க்ருஷ்ணபக்ஷம், ப்ரதமை, ஞாயிற்றுக்கிழமை கூடின மகா நக்ஷத்திரத்தில் பார்க்கவருக்கும் கநகவதியாருக்கும் குமாரராகத் திருவவதாரம் செய்தருளிஞர். இவரருளிச் செய்த ப்ரபந்தம் இரண்டு. அவையாவன திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி. இவை முறையே நூற்றிரு பது, தொண்ணூற்ருறு பாட்டு அடங்கியவை. திருமங்கையாழ் வார் திருவாலி திருநகரி என்கிற திருக்குறையலூரில் கலி 398-வதான நள-ளுப, கார்த்திகை-மீ, பௌர்ணமி, வியாழக்கிழமை கூடின க்ருத்திகா நக்ஷத்திரத்தில் ஸ்ரீஸார்ங்காம்ஸராய் நீலன் என் பவருக்குக் குமாரராக திருவவதாரம் செய்தருளிஞர். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் ஆறு. அவையாவன பெரிய திரு மொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திரு மடல் பெரிய திருமடல், திருவெழுகூற்றிருக்கை. இவை முறையே ஆயிரத்தெண்பத்து நாலு, இருபது, முப்பது, நாற்பது, எழுபத் தெட்டு, ஒன்று பாட்டு அடங்கியது. இதற்கடுத்த பாட்டில் அரு ளிச் செய்யப்படும் மதுரகவியாழ்வார் திருக்கோளூரில் த்வாபரயுகம் 863879-வதான ஈஸ்வர-ளுப, சித்திரை-மீ, சுக்லபக்ஷம், சதுர்த் தசி, வெள்ளிக்கிழமை கூடின சித்திரை நக்ஷத்திரத்தில் ஸ்ரீ வைந தேயாம்ஸராய் திருவவதரித்தருளிஞர். இவர் அருளிச் செய்த ப்ர பந்தம் ஒன்று. அதாவது கண்ணிநுண் சிறுத்தாம்பு. இது பதி ஞெரு பாட்டுக்களடங்கியது. கீழ்க்கூறிய இருபத்துமூன்று ப்ரபந் தங்களும், ஸ்ரீபாஷ்யகாரர் விஷயமாய் திருவரங்கத்தமுதஞர் திருவாய்மலர்ந்தருளிய இராமாநுஜ நூற்றந்தாதி என்கிற நூற் றெட்டுப் பாட்டுக்களும் சேர்ந்து ப்ரஸித்தமாக நாலாயிரம்

என்று வழங்கிவரும் திவ்யப்ரபந்தம். இவ்வாழ்வார்களின் வைபவம், இவர்கள் க்ரந்தங்களின் வைபவம் முதலியவைகள் க்ரந்தம் விஸ்தரிக்கும் என்று எண்ணி இங்கு எழுதப்படவில்லை. மூவாயிரப்படி குருபரம்பரை, ஸ்ரீபார்க்கவ உபபுராணம், ப்ரபந்தஸாரம், ஆழ்வார்கள் வைபவம் என்றச்சிடப்பட்டுவரும் க்ரந்தம் முதலியவைகளில் பரக்கக் கண்டுகொள்வது.

இப்படித் தனித்தனியே ஆழ்வார்களின் குணதிஸயங்களை அநுஸந்தானம் செய்து இவ்வாழ்வார்களுடைய சேர்த்தியின் போக்யதையை அநுஸந்திக்கிறார்:— 'என்றிவர்கள்' என்று. அன்றிக்கே, இவர்களுடைய குணநுஸந்தானத்தி னுண்டான ப்ரீதிப்ரகர்ஷத்தினால் மறுபடியும் அநுஸந்திக்கிறாராகவுமாம். அப்படியே ஒரு ஹாரத்திலிருக்கும் ரத்னங்களின் குணங்களைத் தனித்தனியே யனுபவித்து ஹாரமாய்க் கோர்த்துச் சேர்த்தனுபவிக்கும்பொழுது உண்டாகும் ஸோபை அந்யாத்ருஸமாயிருக்குமிறே. குருபங்க்தியும், 'ஏஷ தீ ஸ்ரீவத்ஸ ஹாரயஷ்டி: விஸ்வபாதுநாம ஸம்ஜ்ஞயஜ்ஞா விஹாதி' என்று இவர் தம்மாலேயே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீதேவநாதன்ஸந்நிதியில் திருவத்யயன உத்ஸவத்தில் திருமொழித்திருநாளில் ஆழ்வார்கோஷ்டியை ஸேவித்தவர்களுக்கு இந்த ஸமுதாயாநுஸந்தானத்தின் ஸ்வாரஸ்யம் தெரியவரும். 'மகிழ்ந்துபாடும்' என்பதற்குப் பகவதநுபவத்தினுண்டாகிய ஆநந்தம் உள்ளடங்காமல் அதினுடைய பரீவாஹமாய்க்கொண்டு அவர்கள் பாடியவைகளாகிற என்றர்த்தம். ஒரு க்ரௌஞ்சபக்ஷியை வேடனடிக்கப் பெண் பக்ஷியின் ஸோகத்தைக் கண்டு தாம் காருணிகராகையினால் ஸோகம் மிகுத்து அதினாலே ஸோகவேக ஸமீரிதராய்ச் சொல்லிய வார்த்தை ஸ்லோகமாய் ஸ்ரீராமாயணத்திற்கு ஆரம்பமாக நின்றது. அதைப்போலன்றியே பகவதனுபவத்தினாலுண்டான ஆனந்தத்தின் பரீவாஹங்களான ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகள் போக்யதமமென்பது கைமுத்யந்யாயத்தால் [illegible]. 'ஸோக: ஸ்லோகத்வமாகத:' [illegible] [illegible] என்று ப்ரந்த்யாதி ஸ்லோகங்களைத் தாத்பர்யசந்த்ரிகையில் அருளிச்செய்யப்பட்டிருப்பது இங்கநுஸந்தேயம். 'செய்ய' என்பதற்கு 'இவ்வர்த்தங்களை

விதாரஜநத்தோடு ஸவரைையுமெளிதாகத் தெளிவிக்குமவற்றில்' என்றிவர் தாமே யருளிச்செய்தபடியே தன்னர்த்தங்களை எளிதில் தெளிவிக்குமதான என்றர்த்தம். 'தமிழ் மாலைகள்' என்பதற்குப் பகவான் திருவடிகளில் புஷ்பங்களைப்போல் ஸமர்ப்பிக்கக்கூடியவைகளாயும், பகவானுக்கு ஸ்ப்ருஹணீயங்களுமான தமிழ்ப்ரபந்தங்கள் என்று தாத்பர்யம், 'கலிகன்றி யொலிமாலை கொண்டு தொண்டர் தூமாண்சேர் பொன்னடிமேல் சூட்டுமின்னும் துணைக்கையால் தொழுது நின்றே' என்றாரிறே திருமங்கையாழ்வார். 'செய்ய சுடராழிபானடிக்கே சூட்டினேன் சொன்மாலை', 'என்னுடைச் சொற்களென்னும் தூயமாமாலைகொண்டு சூட்டுவன் தொண்டனேனே' இத்யாதிகள் இங்கு விவக்ஷிதம். 'நாம்' என்பதற்கு இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளை அத்யயனம் செய்யப்பெற்ற பாக்யாதிஶயத்தைத் திருவுள்ளம்பற்றி 'போற்றி யென்றே கைகளாரத் தொழுது சொன்மாலைகள் ஏற்ற நோற்றேற்கினி யென்ன குறை யெழுமையுமே' இத்யாதிகளிற்படியே தம்மைக் கௌரவித்து அருளிச்செய்கிறார் என்று தாத்பர்யம், அன்றிக்கே தம்மையும் தம்மோடொக்க ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளை அப்யஸித்த பாக்யஶாலிகளையும் சேர்த்துக்கொண்டு அருளிச்செய்கிறாராகவுமாம். 'தேளியவோதி' என்பதற்கு வேதத்தைப் போல இதுவும் ஆசார்யோச்சாரணாநுச்சாரணரூப அத்யயனத்தினாலே க்ரஹிக்கவேண்டும் என்றும், அந்த அத்யயனவிதியினாலேயே ஸித்தமென்றும் தாத்பர்யம் 'தேளிய' என்பதற்கு அர்த்தஜ்ஞானபர்யந்தமாக அத்யயனம் செய்து என்று தாத்பர்யம். 'தேளியாத' என்பதற்கு இதற்கு முன் அநேக ந்யாயங்களினாலும் உபப்ரஹ்மணங்களினாலும் நிஶ்சயம் பண்ணப்படாத என்று தாத்பர்யம். 'மறைநிலங்கள் - வேதத்தின் பூமிகளை. இங்கு 'நில' மென்றது தாத்பர்யார்த்தத்தை, அதாவது - தாத்பர்ய பர்யவஸான பூமியைச் சொல்லுகிறது. 'தேளிகின்றோம்' என்பதற்கு அஜ்ஞானஸம்ஶயவிபர்யயங்களற நிஶ்சயம் செய்கின்றோம் என்று தாத்பர்யம். வேதங்களில் அக்னீந்த்ராதி தேவதாராதனரூபமாகக் கர்மங்களும், ஜகத்காரணத்வாதி ஸ்வபாவங்களை யுடையதாகப் பரமாத்மாவும்,ப்ரதிபன்னமாயிருந்தாலும், அவரவர் தாமதமது, 'திருவில்லாத் தேவரைத் தேறேல்மின்' 'இருக்கண்டேன்' இத்யாதி ஸ்ரீஸூக்திகளின் அர்த்தஜ்ஞானத்

தினல் ஸர்வகர்மஸமாராத்யன் ஶ்ரிய:பதி என்கிற அர்த்தம் நிஶ்சிதமாயிற்று. உபநிஷத்பாகங்களில் ‘அதுவே அக்னி’ என்றர்த்தமுள்ள வாக்யமுதலாகவாரம்பித்துச் சொல்லும் வாக்யங்கள் ஶ்ரிய:பதி ஸர்வாந்தர்யாமி என்பதைச் சொல்லுகின்றன என்கிற அர்த்தம் நிர்ணயபர்யந்தமாயிற்று என்று தாத்பர்யம். ‘நாம் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே’ என்றந்வயம், இதினல் ‘வீண்பெரிய விரி திரை நீர் வையத்துள்ளே வேதாந்த வாரியனென்றியம்ப நின்றோம்’ என்றிவர் அருளிச்செய்திருக்கிறபடியே ஸர்வேஶ்வரனாய் ஸத்யஸங்கல்பனான ஸ்ரீரங்கநாதனால் அனுக்ரஹிக்கப்பட்டு ஸர்வலோகங்களும் அப்யுபகமம் பண்ணும்படியான உபயவேதாந்தாசார்யத்வ பிருதாங்கிதரான தமக்கு இவ்வாழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளின் அர்த்தஜ்ஞானத்தினலே வேதாந்த தத்வார்த்தங்களை அறியவேண்டிற்றாகில் மற்றையவர்களுக்கு இது கைமுதிகந்யாயஸித்தம் என்பது திருவுள்ளம்.

இப்படி ஆழ்வார்கள் விஷயமாகப் பொதுவாக மங்களாசாஸனம் செய்துவிட்டுப் பிறகு குருபக்தி அவஶ்யம் செய்யவேண்டுமோ? குருபக்தி செய்யாமற்போனபோதிலும் ‘[illegible]’ என்றும், ‘[illegible]’ என்றும் சொல்லுகிறபடியே பகவத்பக்தி, ஸாத்விகர், முதலியவைகளினல் ஜ்ஞானம் ஸம்பாதித்து மோக்ஷம் பெறலாமே என்னில் இதற்கு ஸமாதானமாக ஆசார்ய பக்தியே செய்யவேண்டுமென்கிற விஷயத்தில் ப்ரமாணங்களை உதாஹரிக்கத் திருவுள்ளம் பற்றி, ‘[illegible]’ என்கிற ப்ரமாணத்தை அனுஸரித்து தாத்பர்யமாகிற ப்ரமாணத்தை ஸ்ரீமதுரகவிகளின் அனுஷ்டான முகத்தாலே காட்டியருளுகிறார்— ‘இன்பத்தில்’ என்றாரம்பித்து. இத்தால் இப்பொழுது நிரூபிக்கப்படுகிற குருபக்தி ஆவஶ்யகம் என்கிற விஷயத்திற்கு அனுஷ்டானத்தினலும் க்ரந்தமுகத்தினலும் உபகாரம் செய்தருளினவராகையினலே ப்ரதான ப்ரவர்த்தகரான ஸ்ரீமதுரகவியாழ்வார் விஷயத்தில் ஸ்துதிரூபமான மங்களாசாஸனம் செய்தருளினதாயிற்று. அன்றிக்கே ‘இன்பத்தில்’ என்றாரம்பிக்கும் பாட்டும் இப்படிப்பட்ட குருஸ்துத்யாத்மக மங்களாசாஸனரூபம், ‘[illegible]’ என்றாரம்பித்து [illegible]

இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும்பேற்றி
லிகழாதபல்லுறவி லிராகமாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக்கத்திற்
றத்துவத்தை உணர்த்துதலிற் றன்மையாக்கில்
அன்பர்க்கே யவதரிக்கு மாயனிற்க
வருமறைக டமிழ்செய்தான் றளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தொல்வழியே நல்வழிக டுணிவார்கட்கே. 2

மாகவுமாம். இப்படி இவர் ப்ரதானமான அர்த்தத்திற்கு ப்ர தாஞேபகாரகரானதுபற்றியே இவர் விஷயமாகத் தனித்து ஒரு மங்களம் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் ஸூசிதமாயிற்று என்று நிர்வஹிப்பாருமுண்டு. இப்படி ஆசார்யபக்தி செய்ய வேண்டியது அவஶ்யமானாலும், மோக்ஷத்திற் குபாயமாகிய பக்தி ப்ரபத்திகளுக்கு உபயுக்தமான ஜ்ஞானப்ரதத்வமாகிய ஆகா ரத்தைக்கொண்டு தானே பக்தி செய்யவேண்டும் என்கிற ஶங் கையை நிராகரித்து ப்ராப்யத்வப்ராபகத்வாதி ஆகாரத்தோடு பக்தி செய்யவேண்டுமென்று நிரூபிப்பதற்காக 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற இந்த ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த ப்ரபந்தத்தின் பத்துப் பாட்டுக்களின் அர்த்தங்களைப் பத்துப் பதங்களினால் ஸங்க்ரஹித்தருளுகிறார்— 'இன்பத்தில்' என்றாரம்பித்து.

[ப-ரை] இன்பத்தில் - ஆநந்தத்தில், இறைஞ்சுதலில் - ஆஶ்ரயிக்கவேண்டியதில், இசையும் - அங்கீகரிக்கக்கூடியதான, பேற்றில் - புருஷார்த்தத்தில், இகழாத - ஶாஸ்திரங்களில் நிந் திக்கப்படாத, அன்றிக்கே உபேக்ஷியாத, அதாவது ஒரு காலத் திலும் விடாத, பல்லுறவில் - பலவிதமான பந்துத்வத்தில், இராகம் - இதர விஷயங்களில் ஆசையை, மாற்றில் - மாற்றுவ தில், தன்பற்றில் - தானே வந்து விஷயீகரிப்பதில், வினைவிலக் கில் - பாபத்தைப் போக்குவதில், தகவு - க்ருபையின், ஓக்கத் தில் - உத்கர்ஷத்தில், தத்துவத்தை - தத்வங்களை, உணர்த்துத லில் - தெளிவிக்கும் விஷயத்தில், தன்மையாக்கில்-தன்னுடைய ஸ்வபாவத்தை உண்டாக்குவதில், அன்றிக்கே ஜீவாத்மாக்களு டைய ஸ்வாபாவிகமான ஸ்வரூபத்தை உண்டாக்குவதில் என்றாக

வுமாம், அன்பர்க்கே - தன்னிடத்தில் பக்தி செய்கிறவர்களுக்கா கவே, அவதரிக்கும் - அவதரிக்குமவனை, அதாவது கீழ்ச்சொல் லிய பத்து விதமான கார்யங்களைத் தன் பக்தர்களுக்குச் செய்வதற் காகவே அவதரித்த, ஆயன் - ஸ்ரீக்ருஷ்ணன், நிற்க - ஸித்தஸங் கல்பனாயிருக்க, அருமறைகள் - துர்ஜ்ஞேயங்களான வேதங்களை, தமிழ் செய்தான் - த்ரமிட ப்ரபந்தங்களாகச் செய்தருளிய ஆழ்வா ருடைய, தாளே கொண்டு - திருவடிகளையே ஆஸ்ரயித்து, துன் பற்ற - தோஷமில்லாதவரான. மதுரகவி - ஸ்ரீமதுரகவியாழ்வார், தோன்றக்காட்டும் - ஸர்வருக்கும் ப்ரகாஶமாகும்படி காட்டின, தொல்வழி - அநாதியான ஆசார்யபக்தியாகிற மார்க்கமே, துணி வார்கட்கு - விஸ்வாஸமுடையவர்களுக்கு, அல்லது மோக்ஷோபாய மனுஷ்டிக்கவேண்டுமென்று அதில் ப்ரவ்ருத்திப்பவர்களுக்கு, நல் வழிகள் - நல்ல வழிகளான பக்தி ப்ரபத்திகள், 'கார்யே கார ணோபசார:' என்கிற ந்யாயத்தினால் பக்தி ப்ரபத்திகளுக்குக் காரணமும், அவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடிய யோக் யதை யுண்டாக்கக்கூடியதும், அவைகளை வ்ருத்தி செய்யக்கூடி யதுமான ஆசார்யபக்தியை இதுவே பக்தி ப்ரபத்திகள் என்று ஔபசாரிகமாகச் சொல்லியிருக்கிறது.

பகவத்விஷயத்தில் அனுஸந்திக்கவேண்டிய ஆகாரங்களெல்லா வற்றையும் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற ப்ரபந்தரூப மாய் ஆசார்யன் விஷயத்தி லனுஸந்தித்தார் என்பதை வெளியிடு கிறது 'இன்பத்தில்' என்றாரம்பிக்கும் இந்தப் பாட்டு. 'இன் பத்தில்' என்பதினால் பகவத் விஷயம் ஆனந்தாவஹம் என்று 'எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலை கோனேயாகி நின்றொழிந்தான்' என்றும், 'தேனும் பாலும் கன் னலு மமுதுமாகித் தித்திப்ப யானு மெம்பிரானையே யேத்தி னேன்' என்றும் ஆழ்வார் அனுஸந்தித்ததுபோல அந்த ஆநந்தா வஹத்வத்தை 'இவர்' என்னப்பனில் நண்ணித் தென் குருகூர் நம்பி யென்றக்கால் அண்ணிக்கு மமுதூறும்' என்றாசார்யன்விஷ யத்தி லனுஸந்தித்தார் என்பது காட்டப்படுகிறது. 'இறைஞ்சு தலில்' என்பதினால் முமுக்ஷுக்களால் ஆஸ்ரயிக்கவேண்டிய விஷயம் ஸ்ரிய:பதியே என்று 'கண்ணனல்லா லில்லைகண்டீர் சரண்' இத்யாதிகளான அநேக இடங்களில் ஆழ்வாரால் நிஷ்கர்ஷிக்கப்பட்டதை இவர் ஆசார்யன் விஷயத்தில் 'மேவி

னேனவன் பொன்னடி மெய்ம்மையே' என்று அனுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'இசையும் பேற்றில்' என்பதி ஞல் வேறொரு காரணத்தினாலல்லாமல் ஸ்வயமாக ஒப்புக்கொள்ள வேண்டிய புருஷார்த்தம் ஸ்ரிய:பதியின் திருவடிகளை என்று 'தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே', 'நின்செம்மா பாதபற் புத்தலை சேர்த்தொல்லை கைம்மாதுன்பம் கடிந்தபிரானே அம்மா வடியேன் வேண்டுவதீதே' இத்யாதிகளில் அருளிச்செய்ததை இவர் அப்படி ஸ்ரிய:பதி திருவடி தனக்கு உபேயமாவதும் ஆழ் வாருகந்தருளியதாகையினுல் ஆழ்வார் திருவடிகளே தமக்கு ஸ்வத ஏவ புருஷார்த்தமென்று 'தேவபிரானுடைக் கரியகோலத் திரு வுருக்காண்பன் நான் பெரியவண் குருகூர் நகர்நம்பிக்காளுரியனுய்' என்று அனுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'இக ழாத பல்லுறவில்' என்பதினுல் 'தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாயவை யல்லனுய்', 'என்னைப்பெற்ற அத்தாயாய்த் தந் தையா யறியாதன வறிவித்த அத்தா' என்றிவை முதலிய ஸ்ரீஸூக்திகளில் ஒருநாளு மழியாத ஸம்பந்தத்தையுடையவன் ஸ்ரிய:பதியே என்று நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தத்தை இவர் ஆசார்யன் விஷயத்தில் 'அன்னையாயத்தனுய்' என்றனுஸந்தித் தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'இராகம் மாற்றில்' என் பதினுல் 'கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலும்' இத்யாதிகளில் இதர புருஷார்த்தங்களில் ருசியை நிவ்ருத்திப்பவன் ஸ்ரிய: பதியே என்கிற அர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் விஷயத்தில் 'செம்பொன்மாடத் திருக்குருகூர் நம்பிக்கன்பனுய் அடியேன் சதிர்த்தேன்' என்றனுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படு கிறது. 'தன்பற்றில்' என்பதினுல் தானே விஷயீகரித்துத் தன்னுடைய குணங்களை ஸ்தோத்திரம் பண்ணுமளவாக க்ருபை பண்ணுவது ஸ்ரிய:பதியே என்று 'ஆமுதல்வனிவனென்று தற்றேற்றி என் நாமுதல் வந்து புகுந்து நல்லின் கவி தூமுதல் பத்தர்க்குத் தான் தன்னைச்சொன்ன என் வாய் முதலப்பனை' என்றும், 'யானுய்த் தன்னைத் தான் பாடி' என்றும், நிஷ்கர் ஷிக்கப்பட்ட அர்த்தத்தை இவர் ஆசார்யன் விஷயத்தில் 'இன்று தொட்டுமெழுமையு மெம்பிரான் நின்றுதன் புகழேத்தவருளி ஞன்' என்றனுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'வினை விலக்கில்' என்பதினுல் 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி'

என்று ஸங்கல்பிப்பது ஶ்ரிய:பதியே என்று ‘என்னைக்கொண்டு என் பாவம் தன்னையும் பாறக்கைத்து’, ‘சார்ந்த விருவல்வினைகளும் சரித்துமாயப் பற்றறுத்து’ இத்யாதிகளில் நிஷ்கர்ஷித்த வர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் திறத்தில் ‘காரிமாறப்பிரான் பண்டை வல்வினை பாற்றியருளினான்’ என்றனுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. ‘தகவோக்கத்தில்’ என்பதினால் ‘எதிர்சூழல் புக்கெனைத்தோர் பிறப்பும் எனக்கேயருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால்’, ‘அருளாழியம்மானே’ இத்யாதிகளில் அபார கருணாவான் ஶ்ரிய:பதி என்றருளிச்செய்த அர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் திறத்தில் ‘அருள்கொண்டாயிர மின்தமிழ்ப் பாடினா னருள்கண்டீ ரிவ்வுலகினில் மிக்கதே’ என்றனுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. ‘தத்துவத்தை யுணர்த்துதலில்’ என்பதினால் ‘மயர்வறமதிநல மருளினன்’, ‘அவ்வுடை யுணர்வுகொண்டுணர்ந்தே’ இத்யாதிகளில் தத்வஜ்ஞானோத்பாதனம் பண்ணுவது ஶ்ரிய:பதி என்று நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் திறத்தில் ‘மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான்’ என்றனுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. ‘தன்மையாக்கில்’ என்பதினால் ‘தன்மைபெறுத்தித் தன் தாளிணைக் கீழ்க் கொள்ளுமப்பன்’ இத்யாதிகளில் தன்னுடைய ஸ்வபாவத்தை யுண்டாக்குமவன் ஶ்ரிய:பதி என்றருளிச்செய்த அர்த்தத்தை இவர் தன் ஆசார்யன் திறத்தில் ‘செயல்நன்றாகத் திருத்திப்பணி கொள்வான்’ என்றனுஸந்தித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. இப்படி இந்தப் பத்துவிதமான உபகாரங்களைப் பகவான் தன்னை யாஶ்ரயித்தவர்களுக்குச் செய்கிறான் என்கிற விஷயத்தில் ப்ரமாணமாக ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளே கீழ் உதாஹரிக்கப்பட்டன. ‘[illegible]’ என்று இவர் தாமே இந்தத் திருவாய்மொழியில் ஶ்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணாதிகளில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தம் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது என்று திருவுள்ளம்பற்றி ப்ரதிபத்தினால் ப்ரத்யாதிகளிலும் இவ்வர்த்தம் ஸங்க்ரஹீதமானாலும் அந்த ப்ரமாணங்களை உதாஹரியாதது

க்ரந்தவிஸ்தரபயாத் என்பது அறியத்தக்கது. இப்படிப்பட்ட பத்து விதமான உபகாரத்தையும் ஆசார்யன் ஶிஷ்யனுக்குப் பண்ணுகிறான் என்னுமர்த்தத்தை இவர் தாமே ஸ்ரீந்யாஸவிம்ஶதியில் ஆசார்யலக்ஷணத்தை நிரூபிக்குமிடத்தில் 'ஸஜ்ஞாநயாநு ஶோயாஸ' என்கிற ஶ்லோகத்தில் அருளிச்செய்திருப்பதற்கு இந்த க்ரந்தமே மூலமென்பது ஸூசிதம். இவ்விடத்தில் 'இன்பத்தில்' என்பதை 'நியதரஸதயா' என்றும், 'இறைஞ்சுதலில், இசையும் பேற்றில், இகழாத பல்லுறவில்' என்பதை 'நிதரு ஶேஷிகுவியோமாஸ' என்றும், 'இராகம் மாற்றில், தன்பற்றில்' என்பதை 'ஶிவருசரூஷிவூஹாவாஸ' என்றும், 'தகவோக்கத்தில்' என்பதை 'நிஷ்தருஹரநர்ஶவஸூாஸ' என்றும், 'விளைவிலக்கில்' என்பதை 'ஸஜ்ஞாநயாநுஶோயாஃவவஸிஹரணாஸ' என்றும், 'தத்துவத்தை யுணர்த்துதலில்' என்பதை 'ஜநூவூயூம்ஸிஜநூவூஃமஸிஃதயா' என்றும், 'தன்மையாக்கில்' என்பதை 'ஸூதுவர்ஹூாவஹக்ஷாஸ' என்றும் அங்கு ஸங்க்ரஹித்தருளியிருக்கிறார். 'அன்பர்க்கே' இத்யாதி ஶேஷம் 'ஸூவாயஃ' இத்யாதி ம்ருதியினால் ஸூசிப்பிக்கப்படுகிறது. ஆக இத்தால் 'தேவதையைப் போலவே ஆசார்யனை உபாஸனம் செய்யவேண்டும்' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்தின் தாத்பர்யம் மதுரகவி யாழ்வாரால் அனுஷ்டானத்திலும் ப்ரபந்தரூபத்திலும் வ்யக்தமாக்கப்பட்டது என்பது தெரிவிக்கப்படுகிறது. 'அன்பர்க்கே' என்பதற்கு இவ்விதமான உபகாரங்களைப் பக்தர்களுக்காகச் செய்யவே என்று தாத்பர்யம். 'அவதரிக்கும் ஆயன்நிற்க' என்பதினாலே "வரித்ராணாய ஸாயூநாம்" என்பதே அவதாரத்தின் முக்ய ப்ரயோஜனம், துஷ்க்ருத்விநாஶாதிகள் நடுவில் நேரும் அவாந்தர ப்ரயோஜனம் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'அருமறைகள் தமிழ்செய்தான்' என்பதற்கு 'வேஃாநாமூஹாஷாவஶேஷ உஃயாஸ ஶ்ரேயஸே ஶேஷிநாம யஃ' என்கிறபடியே 'தமிழ்' என்கிற பதத்தை 'மறைகள்' என்பதோடு அந்வயித்துக்கொண்டு த்ரமிடவேதாந்தத்தை ப்ரவசனம் செய்தவரான என்று தாத்பர்யம். அன்றிக்கே ஒருவராலுமறிய

முடியாக வேதார்த்தங்களைத் தமிழ் பாஷையாக ப்ரவசனம் செய்தவரான என்றும் தாத்பர்யமாகவுமாம். 'வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சங்களை ஸர்வருக்கு உபயோகிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக்காட்டியும்' என்றிவர் தம்மாலேயே அருளிச்செய்யப்பட்டது இங்கனுஸந்தேயம். 'தானே கொண்டு' என்கிற இடத்தில் அவதாரணத்தினால் (ஏகாரத்தினால்) பகவானை அநாதரித்து ஆழ்வாரை ஆஶ்ரயித்தபடி சொல்லப்படுகிறது. 'துன்பற்ற' என்பதற்கு ப்ரம விப்ரலம்பாதிதோஷங்களொன்றுமில்லாதவரான என்றர்த்தம், இத்தால் இவருடைய ஆப்ததமத்வம் (மிகவும் விச்வாஸம் செய்யக்கூடிய தன்மை தெரிவிக்கப்பட்டதாயிற்று என்று ஸ்ரீஸாராஸ்வாதிநியின் நிர்வாஹம். பாகவத பக்தியுண்டாவதற்கு விரோதியான பாபங்களற்ற என்று ஸ்ரீஸாரப்ரகாசிகையின் நிர்வாஹம். புருஷார்த்தங்களில் ப்ரதமபர்வத்தை விட்டு சரமபர்வத்தில் நிலைநின்றவராகையினாலே வால்மீகிமஹர்ஷியினால் சொல்லப்பட்ட 'அநகஃ' என்னும் பதத்திற்குப் பாத்ரபூதரான என்று ஸ்ரீஸார ஸங்க்ரஹத்தின் நிர்வாஹம். [அதாவது– கேவலபகவத்பக்தியோடு நிற்காமல் பாகவதபக்திபர்யந்தம் சென்றவராகையினாலே 'அநகஃ' என்று சொல்லப்பட்டார் என்று தாத்பர்யம்.] 'விவிக்தவதி வா தேவி ஸம்ஶயோ ஹ்ருதயே விநாஶ்ய ந ஸம்ஶயோ ஹ்ருத் தகுக வரிஷ்டா ஸாதாத்' என்கிறபடியே பலஸித்தியில் ஸம்சயத்தினாலுண்டாகிற துக்கமில்லாதவரான, அதாவது 'துன்பு' என்பது துன்பம் என்கிற பதத்தின் பர்யாயமாகையினால் துக்கம் என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது என்று ஸ்ரீஸாரதீபிகை ஸ்ரீஸாரவிவரணிகளின் நிர்வாஹம். 'ஆயன் நிற்க' என்பதினால் 'என்னப்பனில் நண்ணி' என்பதினர்த்தம் ஸூசிதம். 'தோன்றக் காட்டும்' என்பதற்குத் தன்னுடைய அனுஷ்டானத்தில் மாத்திரம் பர்யவஸியாமல் க்ரந்தரூபமாய் வெளியிட்டபடியினால் பின்புள்ள ஸகலகாலவர்த்திகளும் அறியும்படி ப்ரகாசமாகக் காட்டப்பட்ட என்றர்த்தம். 'தொல்வழி' என்பதினால் இது கேவலம் மதுரகவிகள் தன்னுடைய ருசிமூலமாகச் செய்ததுமாத்திரமன்

' வாஷிஷ்: க்ஷத்ருவஸாஸ்ய வாஸ்ஹீகஸ்ய வாணாகரஜ:। ஸுவாயாவத்யா ஊர்கள தஸாஷாவாயாவாநு

திக்கே ஸ்ருதிஸித்தமாய், அதினர்த்தத்தை உபப்ரும்மணம்பண்ண வந்த ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸ்ரீசத்ருக்னழ்வானுடைய வ்ருத்தாந்தமுகத்தாலே பரக்கப்பேசப்பட்ட மார்க்கம் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'தோல்வழியே நல்வழிகள்' என்பதினல் இந்தக் குருபஜனத்தைத் தவிரப் பக்திப்ரபத்யாதிகளுக்கு வேறு மார்க்கமில்லை என்பது தெரிவிக்கப்படுகிறது. ஆக இத்தால் பக்திப்ரபத்திகளாகிற மோக்ஷஸாதனங்கள் குருபக்தியைத் தவிர வேறு மார்க்காந்தரத்தாலே யதாவத்தாக முடிவுபெறுது, கார்யகரமுமாகாது என்பது திருவுள்ளம் என்று ஸ்ரீஸாராஸ்வாதினியில் வ்யாக்யாதம். மோக்ஷோபாயங்களில் ஏதாவதொன்றை யவலம்பிக்கவேண்டுமென்று ப்ரயத்னம் செய்கிறவர்களுக்கும் மதுரகவி தோன்றக்காட்டும் ஆசார்யாபிமான நிஷ்டையே துணியப்படுவது (அதாவது- ப்ரவர்த்திக்கப்படுவது). ஆசார்யாபிமான நிஷ்டையே பக்திப்ரபத்திகள்செய்யும் பலத்தைக் கொடுக்கும் என்கிற முன்யோஜனையில் பக்த்யாதிஸாம்யமும், இந்த யோஜனையில் அவைகளைக் காட்டிலும் உத்கர்ஷமும் ஸித்திக்கிறது என்று ஸ்ரீஸாரதீபிகையின் நிர்வாஹம். முன் ஆசார்யபரம்பரையிலே உபதேசபரம்பரையாய் வந்தபடியினல், ஆசார்யர்களாலே அனுஷ்டிக்கப்பட்ட ப்ரபத்தியாகிற ஆசார்யநிஷ்டையே மஹாவிஸ்வாஸமுடையவர்களுக்கு நல்லமார்க்கம் என்பது ஸ்ரீஸாரப்ரகாசிகை ஸ்ரீஸாரவிவரணிகளின் நிர்வாஹம். புருஷார்த்தகாஷ்டாபூதமான ஆசார்யஸ்துதியில் ப்ரவ்ருத்தரானதுகொண்டு இவருக்கு 'மதுரகவி' யென்று திருநாமமாயிற்று. ஆகையினல் நேரில் பகவதாஸ்ரயணத்தைவிட ஆசார்யஸமாச்ரயணம் பகவானுடைய ப்ரீத்யதிசயத்திற்குக் காரணம் என்பது இதினலேயே த்யோதிதம் என்று திருவுள்ளம்.

இப்படி தர்மஜ்ஞஸமயமாகிற ப்ரமாணத்தைக் காட்டி ஸ்ருதியாகிற ப்ரமாணத்தைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு தந்மூலகமான ஸ்ம்ருதிவாக்கியத்தை உதாஹரித்தருளுகிறார்— 'வஷிஷ்:' என்றாரம்பித்து. அன்றிக்கே இந்த க்ரந்தத்தில் அருளிச்செய்யப்போகிற குருபக்திக்கு ப்ரதான உபகாரகரான ஸ்ரீ மதுரகவிகள் விஷயமாகத் தனித்தொரு மங்களாசரணம்

பவேத்' என்று ஆசார்யவத்தையே ஸர்வருக்கும் மோக்ஷகாரணம் என்றறுதியிட்டார்கள். முமுக்ஷு

செய்தருளி, இனி குருபக்தி அவஶ்யம் செய்யவேண்டுமென்பதற்கு ப்ரமாணத்தையுதாஹரித்தருளுகிறாராகவுமாம்'பாபிஷ்ட:' என்றாரம்பித்து. அதுவுமன்றிக்கே ஸ்ரீமதுரகவிகள் 'நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும், புன்மையாகக் கருதுவராதலின்' இத்யாதி ஸ்வவாக்யத்தாலே பாபப்ரசுரராகையினால் அவருக்குக் குருபஜனாதிகள் அபேக்ஷிதமாயிருந்தபோதிலும், "புண்யம் ப்ரஜ்ஞாம் வர்த்தயதி" இத்யாதி வசனங்களாலே உத்க்ருஷ்ட ஸுக்ருதம்தானே ஜ்ஞானத்தை வ்ருத்திபண்ணுமென்றேற்படுகிறபடியினால் அந்த உத்க்ருஷ்டஸுக்ருதஶாலிகளுக்கு குருபக்தி ஆவஶ்யகமில்லை என்கிற ஶங்கைக்குப்பரிஹாரமாக அப்படிப்பட்ட உத்க்ருஷ்ட ஸுக்ருதஶாலிகளுக்கும் குருபக்தி ஆவஶ்யகமென்று காட்டுவதற்காக ப்ரமாணத்தை உதாஹரித்தருளுகிறாராகவுமாம்— 'பாபிஷ்ட:' என்றாரம்பித்து. **பாபிஷ்ட:** - மிகுந்த பாபியான, **க்ஷத்ரபந்துஶ்ச** - க்ஷத்திரபந்துவும், **புண்யக்ருத்-** புண்யம் செய்தவனாகிய, **புண்டரீகஶ்ச** - புண்டரீகனும், **ஆசார்யவத்தயா** - ஆசார்யனை ஆஶ்ரயித்ததினால், **மோக்ஷம்** - மோக்ஷத்தையடைந்தார்கள், **தஸ்மாத்** - ஆகையினால், **ஆசார்யவாந்** - ஆசார்யனை அடைந்தவனாக, **பவேத்** - ஆகவேண்டும். இத்தால் புண்யம் ஜ்ஞானத்தை வ்ருத்திசெய்யும் என்று சொல்லி இருப்பதற்த ஆசார்யனை அடைந்திருப்பவனுக்குப் புண்யம் உதவியாகும் என்பதில் தாத்பர்யம் என்று திருவுள்ளம். "க்ஷத்ரபந்துரிதி க்யாதோ ராஜா ப்ராணிவிஹிம்ஸக:" "ஸத்ருஶே பாபகர்மாணம் தஸ்மிந் ஸம்வ்ருத்தவர்த்தநி। விஷயம் பகார ஸ முநி: க்ஷத்ரபந்தோ யதாவத:॥" என்கிற பாத்மோத்தர வசனத்தின்படியே க்ஷத்திரபந்து என்கிற ஒரு ராஜா காட்டில் வஸித்துக்கொண்டிருந்து அங்கிருந்த மஹர்ஷி முதலியவர்களை ஹிம்ஸித்துக்கொண்டிருந்தான். இப்படிப் பல ப்ராஹ்மணர்களினிடத்தில் செய்யப்பட்ட பாபங்கள் அதிகமாயிருந்தபோதிலும் ஏதோ ஒரு ஸுக்ருதம் பலிக்கும் காலத்

தில் நாரதமஹர்ஷியை ஸந்திக்கும்படி நேர்ந்தது. இவன் தன்னுடைய வழக்க ப்ரகாரம் அவரை அடிக்கத் தடியை ஓங்கிக்கொண்டு அவரை நோக்கிச் செல்ல, அவர் 'நீ இப்பொழுது என்னை அடிக்கவருகிறுயே? இது பாபமா புண்யமா என்று உனக்குத் தெரியுமா? பாபமாயிருந்தும் குடும்பரக்ஷணுதிகளுக்காகச் செய்கிறுயேயாகில், நீ யாருக்காக இந்தப் பாபத்தைச் செய்கிறுயோ அவர்கள் இந்தப் பாபத்தில் ஒரு பாகத்தை ஏற்றுக்கொள்ளுவார்களா என்றறிந்துவா. நான் அதுவரையில் இங்கேயே இருக்கிறேன். நீ திரும்பிவந்து உன்னிஷ்டப்பிரகாரம் செய்' என்று சொல்ல, இவனுக்கும் பாகவதோத்தமராகிய அவருடைய தர்ஶனத்திஞல் கொஞ்சம் ஜ்ஞானம் உண்டாகி, வீட்டிற்குச் சென்று பார்யாதிகளைப் பாபத்தில் பங்கு பெறுவீர்களா என்று கேட்க, அவர்கள் மாட்டோம் என்று மறுக்க, நாரதரிடம் திரும்பிவ்ந்து 'நான் இதுவரையில் தெரியாமல் அநேகம் பாபங்களைச் செய்துவிட்டேன், இதிலிருந்து தப்புவதற்கு உபாயம் ஒன்று சொல்லவேண்டும்' என்று ப்ரார்த்திக்க, கருணுநிதியான அவர் இவனுக்கு உபதேஶாதிகளைச் செய்து உபாயானுஷ்டானம் பண்ணி மோக்ஷத்தையடையும்படி செய்தார் என்று இவனுடைய சரித்திரம் உபதேஶபரம்பரையில் வந்துகொண்டிருக்கிறது. 'க்ஷத்ரபந்து' என்னும் பதத்திற்கு க்ஷத்திரியர்களுக்குள் அதமன் என்றர்த்தம். இவன் ராஜாவாயிருந்தபோதிலும் இவனுடைய நடத்தைப் பிசகிஞல் இவனுடைய பந்துக்கள் ப்ரஷ்டன் என்று தள்ளிவிட இவன் காட்டில் வருபவர்களை ஹிம்ஸித்து அதஞல் ஜீவிக்கும்படி நேர்ந்தது. புண்டரீக வ்ருத்தாந்தம் ஸ்ரீபாத்மோத்தர புராணத்தில் ஆறுவது பாகத்தில் எண்பத்தோராவது அத்யாயத்திலும், இதிஹாஸ ஸமுச்சயத்தில் முப்பத்திரண்டாவது அத்யாயத்திலும் அடியில் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கும் விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புண்டரீகன் என்பவர் ஒரு தனிகஞன ப்ராம்மணன். வேதாத்யயனம் முதலியவைகளை யதாக்ரமம் செய்து தர்மானுஷ்டானத்தில் நிலைநின்றிருந்தார். மாதாபிதாக்களுடைய ஶுஶ்ரூஷைகளை யதாஶாஸ்திரம் நடத்திப் போந்து தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டார். அநேகம் புண்ய க்ஷேத்திரங்களில் வஸித்து ஸகல பாபங்களையும் போக்கடித்துக் கொண்டு பக்தியோகம் பண்ணிக்கொண்டிருந்தார். ஆகிலும் பக

வுக்கு ஆசார்யவம்ஶம் ஜ்ஞேயம் ஶ்ரோதவ்யம்... செல்லசு ஸ்ரீமதே
ஸிக்கவேணுமென்றே ஓதப்பட்டது. 1

வத் ஸாக்ஷாத்காரம் ஏற்படவில்லை. இப்படி இருக்கும்பொழுது ஒரு ஸமயத்தில் நாரத ஸமாகமம் இவருக்கு நேர்ந்தது. நாரதர் திருவஷ்டாக்ஷரத்தின் பெருமையைப் பரக்க நிரூபித்து, அதை இவருக்கு உபதேஶித்து, அதில் நிஷ்டையை யுடையவராயிருக்கும்படி நியமிக்க, இவரும் அப்படியே அதில் நிஷ்டையையுடையவராய் அதினால் பகவானை ஸாக்ஷாத்கரித்து மோக்ஷத்தையடைந்தார் — என்று. இந்த இரண்டு வ்ருத்தாந்தங்களினாலும் உத்க்ருஷ்ட புண்யம், பக்தி முதலியவைகள் மாத்திரம் மோக்ஷ ஸாதநமாகாது, ப்ரபலமான பாபங்களும் தடங்கலாகாது என்பது தெரிவிக்கப்படுகிறது என்று 'ஆசார்யவத்தையே' என்கிற இடத்தில் ஏகாரத்திற்கு தாத்பர்யம். 'ஸர்வருக்கும்' என்பதற்கு புண்யசாலிகளுக்கும், பாபிகளுக்கும் என்று தாத்பர்யம். 'அறுதியிட்டார்கள்' என்பதற்கு நிஶ்சயித்தார்கள் என்றர்த்தம். இந்த வசனத்தினால் ஆசார்யனை அடையவேண்டுமென்பது ஏற்பட்டபோதிலும் ஶ்லோகத்தில் 'ஜ்ஞாநாஹ்வ:, தஸ்மாத் ஜ்ஞாநாஹ்வ:' என்றருளிச் செய்திருக்கிறபடியே ஆசார்யாநுஸந்தானத்தின் ஆவஶ்யகதை ஏற்படவில்லையே? அப்படி ஆவஶ்யகதை ஏற்பட்டாலும் மற்றைய பரமாசார்யர்களின் அனுஸந்தானம் அவஶ்யமென்பதேற்படவில்லையே? 'ததாஹ்வ' என்று அந்தக் குருபரம்பரையில் பகவானை முதலாக நிர்தேஶித்தது ஸங்கதமாகுமோ? என்றிவை முதலிய ஶங்கைகளுக்குப் பரிஹாரமாக இதின் மூலமான ஶ்ருதிவாக்யத்தின் தாத்பர்யத்தை அனுவதிக்கிறார் — 'ஆசார்யவுக்கு' என்றாரம்பித்து. 'ஆசார்யவம்ஶம்' என்பதற்கு ஆசார்யபரம்பரை முழுவதும் என்றும், 'ஜ்ஞேயவா ளளவும் செல்ல' என்பதற்கு ஸ்வாசார்யனிடமிருந்து ஆரம்பித்து பகவான்வரையிலும் என்றும் தாத்பர்யம். 'வம்ஶம்' என்பது இங்கு பரம்பரையைச் சொல்லுகிறது. 'ஓதப்பட்டது' என்பதற்கு இந்த அர்த்தம் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது

---

1 ரஹஸ்யாம்நாயப்ராம்மணம்.

பகவானுடைய ப்ரதமாசார்யத்வம்.

1 ‘தஸ்மை ஸர்வகுணஸம்பூர்ணமாசார்யம் பிதரம் குரும்’ என்றும், 2 ‘ஆசார்யஸ்ஸர்வலோகாநாம் குரூணாமபியோ குரு:’ என்றும், 3 ‘ஸ்வயமேவ பகவாந்

என்று தாத்பர்யம். இங்கு ஶ்ருதிவாக்யத்தை உதாஹரித்தருளாததின் கருத்து இக்ரந்தம் ஸ்திரீஶூத்ராதி வ்யத்யாஸமில்லாமல் ஸகலருக்கும் உபஜீவ்யமாகவேணுமென்கிற திருவுள்ளத்தினல்.

எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பகவான் பரமாசார்யன் என்பது எப்படி ஸங்கதமாகும்? சதுர்முகப்ரஹ்மாமுதலாக வரும் ஸம்ப்ரதாயநிஷ்டருக்கல்லவோ பகவான் பரமாசார்யனாவான்? இப்பொழுதுள்ள நமக்குப் பகவான் பரமாசார்யனாவதெப்படி? இப்பொழுது மநுஷ்யஜாதியிலிருக்கும் நம்முடைய ஆசார்யர்கள் நாரதபராஶராதிகளைப்போலப் பஜனீயர்களோ? அவர்கள் பக்தி முதலிய குணங்களினல் சிறந்தவர்களாகையினலும், பகவானுடைய அம்ஶாவதாரமென்று ப்ரஸித்தர்களாகையினலும் பஜனீயர்களாயிருக்கை ஸம்பவிக்கக்கூடும் இந்தக் காலத்திய ஆசார்யர்கள் அப்படியில்லாமையினல் அது ஸம்பவிக்காதே? என்றிவை முதலிய ஶங்கைகளுக்குப் பாரதாதி வசனங்களினல் பகவான் ஸர்வருக்கும் பரமாசார்யன் என்பதேற்படுகிறபடியினல் அவனாலேயே பஹுவிதமாக ஸம்ப்ரதாயம் ப்ரவசனம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், இதற்கு முன் நாரதாதிகளாலே செய்யப்படாத பாஷண்டிமத நிரஸனம் முதலிய உபகாராதிசயத்தாலும், இவர்கள் பகவதவதாரமென்று வசனங்கள் சொல்லுகிறபடியினலும், இவர்கள் அவர்களைவிடப் பஜநீயதமர்களென்று ஸமாதானமருளிச்செய்கிறர்- ‘தஸ்மை’ என்றாரம்பித்து ‘அவதரித்தருளினன்’ என்னுமளவாக. தஸ்மை - அப்படிப்பட்ட இந்த, ஸர்வகுணஸம்பூர்ணம் - அக்ரபூஜையை அடைவதற்குத் தகுந்த ஸர்வாகாரங்களிலும் பூர்ணரான, ஆசார்யம் - ப்ரஹ்மவித்யையை உபதேஶம் செய்தவராயும், பிதரம் - தகப்பனாராயும், குரும் - வேதாத்யயனம் செய்வித்தவராயுமிருக்கிற, இவ்விடத்தில், ‘கு

---

1. பா-ஸ-41-21 [ஸஹதேவன் வார்த்தை]. 2. வி-பு-5-1-14. 3. ஶ-க

குருஸ்த்வமேவ’ என்றும், 1 ‘குருரஸி கதிஸ்சாஸி ஜகதாம்’ என்றும் சொல்லுகிறபடியே ஸர்வலோகத்துக்கும் பரமாசார்யனான ஸர்வேச்வரன் ப்ரஹ்மாவுக்கடியிலே வேதங்களைக் கொடுத்தும், அவற்றிற்கு அபஹாரம்பிறந்தபோது மீட்டுக்கொடுத்தும், இவன்முகமாக சாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்தும், இவன்புத்ரர்களான ஸநத்குமாராதிகளை 2 ‘ஸ்வயமாகதவிஜ்ஞாநா நிவ்ருத்திம் தர்மமாஸ்திதா:’ என்னும்படி பண்ணி அவர்கள்முகங்களாலே **ஹிதப்ரவர்த்தநம்**

ரு:’ என்னும் பதம் ஸாமாந்யமாக வித்யோபதேஷ்டாவையும், **‘பரமாசார்ய’** என்னும் பதம் ப்ரஹ்மவித்யோபதேஷ்டாவையும் சொல்லுகிறது. **ஸர்வலோகாநாம்** - எல்லா லோகங்களுக்கும், **குரு:** - ஆசார்யனாகிய, **நாராயண:** - நாராயணன், **மமாபி** - எனக்கும், **குரு:** - ஆசார்யன், இங்கு **‘ஸர்வ’** என்பதினால் தன் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களும் சேராதவர்களும் ஸங்க்ரஹிக்கப்படுகிறார்கள். **த்வமேவ** - நீரே, **பந்துஸ்ச** - பந்துவும், **த்வமேவ** - நீரே, **குரு:** - ஆசார்யனும், **ஜகதாம்** - லோகங்களுக்கு, **குரு:** - ஆசார்யனாகவும், **கதி:** - அடையவேண்டிய வஸ்துவாகவும், **அஸி** - ஆகிறீர். ‘**பரமாசார்யன்**’ என்பதற்கு இவர் தாமே ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் அருளிச்செய்திருக்கிறபடியே ‘இவனொருவனுமே தனக்கொரு ஆசார்யனில்லாத பரமாசார்யன்’ என்றர்த்தம். **அடியிலே** - முதலிலே, அதாவது ஆரம்பத்திலே, **‘அபஹாரம்பிறந்த போது’** என்கிற இடத்தில் மதுகைடபாதிகளினால் என்று சேர்த்துக்கொள்ளவும். இங்கு பகவான் ஜ்ஞாநத்தைக் கொடுத்தது நான்கு விதம்— (1) தானே நேரில் உபதேசம் செய்தது, (2) சில ஜீவர்களை சக்தியினால் அதிஷ்டானம் செய்து உபதேசம்செய்தது, (3) தான் நியமித்து உபதேசம் செய்யும்படி சிலரைத் தூண்டினது, (4) உபதேசம் இல்லாமல் கேவலம் அனுக்ரஹவிசேஷத்தினால் ஜ்ஞானத்தை உண்டாக்கினது. அதில் ப்ரஹ்மா முதலிய

---

1. ஸ்ரீஸ்தோ-60. 2. பா-மோ—349-72.

பண்ணுவித்தும், இப்படியே மற்றும் நாரதபராஶரஶௌநகாதிகளான பல ருஷிகளையிட்டு ஸச்சாஸ்த்ரஸம்ப்ரதாயங் குலையாதபடி நடத்தியும், 1 'க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் । கோ ஹ்யந்யோ புவி மைத்ரேய ! மஹாபாரதக்ருத் பவேத்' என்றும், 2 'மஹர்ஷே: கீர்த்தநாத் தஸ்ய பீஷ்ம: ப்ராஞ்ஜலிரப்ரவீத்' என்றும் சொல்லுகிறபடி நிற்கிற வ்யாஸாதிகளை யநுப்ரவேஶித்து மஹாபாரதஶாரீரகாதிகளை ப்ரவர்த்திப்பித்தும் ஹம்ஸ மத்ஸ்ய ஹயக்ரீவ நர நாராயண கீதாசார்யாத்யவதாரங்களாலேதானே

வர்களுக்கு முதலாவது செய்யப்பட்டது. வ்யாஸாதிமுகேந செய்தது இரண்டாவது. நாரதபராஶராதிகளை இட்டு உபதேஶம் செய்வித்தது மூன்றுவது. பராங்குஶாதிகளுக்குச் செய்தது நான்காவது என்று இந்த மஹாவாக்யத்தில் பிரிவுகள் அறியத்தக்கது என்று ஸ்ரீஸாரதீபிகையில் வ்யாக்யாதம். **ஸ்வயம்** - தானே, **ஆகத** - வந்திருக்கிற, **விஜ்ஞாநா:** - விவேகஜ்ஞானத்தையுடையவர்களாயும், **நிவ்ருத்திம் தர்மம்** - நிவ்ருத்திதர்மத்தை, **ஆஸ்திதா:** - அனுஷ்டித்துக்கொண்டுமிருக்கிற, '**நிவ்ருத்திதர்ம**'மாவது பலஸங்க கர்த்ருத்வாதி த்யாகத்தோடு பண்ணப்படும் கர்மங்கள். இப்படிச் செய்யாதது ப்ரவ்ருத்தி தர்மம் என்னப்படுகிறது. **ஸச்சாஸ்த்ரஸம்ப்ரதாயம்** - வேதாந்தஶாஸ்திர ஸம்ப்ரதாயம், **குலையாதபடி** - நஶிக்காதபடி, **க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம்** - க்ருஷ்ணத்வைபாயனரென்கிற வ்யாஸரை, **ப்ரபும்** - ஸர்வஶக்தியையுடையவனை, **நாராயணம்** - நாராயணனாக, **வித்தி** - அறி, **மைத்ரேய** - ஓ மைத்ரேயனே! **புவி** - இந்தப் பூலோகத்தில், **அந்ய:** - வேறு, **க:** - யார், **மஹாபாரதக்ருத்** - மஹாபாரதத்தைச் செய்தவனாக, **பவேத்** - ஆவான், **தஸ்ய** - அந்த, **மஹர்ஷே:** - வ்யாஸமஹர்ஷியினுடைய, **கீர்த்தநாத்** - (பெயரைச்) சொல்லுவதினால், **பீஷ்ம:** - பீஷ்மர், **ப்ராஞ்ஜலி:** - கையைக் கூப்பிக்கொண்டு, **அப்ரவீத்** - சொன்னார். இத்தால் ஆசார்யக

---

1. வி-பு—3-4-5. 2. பா-ஆ—114-11.

வெளிநின்று தத்வஹிதங்களை ப்ரகாஶிப்பித்தும், தானருளிச்செய்த வசனங்களையெல்லாம் ஸ்ரீபீஷ்மர் முதலான ஆப்தநாயகரையிட்டு மூதலிப்பித்தும், 1 'பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்' என்கிறபடியே அடியிலே தானருளிச்செய்த ஸாத்வதஶாஸ்த்ரத்தை 'ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யா: ஶூத்ராஶ்ச க்ருதலக்ஷணா: | அர்ச்சநீயாஶ்ச ஸேவ்யாஶ்ச நித்யயுக்தா: ஸ்வகர்மஸு || ஸாத்வதம் விதிமாஸ்தாய கீதஸ்ஸம்

னுடைய திருநாமத்தைச் சொல்லும்பொழுது அஞ்ஜலிபண்ணிக் கொண்டு சொல்லவேண்டுமென்கிற ஆசாரம் ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. 'தானே 'வெளி நின்று' என்பதற்கு வ்யாஸாதிகளைப்போன்ற ஜீவர்களை அதிஷ்டானம் செய்யாமல் தானே ஸாக்ஷாத்தாக அவதாரம் செய்து நின்று என்றர்த்தம். மூதலிப்பித்தும்-இதுவே வாஸ்தவார்த்தமென்று அவர்கள் சொல்லும்படி செய்வித்தும், அதாவது கீதோபதேஶம் யுத்தத்தில் உத்ஸாஹத்தை உண்டாக்குவதற்காக மாத்திரம் ஏற்பட்டதாகையினால் அந்யபரம், தத்வார்த்தஉபதேஶபரமல்ல என்று சொல்லாமலிருக்கும்படி பீஷ்மாதிகளைக்கொண்டு அதுவே ஶாஸ்த்ரார்த்தம் என்று நிரூபித்து என்று தாத்பர்யம். அதாவது- யுத்தத்திற்குப் பிறகு தர்மபுத்திரர் பீஷ்மரிடம் தர்மங்களை ஶ்ரவணம் பண்ணும்பொழுது பகவான் ஸ்ரீகீதையில் உபதேஶித்தருளின கர்மயோகஜ்ஞானயோக பக்தியோகாதிகளையே மறுபடியும் தத்வார்த்தங்கள் என்று உபதேஶித்தபடியினால் பீஷ்மர் பகவானுபதேஶத்தையே ஸம்வதித்தார் என்பதேற்படுகிறது. இத்தால் பௌத்தாதி உபதேஶங்கள் பகவானால் செய்யப்பட்டிருந்தபோதிலும் அது அப்படிப் பெரியோர்களினால் ஒப்புக்கொள்ளப்படாமையால் தத்வார்த்தமன்றென்று ஏற்படுகிறது. க்ருத்ஸ்நஸ்ய- எல்லா, பாஞ்சராத்ரஸ்ய - பாஞ்சராத்ரஶாஸ்த்ரத்திற்கும், நாராயண: - நாராயணன், ஸ்வயம் - தானே, வக்தா - உபதேஶம் செய்தவர். க்ருதலக்ஷணா: - செய்யப்பட்ட ஶங்கசக்ராத்யங்கனங்களோடு கூடினவர்களாயும், ஸ்வகர்மஸு - தங்கள் தங்கள்

---

1. பா. ஶா. 359, 68. 2. பா-ஶா-66-39, 40.

கர்ஷணேந ய: | த்வாபரஸ்ய யுகஸ்யாந்தே ஆதௌ கலியுகஸ்ய ச ' என்கிறபடியே அவஸரங்களிலே ஆவிஷ்க்ருத்தும், 1 'வர்த்தமாநேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌ ப்ரபு: அச்யுதோ ஹரி:

வர்ணாஶ்ரமதர்மங்களில், நித்யயுக்தை: - எப்பொழுதும் இருக்கிறவர்களுமான, ப்ராஹ்மணை: - ப்ராஹ்மணர்களினாலும், க்ஷத்ரியை: - க்ஷத்திரியர்களினாலும், வைஶ்யை: - வைஶ்யர்களினாலும், ய: - எந்த (ஸாத்வதஶாஸ்த்ரம்) த்வாபரஸ்ய யுகஸ்ய - த்வாபரயுகத்தினுடைய, அந்தே - முடிவிலும், கலியுகஸ்ய - கலியுகத்தினுடைய, ஆதௌ ச - ஆரம்பத்திலும், ஸங்கர்ஷணேந - ஸங்கர்ஷணனால், கீத: - சொல்லப்பட்டதோ, (அப்படிப்பட்ட) ஸாத்வதம் விதிமாஸ்தாய - பாஞ்சராத்ரசாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட விதியை யடைந்து, அர்ச்சநீயஸ்ச - பூஜை செய்யத் தகுந்தவர், ஸேவ்யஸ்ச - ஸேவிக்கத்தகுந்தவர். அவஸரங்களிலே - ப்ரகாசம் செய்யவேண்டிய ஸமயங்களிலே, ஆவிஷ்க்ருத்தும் - ப்ரகாசம் செய்தும். இங்கு 'கீத:' என்று சொல்லியிருப்பதற்கு ஸங்கர்ஷணனால் சொல்லப்பட்டது என்றர்த்தமாகையினால், அவராலேயே முதலிலேயே பாஞ்சராத்ரஶாஸ்த்ரம் அருளிச்செய்யப்பட்டது என்று சொல்லலாம்படி இருந்தபோதிலும், திருநாராயணீயத்தில் உபரிசரவஸுவின் சரித்திரம் சொல்லும்பொழுது பாஞ்சராத்திரஶாஸ்திராநுஷ்டானங்களைப் பரக்க நிரூபித்து, அந்த உபரிசரவஸுவிற்குப் பின்பு, அந்த ஶாஸ்த்ரம் மறைந்துவிடப் போகிறதென்று சொல்லியிருப்பதினால், க்ருதயுகத்தில் அனுஷ்டானத்திலிருந்து வந்த ஶாஸ்த்ரமே பிறகு ஸங்கர்ஷணனால் வெளியிடப்பட்டது என்று ஏற்படுகிறதென்று திருவுள்ளம்பற்றி 'ஆவிஷ்க்ருத்தும்' என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ப்ரபு: - ஸர்வஶக்தனான, அச்யுத: - பகவான், கலௌ - கலியுகத்தில், வர்த்தமாநேஷு - முன்னாலே பிறந்திருக்கிற, பூதேஷு - ப்ராணிகளிடங்களில், அதாவது- ஜீவர்களிடங்களில், அன்றிக்கே 'கடல்'

1, வி-த—108-50.

தே யத்ஸுஹிதஞ்சக்ருதஃ' என்கிறபடியே வராஜ்ஞரூபவா காலாதிரூபைவத்தாலே ஸுஹிதவமாக ஒரு தஶாவதாரம் பண்ணி ஜீவங்கள் ஸகாரூபஜனத்தை வாங்கி ஸம்ரா

வண்ணன் பூதங்கள்மண்மேல்' என்றிவை முதலிய ப்ரயோகங்களை அநுஸரித்து நித்யஸூரிகளிடங்களில், ஸந்நிவேஸ்ய - அநுப்ரவேஸித்து, யத் - எது, ஸுஹிதம் - தனக்கு இஷ்டமோ (அதை) கரோதே - செய்கிறார். இங்கு பராங்குஶபரகாலாதிகளைக் குறித்து விஶேஷியாமல் பொதுவாகச் சொல்லப்பட்டிருந்தபோதிலும் கலியுகத்தில் விஶேஷமாக உபகாரம் செய்தவர்கள் ஆழ்வார்களாகையினால் அவர்களே இதற்கு விஷயம் என்று திருவுள்ளம். இங்கு நம்மாழ்வார் கலியன் என்றிவைமுதலிய பெயர்களினால் நிர்தேஶியாமல் 'வராங்கரூபவாக' என்று நிர்தேஶித்திருப்பதினால் கலியுகத்தில் அவர்கள்செய்த விஶேஷஉபகாரம்சொல்லப்பட்டதாயிற்று. ஸ்ரீபாகவதத்தில் நான்காவது ஸ்கந்தத்தில் இருபத்தைந்தாவது அத்தியாயத்தில் புரஞ்ஜனோபாக்கியானத்தில் நாரதர் ப்ராசீநபர்ஹிஸ் என்கிற ராஜாவிற்கு தத்வார்த்தத்தை ஒரு கதையாகச் சொல்லுமிடத்தில் "உபயெஶ வீயவணாம் [illegible] பரவராஜ்ஞயஃ" என்றும், "தத்ர [illegible] தா [illegible] தந்நா [illegible]" என்று சொல்லியிருப்பதும் பராங்குஶருடைய அவதாரத்தைக் குறிக்கிறதாகையினால், அதை அநுஸரித்து இந்த ஶ்லோகத்திற்கும் இப்படி அர்த்தம்சொல்லவேண்டியதென்று திருவுள்ளம்பற்றி, அங்கு 'பரவராஜ்ஞயஃ' என்பதை இங்கு 'வராஜ்ஞஸ' என்றருளிச்செய்திருக்கிறார். 'ஸுஹிதவமாக ஒரு தஶாவதாரம் பண்ணி' என்பதற்கு 'சில ஜீவர்களை ஶக்திவிஶேஷத்தாலும், விக்ரஹவிஶேஷத்தாலும் அதிஷ்டித்து அதிசயித கார்யங்களை நடத்துகிறதும் விபவபேதம்' என்று தத்வத்ரயாதிகாரத்தில் இவர் தாமே யருளிச்செய்திருப்பதினால் ஆழ்வார்கள் ரூபமாக ஒரு தஶாவதாரம் பண்ணி என்று தாத்பர்யம். 'ஸுஹிதவமாக' என்பதற்கு மத்ஸ்ய கூர்மாத்யவதாரங்களில் செய்யப்படாத உபகாராதிஶயம் செய்யும்படியான என்று தாத்

ஸஜீவமான தண்ணீராக வுமிழுமாப்போலே விஷயங்களில் வேண்டும் ஸாரதமாம்ஸத்தை ஸர்வருக்கும் அநுபவிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக் காட்டியும், இப்படித்தான் ப்ரவர்த்திப்பித்த ஸத்பதத்துக்கு ப்ரகடராயும் ப்ரச்சந்நராயுமிருந்துள்ள பாஹ்யர்களாலுபரோதம் வாராமைக்காக, 1 "ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் | மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா"

பர்யம். 'ப்ரகடராயும்' என்பதற்கு ப்ரகாஶமாயிருக்கிற என்றர்த்தம். அவர்களாகிறார் ஸாக்ஷாத்தாக வேதத்திற்கு அப்ராமாண்யத்தைச் சொல்லி வேததூஷகர்களான பௌத்தசார்வாகாதிகள். 'ப்ரச்சந்நராயும்' என்பதற்கு மறைந்துகொண்டிருக்கிற என்றர்த்தம். அவர்களாகிறார் வேதம் முதலியவைகளை ஒப்புக்கொண்டு ஈஶ்வரஸ்வரூபாதிகளுக்கு அபலாபம் பண்ணும் பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்கிறபடியினாலே கோமுகவ்யாக்ரங்களென்று சொல்லப்படுகிற பாஸ்கரஶங்கராதிகள். அதாவது— வைதிகமதஸ்தாபனமென்கிற வேஷத்தைப் பூண்டு வேதங்களுக்கு அப்ராமாண்யத்தைச் சொல்லுகிறபடியினால் ப்ரச்சந்நர்கள் என்கிறது. அப்படியே ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் "ஶாக்யோலூக்யாக்ஷபாதக்ஷபணககபிலப்ராபாகரைர்த்ருஷ்ட்யா
தைத்யதைத்யாந்வய ஸமாகமய யுக்தி கந்தோத்ரவ ஷீவி
ஷிஶ்வ | பஹ்வீய: க்ஷோபிதாபி ஶ்ருதிரிஹ பஹுதா
ஜாயதே நந்த ஹேதா காலே காலேஹி ஶாஸ்தா கமஹதித
ரத்யக்ஷதா ரக்ஷதாக்ஷா" என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. தேவ:-தேவனாகிய, நாராயண:- நாராயணன், இங்கு 'திவு' என்ற தாதுவின் அர்த்தங்களாகிய ஜயிக்கவேண்டும் என்கிற இச்சை, காந்தி, லீலை முதலிய அர்த்தங்கள் அபிப்ரேதங்கள். ஸாக்ஷாத் - நேராக, மர்த்யமயீம்-மநுஷ்யரூபமான, தநும் - ஶரீரத்தை, க்ருத்வா - செய்துகொண்டு, அங்கீகரித்துக்கொண்டு என்றபடி. காருண்யாத்-கருணையினால், ஶாஸ்த்ரபாணிநா. ஶாஸ்த்ரமாகிய கையினாலே, மக்நாந் - முழுகியிருக்கிற, லோகாந்

---

1 [illegible]

என்றும், 1 'பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து' என்றும் சொல்லுகிறபடியே ஸஹ்யஸேவித

ஜநாந்-ஜநங்களை, 'லோகஸ்ய' இந்த லோகத்திலிருக்கும் ஜநங்களை உபலக்ஷிக்கிறது. உஜ்ஜஹார - தூக்கிவிடுகிறார். இங்கு 'ஸாக்ஷாத்' என்பதினால் ஜீவாத்மாக்களை த்வாரமாகக் கொண்டல்லாமல் நேராகவே என்பதேற்படுகிறது என்று ஸ்ரீஸாரதீபிகையில் வ்யாக்யாதம். உபரோதம் தடங்கல், அதாவது- இங்கு ஸங்கோசம், பீதகவாடை - பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற, பிரானார் - உபகாரகனான பகவான், இதற்கு 'பீதவாஸா ஜகத்குரு:' என்கிறபடியே புருஷோத்தமத்வசிஹ்நமாயும், ஸர்வேஶ்வரத்வசிஹ்நமாயுமிருக்கிற பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற ஸர்வேஶ்வரன் என்று அர்த்தம். இங்கு பீதாம்பரம் மற்றைய சங்கசக்ராதிஸர்வேஶ்வரத்வசிஹ்நங்களுக்கும் உபலக்ஷணம். 'ஶங்கசக்ரகதாபாணி: பீதவாஸா ஜகத்குரு:' என்றல்லவோ சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஸர்வேஶ்வரத்வசிஹ்நங்களைக்காட்டியும் தன்னுடைய ஈஶ்வரத்வத்தைக்கொண்டு திருத்தவொண்ணாத சேதனர்களையும், 'பிரமகுருவாகி வந்து' திருத்தும்படியாயிற்று என்று ஆசார்யர்களின் உபகாராதிஶயம் சொல்லப்பட்டதாகிறது. 'செய்த்தலை' என்கிற பாட்டு இங்கு அநுஸந்தேயம். பிரமகுருவாகி வந்து- ப்ரஹ்மோபதேஶஞ்செய்யும் ஆசார்யரூபேண அவதரித்து, 'ஸஹ்யஸேவிதமான தேஶத்திலே' என்பதினால் "கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஶ்வரம் । நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா:" என்கிற வசனத்தில் கலியுகத்தில் பாகவதர்கள் கிடைப்பதரிது என்று சொல்லப்பட்டிருக்கிறபடியினால், அப்படிப் பாஷண்டிகளினால் நிறைந்த தேஶத்தில் பகவான் அவதரித்தான் என்பதும், ஸத்வோத்தரர்களான ஆசார்யர்கள் அவதரித்தார்கள் என்பதும் விரோதியாதோ என்கிற ஶங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. எப்படியென்னில்? அகஸ்தியர் முதலிய மஹர்ஷிகளினால் பரிக்ரஹிக்கப்பட்ட தேஶம் கலியுகத்திலுமுண்டு என்று

1. பெ-தி—5-2-8.

மான தேஶத்திலே ஸுநகதேஶிகாவதேஶத்தாலே அவதரித்தருளினான். இத்தைக் கணிசித்து 1 "கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: । க்வசித் க்வசிந் மஹாராஜ த்ரமிடேஷு ச பூரிஶ: ॥ தாம்ரபர்ணீ நதீ

ப்ரமாணங்களில் சொல்லப்பட்டிருப்பதினால், கீழ்க்கூறிய வசனம் பெரும்பாலும் அப்படி இருக்கும் என்கிற அபிப்பிராயத்தை உடையது. ஆகையினால் அப்படிப்பட்ட தேஶங்களில் பகவானும் ஆசார்யனும் அவதரிப்பது உபபந்நம் என்று தாத்பர்யம். 'தேஶிகாவதேஶத்தாலே யவதரித்தருளினான்' என்பதற்கு பகவானே ஆசார்யரூபமாக அவதரித்தருளினபடியினால் இவ்வாசார்யபக்தி ராமக்ருஷ்ணாத்யவதாராதிகளைக் குறித்துப் பண்ணும் பக்தியைப்போல பகவத்பக்திரூபமாயும் ஆகும் என்று தாத்பர்யம். அப்படியே ஸ்ரீஶததூஷணியில் அலேபகமதபங்கமென்கிற அறுபத்தைந்தாவது வாதத்தில் "ஶ்ரீமத்ஸ்தாநேஷு ஸந்தஸ்ஸம்ஸாரஹேது இதி ப்ரமாணப்ரஸித்தே: । தேந தேஷாம் ப்ரதிஷ்டாபநாதிகம் ராமக்ருஷ்ணாத்யவதாராணாமிவ ஸர்வப்ரதிஷ்டாஸாத்யாநுஸாரேண நிர்ணேதவ்யம்" என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. "தேஶிகாவதேஶத்தாலே - ஆசார்யர்கள் என்கிற வ்யாஜத்தினாலே' இப்படி 'க்வசித் தேஶீயே' என்று பொதுவாக இருப்பதை ஆசார்யர்கள் விஷயமென்று நிர்ணயிப்பது எப்படியென்னில், இதற்கு ப்ரமாணாந்தரஸம்வாதத்தை அருளிச்செய்கிறார்— 'இத்தைக் கணிசித்து' என்றாரம்பித்து. 'இத்தை' என்பதற்கு இப்படி ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அவதரித்து லோகோபகாரம்செய்யப்போகிறார்கள் என்கிற விஷயத்தை என்றும், 'கணிசித்து' என்பதற்குத் தபோமஹிமையினால் இனி வரப்போகிறதை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு என்றும் அர்த்தம். கலௌ கலு - கலியுகத்திலல்லவா, நாராயணபராயணா: - பகவானையே ப்ராப்ய ப்ராபகமாக ஆஶ்ரயித்திருக்கிற, மஹாத்மா: - மஹானுபாவர்கள், க்வசித் க்வசித் -(மற்ற தேசங்களில்) சிற்சில இடங்

1. ஸ்ரீபா—11-5-38, 39.

யத்ர க்ருதமாலா பயஸ்விநீ | காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ" என்று மஹர்ஷியருளிச்செய்தான்.

ஆசார்யபரம்பரா க்ரமம்.

இவ்வாசார்யர்களில் ஈஶ்வரமுநிகள்பிள்ளை நாதமுநிகள். இவர் ந்யாயதத்வமென்கிற ஶாஸ்த்ரமும் யோகரஹஸ்யமும்

களிலும், பவிஷ்யந்தி - அவதரிக்கப்போகிறார்கள், த்ரமிடேஷு ச - த்ரமிடதேஶத்தில், பூரிஶ: - அதிகமாக (அவதரிக்கப்போகிறார்கள்), (இது எவ்விடங்களில் என்னில்) யத்ர - எந்த இடத்தில், தாம்ரபர்ணீ நதீ - தாம்ரபர்ணீ என்கிற நதி இருக்கிறதோ, க்ருதமாலா - வைகையாறு (இருக்கிறதோ), பயஸ்விநீ - பாலாறு (இருக்கிறதோ), மஹாபாகா - மிகவும் ப்ரபாவமுள்ள, காவேரீ ச - காவேரி நதி (இருக்கிறதோ), ப்ரதீசீ - மேற்கு ஸமுத்திரத்தைக் குறித்துப்போகிற, மஹாநதீ - மஹாநதி இருக்கிறதோ (அப்படிப்பட்ட இடங்களில்).

இப்படிப் பொதுவாக ஆசார்யர்களின் ப்ரபாவத்தை யருளிச்செய்து இவ்வாசார்யர்களை அவரவர்கள் செய்த உபகாரங்களுடன் அநுஸந்தானம் செய்யவேண்டுமென்கிற க்ரமத்தை அருளிச்செய்கிறார்— 'இவ்வாசார்யர்களில்' என்றாரம்பித்து. இதில் விஷ்வக்ஸேனர், பிராட்டி, நம்மாழ்வார் இவர்களை விட்டு ஸ்ரீமந்நாதமுனிகளை உபக்ரமித்து அருளிச்செய்திருப்பது உபபந்நமாகுமோ வென்னில்? 'அநேக தேஶிகோபதேஶத்தாலே யவதரித்தருளினன்' என்று கீழ் ப்ரஸ்தாவித்து, 'இவ்வாசார்யர்களில்' என்று உபக்ரமித்திருப்பதினால் பிராட்டியும் விஷ்வக்ஸேனரும் அப்படி அவதாரம் செய்தருளவில்லையாகையினாலும், 'ஸேநேஶாவதாரமாக' என்று கீழ் நம்மாழ்வார் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருப்பதினாலும் உபபந்நமாகும் என்று திருவுள்ளம். அன்றிக்கே 'பாஷண்டிகளினால் உபத்ரவம் வாராமைக்காக' என்று கீழ் ப்ரஸ்தாவித்திருப்பதினால் அப்படிப்பட்ட பாஷண்டிமத நிரஸனத்தில் ஸ்வாநுபவபரரான நம்மாழ்வார் இதம்பரமாக அவதரித்தவரல்லாமையினாலே அப்படிப்பட்டவர்களில் ஸ்ரீமந்நாதமுனிகள் ப்ர

அருளிச்செய்தார். இவருக்கு ஸ்ரீமதுரகவிகள் முத லாக வுண்டான ஸம்ப்ரதாய ஸம்பந்தத்தாலும், திருவாய்மொழி முகத்தாலும், யோகதசையிலே

தானமாகையினால் அவரை முதலில் நிர்த்தேஶித்திருப்பது உபபந்நமாகும் என்று தாத்பர்யமாகவுமாம். 'இவர் ந்யாய தத்த்வம் என்கிற ஶாஸ்த்ரமும்' இத்யாதி வாக்யத்தினால் ஆசார்யர்கள் செய்தருளிய உபகாரங்களை அனுஸந்தானம் செய் யும் ப்ரகாரம் தெரிவிக்கப்பட்டது. இப்படியே மேலும் அவரவர் கள் க்ரந்தத்தை நிர்தேஶித்திருப்பதற்கு ப்ரயோஜனம் கண்டு கொள்வது. ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு முன் ஸம்ப்ரதாய ப்ர வர்த்தகர்களை அருளிச்செய்யாததற்குக் காரணமென்ன? நம் மாழ்வார் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு ஆசார்யரானார் என்னில் இவர் கள் இருவருடைய காலமும் வெகுதூரமாயிருப்பதினால் பொருத்த முடையதாகாதே? என்கிற ஶங்கைகளுக்குப் பரிஹாரமருளிச் செய்கிறார்—'இவருக்கு' என்றாரம்பித்து. 'மதுரகவி கள் முதலாகவுண்டான ஸம்ப்ரதாய ஸம்பந்தத்தா லும்' என்பதற்கு மதுரகவிகள் வம்ஶத்தில் அவதரித்தவ ரான பராங்குஶதாஸரிடத்திலிருந்து 'கண்ணிநுண் சிறுத் தாம்பு' என்கிற ப்ரபந்தத்தை உபதேஶிக்கப்பெறுகையால் அந்தப் பராங்குஶதாஸருக்கு பித்ருபிதாமஹாதி க்ரமத்தினால் மதுரகவிகளும் அவருக்கு ஆசார்யனான நம்மாழ்வாரும் ஆசார்ய ரானார் என்று தாத்பர்யம். 'திருவாய்மொழி முகத்தா லும்' என்பதற்கு திருவாய்மொழி என்கிற க்ரந்தமுகத் தினால் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு உபகாரம் செய்தருளினபடியினா லும் என்றர்த்தம். இப்படி க்ரந்தமுகேந உபகாரகரானார் என்னு மர்த்தம் ஸ்ரீமத் ஸம்ப்ரதாயபரிஶுத்தியில் 'கலியுகாரம்பத்தில் வ்யாஸாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் வ்யவஸ்தாபகரானார்' என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. 'யோகதசையில் ஸாக்ஷாத்க்ருதராயும்' என்பதற்கு ஸ்ரீமந் நாதமுனிகள் ஆழ் வாரைக் குறித்து தபஸ்ஸு செய்யும்பொழுது பகவானுடைய நிய மனத்தினால் நித்யஸூரியான தாம் ஆவிர்பவித்து ஸர்வ வேதாந் தார்த்தங்களையும் உபதேஶிக்கையாலும் என்றர்த்தம். அப்படியே 'காலவிப்ரக்ருஷ்டவி ஷயேஷ்வபி ஸாக்ஷாத்கார க்ஷாவிஶ

ஸாக்ஷாத்க்ருதராயும், நம்மாழ்வார் ஆசார்யரானார். நாதமுநிகள்பிள்ளை ஈச்வரபட்டாழ்வான். ஈச்வரபட்டாழ்வான்பிள்ளை ஆளவந்தார். இவரருளிச்செய்த க்ரந்தங்கள்—ஆகமப்ராமாண்யமும், மஹாபுருஷநிர்ணயமும், ஆத்மஸித்தி, ஈச்வரஸித்தி, ஸம்வித்ஸித்தி, என்கிற ஸித்தித்ரயமும், ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹமும், ஸ்தோத்ரமும், சது:ச்லோகியும், ஆக எட்டு. ஆளவந்தார் பிள்ளை என்னுச்சான். என்னுச்சான்பிள்ளைகள் நால்வர். இவர்களிலொருவர் பிள்ளையப்பர். பிள்ளையப்பர்பிள்ளை தோழப்பர். தோழப்பருக்குப் பெண்பிள்ளைகளிருவர். நாதமுநிகள் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்த முதலிகள்— உய்யக்கொண்டார், குருகைக் காவலப்பன், நம்பிகருணாகர தாஸர், ஏறு திருவுடையார், திருக்கண்ணமங்கை யாண்டான், வானமாதேவியாண்டான், உருப்பட்டூராச்சான்பிள்ளை, சோகத்தூராழ்வான், ஆக எண்மர். உய்யக்கொண்டார் ஸ்ரீபாதத்தை யாச்ரயித்தவர்கள ஐவர். அவர்களாகிறார்—மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணிப் பாண்பெருமாளரையர், சேட்டலூர் செண்டலங்காரர், ஸ்ரீ புண்டரீகதாஸர், உலகப்பெருமாள் நங்கை. மணக்கால் நம்பி ஸ்ரீபாதத்தையாச்ரயித்த முதலிகள் ஐவர். அவர்களாகிறார்—ஆளவந்தார், தெய்வத்

[illegible] ப ஸாக்ஷாத்ருஷி ஸர்வஜ்ஞவநிஷ்ஷாஸோவஷ ஷா[illegible]' என்றவர் [illegible] ப்ரதிஸ்ரீ காத்ர பாஷ்யத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான ஆசார்யர்களுடைய புத்திர பௌத்திராதிகள் ஆசார்ய பரம்பரையில் அந்வயிக்காவிட்டாலும் அவர்களை அனுஸந்தித்திருப்பது, ஆசார்யனுடைய வம்சத்தை அறியவேண்டுமென்று ச்ருதியில் விதித்திருப்பது ஆசார்யர்களுடைய சிஷ்ய பரம்பரையையும் புத்திராதி பரம்பரையையும் சேர்த்துச் சொல்லுகிறது என்கிற திருவுள்ளத்தினால். '[illegible] வம்சோ[illegible]தே வ்ருத்தி:' இக்

துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், சிறப்புள்ளூராவுடைய பிள்ளை, ஆச்சி. ஆளவந்தார் ஸ்ரீவாஷத்தை ஆஶ்ரயித்தவர்கள் பதினைவர். அவர்களாகிறார்— பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், ஆளவந்தாராழ்வார், திருமலை நம்பி, ஈசாண்டான், தெய்வவாரியாண்டான், சிறியாண்டான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றார், தெய்வப்பெருமாள், திருமங்கையாளியார், பிள்ளை திருமாலிருஞ்சோலை தாஸர், மாறனேர் நம்பி, ஆள்கொண்டி. பெரிய நம்பி ஸ்ரீவாஷத்தையாஶ்ரயித்தவர்கள் அறுவர். அவர்களாகிறார்—எம்பெருமானார், மலை குனிய நின்றார், ஆர்ய ஸ்ரீஸம்கோபீதாஸர், அணியரங்கத்தமுதனார், திருவாய்குலமுடையான்பட்டர், திருக்கச்சி நம்பி. எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீவாஷத்திலே ஈஹ

யாதிகள் இங்கு அனுஸந்தேயம். ஸ்ரீ ஆளவந்தார் குமாரர்கள் நால்வர் என்று குருபரம்பராதிகளில் சொல்லப்பட்டிருந்தபோதிலும், அவர்களில் இருவருக்கு ஸந்ததி இல்லாமையினாலும், தெய்வத்துக்கரசுநம்பிஸந்ததியில், பெரிய திருமலைநம்பி குருபரம்பரையில் அனுஸந்திக்கப்பட்டிருப்பதினாலும், அப்படி ஆசார்ய பரம்பரையில் சேராத குருபுத்திர பௌத்திராதிகளையும் அனுஸந்திக்கவேண்டுமென்று தெரிவிப்பதற்காக அப்படிப்பட்டவரான சொட்டை நம்பிகளின் திருவம்ஶம் மாத்திரம் அனுஸந்திக்கப்பட்டிருக்கிறது என்று அறியத்தக்கது. ஸ்ரீ ஆளவந்தாருக்குப் பிறகு அப்படிப் புத்திர பௌத்திராதிகளை அருளிச் செய்யாதொழிந்தது புத்திராதி ஸந்ததியைச்காட்டிலும் ஜ்ஞான ஸந்ததியே ப்ரதானமாய் அனுஸந்தேயம் என்பதைக் காட்டுவதற்காக. 'முதலிகள்' என்பதற்கு முதன்மையானவர்கள், அதாவது ப்ரதானர்கள் என்றர்த்தம். 'திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீவாஷத்திலே' என்பதற்கு 'ஸ்வாயம்புவாஷாஃ' 'தாதவாஷாஃ' என்கிற ப்ரயோகங்களைப்போல் பூஜார்த்தபாஷையினால் திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே என்று தாத்பர்யம். அன்றிக்கே 'ஸ்ரீவா

ஸ்யங்கள் ஶிக்ஷித்தார். திருமாலையாண்டான் ஸ்ரீ பாதத்திலே திருவாய்மொழி கேட்டார். ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழியுமோதி ஸ்தோத்ரமுமருளிச்செய்யும் நல்வார்த்தைகளுங்கேட்டருளினார். திருமலைநம்பி ஸ்ரீபாதத்திலே ஸ்ரீராமாயணங்கேட்டருளினார். இவரருளிச்செய்த க்ரந்தங்கள்—ஸ்ரீபாஷ்யம், தீபம், ஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், ஸ்ரீகீதாபாஷ்யம், சிறிய கத்யம், பெரிய கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம் ஆக ஒன்பது. இவர் ஸ்ரீபாதத்திலாஶ்ரயித்த முதலிகளைத் தந்தாம் ஸம்ப்ரதாயப்படிகளிலே கண்டுகொள்வது.

பாதத்திலே' என்னும் பதத்தோடு ஆஶ்ரயித்து என்னும் ஒரு பதத்தைச் சேர்த்துக்கொண்டு அர்த்தம் சொல்லிக்கொள்ளவுமாம். இப்படியே [illegible] 'நாயனார் [illegible] ஸ்ரீபாதத்தை யாஶ்ரயித்த முதலிகள்' [illegible] ப்ரயோகிக்கப்பட்டிருப்பதினால். இப்படியே [illegible] கண்டுகொள்வது. 'ரஹஸ்யங்கள் ஶிக்ஷித்தார்' என்பதற்கு முன்பு க்ரஹித்த அர்த்தங்களையே பரிஷ்காரம் செய்து கொண்டார் என்று அர்த்தம். ஆகையினாலேயிறே இவரைச் சிந்தாசார்யராக அநுஸந்திக்கிறது. 'திருவாய்மொழியும் ஓதி' என்பதற்கு ஆசார்யோச்சாரணாநுச்சாரணமாக அத்யயனம் செய்து என்று அர்த்தம். 'ஓதி' என்பதற்கு அத்யயனம் செய்து என்றர்த்தம். இத்தால் இதை அத்யயனத்தினாலேயே க்ரஹிக்கவேண்டும் என்பதற்கு ஸ்ரீபாஷ்யகாரருடைய அனுஷ்டானமாகிய ஶிஷ்டாசாரம் காட்டப்பட்டதாயிற்று. 'ஸ்தோத்ரமும்' என்பதனால் ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்த ஸ்ரீஸ்தோத்ர ரத்நம், ஸ்ரீ [illegible] முதலியவை சொல்லப்படுகின்றன. 'அருளிச்செய்யும் நல்வார்த்தைகளாவன:— [illegible] பெருமாள் அவர்களுக்கு அருளிச்செய்யப்படுகிற வார்த்தைகள். 'அருளிச்செயலும்' என்று பாடம். அப்பொழுது திருவாய்மொழியைத் தவிர மற்றைய அருளிச்செயல்கள் என்று அர்த்தம். 'தந்தாம் ஸம்ப்ரதாயப்படிகளிலே யறிந்து கொள்வது' என்பதற்கு [illegible] ஆசார்யபரம்பரை அநேகவிதமாகப் பிரிந்துவிட்டபடியினால் அவர்

ஆசார்யபக்தி அவஸ்யம் செய்ய வேண்டுமென்பது.

1 '஗ுரும் ப்ரகாஶயேத்தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத் | அப்ரகாஶப்ரகாஶாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ" என்றார்கள். ஗ுருவை ஒருவன் ப்ரகாஶிப்பிக்கிறதுவும் ஒருவன் ப்ரகாஶிப்பியாதொழிகிறதுவும் ஗ுருபக்தியின் தாரதம்யத்தாலேயிறே. ஭கவத்விஷயத்

களை எல்லாம் நிர்தேஶித்தால் க்ரந்தம் விஸ்தரிக்கும் என்பதினால் அருளிச்செய்யப்படவில்லை என்று தாத்பர்யம்.

இப்படிக் குருபரம்பரானுஸந்தானத்திற்கு ஒரு நிதர்ஶனம் அருளிச்செய்து, இப்படி குருபரம்பரையை அனுஸந்திக்காவிடில் ப்ரத்யவாயம் சொல்லப்பட்டிருக்கிறபடியினால் இது நித்யமென்று அருளிச்செய்கிறார்—'஗ுரும் ப்ரகாஶயேத்' என்றாரம்பித்து. தீமாந் - புத்திமானானவன், ஗ுரும் - ஆசார்யனை, ப்ரகாஶயேத் - ப்ரகாஶம் செய்யவேண்டும், மந்த்ரம் - மந்த்ரத்தை, யத்நேந - ப்ரயத்னத்தினால், கோபயேத் - மறைக்கவேண்டும். அப்ரகாஶப்ரகாஶாப்யாம் - குருவை ப்ரகாசம் செய்யாததினாலும், மந்த்ரத்தை ப்ரகாசம்செய்வதினாலும், ஸம்பதாயுஷீ - ஜ்ஞாநஸம்பத்தும், மந்த்ரத்தில் நிஷ்டையும், க்ஷீயேதே - குறைந்து போகின்றன. இந்த வசனத்தில் குருவை ப்ரகாசம் செய்யவேண்டுமென்று விதித்திருக்கிறதே ஒழிய குருவினிடத்தில் பக்திசெய்ய வேண்டுமென்று விதிக்கவில்லையே ? என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம் அருளிச்செய்கிறார்— '஗ுருவை' என்றாரம்பித்து. ப்ரகாசம் செய்வது பக்தியினாலாகையினால் ப்ரகாசம் செய்யவேண்டும் என்று விதித்திருப்பதினாலேயே அதற்குக்காரணமான பக்திசெய்ய வேண்டுமென்பதேற்படுகிறதுஎன்றுதாத்பர்யம். இப்படி ப்ரகாஶத்தைச் சொல்லுகிற வசனத்திற்குப் பக்திவிதியில் தாத்பர்யம் கொள்கைக்கு ப்ரமாணமென்ன ? அப்படி பக்திபண்ணாவிடில் ஸம்பத்து க்ஷயிக்குமென்று சொல்லியிருக்க, அதை ஜ்ஞானஸம்பத்து என்றர்த்தம் பண்ணுவதற்கும் நியாமகமென்ன? என்கிற ஶங்கைகளுக்குப் பரிஹாரமாக குருபக்திக்கும் ஜ்ஞானத்திற்கும் கார்யகாரணபாவம்சொல்லுகிறஸ்ருதியை அதின் அர்த்தானுவாதபூர்வக

---

1 சேஷஸம்ஹிதை-14—50.

திற்போலே குருவிஷயத்திலும் பரையான பக்தியுடையவனுக்கு உபதேசிதார்த்தங்களெல்லாம் ப்ரகாசிக்குமென்னுமிடம் கடஜாபாலாதி ச்ருதிகளிலும் ஸஞ்ஜயாதி வ்ருத்தாந்தங்களிலும் ப்ரஸித்தம். இங்ஙனல்லாதார்க்கு இப்படி ஜ்ஞாநஸம்பத்துண்டாகாதென்னுமிடம் சிஷ்யர்களுடைய ஜ்ஞாந தாரதம்யத்தாலே

மாக உதாஹரித்தருளுகிறார்— 'குருவிஷயத்தில்' என்றாரம்பித்து. 'கட'ச்ருதியாவது 'எவனுக்குத் தேவதையினிடத்தில் (பக்தி இருக்கிறதோ), அப்படி ஆசார்யனிடத்திலும் (இருக்கிறதோ) அந்த மஹாத்மாவுக்கே உபதேசிக்கப்பட்ட அர்த்தங்கள் ப்ரகாசிக்கின்றன' என்றர்த்தமுள்ள வாக்யம். 'ஜாபால' ச்ருதியாவது— 'ஆசார்யனிடத்திலிருந்து அறியப்பட்ட வித்யையே ஸாதுதமத்வத்தை அடையும்' என்று அர்த்தமுள்ள வாக்யம். 'ஜாபாலாதி' என்கிற இடத்தில் 'ஆதி'சப்தத்தினால் ச்வேதாச்வதரம், சாந்தோக்யம் முதலிய உபநிஷத்துக்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. அவையாவன— 'ஆசார்யனையுடைய புருஷனே ப்ரஹ்மத்தை அறிகிறான்' என்றர்த்தமுள்ள வாக்யம் முதலியவைகள். 'ஸஞ்ஜயவ்ருத்தாந்தம்' என்பதினால் 'வ்யாஸப்ரஸாதாச்ச்ருதவாந்' என்று சொல்லியிருக்கிறபடியே ஆசார்யனாகிய வ்யாஸருடைய அனுக்ரஹத்தினால் திவ்யத்ருஷ்டி கிடைத்த சரித்திரம் அபிப்பிராயத்தில் கொள்ளப்பட்டது. இந்த அர்த்தத்தை வ்யதிரேகத்தினாலும் (எதிர்மறையாலும்) ஸமர்த்தித்தருளுகிறார். 'இங்ஙனல்லாதார்க்கு' என்றாரம்பித்து. இங்ஙனல்லாதார்க்கு - குருவினிடத்தில் பரையான (அதிகமான) பக்தி இல்லாதார்க்கு. 'கண்டுகொள்வது' என்பதற்கு ஒரே ஆசார்யனிடத்தில் காலக்ஷேபாதிகள் செய்த ஸமபுத்தியுள்ள ஶிஷ்யர்களுக்குள் ஜ்ஞானத்திலே தாரதம்யம் காணப்படுகிறபடியினாலும் அதற்கு வேறு காரணமில்லாமையினாலும், அது குருபக்தியின் தாரதம்யத்தினாலே வந்ததென்று ஊஹித்துக்கொள்ளவேண்டும் என்றர்த்தம். இங்கு 'உக்ரம் பதிநந்த்ரோபவேஶ' என்றது உபலக்ஷணமாகுமோ? குறைந்தவரான ஶிஷ்யர்களுக்கு அர்த்தங்களை உப

கண்டுகொள்வது. மிகவும் குணாதிகரான ஶிஷ்யர்களுக்கும் கடுக ஸச்சாஸ்த்ரவிஷயங்களை ப்ரகாஶிப்பியாதார்க்கு நிஷ்டை குலையாதென்னுமிடம் ரைக்வஜாபாலி வ்ருத்தாந்தங்களிலே ப்ரஸித்தம். பெற்றது குணமாக உபதேஶித்தால், 1 ‘ஶிஷ்யபாபம் குரோரபி’ என்கையாலே ஸ்வாசார்யனுக்கு நிஷ்டை குலையும்படியாமென்னுமிடம் வருவது விசாரியாதே ஜந்துனுக்கு உபதேஶித்துத் தானும் ப்ரஹ்மவித்யையை மறந்து

தேசிக்காவிட்டால் ‘வாத்ருஷ்யோத்தவிஜ்ஞாநம்’ என்றிவை முதலிய வசனங்களுக்கும், அப்படி உபதேஶியாதவனை ஜ்ஞானவலன் என்று நிந்தித்திருக்கிறதற்கும் விரோதமாகாதோ?வென்னில் அதற்குப் பரிஹாரம் அருளிச்செய்கிறார்— ‘மிகவும்’ என்றாரம்பித்து. ‘ரைக்வ’ வ்ருத்தாந்தமாவது— ஜாநஶ்ருதி என்னும் ஒரு ராஜா ஹம்ஸங்களின் வார்த்தையைக் கேட்டு ரைக்வர் என்கிற ப்ரஹ்மநிஷ்டரிடத்தில் ப்ரஹ்மவித்யையை உபதேஶம்செய்து கொள்ளவேண்டுமென்று தன்னுடைய ஸம்பத்துக்களில் பாதி பாகத்தை ஆசார்யனுக்குத் தக்ஷிணையாக எடுத்துக்கொண்டுபோன பொழுது உபதேஶியாமல் திருப்பியனுப்ப, பிறகு ஸர்வஸ்வத்தையும் ஸமர்ப்பித்தபொழுத் அவைகளை ப்ரதிக்ரஹியாமலே உபதேஶித்த வ்ருத்தாந்தம் சாந்தோக்யத்தில் (4- 2- 5) சொல்லப்பட்டிருப்பது. ‘ஜாபாலி’ ஶப்தத்தினால் உபகோஸலவ்ருத்தாந்தமும் ஸூசிப்பிக்கப்படுகிறது. அதாவது— அநேகவருஷகாலம் காத்திருக்கும்படி செய்து அவனுடைய பொறுமை முதலிய குணங்களை அறிந்து, பிறகு ஶிஷ்யனுக்கு உபதேஶம் செய்தாரென்பது. ‘பெற்றது குணமாக’ என்பதற்குத் தனக்குக் கிடைத்த ஶிஷ்யனை எல்லாக் குணங்களையுமுடையவனாக நினைத்து என்றர்த்தம். அன்றிக்கே ஶிஷ்யனைத்தான் பெற்றதே தனக்குஉத்கர்ஷாவஹம் என்று நினைத்து என்று தாத்பர்யமாகவுமாம். ஶிஷ்யபாபம் குரோரபி-ஶிஷ்யனுடைய பாபம் குருவையும் சேரும். வருவது விசாரியாதே-மேலே வரப்போகிற பலத்தை

---

1 மனுதர்மசாஸ்திரம்.

தன் ஶிஷ்யனை நாரதபகவானையிட்டு ஸர்வேஶ்வரன் உணர்த்திவிக்கவேண்டும்படி யிருந்த ஸநத்குமாரன் பக்கலிலே கண்டுகொள்வது. இப்படி 'அப்ரகாஶப்ரகாஶாப்யாம்' என்கிற இரண்டுக்கும் 'க்ஷீயேதே ஸம்ஶயாத்மநீ' என்கிற பதங்களை ஔசித்யத்தாலும் புராணப்ரஸித்தியாலும் ப்ரகரணத்தாலே உதாஹரித்த

அநுஸந்திக்காதே. 'இந்த்ரனுக்கு உபதேஶித்து' என்பதினால் ப்ரஹ்மா, இந்த்ரன் தனக்கு ஶிஷ்யனாகக் கிடைத்ததையே விஶேஷமாக நினைத்து அவனுக்கு ஶிஷ்யலக்ஷணம் பொருந்தியிருக்கிறதா என்று பார்க்காமல் உபதேஶித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'அப்ரகாஶப்ரகாஶாப்யாம்' என்கிற இடத்தில் அப்ரகாஶம், ப்ரகாஶம் இவைகள் இரண்டும் ஜ்ஞாநநிஷ்டைகள் குறைவதற்குக் காரணம் என்று பொதுவாகச் சொல்லியிருக்க அப்ரகாஶத்தினால் ஜ்ஞாநம் குலையுமென்றும், ப்ரகாஶத்தினால் நிஷ்டை குலையுமென்றும் தனித்துப் பிரித்து அந்வயம் சொன்னது ஸங்கதமாகுமோ? இதரேதரயோக த்வந்த்வஸமாஸமாகையினால் இவை இரண்டும் சேர்ந்து இரண்டு பலத்திற்கும் ஸாதனம் என்று ஏற்படும். ஆகையினால் அப்ரகாஶத்தினாலாவது, ப்ரகாஶத்தினாலாவது தனியாக ஒரு ப்ரத்யவாயம் நேரிடாது என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம் அருளிச்செய்கிறார்— 'இப்படி' என்று தொடங்கி. 'ஔசித்யத்தாலும்' என்பதற்கு 'ப்ரகாஶயேத்', 'ஶ்ராவயேத்' என்று தனித்தனியாக விதிவாக்யமிருக்கிறபடியினாலே ஒவ்வொரு விதியும் தனித்தனியே பலத்தை எதிர்பார்க்கிறபடியினாலும், ஸமானமான கணக்குடைய வஸ்துக்களுக்குக் கார்யகாரணபாவத்தைக் குறிக்குமிடத்தில் முறையே அந்வயிப்பது ந்யாயம் என்று ஶாஸ்த்ரஜ்ஞர்கள் ஒப்புக்கொண்டிருப்பதினாலும், இங்கு சொல்லியிருக்கும் இரண்டு பதங்களையும் இரண்டு வாக்யங்களுடன் முறையே அந்வயிப்பது உசிதமென்று தாத்பர்யம். 'புராணப்ரஸித்தியாலும்' என்பதற்கு ஜனகவ்ருத்தாந்தம், கடஜாபாலவ்ருத்திகள், சதுர்முகவ்ருத்தாந்தங்கள், இவைகளினால் என்று அர்த்தம். 'ப்ரகரணத்தாலே உதாஹரித்த வித்தை' என்பதற்கு முறையே அப்ரகாஶப்ரகாஶங்களுக்கு ஜ்ஞாநக்ஷயத்தின் ஸ்வரூபம், நிஷ்டாக்ஷயமும் ஆகிய இரண்டு பலங்களும் தனித்தனியே

வித்தனை. இரண்டிலும் இரண்டு ஃபலமும் அந்வயித்தாலும் வாக்யத்தில் வரும் விரோதமில்லை. ஆகையால் ஸர்வாவஸ்தையிலும் குருபக்தியின் வஶீகாரமாக குருவை ப்ரகாஶிப்பிக்கவும், ரத்நஸமுத்கமான மாணிக்கச் செப்புப்போலேயிருக்கிற திருமந்த்ரத்தினுடைய சீர்மையும் தன் நிஷ்டையும் குலையாமைக்காகச்

உதாஹரிக்கப்பட்டன என்றர்த்தம். ‘இரண்டிலும்’ இத்யாதிக்கு உத்தரார்த்தத்தில் இருக்கும் த்வந்த்வ ஸமாஸங்களினுடைய ஸ்வாரஸ்யத்தை அனுஸரித்து அப்ரகாஶத்திற்கும் இரண்டு பலம், ப்ரகாசத்திற்கும் இரண்டுபலம் என்று தாத்பர்யம் சொன்ன போதிலும் வாக்யங்களில் அந்வயத்திற்கு விரோதமில்லை என்றர்த்தம். இத்தால் கீழ் ஆக்ஷேபிக்கப்பட்டதைப்போல அப்ரகாசப்ரகாசங்கள் இவை இரண்டும் சேர்ந்து இரண்டு அநிஷ்டபலங்களுக்குக் காரணமாகையினால் அப்ரகாஶம் மாத்ரத்தினாலேயாவது ப்ரகாஶம் மாத்திரத்தினாலேயாவது ப்ரத்யவாயமில்லை என்று சொல்லில் பூர்வார்த்தத்தில்குருப்ரகாஶத்தையும்மந்த்ரத்தின் அப்ரகாசத்தையும் தனித்தனியே விதித்திருப்பதற்கு விரோதமாகும் என்று தாத்பர்யம். ஸர்வாவஸ்தையிலும். ஜ்ஞானமுண்டாவதற்கு முன்பும், ஜ்ஞானம் உண்டானதற்குப் பின்பும். இத்தால் குருபக்தி செய்தவனுக்கு ஜ்ஞானமுண்டாகும் என்று கடஶ்ருதியில் சொல்லியிருக்கிறபடியினால் ஜ்ஞானமுண்டாவதற்கு முன் குருபக்தி செய்யவேண்டியிருந்தபோதிலும், ஜ்ஞானமுண்டான பிறகு செய்யவேண்டியதில்லையே என்கிற ஶங்கை பரிஹரிக்கப்பட்டதாகிறது. எப்படியென்னில்? உண்டான ஜ்ஞானம் குருபக்தி செய்யாவிடில் குறைந்துவிடும் என்று கீழ் உதாஹரிக்கப்பட்ட வசனத்தில் ‘க்ஷீயதே’ என்று சொல்லப்பட்டிருக்கிறபடியினால். ‘குருபக்தியின் வஶீகாரமாக’ இத்யாதி—ப்ரகாஶம் செய்யவேண்டும் என்று விதித்திருப்பதற்கும் அதற்குக் காரணமான பக்தி செய்யவேண்டுமென்பதில் தாத்பர்யம் என்று கீழ் நிரூபிக்கப்பட்டது இங்கறியத்தக்கது. ‘ரத்ந’ இத்யாதி த்ருஷ்டாந்தத்தினால் திருமந்த்ரம் ஶப்தத்தினாலும் அர்த்தத்தினாலும் ஶ்லாக்ய

சில்வான ஹ்யொஜநங்களைப்பற்ற ஸிஷ்ய குணவ ருதியில்லாத வவனூர்க்கு வெளியிடாதே உஞுத்தை மிகவும் சேமிக்கவும் ஹாவும். இவ்விடத்தில் ஸாஸ லூம் வாஉ ஸாக்களுக்கும் உவலக்ஷணம். ஸாஉ

மென்பது தெரிவிக்கப்பட்டது. 'சீர்மை' யாவது உத்கர்ஷம். அதாவது- ச்லாக்யமான ஸ்வபாவம். 'தன் நிஷ்டையும்' என்பதற்கு ஆயுஸ் என்று கீழ்ச் சொல்லப்பட்ட மந்த்ரத்தில் நிஷ்டையும் என்றர்த்தம். குலையாமைக்காக-நஸியாமலிருப்பதற்காக, சில்வான ஹ்யொஜநங்களைப் பற்ற - அல்பப்ரயோஜனங்களுக்காக, அதாவது- 'பரக்கும் புகழ்வரும்' என்றாரம்பிக்கும் ஸ்ரீ அம்ருதாஸ்வாதினிப்பாட்டின்படியே க்யாதிலாபபூஜாதிகளான் ப்ரயோஜனங்களுக்காக என்று தாத்பர்யம். 'ஸிஷ்ய குணவருதியில்லாத' என்பதற்கு 'ஸஉ—ஜிஸாய ஸெவீ' என்று ஆரம்பித்து ஸ்ரீ ந்யாஸவிம்சதியில் நிரூபிக்கப்பட்டிருக்கும் குணங்கள் இல்லாத என்றர்த்தம். வவனூர்க்கு - சஞ்சலபுத்தியுடையவர்களுக்கு, சேமிக்க - மறைத்துவைக்க. இவ்விடத்தில் ஸிஷ்யகுணபூர்த்தி யில்லாதவர்களுக்கு மந்த்ரோபதேஸம் செய்தால் மந்த்ரத்தின் சீர்மை குலையும். சபலபுத்திக்கு உபதேஸம் செய்தால் தன் நிஷ்டை குலையும் என்று தாத்பர்யம் என்பது ஸ்ரீ ஸாரதீபிகையின் நிர்வாஹம். இப்படியாகிலும், 'ஸாஸ ப்ரகாஸயெசு' என்கிற வசனம் தனக்கு நேராக ஜ்ஞானப்ரதானம் பண்ணின குருவை ப்ரகாசம் செய்யவேண்டும், அப்படிச் செய்யாவிடில் ப்ரத்யவாயர் என்று விதிக்கிறதே ஒழிய, குருபரம்பரையை ப்ரகாஸிப்பிக்கிறதற்கு ப்ரமாணமாகுமோ? என்கிற ஸங்கையைப் பரிஹாரம் அருளிச்செய்கிறார் — 'இவ்விடத்தில்' என்றாரம்பித்து. அதாவது- ஸ்ருதியில் ஆசார்யவம்சத்தை அநுஸந்தானம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறபடியினால் அதை அனுஸரித்து இங்கிருக்கும் 'ஸாஸ' ஸப்தமும் பகவான் வரையிலான குருக்களை உபலக்ஷிக்கிறது என்று தாத்பர்யம். இப்படி 'ஸாஸ' ஸப்தத்திற்கு ஸ்வாசார்யனை மாத்திரம் அர்த்தமாக அங்கீகரித்து வசனத்தை யனுஸரித்து உபலக்ஷணபரம் என்று சொல்லுவது விளம்பிதப்ரதிபத்திமென்று நினைத்து கல்பாந்

ந்யமாகவுமாம். உத்ஸவம் உத்ராயணமும் முதலான ரஹஸ்யங்களுக்கும் ஆதிஸூர்யவம். தான் இந்த ரஹஸ்யங்களை அநுஸந்திக்கும்போதெல்லாம் ஆசார்யபரம்பரையை அநுஸந்திக்கையும் விஹிதமாவதும். இவ்வாசார்யர்களுடைய அநுஸந்தானம் [1] 'ஸம்ஹாஷ்ய

தாம் அருளிச்செய்கிருர்— 'ஸாஜாந்யமாகவுமாம்' என்று. அதாவது- குருசப்தத்திற்கு அஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்கிற வன் என்று அர்த்தமாகையினுல் நேராக உபதேசம் செய்தாவது, பரம்பரையாக உபதேசம் செய்தாவது அஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்கிறவர்கள் இங்கு குருசப்தத்தினுல் சொல்லப்படுகிருர்கள். ஆகையினுல் பரமகுருக்களும் குருசப்தத்திற்கு நேரில் அர்த்தம் ஆகிருர்கள் என்று தாத்பர்யம். மந்த்ரசப்தமும் அப்படியே மந்த்ரார்த்தம் முதலிய ஸம்ப்ரதாயார்த்தங்களுக்கு உபலக்ஷணம் என்று அருளிச்செய்கிருர்— 'உத்ஸவம்' என்ருரம்பித்து. இப்படி குருபக்தி நித்யமென்றருளிச்செய்து இனி இது நைமித்திகமாகவும் கூடுமென்றருளிச்செய்கிருர்— 'தான் இந்த'என்ருரம்பித்து. 'அநுஸந்திக்கும்போதெல்லாம்' என்பதற்குத் தன் காலக்ஷேபகாலத்திலும், ஶிஷ்யர்களுக்கு உபதேஶம் செய்யுங் காலத்திலும் என்று அர்த்தம். ' 'விஹிதமாவது' என்பதற்கு "ஸமாராதனம் ஸ்மிஷ்யாஹ்: வ்யாவர்த்தம் வாக்யதம் தயா' என்று ஆதிஶேஷவார்த்திகத்திலே மாவை வ்யாக்யாஸிப்பியாதொழிகையும் வதிக்கப்பட்டது" என்று ஶிஷ்யக்ருத்யாதிகாரத்தில் இவர் தம்மாலேயே உதாஹரிக்கப்பட்டிருக்கும் வசனத்தினுல் ஏற்படுகிறது என்று தாத்பர்யம். இப்படி உபராகஸ்நாந ஜாதேஷ்ட்யாதிகளைப்போன்ற நைமித்திகம் என்று நிர்ணயித்துவிட்டுப் பிறகு ப்ராயஶ்சித்தரூபமான நைமித்திகமுமாகலாம் என்று அருளிச்செய்கிருர்— 'இவ்வாசார்யர்களுடைய' என்று ஆரம்பித்து. 'ஸம்ஹாஷ்ய வர்ணக்ருதஃ' இத்யாதி— 'நஶ்வாஶ்வயாதிகெஃ ஸம்ஹாஷேத' என்று இதற்கு முன் வாக்யம். அதாவது- ம்லேச்சர்கள், அபரிசுத்தர்கள், அதர்மிஷ்டர்கள் இவர்களுடன் பேசக்

1 கௌதமதர்மசாஸ்திரம்,9–18.

வ ா ணொ்கூரெதா உநவஸா ஐொயெசு' என்கிறபடியே வூதிஷிஃவஸம்ஹாஷணத்திற்கு வூாயஸ்ரீத்தமுமாம்.

என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கி
யானடைவே யவர் குருக்க ளிரை வணங்கிப்
பின் னருளாற் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த வுய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்
டெம்பெருமான் றிருவடிக ளடைகின்றேனே. 3

கூடாது, அப்படிப் பேசினால் புண்யம் செய்தவர்களை மனதி னால் நினைக்கவேண்டுமென்று இரண்டு வாக்யங்களுக்கும் சேர்ந்தர்த் தம். 'வ்ரதிஷிஃவஸம்ஹாஷணத்திற்கு வ்ராயஸ்ரித்தமுமாம்' என்பதற்கு ஶாஸ்திரங்களில் பேசக்கூடாதென்று தடுக்கப்பட்ட வர்களுடன் பேசினதற்கு ப்ராயஶ்சித்தமாக ஸாமாந்யமாய்ப் புண்யம் செய்தவர்களை த்யானம் செய்யும்படி விதித்த இடத்தில் மஹானுபாவர்களான பூர்வாசார்யர்களை த்யானிப்பது விசேஷ மானது என்பது கைமுதிகந்யாயஸித்தம் என்று தாத்பர்யம்.

இப்படி நித்யமாகவும், நைமித்திகமாகவும், ப்ராயஶ்சித்த ரூபமாகவும் அவஶ்யம் செய்யவேண்டியதாக நிர்ணயிக்கப்பட்ட குருபரம்பராநுஸந்தானத்தை ஸுலபமாய்ச் செய்வதற்காக ஒரு ப்ரயோகம் அருளிச்செய்கிறார்— 'என்னுயிர் தந்தளித்தவரை' என்றாரம்பித்து. குருபரம்பரானுஸந்தானத்திற்கு வாக்யகுரு பரம்பரையைப்போலவே இந்தப் பாட்டும் மந்திரமாகலாம் என் பது திருவுள்ளம். இவ்விடத்தில் கீதை பதினேழாவது அத்தி யாயம் பத்தாவது ஶ்லோகவ்யாக்யானத்தில் ஸ்ரீகீதாபாஷ்யதாத் பர்யசந்த்ரிகையில் "தயா உஹாவ ாு ஷெகூரதஷூ த்ர ா ெஉ 8ஜூஉ சூகெவ லிஉ 'தக ிூடாதூம உஜூாமரு்ு' உகி ஸை வஉநூ்ெரஸீதஸூ ஶாயாகீதாஷெலவி உஜா ாூ்வஐ ஹொதிஹெதாகூம ெர கீவாஉூ்ெத" என்றிவர் தம்மாலேயே அருளிச்செய்யப்பட்டிருப்பது அநுஸந்தேயம்.

ப-ரை] யான் - நான், என் உயிர் - ஆத்மஸ்வரூபத்தை, தந்து - உபதேஶம்செய்து, அளித்தவரை - ரக்ஷித்தவரை, சரணம்புக்கு -

ஶரணமாக அடைந்து, அடைவே - க்ரமமாக, அவர் குருக்கள் - அவர்களுடைய ஆசார்யர்களின், நிரை - வரிசையை, இது ப்ராசார்யன் முதலாக ஸ்ரீபாஷ்யகாரர் வரையிலுள்ள ஆசார்யர்களை ஸங்க்ரஹிக்கிறது. வணங்கி, பின் - பிறகு அதாவது இப்படி ஆசார்யர்களை ஸேவித்த பிறகு, அருளால் - க்ருபையினால், பெரும்பூதூர் - ஸ்ரீபெரும்பூதூர் என்கிற திவ்யக்ஷேத்திரத்தில், வந்த-அவதரித்தவரான, ‘வந்த’ என்பதினால் ‘அடையார்கமலத்து’ என்கிற நூற்றந்தாதிப் பாசுரப்படிக்கும், ‘[illegible]’ என்கிற யதிராஜஸப்ததி ச்லோகப் படிக்கும் இவர் நித்யஸூரியின் அவதாரம் என்பது தெரிவிக்கப்படுகிறது. வள்ளல் - பரமோதாரரான எம்பெருமானார், பெரிய நம்பி - மஹாபூர்ணர், ஆளவந்தார், மணக்கால் நம்பி - ஸ்ரீ ராமமிஶ்ரர், நன்னெறியை - நல்ல மார்க்கத்தை, அதாவது— ப்ரபத்திமார்க்கத்தை, இது தத்துவ புருஷார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். அவர்க்கு - அந்த மணக்கால் நம்பிக்கு, உரைத்த - உபதேசித்தவரான, உய்யக்கொண்டார் - ஸ்ரீ புண்டரீகாக்ஷர், நாதமுனி, சடகோபன், சேனைநாதன் - ஸ்ரீ விஷ்வக்ஸேனர், இன்னமுதத் திருமகள் - போக்யமான அம்ருதம்போன்ற லக்ஷ்மீ, அதாவது— பகவானுக்கு அம்ருதம்போல் போக்யமான பெரிய பிராட்டியார் என்றபடி. அன்றிக்கே, இன் - தேவதைகளுக்குப் போக்யமான, அமுத - அம்ருதத்தில் உத்பவித்தவளான, அதாவது— ‘அமுதில் பிறந்த பெண்ணமுது’ என்கிறபடியே அம்ருதம் சக்கையாய் அதின் ஸாரமாய் அவதரித்த, திருமகள் - பெரிய பிராட்டியார் என்று அர்த்தமாகவுமாம். அதுவுமன்றிக்கே இன் - ஸர்வருக்கும் போக்யமான பகவானுக்கும் போக்யமாகையினாலே நிருபாதிகபோக்யையான, அமுத - அம்ருதஸத்ருஶையான, இத்தால் தேவதைகளுக்கு மாத்திரம் போக்யமான அம்ருதம் வ்யாவர்த்திக்கப்படுகிறது. ஆராவமுதாகிய பகவானுக்கும் போக்யமான இன்னமுது இவள் என்று தாத்பர்யமாகவுமாம். என்று இவரை - என்று சொல்லப்படுகிற இந்த ஆசார்யர்களை, அதாவது— ஸ்வாசார்யன் முதல் பெரிய பிராட்டியார் வரையிலான ஆசார்யர்களை, முன்னிட்டு-முதலில் ஆரம்பித்துக்கொண்டு,

ணெதெ ஊஹ்ரூஊவொஊஊநூயஶரொநூயாய நாயாஊய:
த்ரய்யந்தைஹ்ருதி நிஹிதீயவிவியொஊஊா:ஷஊஊாஶு ।
ஶ்ரூஊாதவ்யஶரணாஊஂவதிஊயாஶிவ்யாவஶாவ்யாவகா:
ஷஊஊாவிலவவிஷ்ருஊவஊவீவெவெஶிகா ஶெஶிகா: ॥

எம்பெருமான் - ஶ்ரிய:பதியினுடைய, திருவடிகள் - திருவடிகளை, அடைகின்றேன், ‘ ஏ ’ என்பது பாட்டின் பூரணார்த்தம்.

இப்படி குருபரம்பராநுஸந்தானம் அந்தக் குருக்களிடத்தில் பக்தி பூர்வகமாக இருக்கவேண்டுமென்று முந்தி அருளிச்செய்யப்பட்டிருப்பதினால், அந்த குருபக்திதானும் ஸம்ஸார தசையில் காமக்ரோதாதிகளினாலே கலங்கின மனதையுடையவர்களுக்கு உண்டாவது அஸம்பாவிதமாகையினாலே அந்த குருபக்தி உண்டாவதற்கு விரோதியான காமக்ரோதாதி நிவ்ருத்தியும் அந்த ஆசார்யர்கள் கடாக்ஷத்தினால் உண்டாகவேண்டும் என்று அவர்களை ப்ரார்த்திக்கிறார்— ‘ணெதெ’ என்றாரம்பித்து காமக்ரோதாதிகளினாலே கலங்கின சிஷ்யர்களை அனுக்ரஹிப்பதற்காகத் தாமருளிச்செய்த ப்ரார்த்தனை இங்கு க்ரந்தாரூடமாக அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. அவர்களும் இப்படியே ப்ரார்த்தித்து பக்தியை அடையவேண்டும் என்கிற திருவுள்ளத்தினால்.

பதவுரை] த்ரய்யந்தை - வேதாந்தங்களினால், ஹ்ருதி நிஹிதீய- கொண்டாடத் தகுந்தவையான, விவித - அநேகவிதங்களான, ஊஊா:-சரித்திரங்களையுடையவர், ஷஊஊா-ப்ராமாணிகமான அர்த்தம் அபலாரால் சொல்லப்பட்டதினால் அதை அநாதரிப்பது, அபலாரை அவமானம்செய்யவேண்டும் என்கிற அபிஸந்திமானவர், விலவ - அல்பஜ்ஞானர், விஷ்ருஊ - ...ஞ்சனை, அதாவது தான் ஸரியாக அர்த்தத்தை க்ரஹித்திருந்தாலும், அபலானுக்கு அப்படிச் சொல்லாமலிருக்கும்படி ... என்பவர், இவைகளின், வஊவீ - ..., வெவெஶி கா:-ஆசார்யஶ்ரேஷ்டர்கள், ஶ்ரூஊாதவ்ய - அடையக்கூடிய

வர்களாகிய, **ஶரண்யௌ** - ஶரண்யர்களான, அதாவது — ஶரணாகதிக்கு உத்தேஶ்யர்களான, **த³ம்பதீ** - தம்பதிகளின், **த³யா** - கருணையாகிற, **தி³வ்யாபகா³ம்** - கங்கையை, **வ்யாபகா:** - தங்களிடத்தில் வ்யாபரிக்கச் செய்கிற, அல்லது- ஶிஷ்யர்களிடத்தில் பரவும்படி செய்கிற, **ஏதே** - இந்த, **நாதா²த³ய:** - ஸ்ரீமந் நாதமுனிகள் முதலிய ஆசார்யர்கள், **மஹ்யம்** - என்பொருட்டு, அதாவது — எனக்கு **உத்ஸ்ருஷ்ட** - தள்ளப்பட்ட, **மந்மத²** - மன்மதனுடைய, **ஶர** - பாணங்களினுலுண்டாகிய, **உந்மாதா³ய** - பீடையை உடையவனாகும்படி, அதாவது— மன்மதனுடைய பாணங்களினால் உண்டான பீடையை நிவ்ருத்திசெய்து என்று தாத்பர்யம், **இஹ** - இந்த ஸம்ஸாரதசையில், **ஸ்வத³தாம்** - ருசிக்கவேண்டும் என்று ப்ரார்த்தனை.

இங்கு **‘ஏதே’** என்பதினால் இவர்களுடைய போக்யத்வம் ப்ரஸித்தம் என்பது தெரிவிக்கப்படுகிறது. ‘மஹ்யம்’ என்பதற்கு பால் பித்தோபஹதனுக்கு போக்யமாகாததுபோலக் காமாதிகளினால் கலங்கிய மனதை உடைய எனக்கு இவர்கள் போக்யமாகத் தோற்றுவது மிகவும் கஷ்டமானது என்றும், அந்தப் பாலே பித்தரோகத்தையும் ஶமிப்பித்துத் தன்னுடைய போக்யதையைத் தெரிவிப்பதைப்போல இந்த ஆசார்யர்கள் காமாதிகளினாலுண்டான காலுஷ்யங்களை நிவ்ருத்திசெய்து தங்களுடைய போக்யதையை அனுபவிப்பிக்கவேண்டும் என்றும் தாத்பர்யம். ‘மந்மத²ஶரோந்மாதா³ய’ என்றது க்ரோதாதிகளினால் உண்டாகும் பீடைக்கும் உபலக்ஷணம். அன்றிக்கே ‘காம ஏஷ: க்ரோத⁴ ஏஷ:’ என்று தனித்து ஸ்ரீகீதையில் அருளிச்செய்திருக்கச்செய்தே ‘காமாத் க்ரோதோ⁴பி⁴ஜாயதே’ என்று க்ரோதத்திற்கும் காரணமாகக் காமத்தை அருளிச்செய்திருப்பதினால் ஸர்வதோஷங்களுக்கும் காரணமான மன்மதஶரோந்மாதம் நிவ்ருத்திக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்ததினாலேயே ஸர்வதோஷ நிவ்ருத்தியும் ப்ரார்த்திக்கப்பட்டதாயிற்று என்று திருவுள்ளமாகவுமாம். இதரவிஷயங்களில் வைராக்யம் உண்டாகி, அதனால் மோக்ஷம் பெற வேண்டுமென்கிற ஆஶா உதித்து,

அதினால் குருவை ஆச்ரயித்து, அதற்குப் பிறகு குருபக்தி வர வேண்டியதாகையினால் குருபக்தியை அவச்யம் ப்ரார்த்தித்த பொழுதே காமாதி நிவ்ருத்திகள் முன்னமே இருக்கவேண்டும் என்று ஏற்படுகிறபடியினால், இங்கு 'ரூபம்' என்றருளிச்செய்திருப்பது ஸாமாந்யமான மன்மதனையல்ல. ஆகையினால் 'ஸாக்ஷாந்மந்மத மந்மத:' என்று ஸ்ரீபாகவதத்தில் சொல்லப்பட்ட பகவான் சொல்லப்படுகிறான். அவனுடைய ஶரங்களாவன— அவனுடைய கல்யாணகுணங்கள். அவைகளின் பீடை நிவ்ருத்திக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்கப்பட்டதாயிற்று. அதாவது— ப்ரதமபர்வமாகிய பகவானுடைய குணங்களில் ஈடுபாடு அவனிடத்தில் கைங்கர்யத்திற்கே விரோதம் ஆகலாம் என்று ஸ்ரீமத்ராமாயணத்தில் 'ஶாகே த்வாம் நாம ந காரயிஷ்யதி' என்று அருளிச்செய்யப்பட்டிருப்பதினால் அது ஆசார்யபக்த்யாதிகளுக்கு விருத்தம் என்பது கைமுதிகந்யாயஸித்தம். இப்படி ஆசார்யகைங்கர்யத்திற்கு விருத்தமான பகவத்பக்த்யாதிகள் நிவ்ருத்திக்கவேண்டுமென்கிற ப்ரார்த்தனை இங்கு செய்யப்பட்டதாகிறது என்று ஸ்ரீஸாரதீபிகையின் நிர்வாஹம். 'நாதாத்மஜ:' என்றது 'நாதேனாத்மஜம் ப்ராப்த:' என்கிறபடியே ஸ்ரீமந்நாதமுனிகள் ஸம்ப்ரதாயப்ரவர்த்தகர் என்பதைத் திருவுள்ளம்பற்றி.

'ப்ரஸஜ்ய ப்ரதிபந்தநீய விஷயோத்ஸாஹ:' என்பதினால் தைத்தரீயஉபநிஷத்தில் 'யோக்யர்களாயும், ஓரிடத்திலும் பக்ஷபாதமில்லாதவர்களாயும்' என்பது முதலாக அர்த்தமுள்ள வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கும் லக்ஷணங்கள் நம்மாசார்யர்களுக்கே பொருத்தமுடையதாயிருப்பதினால் அவைகள் அவர்களையே குறிக்கின்றன என்று திருவுள்ளம். அன்றிக்கே நம் பூர்வாசார்யர்கள் 'நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை:' என்று ஆரம்பித்து ஸங்கல்பஸூர்யோதயத்தில் அருளிச்செய்தபடியே வேதாந்தங்களுக்கு ஸ்வரஸமான அர்த்தங்களை நிரூபித்து 'க்வசித் விதாவந்து ப்ரத்யவாயந்து' என்கிறபடியே கெட்ட அர்த்தங்களை நிரஸனம் செய்ததினாலுண்டாகிய உபகார ஸ்ம்ருதியினால் வேதாந்தங்கள் பகவானுடைய குணங்களை ஸ்துதித்திருப்பதுபோல ஸ்ரீரங்கநாதமுனி ப்ரப்ருதிகளான நம் பூர்வாசார்யர்களை ஸ்தோத்திரம் செய்திருக்கப் பொருந்தும்

என்று திருவுள்ளமாகவுமாம். அதுவுமன்றிக்கே வேதாந்தங்களினாலும் ஸ்துதிக்கத் தக்கவைகளேயன்றி இவர்களின் பெருமைகள் உள்ளபடியாகச் சொல்லமுடியாவென்று தாத்பர்யமாகவுமாம். 'உதஞா:' என்றது குணங்களுக்குமுபலக்ஷணம். இதினால் பகவானைப்போல அஸங்க்யேய கல்யாணகுணமஹோததிகள் நம் ஆசார்யர்கள் என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. 'ஶுஜாதவ' இத்யாதியினால் ருத்திரன் கங்கையைத் தன் ஜடையில் அடக்கிவைத்துக்கொண்டிருப்பது போல பகவானுடைய கருணையாகிற ஒரு கங்கையை நம் ஆசார்யர்கள் தங்களிடத்தில் அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இவர்களுடைய ப்ரஸாதத்தினாலேயே பகவானுடைய க்ருபையை நாம் அடையமுடியும் என்பது த்யோதிதம். அன்றிக்கே 'கமலையுகந்த கடற்கிடைக் கடல் கருணை உயர்ந்திடர்க்கொருக்கினர்' என்று பரமதபங்கத்தில் இவர்தாமே அருளிச்செய்திருக்கிறபடியே பகவானுடைய தயையாகிற கங்கையை அது ஏறிப்பாய்வதற்கு ப்ரஸக்தி இல்லாத மேட்டு நிலமான நம்மிடத்தில் பாயும்படி செய்கிறவர்கள் என்று தாத்பர்யமாகவுமாம். இத்தால் இவர்கள் செய்த உபகாராதிஶயம் த்யோதிதமாயிற்று. மேலும் இவர்கள் ஸகலகல்யாணகுண பரிபூர்ணராயிருக்கத் மாத்திரமன்றியே இவர்களுடைய கல்யாணகுணங்கள் நம்மளவில் பர்யவஸிதமானபடி தெரிவிக்கப்பட்டதாயிற்று. ஆகையினால் ஆழ்வார் 'உயர்வறவுயர்நலமுடையவன்' என்று அநந்தகல்யாணகுணத்வத்தை முதலில் உபபாதித்து, அது தனக்கும் உபகாரமாகப் பர்யவஸன்னமானபடியை 'மயர்வற மதிநலமருளினன்' என்று அருளிச்செய்த க்ரமம் இங்கு விவக்ஷிதம். 'ஸஊா' இத்யாதியால் ஹேயப்ரத்யநீகத்வம் சொல்லப்படுகிறது. 'வஉவீவெஷெபிகா:' என்பதற்கு இவர்களுடைய பரம்பராஸம்பந்தம் உடையவர்களிடத்திலும் அப்படிப்பட்ட தோஷங்களில்லையாகையினால் அவைகளுக்கு வெகு தூரத்திலிருப்பவர்கள் என்று அர்த்தம். 'ஐஹ ஷஉஞா' என்பதினால் முக்தி தசையில் வரப்போகிறமஹாபலமாகிய குருபக்தி இஸ்ஸம்ஸாரதசையில் தனக்குக் கிடைக்கவேண்டுமென்றுப்ரார்த்திக்கிறார். அன்றிக்கே எல்லோரும்

𑌹𑍃𑌦𑍍𑌯𑌾 𑌹𑍃𑌤𑍍𑌪𑌦𑍍𑌮𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨
𑌰𑌸𑌿𑌕 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵 𑌹𑍇𑌷𑍋𑌰𑍍𑌮𑌿𑌘𑍋𑌷
𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌿𑌦𑍃𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌜𑌯𑌤𑌿
𑌬𑌹𑍁𑌗𑍁𑌣𑌾 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍂𑌣𑌾𑌮𑍍 ।
𑌦𑌿𑌕𑍍𑌕𑌾𑌲𑌾𑌵𑌶𑍍𑌯 𑌜𑍈𑌤𑍍𑌰 𑌧𑍍𑌵𑌜𑌪𑌟𑌪𑌵𑌨
𑌸𑍍𑌫𑌾𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌤 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌸𑍍𑌤𑍋𑌮 𑌤𑍂𑌲𑌸𑍍𑌤𑌬𑌕
𑌵𑌿𑌗𑌮𑌨 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌦𑍍𑌵𑌰𑍍𑌤𑌨𑍀𑌕𑌾 ॥

தன்னை யாஶ்ரயிக்க அவதாரம் பண்ணி அதிமானுஷ சேஷ்டிதங்களைச் செய்து மனுஷ்ய ஸஜாதீயனாக 'தன் தெய்வநிலை யுலகிற் புகவுய்க்குமம்மான்' என்கிறபடியே தன்னுடைய ஶக்தி முதலியவைகளை ப்ரகாஶம் செய்துகொண்டிருக்கச் செய்தேயும் '𑌅𑌵𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌮𑍂𑌢𑌾𑌃 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 । 𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮 𑌭𑍂𑌤𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍' என்று ஸ்ரீகீதையில் பகவான் அருளிச்செய்திருக்கிறபடியே ஸஜாதீயத்வபுத்தியைப் பண்ணுகிற இந்த லோகத்தில் அப்படி பகவானென்பதற்கு அடையாளங்கள் ஒன்றுமில்லாமல் கேவல ஸௌலப்யத்தையடைந்திருக்கிற ஆசார்யர்களிடத்தில் மிகுந்த பக்தியுண்டாவது மிகவும் அஸம்பாவிதமாகையினால், அப்படிப்பட்ட இந்த இடத்திலேயே விஶேஷபக்தி உண்டாகவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறாராகவுமாம்.

இப்படி குருபக்தியை ப்ரார்த்தித்த மாத்திரத்திலேயே இவர் ப்ரார்த்தித்த ப்ரகாரம் ஆசார்யர்களுடைய கடாக்ஷத்தினால் குருக்களிடத்தில் நிரவதிக பக்தியுண்டாய் அந்தப் பக்தியின் பரிவாஹமாகத் தாம் செய்த அனுஸந்தானத்தை ஶிஷ்யானுக்ர[illegible] க்ரமத்தில் அருளிச்செய்கிறார்— '𑌹𑍃𑌦𑍍𑌯𑌾' என்று ஆரம்பித்து. இந்த [illegible] திருவடி '[illegible]' என்று ஆரம்பித்து [illegible] போலிருக்கிறது என்று நம் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்யும்படி. அந்த ஆசார்யர்களை [illegible] உண்டான [illegible] ஶயம், இந்த ஶாமக்ரோதாதிகளான புக்திகண்டாபதத்தில்

தஸ்கரர்களைப்போன்ற ப்ரபல விரோதிகளை நிரஸித்த ஹர்ஷாதி ஶயம்.

[ப-ரை] **ஹ்ருஷ்யத்** - மிகவும் ஆநந்தரூபமாகத் தோன்றுகிற, **ஹ்ருத்கமல** - தாமரைப்பூவைப்போலிருக்கும் ஹ்ருதயமென்று சொல்லப்படுகிற ஸ்தானவிஶேஷமாகிற, **ஸிம்ஹாஸந** - ஸிம்ஹாஸனத்தில், **ரஸிக** - மிகவும் ஆசையையுடையவராகிய, அல்லது மிகவும் ஆநந்தத்தையுடையவராகிய, **ஹயக்ரீவ** - ஹயக்ரீவனுடைய, **ஹேஷாகோஷ**-ஸமுத்திரத்தின் அலைகளின் ஶப்தத்தைப்போன்ற கனைப்புகளினால்,**க்ஷிப்த**-போக்கடிக்கப்பட்ட, **ப்ரத்யர்த்தி தர்ப்போஷ்மா** - ஶத்ருக்களின் கொழுப்பையுடையதும், **பஹுகுணா** - அனேகவிதமான குணங்களையுடையதும், **திக்ஷு** - திக்குக்களாகிற, **வலய** - மெத்தைகளில், **பத்த** - கட்டப்பட்ட, **ஜைத்ர**-ஜயத்தைத் தெரிவிக்கக்கூடியவைகளான, அல்லது ஜயத்தைக் கொடுக்கக் கூடியவைகளான, **த்வஜபட** - நிஶான்களில் கட்டப்பட்ட துணிகளினாலுண்டாகிற, **பவந** - காற்றினுடைய, **ஸ்பாதி** - வீசுவதினால், **நிர்யத்** - தள்ளப்பட்ட, **தத்தத்** - அந்தந்த, **ஸித்தாந்த** - ஸித்தாந்தங்களினுடைய, **யூத** - கும்பல்களாகிய, **தத்சுஞ்சவக** - புஞ்சுக்கொத்துகளின், **விகம** - போவதினால், **வ்யக்த** - ப்ரகாஶமாயிருக்கிற, **ஸத்வர்த்தநீகா** - நல்ல மார்க்கத்தையுடையதுமான, அல்லது பெரியோர்களின் மார்க்கத்தையுடையதுமான, அன்றிக்கே அநாதியாக ஸித்தமான மார்க்கத்தையுடையதுமான, **ஸம்ப்ரதாயப்ரவர்த்தகாணாம்** - நம் ஆசார்யர்களுடைய, **ஸந்ததி:** - பரம்பரை, **ஜயதி** - மேன்மைபெற்று விளங்கிக்கொண்டிருக்கிறது.

இத்தால் ஆசார்யபரம்பரையினால் செய்யப்பட்ட பரமத நிரஸனமும், ஸ்வமதஸ்தாபனமுமாகிற உபகாரம் அனுஸந்திக்கப்பட்டதாகிறது. '**ஹ்ருஷ்யத்**' என்பதினால் 'ஸமுத்ரஸ்நாநம் போலே விலக்ஷணமான இவ்வனுபவத்தை' என்று ஶிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் இவர்தாமே அருளிச்செய்திருக்கிறபடியே மஹா ஆநந்தரூபமான பகவதனுபவத்தைக் காட்டிலும் இவ்

வாசார்ய பரம்பராநுஸந்தானம் மிகவும் ஆநந்தாவஹமானபடி த்யோதிதம். 'ஹ்ருத்ஸ்வ' இத்யாதியினால் பரமபதம், க்ஷீராப்தி முதலிய ஸ்தானங்களைவிட நம் பூர்வாசார்யர்களினுடைய ஹ்ருதய கமலம் பகவானுக்கு மிகவும் அபிமதமான வாஸஸ்தானம் என்பது தெரிவிக்கப்படுகிறது 'கல்லும் கனைகடலும் வைகுந்தவானாடும் புல்லென்றொழிந்தனகொல் ஏ பாவம் வெல்லநெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான் அடியேனதுள்ளத்தகம்' என்கிற பெரிய திருவந்தாதிப் பாசுரமும், 'பனிக்கடலில்' இத்யாதி பெரியாழ்வார் திருமொழிப் பாசுரமும் இங்கநுஸந்தேயங்கள். நம் பூர்வாசார்யர்கள் பரவாதிகளை நிரஸனம் செய்வதற்காக அருளிச் செய்கிற வாக்யங்களை ஹயக்ரீவனுடைய ஹேஷாரவமாகத் திருவுள்ளம்பற்றி 'ஹேஷாஹிஹேஷா' இத்யாதி அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இதினால் வாக்யத்தை அவர்கள் உச்சரிக்கும்பொழுது உண்டாகும் காம்பீர்யமும், தடங்கலில்லாமல் ப்ரஸரிப்பதும், ஶ்ரமமில்லாமல் உச்சரிப்பதும் தெரிவிக்கப்பட்டதாகிறது. ஸ்ரீஹயக்ரீவன் இவர்களுடைய ஹ்ருதயகமலத்தில் வஸிக்கப்பெற்றோமே என்கிற ஸந்தோஷத்தின் பரீவாஹமாய் ஹேஷாரவத்தைச் செய்ய வஸ்து ஸ்வபாவத்தினால் ப்ரதிவாதிகள் தானே நிரஸ்தரானார்கள். 'ஸூந்ருதம் தவிஷஸம்மிஶ்ரம் ரஸ்யாவலீஷு ஜக்ருஹோ:' என்கிறபடியே ரஸ்யமாக ஸ்தந்யபானம் செய்ய வஸ்து ஸ்வபாவத்தினால் பூதனை தானே நாஶமடைந்தாப்போல என்று ஸ்ரீஸாரதீபிகையில் வ்யாக்யாதம். 'வஹ்ந் ஶ்ரணா:' என்பதினால் ப்ரதிவாதி நிரஸனத்திற்கும், ஸ்வமத ஸ்தாபனத்திற்கும் உபயுக்தங்களான ஜ்ஞானஶக்த்யாதிகள் மாத்திரமன்றிக்கே மற்றும் ஸகலகல்யாணகுணங்களினாலும் நிறைந்தவர்கள் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'திக்ஷ்வளயாவலஜேத்ருபுஜ'ங்கள் என்றது அந்தந்த இடங்களில் வஸித்துக்கொண்டிருக்கிற 'வென்றிபுகழ்த் திருவேங்கடநாத'னென்று சொல்லப்படுகிற தம்மைப்போன்ற ஶிஷ்யர்களை. அவர்களுடைய 'வட'ங்களாவன-ஸ்ரீதத்வடீகை, ஸ்ரீசதுர்ஶ்லோகீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்கள். அப்படியே 'யத்வக்த்ர [illegible] ஸாஷ்ட்யுஸ்யாதுஸ பயா [illegible]'

என்று ஸ்ரீ தத்வடீகையிலும், 'வ்யஸந ஸஹநவ்ரஜோசிததயா ஜய யஜவபுஷிகா' என்று ஸ்ரீ சதுஃஶ்லோகி பாஷ்யத்திலும் அருளிச் செய்யப்பட்டிருப்பது இங்கநுஸந்தேயம் என்று ஸ்ரீ ஸாராஸ்வாதிநியில் வ்யாக்யாதம். ['வ்யஸநஸஹந' என்கிற ஶ்லோகம் இப்பொழுது காணப்படும் ஸ்ரீகோசங்களில் விட்டுப்போயிருக்கிறது] அவைகளின் '**வசந**'ங்களாவன அவைகளினறியப்படும் விஷயங்கள். அவைகளின் '**ஹாதி**'யாவது அவைகளைப்பற்றிய உத்தரோத்தரயுக்திவிசாரங்கள். '**தத்த்வஹிதாநுஷ்டாஹஸ்தா:**' என்பதினால் 'ஸகலஸ்ம்ருதிகாஹ்வேதசேஷ: தத்த்வஹிதாநுஷ்டாநகே: உபபூர்வதஸ்ய தத்தஸ்ய ஶாஸ்த்ரயேஷாரயவேஷு ஹஸ்தா:' என்கிற ஶ்லோகம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறபடியினால், ஸ்ரீந்யாய ஸித்தாஞ்ஜநம் இங்கு அநுஸந்தேயம் என்கிறதுவுள்ளார். '**ஹஸ்தா:**' என்பதற்கு ஒவ்வொரு யுக்தியே அநேக அபஸித்தாந்தங்களைத் தள்ளக்கூடிய ஶக்தியையுடையதாயிருக்கிறது என்று தாத்பர்யம் எப்படியென்னில், ஆத்மா ஜ்ஞாதா என்று ஸமர்த்தனம் செய்ததினால் நான்குவித பௌத்தர்கள், மூன்றுவித அத்வைதிகள் இவர்களின் நிரஸனம் எற்படுவதைப்போல ஆகும். அவைகளைப் பஞ்சுகளின் கும்பலாக நிரூபித்திருப்பதினால் தன்னுடைய மதத்தை ஸ்தாபிக்கும்பொழுது அவைகள்ஸ்வயமே கழிந்துவிடுகின்றன என்பது த்யோதிதம். '**ஸசதுரீகா**' என்பதற்கு வ்யாஸ போதாயநாதிகளினாலே ப்ரதிபாதிக்கப்பட்ட மார்க்கம் இப்பொழுது ப்ரகாஶம் செய்யப்பட்டதேயன்றி இது புதிதாய் உண்டாக்கப்பட்டதன்று என்று தாத்பர்யம். 'நிஶாத்ருஶாம் யஆ நிஜகதிரஸ்காரவிஶாரதாநிராதஜ்ஞாஷ்டக்கந்ருஷிகாஹஸேவ ஹ்ருதயம்:' என்று யதிராஜஸப்ததியில் அருளிச்செய்திருப்பது இங்கு அநுஸந்தேயம்.

இப்படி பொதுவாகக் குருபங்க்தியை அநுஸந்தானம் செய்து, ஸித்தாந்தத்திற்கு அதிகமாக உபகாரம் செய்த ஆசார்யர்களைத் தனித்தனியே அநுஸந்தானம் செய்கிறார். இப்படி அவர்களைத் தனித்து விஶேஷ கௌரவத்துடன் அநுஸந்திக்க வேண்டுமென்பது வாக்யகுருபரம்பரையிலும் 'ஸ்ரீ', 'ஸ்ரீஶ',

ஆரணநூல் வழிச்செவ்வை யழித்திடுமை துகர்க்கோர்
வாரண மாயவர் வாதக் கதலிகண் மாய்த்தபிரான்
ஏரணி கீர்த்தி யிராமானுச முனி யின் னுரைசேர்
சீரணி சிந்தையினேஞ் சிந்தியோமினித் தீவினையே. 3

‘ஸ்ரீமதே’ என்கிற ஶப்தப்ரயோகங்களின் ஸ்வாரஸ்யத்தினல் தெரிவிக்கப்படுகிறது. அதில் முதலில் ஸ்ரீபாஷ்யகாரர்விஷயமாக அருளிச்செய்கிறார்— ‘ஆரணநூல்’ என்றாரம்பித்து.

[ப-ரை] ஆரணநூல் - வேதாந்த ஶாஸ்திரத்தின் அதாவது உபநிஷத்பாகத்தின், செவ்வை - நன்றாக அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும் தன்மையை, அழித்திடும் - கெடுக்கிற, ஐதுகர்க்கு - ஹேதுவாதம் பண்ணுகிறவர்களுக்கு, ஓர் - அத்விதீயமான, வாரணமாய் - யானையாய், அவர் - அவர்களுடைய, வாதக்கதலிகள்- வாதங்களாகிற வாழைகளை, மாய்த்த - நசிப்பித்த, பிரான் - உபகாரகரான, ஏர் - அநுரூபமான, அணி - பூமிக்கு அலங்காரமான, கீர்த்தி - கீர்த்தியையுடைய, இராமாநுசமுனி - ஸ்ரீபாஷ்யகாரருடைய, இன் - போக்யங்களான, உரை - ஸ்ரீஸூக்திகளை, சேர் - சேர்ந்திருக்கிற, சீர் - குணங்களினால், அணி - அலங்கரிக்கப்பட்ட, சிந்தையினோம் - சிந்தையையுடைய நாம், இனி - இதற்குப்பிறகு, தீவினை - பாபத்தை, சிந்தியோம் - நினைக்கமாட்டோம். ‘செவ்வை யழித்திடும்’ என்பதற்கு வேதங்கள் தானே ஒருவிதமான தடங்கலுமில்லாமல் அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும் தன்மை உடையவைகளாயிருக்க அவைகளில் சில பாகங்களை ப்ரமாணங்களன்றென்றும், ப்ரமாணமாக ஒப்புக்கொண்ட பாகத்திலும் லக்ஷணையாக அர்த்தம் சொல்லவேண்டும் என்றும், எல்லா வேதங்களும் அவித்யா கல்பிதமென்றும், இவை முதலிய வாதங்களினால் வேதத்தின் ப்ராமாண்யத்தை யழிக்கிற என்பர்த்தம். ‘து₃ர்வேஷாதோ₃ஷ்ணா நிஹிதஶதபஞ்சாஶதே’ என்கிற ஸ்ரீமத் தத்த்வஸாரஶ்லோகம் இங்கு அநுஸந்தேயம். அன்றிக்கே ‘ஆரணநூல்’ என்பது வேதாந்த ஸூத்ரமாகவுமாம். அதின் வழியாவது உபநிஷத்தின் அர்த்தங்களை யுக்தி ஸஹகாரங்களாலே விசாரிப்பதாய், ‘ஜந்மாத்₃யஸ்ய யத:’ என்றிவை முதலிய லக்ஷணத்தோடு கூடியதாயுமிருப்பது. அதின் ‘செவ்வை

யை யழித்திடு'கையாவது ஸூத்ராக்ஷரங்களுக்கு அனுகுண மான அர்த்தங்களைச் சொல்லாமல் தாங்கள் மனதிற்கொண்ட அர்த்தத்திற் கனுகுணமாக ஸூத்ரங்கள் கௌணமாக அர்த் தங்களைச் சொல்லுவதாக வ்யாக்யானம் பண்ணுகை. அப்படியே 'யதாவதயம் ஸர்வேஷாம் வேதாந்தாநாம் தாத்பர்யம் ஸ்யாத் ஶாரீரகமீமாம்ஸாயாம் ப்ரதர்ஶயிஷ்யாம:' என்று ஶங்கர பாஷ்ய அவதாரிகை. 'ஐதுகர்க்கு' என்பதற்குக் கேவலம் யுக்தி யையே தங்கள் மதத்திற்கு ப்ரதானஸாதனமாகக் கொள்ளுகிறவர் களுக்கு என்றர்த்தம் 'வாரணமாய்' என்பதினால் ஒருவராலும் தடுக்கமுடியாமையும், அதிக தீரஸ்வபாவமும், எதிரிகளை அநாத ரித்திருப்பதும் விவக்ஷிதம். இங்கு 'பண்டருமாறன் பசுந் தமிழ்' என்றாரம்பிக்கும் நூற்றந்தாதிப்பாசுரம் அனுஸந்தேயம். 'ஏரணி கீர்த்தி' என்பதற்கு நம் இராமானுசனுடைய கீர்த்தி ப்ரசாரத் தினாலே பூமி முழுவதும் அலங்கரிக்கப்பட்டதாகிறது என்று திருவுள்ளம். இவ்விடத்தில் 'அலர்ந்தவம்புயத்திருந்து' என்றாரம் பிக்கும் அம்ருதாஸ்வாதிநிப்பாசுரம் அனுஸந்தேயம். 'இன்னுரை' என்பதற்கு போக்யதா ப்ரகர்ஷத்தினாலே 'ஸாரம் விவ்ருண்வந்து' என்று ஸ்ரீபாஷ்யத்திலருளிச்செய்திருக்கிறபடியே ஸதா அனுபாவ்யம் என்று தாத்பர்யம். 'சேர் சீரணி சிந்தையினோம்' என்பதற்கு 'நிவிஷ்டம் யதி ஸார்வபௌம வசஸாம் வ்ருத்தி ஶ்ரியம் ந:' என்று நிகமநாதிகாரஶ்லோகத்தில் அருளிச்செய் திருக்கிறபடியே அநவரதம் அதிலேயே ஊன்றியிருக்கிற புத் தியையுடைய நாம் என்று தாத்பர்யம். 'சீரணிசிந்தையினோம்' என்பதினால் 'உபேதாமப்யுபேதவ்யம் பணிதி ஸதாஸம்போதநா போத்ரஶ்லாக்ய ஜநசேதோதந்யமிஷ்டம் வதாம்யேஷா நிஷ்டாஸ்' என்றிவர் தாமே ஸ்ரீயதிராஜஸப்ததியிலும், 'ஶரீராவாப்த ஸத்ப்ரகர்ஷண முநிமிந்து யதிநாநதே' என்று ஸ்ரீஸங்கல்பஸூர் யோதயத்திலும், 'தத்த்வத்ரய ப்ரமாத்ரூஷிணாதமீஷ்ம ஹ்ருஷ்ட யதீஶாந்தவஸ்' என்று ஸ்ரீ கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையிலும் அருளிச்செய்திருக்கிறபடியே பூர்வாசார்யர்களுடையவும் ஶ்ரிய: பதியினுடையவும் அனுக்ரஹவிஶேஷத்தினாலும், அவர்களுடைய க்ரந்தங்களில் அநவரத பரிசயத்தினாலும் உண்டாகிய குணவிஶே

நீளவந்தின்று விதிவகையா னினைவொன்றிய நாம்
மீளவந்தின்னும் வினையுடம் பொன்றி விழுந்துழலா
தாளவந்தாரென வென் றருடந்து விளங்கியசீர்
ஆளவந்தா ரடியோம் படியோமினி யல்வழக்கே. 4

ஷங்களையுடையது தம்முடைய சிந்தை என்பது தெரிவிக்கப்படு கிறது. 'சிந்தியோமினித் தீவினையே' என்பதற்குக் கீழ்ச்செய்த பூர்வபாபங்களைப்பற்றி இனி வ்யஸனப்படமாட்டோம் என்றர்த்தம். அதாவது எம்பெருமானார் அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யம், கத்யம் முதலிய ஸ்ரீஸூக்திகளினால் ப்ரபத்தியின் ப்ரபாவத்தை யதாவத்தாக அறிந்தபிறகு, பூர்வபாபங்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று தாத்பர்யம். இத்தால் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்தி பரிசயத்தினால் தனக்கு ஸர்வஶோக நிவ்ருத்தி உண்டானதைப்பற்றி அவர்களிடத்தில் உபகாரஸ்ம்ருதி செய்யப்பட்டதாயிற்று. அன்றிக்கே, எம்பெருமானாருடைய ஸ்ரீஸூக்திகளில் தம்முடைய புத்தி சென்றபிறகு இனி பாபத்தைப் புத்தியினால் யோசிக்கமாட்டோம் என்று தாத்பர்யமாகவுமாம். அதாவது உத்தராகத்திலிருந்து மனது நிவ்ருத்தமானபடி அனுஸந்திக்கப்பட்டது.

இப்படியே விஶேஷ உபகாரகரான ஸ்ரீஆளவந்தார் விஷயமாகவும் ஒரு மங்களமருளிச்செய்கிறார் — 'நீளவந்தின்று' என்றாரம்பித்து.

[பதவுரை] நீளவந்து - நெடுங்காலமாக ஸம்ஸாரத்திலேயே ஸஞ்சரித்துக்கொண்டுவந்து, இன்று - இந்த ஜன்மத்திலே, விதிவகையால் - பாக்யவசத்தினாலே, நினைவு ஒன்றிய - நல்ல எண்ணத்தை அடைந்த, நாம், இன்னம் - இதற்கு மேலும் மீளவும் - திரும்பவும் இந்தஸம்ஸாரத்திலேயே வந்து, வினையுடம்பொன்றி - கர்ம ஸம்பந்தமுடைய ஶரீரத்துடன் சேர்ந்து, விழுந்துழலாது - கீழே விழுந்து ஸம்ஸாரத்திலேயே உழன்றுகொண்டிராமல், ஆளவந்தாரென - நம்மை ரக்ஷிக்க வந்தவர் என்று சொல்லும்படி, வென்று - ஜயித்து, விளங்கிய - ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிற, சீர் - கல்யாணகுணங்களையுடைய, ஆளவந்தாரடியோம் - ஸ்ரீஆள

வந்தாருக்குத் தாஸபூதர்களான நாம், இனி - இதற்குமேல். அல்வழக்கு - அல்லாத வழக்குகளை அதாவது அபஸித்தாந்த ந்யாயங்களை, படியோம் - வாசிக்கமாட்டோம்.

'நீளவந்து' என்பதற்கு ஸம்ஸாரம் அநாதியென்றும், 'விதி வகையால்' என்பதற்கு நடுவில் 'ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந:' என்கிறபடியே பகவானுடைய கடாக்ஷத்தை ஏதோ ஒரு பாக்யவசத்தால் பெற்றோம் என்றும், 'நினைவொன்றிய' என்பதற்கு தேஹத்தைவிட ஆத்மா வேறு, அது பகவானுக்குத் தாஸபூதமானது என்கிற ஜ்ஞானத்தைப் பெற்ற' என்றும் தாத்பர்யம். இத்தால் மோக்ஷமாகிற புருஷார்த்தத்தை அபேக்ஷிக்க ஸமர்த்தரானோம் என்பது அர்த்தாத் ஸித்தமாகிறது. 'வினையுடம்பு' என்பதினால் கர்மங்களினால் உண்டாக்கப்பட்டதாய் மேலும் கர்மங்களுக்குக் காரணமாகையினால் கர்மங்களோடு சேர்ந்தது சரீரம் என்பது த்யோதிதம். 'ஒன்றி' என்பதற்குத் தேஹாத்ம ப்ரமம் முதலியவைகளையடைந்து என்றர்த்தம். 'விழுந்து' என்பதற்கு 'க்ஷிபாமி' என்கிற ஸங்கல்பத்திற்கு விஷயபூதர்களாய், 'க்ஷிபாம்யஜஸ்ரமசுபாந்' என்கிற ஸ்ரீகீதாச்லோகத்தின்படியே கீழே விழுந்து என்றர்த்தம். 'உழலாது' என்பதற்கு அந்த நரகாதிகளிலே அதிதீர்க்ககாலம் ஸஞ்சரித்துக்கொண்டிராமல் என்றர்த்தம். அதாவது இப்படி ஸ்ரீ ஆளவந்தார் நம்மைக் கடாக்ஷிக்காவிடில் இந்த யாதனையிலேயே உழன்றுகொண்டிருப்போம் என்று திருவுள்ளம். 'ஆளவந்தாரென வென்று' என்பதினால் 'யயா ஸஞ்ஜிஹீர்ஷ ஸஞ்ஜாதா ஹ்ருதி த்விஜயாஸ்யயோ:' என்கிறபடியே மிகவும் துரபிமானத்தோடு கூடிய நம்முடைய மனதையும் தனக்கடிமையாக்கிக்கொண்டபடியினால் நம்மை ரக்ஷிக்கவந்தவரென்று எல்லாரும் கொண்டாடும்படி அவதரித்தார் என்பது தெரிவிக்கப்படுகிறது. அன்றிக்கே இந்த ஆளவந்தார் ராஜஸபையில் ஆஸ்தான பண்டிதனைத் தோற்கடித்து அதினாலே தன்னுடைய ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றின படியினால் தனக்கு அடிமைவேலை வராதபடி தன்னைக் காப்பாற்றினார் என்று ராஜபத்னியே 'ஆளவந்தீரோ' என்று இவரைக் கொண்டாடின வ்ருத்தாந்தம் தெரிவிக்கப்பட்டதாகிறதாகவுமாம். அவ்

காளம் வலம்புரியன்ன நற்காதலடி யவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை யின்னிசை தந்த வள்ளல்
மூளுந்தவ நெறிமூட்டிய நாதமுனி கழலே
நாளுந்தொழு தெழுவோ நமக்கார் நிகர்நானிலத்தே.

இதி ஸ்ரீகவிதார்க்கிக ஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீகுருபரம்பராஸார: ஸம்பூர்ண: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.

விதமாகச் சொல்லும்படி. **வென்று** - பண்டிதனை வாதத்தில் ஜயித்து, விளங்கிய - அதனாலே ப்ரகாஶித்த, சீர் - கல்யாண குணங்களையுடைய என்றர்த்தம். இங்கு ‘அடியோம்’ என்பதற்கு அவருடைய ஸ்ரீ ஸூக்திகளில் பரிசயத்தைச் செய்து அதினாலே அவருக்குத் தாஸபூதர்களான நாம் என்றர்த்தம். ‘படியோமினி அல்வழக்கே’ என்பதற்கு குத்ருஷ்டிமுதலியவர்களின் மதக்ரந்தங்களை படிக்கமாட்டோம் என்றர்த்தம். இங்கு ‘புலயறமாகி நின்ற புத்தொடு சமணமெல்லாம் கலையறக்கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதான்’ என்கிற திருமாலைப்பாட்டும், ‘திக்குறளை சென்றோதோம்’ என்கிற திருப்பாவைப் பாசுரமும், ‘[illegible] உதாரவசஃ க்ருதாஶ [illegible] ஸங்கேத பதிவரம் [illegible] ஸ்மாயிநி’ என்கிற யதிராஜஸப்ததி ஶ்லோகம் முதலியவைகளும் அநுஸந்தேயங்கள். அன்றிக்கே, ப்ரதமபர்வமாகிய பகவத்தாஸ்யத்திலிருந்தவர்கள் அதிலிருந்து திரும்பினாலும் திரும்பலாம்; ஆசார்யதாஸ்யமாகிய சரமபர்வம் வரையில் வந்தவர்களுக்கு ஸ்வரூபக்ஷதியான அந்யஶேஷத்வங்களிலே திரும்ப வழியில்லை; ஆகையினால் இந்த ‘அல்வழக்கே’ என்பதற்கு [illegible] ‘வாழி’ என்று [illegible] ‘[illegible]’ என்று திரும்படியான மித்யாபூதமான வழக்கில், படியோம் - படியமாட்டோம் என்று தாத்பர்யமாகவுமாம்’’ என்று ஸ்ரீஸார தீபிகையில் வ்யாக்யாதம்.

இப்படியே ஸ்ரீமந்நாதமுனிகள்விஷயமாக ஒரு பாட்டு அருளிச்செய்கிறார்— 'காளம் வலம்புரி' என்றாரம்பித்து.

[ப-ரை] காளம் - காஹளவாத்யம், வலம்புரி - வலம்புரி ஶங்கம், அன்ன - இவைகளுக்கு ஸத்ருஶர்களான, நற்காதல் - ஶ்லாக்யமான பக்தியையுடைய. அடியவர்க்கு - தாஸபூதர்களான மேலையகத்தாழ்வான், கீழையகத்தாழ்வான் என்பவர்களுக்கு, தாளம் வழங்கி - தாளஶாஸ்திரத்தை உபதேஶித்து, தமிழ்மறை- த்ரமிடவேதம் என்று சொல்லப்படுகிற திவ்யப்ரபந்தங்களினுடைய. இன்னிசை - இனிமையான கானத்தை, தந்தவள்ளல - உபதேஶித்த பரமோதாரராயும், மூளும்-எல்லோராலும் அனுஷ்டிக்கக்கூடியதான, தவநெறி - பக்தி ப்ரபத்திகளாகிய மார்க்கங்களை, மூட்டிய - பரவச்செய்தவரான. நாதமுனிகழலே - ஸ்ரீமந்நாதமுனிகளின் திருவடிகளையே, நாளும்-தினந்தோறும், தொழுதெழுவோம் - ஆஶ்ரயித்து உஜ்ஜீவிப்போம், நானிலத்தே - நாலு விதமான பூமியில் நமக்கு ஆர் நிகர் - ஸமானர்கள்.

'காளம் வலம்புரியன்ன' இத்யாதிக்கு காஹளம் முதலியவைகள் எப்படி ராஜாவின் விஜயத்திற்கு ஸூசகங்களோ அப்படியே இவர்களிருவரும் ஸ்ரீமந்நாதமுனிகளின் கல்யாணகுணங்களுக்கு ப்ரகாஶகர்கள் என்று தாத்பர்யம். 'காளம்' என்றால் சக்ரம், கிகிரி வட்டம் காளம் ஸுதர்ஶநம் என்று சக்ரத்தின் பெயராகுமிவை என்று நிகண்டு என்று ஸ்ரீஸாரதீபிகையில் வ்யாக்யாதம். இந்தப் பக்ஷத்தில் பகவானுக்கு சங்கசக்ரங்கள் எப்படி அஸாதாரண சிஹ்நங்களோ அதைப்போல ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு இவர்கள் என்று திருவுள்ளம். 'அடியவர்க்கு' என்பதற்கு 'ஸ்ப்ருஹணீயாஸ் ததோ வாஸ்ய ப்ராநிவேஶ்ய க்ருபா ஶ்ரீஜா' என்று திருவடிகளை ஆஶ்ரயித்த குசலவர்களைப்போலே ஸ்ரீமந்நாதமுனிகள் திருவடிகளை ஆஶ்ரயித்தவர்க்கு என்றர்த்தம். 'மூளும் தவநெறி மூட்டிய' என்பதினால் 'மோக்ஷவதீ ண-ஜ்ஞாநவைராக்யராஶயே-ஸ்வஹக்தியோமாய நாதாய முநயே அகாத வாய' என்கிற ஸ்ரீஸ்தோத்ரரத்னஶ்லோகம் விவக்ஷிதம். 'கழலே' என்கிற இடத்தில் ஏகாரத்திற்கு ஸகல அபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடியது என்றர்த்தம். அன்றிக்கே 'நாதாய முநயே


[illegible]’ என்கிறபடியே உபாயதசையிலும் ப்ராப்யதசையிலும் உத்தேஶ்யத்வம் தாத்பர்யமாகவுமாம். ‘நானில’மாவது மருதம், குறிஞ்சி, நெய்தல், முல்லை என்று நான்கு விதமாகப் பிரிக்கப்பட்ட பூமி, பாலை யென்னும் ஐந்தாம் வகுப்பு மருகாந்தாரமாகையினாலே மனுஷ்யஸஞ்சாரமற்றதால் இங்கு எடுக்கப்படவில்லை.

இப்படிக் கீழ் மூன்று பாட்டுக்களிலும் ‘சிந்தியோமினித் தீவினையே’ என்று பரிஶுத்த மனோவ்ருத்தியும், ‘படியோமிணி யல்வழக்கே’ என்று பரிஶுத்தமான வாக்வ்யாபாரமும், ‘தொழு தெழுவோம்’ என்று பரிஶுத்தமான ஶரீரவ்யாபாரமும் தனித் தனியே அருளிச்செய்யப்பட்டிருந்தபோதிலும், ஒவ்வொரு ஆசார்யர்களிடத்திலும் இந்த மூன்றும் சேர்த்தனுஸந்தேயம் என்பது திருவுள்ளம். ஆக இத்தால் ஸதாசார்ய ஸம்பந்தத்தினாலே த்ரிகரணங்களினாலும் பரிஶுத்தமான வ்ருத்தியைச் செய்யப்பெற்றோம் என்று அவர்களிடத்தில் உபகாரஸ்ம்ருதி செய்யப்பட்டதாயிற்று. இப்படியே ஒவ்வொரு ஆசார்யர்களிடத்திலும் செய்ய வேண்டுமென்பதும் இதினாலேயே ஸூசிதம்.

மஹாமஹோபாத்யாய திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் ஸ்ரீ-உ-வே நரஸிம்மாசார்ய ஸ்வாமிகளினால் செய்யப்பட்ட

ஸ்ரீ குருபரம்பராஸார வ்யாக்யானம்

முற்றிற்று.


IJAY
ne
tilizers
VIJAY
COMPLEX
N · P · K
14-28-14
NET 49·4Kg
VIJAY
UREA
46%
LTD.